1. முன்னுரை



# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு 2014–15

## 1. முன்னுரை

*நான் இந்த மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். அவர்கள் அனைவரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தமிழக அரசு திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்தி வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழகம் விளங்கவும், பெண்களுக்காகப் பல நலத் திட்டங்கள் உருவாக்கிச் செயலாக்கவும், வறுமைக்கோட்டுக்கு கீழ் எவருமே இருக்கக் கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள்''*

–மாண்புமிகு முதலமைச்சர்

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், வாழ்வாதார வாய்ப்புகளை அதிகரித்தல், ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்துதல், ஊரக வீட்டு வசதியினை அளித்தல் மற்றும் தூய்மையான சுற்றுப்புறம் மற்றும் சுகாதாரத்தைப் பேணுதல்

ஆகியவற்றின் மூலம் ஊரகப் பகுதிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது அரசின் தலையாய நோக்கங்களாகும். இந்த நோக்கங்களை நிறைவேற்ற, **ஆற்றலும் உத்வேகமும் மிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ்** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பல்வேறு மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்களை முனைப்புடனும் உறுதியுடனும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

பல்வேறு எண்ணிக்கையில் குக்கிராமங்களைக் கொண்டுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும், சம அளவில் நிதி வழங்கப்படுவது, வளர்ச்சியடைவதிலும் சொத்துக்கள் அமைக்கப்படுவதிலும் வேறுபாட்டிற்கு வழிவகுக்கிறது. எனவே, இந்த வேறுபாடுகளை களையும் வகையிலும் சம அளவிலான நிதி மற்றும் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கும், ''தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்'' (தாய் திட்டம்) வடிவமைக்கப்பட்டபோது ''குக்கிராமம்'' வளர்ச்சிக்கான அடிப்படை அலகாக எடுத்துக் கொள்ளப்பட்டது. ''குக்கிராமங்களை'' அடிப்படை அலகாகக் கொண்டு திட்டம் செயல்படுத்தக்கூடிய முதல் மாநிலம் தமிழ்நாடு தான். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் உள்ள 79,394 குக்கிராமங்களிலும் அடிப்படைத் தேவைகளை கணக்கெடுப்பின் மூலம் கண்டறிந்து, தாய் திட்டத்தின் மூலம் ஐந்தாண்டுகளில் தேவைகள் நிறைவேற்றப்படுகிறது.



2011–12 ஆம் ஆண்டு முதல் 2013–14 ஆம் ஆண்டு வரையிலான மூன்றாண்டுகளில் 6,770 கிராம ஊராட்சிகளில் உள்ள 59,030 குக்கிராமங்களில் தேவைப்படும் அடிப்படை வசதிகள் இத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஊரக வீட்டு வசதியில் மற்றுமொரு புரட்சிகர திட்டமாக ''முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்'' தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில், தேவையான இடவசதியுடன் கூடிய, சூழ்நிலையோடு இயைந்த வீடுகளை வழங்குவதன் மூலம், ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை மக்களின் வசிப்பிடத்திற்கான தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. இந்த வீடுகள் போதுமான இட வசதி மற்றும் இதர வசதிகளுடன் கூடிய வசிக்கும் இடத்தை அளிப்பது மட்டுமல்லாமல் ஊரகப் பகுதிகளில் தூய்மையான மற்றும் பசுமையான எரிசக்தியையும் உற்பத்தி செய்கின்றன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அதிக அளவிலான குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ஒரு கிராம ஊராட்சியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகள் மேற்கொள்ள அனுமதித்ததன் மூலம் இந்த அரசு தனித்துவத்தை பெற்றுள்ளது. விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தாழ்த்தப்பட்ட / பழங்குடியின விவசாயிகள், சிறு மற்றும் குறு

விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் சிறப்புப் பணிகள் வழங்கப்பட்டு 2012–13 மற்றும் 2013–14 ஆம் ஆண்டுகளில் மாற்றுத் திறனாளிகள் மூலம் 72.30 லட்சம் மனிதசக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு ரூ.107.01 கோடி ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பொது /அரசு நிலங்கள் மற்றும் கடற்கரையோர கிராம ஊராட்சிகளில் பல்வேறு வகையான காடு வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2012–13 ஆம் ஆண்டில், வறட்சியினை கட்டுப்படுத்தும் விதமாக, வேலை நாட்கள் 100 லிருந்து 150 ஆக உயர்த்தப்பட்டது. ஏறக்குறைய 12.73 லட்சம் குடும்பங்களுக்கு 100 நாட்களுக்கும் மேல் வேலை அளிக்கப்பட்டதன் மூலம் அக்குடும்பங்கள் ரூ.271 கோடி கூடுதல் ஊதியமாக பெற்றன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் வனத் துறை கூட்டாக இணைந்து காடு வளர்ப்பு பணிகளை மேற்கொண்டன. அதுபோலவே, விருப்பமுள்ள விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்து மீன்துறை மூலம் மீன்குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் காரணமாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அதிகமான மனிதசக்தி நாட்களை உருவாக்கியது, ஊதியச் செலவினம்,



பெண்களின் பங்கு மற்றும் ஒரு குடும்பத்திற்கு சராசரியாக அதிகமான நாட்கள் வேலை வழங்கியது, ஆகியவற்றில் தமிழ்நாடு தேசிய அளவில் முதன்மை பெற்று விளங்குகிறது. **2013–14ம் ஆண்டில் சராசரியாக ஒரு குடும்பத்திற்கு 59 நாட்கள் வேலைவாய்ப்பினை வழங்கி, தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளது. இது தேசிய சராசரியான ஒரு குடும்பத்திற்கு 47 நாட்கள் என்பதைவிட அதிகம். 10.07.2014 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

2012–13ம் ஆண்டு சிறந்த செயல்பாட்டுக்காக மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட **"சமூக பங்களிப்பு" என்ற தலைப்பின் கீழ் சிறந்த மாநிலத்திற்கான விருது பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே.** மேலும், நீலகிரி மாவட்டம், தோட்ட பொருளாதாரம் மூலம் அதிக அளவிலான வேலைவாய்ப்பினை உருவாக்கியதற்காக சிறந்த மாவட்ட விருதினையும், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தனிக்கோட்டகம் கிராம ஊராட்சி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தேசிய அளவில் விருது வழங்கப்பட்ட 11 கிராம ஊராட்சிகளில் ஒன்றாகவும் தேர்வு செய்யப்பட்டது.

ஒரு பகுதியின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு ஊரக இணைப்புச் சாலைகள் அதிக

முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மண் சாலைகளை கப்பிச் சாலைகளாக தரம் உயர்த்துதல், வெள்ளத்தினால் சேதமடைந்த சாலைகளை வலுப்படுத்துதல், பாலங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டதன் மூலம் தொலைதூரப் பகுதிகளையும் தொடர்பு கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டது.

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், தூய்மையான கிராம இயக்கம், தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கான மாநில அரசின் கூடுதல் நிதி, ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் போன்ற முனைப்புகளின் மூலம் ஒரு சுகாதார புரட்சியை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாநிலத்தில் துவக்கியுள்ளார்கள். மக்களின் பழக்கவழக்கத்தை மாற்றி, கழிப்பறைகளைப் பயன்படுத்த வைப்பதற்கான, மாநிலம் தழுவிய விழிப்புணர்வு பிரச்சாரம் கடந்த வருடம் தொடங்கப்பட்டது. 2015க்குள் தமிழகத்தை திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத மாநிலமாக மாற்றும் பொருட்டு, அனைத்து பங்கேற்பாளர்களுடன் இணைந்து, ஒவ்வொரு இல்லத்திலும் கழிப்பறை அமைக்கும் முயற்சிகள் மேலும் முனைப்புடன் தமிழக அரசால் மேற்கொள்ளப்படும்.

மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடந்த ஆண்டு ரூ.6035.56 கோடி வங்கி கடன் வழங்கியதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் இம் மாநிலத்தில் புதிய உச்சத்தை



எட்டியுள்ளது. புதிய திட்டங்கள், விருதுகள், திறன் வளர்ப்பு பயிற்சிகள் மற்றும் பொருளதார மேம்பாட்டிற்கு தேவையான சந்தை அமைப்புகளை அறிமுகப்படுத்தியதின் மூலம் கடந்த ஆண்டு மகளிர் அதிகாரப்படுத்துதலுக்கு புதிய உத்வேகம் கிடைத்தது. சமூக ஒருங்கிணைப்பு, நிறுவன அமைப்புகள், நிதி மற்றும் நிதி சாரா சேவைகள் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை ஏற்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நிலை 1 மற்றும் 2 வட்டாரங்களில் மக்கள் பங்கேற்புடன் மிகவும் ஏழைகள், ஏழைகள் மற்றும் நலிவுற்றோர் குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

வறுமைக் குறைப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு முயற்சிகளில், கள அளவில் வெளிப்படைடான மற்றும் திறமையான நிர்வாகம் ஏற்படும் வகையில் கிராம ஊராட்சிகள், ஏழை மக்கள் அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சமூக தணிக்கைக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. திறன் வளர்ப்பு பயிற்சிகள் மற்றும் மிகவும் ஏழைகள் மற்றும் நலிவுற்றோர் பொருளாதார நடவடிக்கைளை மேற்கொள்ள உதவும் பொருட்டு முன்னோடி முயற்சியாக, ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் தலா ரூ.10 லட்சம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. ஊரக இளைஞர்கள், அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை பெறும் வகையில்,

அவர்களுக்கு உரிய தொழில் திறன் பயிற்சி வழங்க சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு வறுமை ஒழிப்பிற்கு உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றும் முதன்மை திட்டம் புது வாழ்வு திட்டம். இத்திட்டம் பன்முக பார்வையுடன் ஏழ்மையை நீக்குவதற்காக செயல்படுகிறது. ஏழை மக்களைக் கொண்டு நிறுவனங்கள் ஏற்படுத்துவதிலும், திறன் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும், வங்கிகள் உதவியுடன் வளங்கள் பெறுவதிலும், ஏழைக் குடும்பங்களுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் உரிமைகளை பெற்றுக் கொடுத்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைக்கவும் முக்கியத்துவம் அளிக்கிறது. கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், ஒத்த தொழில் குழுக்கள், ஒத்த தொழில் கூட்டமைப்புகள் மற்றும் மகமைகள் போன்ற மக்கள் அமைப்புகள் மூலம் இச்செயல்பாடுகள் நிறைவேற்றப்படுகிறது.

புதுவாழ்வு திட்டம், வறுமையை குறைக்க, ஏழை குடும்பங்களுக்கு தேவையான அளவு கடன், இலாபமான சுய தொழில், திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு போன்றவைகள் கிடைத்து, வாழ்வாதார செயல்பாடுகள் வலுப்பெறவும் வழிவகை செய்கிறது. இதனால் ஏழை குடும்பங்களின் வாழ்க்கை நிலை உயர்ந்து நீடித்த நிலைத்த



தன்மை அடைய அடிமட்டத்தில் உள்ள வலுவான சமூக அமைப்புகள் வழிவகை செய்கிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமியால் ஏற்பட்ட பேரழிவிற்குப்பின், நிவாரணம் மற்றும் மறு வாழ்வுப் பணிகள் உடனடியாக தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீண்டகாலத் தீர்வாக, மாற்று மற்றும் நிலைத்த வாழ்வாதாரங்கள் ஏற்படுத்தித் தர முடிவு செய்யப்பட்டது. இதற்காக, பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயலாக்கம் பெற்றது.

இத்திட்டத்தின் மூலம், பாதிக்கப்பட்ட கடலோரச் சமுதாய மக்களின் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்ய பன்முக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கூட்டு வள மையங்கள் போன்ற சமுதாய அமைப்புகளை ஏற்படுத்துதல், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் நிதி உள்ளாக்கம், பேரிடர் மேலாண்மை, சுயவேலைவாய்ப்பு ஆகியவற்றில் மக்களின் திறனை மேம்படுத்துதல் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நிலைத்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதில் இத்திட்டம் பெரும் பங்காற்றுகிறது.

ஈடு இணை இல்லாத நமது மாண்புமிகு **முதலமைச்சர் அவர்களின்** எண்ணத்தை நிறைவேற்றும் வகையில், ஊரகப் பகுதிகளில் தேவையான அடிப்படை உட்கட்டமைப்புகள் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கி தமிழ்நாட்டில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தொடர்ந்து செயல்படும்.



## 2. ஊராட்சி நிர்வாகம்

## 2. ஊராட்சி நிர்வாகம்

உள்ளாட்சி அமைப்புகளின் பரிணாம வளர்ச்சியில் தமிழகம் வேரூன்றித் தழைத்து விளங்குகிறது. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகள் சோழர் ஆட்சிக் காலத்திலிருந்தே கிராமக் குழுக்களாக செயல்பட்டதற்கான உறுதியான வரலாற்றுச் சான்றுகளாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் கல்வெட்டுகள் விளங்குகின்றன. இத்தகைய கிராமக் குழுக்களுக்கான தேர்தலில் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகள் சிறந்த முறையில் வகுக்கப்பட்டு இரகசிய வாக்கெடுப்பிற்காக குடவோலை முறை பின்பற்றப்பட்டது. கிராமக்குழுக்கள், பொருளாதார மற்றும் நிர்வாக தனித்தன்மை உடையவையாகவும், தற்காலத்தில் உள்ள உள்ளூர் தன்னாட்சி அமைப்புகள் போல் செயல்பட்டதாகவும் புகழ்பெற்ற வரலாற்று அறிஞர்கள் வியப்புடன் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாடு விடுதலை அடைந்த பின்னர், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV, பிரிவு 40ன்படி உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்தி அவற்றுக்கான அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கிட வழிவகை செய்யப்பட்டது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு.பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு, மக்களாட்சி பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்திட பரிந்துரைத்தது.



1958ஆம் ஆண்டு மதராஸ் அரசு இயற்றிய மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டம் மற்றும் மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் ஆகியவற்றில் அடங்கிய முக்கிய அம்சங்களாவன:

அ. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் என்ற இரண்டடுக்கு முறை

ஆ. ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி வட்டாரங்களுக்கு இணையாக உருவாக்கப்பட்டன.

இ. கிராம ஊராட்சி தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுவின் பதவி வழி உறுப்பினராகவும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் பெருந்தலைவர் நேரடியாக / மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுதல்.

ஈ. பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூக நலப்பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல்.

உ. மாவட்ட வாரியங்களைக் கலைத்தல்

ஊ. ஆலோசனை வழங்கும் வகையில் மாவட்ட வளர்ச்சி மன்றங்களை ஏற்படுத்துதல்.

## 2. 1 . 73–வது இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், 1992

73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் 1992 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, ஏப்ரல் 1993 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 243 ஜி–ன்படி ஊராட்சி அமைப்புகளுக்குப் பல்வேறு பொருள்களில் திட்டங்களைச் செயல்படுத்தும் முழுமையான அதிகாரங்களும், பொறுப்புகளும் கிடைப்பதற்கு அதிகமான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தின் 11–வது அட்டவணையில் உள்ளாட்சி அமைப்புகளில் அதிகாரப் பரவலாக்கத்திற்குரிய 29 பொருள்கள் குறித்து வரையறுக்கப்பட்டுள்ளன. 74–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ‘மாவட்ட திட்டக் குழு’ உருவாக வழி வகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, 22.4.1994 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 1994ம் ஆண்டு சட்டத்தின்படி தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில் பல்வேறு முக்கியமான மாறுதல்கள் கீழே குறிப்பிட்டவாறு கொண்டு வரப்பட்டன.

i) தமிழ்நாட்டில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.



ii) மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் மற்றும் காலியிடம் ஏற்பட்ட 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு காலியிடங்கள் நிரப்பப்படுதல்.

iii) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் உள்ள மொத்த மக்கள் தொகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பதவியிடங்கள் (வார்டு உறுப்பினர்கள்) மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு (ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் / ஊராட்சித் தலைவர்) சுழற்சி முறையுடன் கூடிய இட ஒதுக்கீடு கொண்டு வருதல்.

iv) மொத்தப் பதவி மற்றும் தலைமைப் பதவியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு சுழற்சி முறையுடன் கூடிய இட ஒதுக்கீடு செய்யும் முறையை கொண்டு வருதல்.

v) ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர்ந்து தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் என்ற தன்னாட்சி அமைப்பினை ஏற்படுத்துதல்.

vi) மாநில நிதியாதாரங்களிலிருந்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட பரிந்துரை செய்யும் வகையில்

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையத்தினை ஏற்படுத்துதல்

vii) மாவட்ட அளவில் விரிவான வளர்ச்சித் திட்டத்தினைத் தயாரித்திட ஏதுவாக ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்துள்ள திட்டங்களைத் தொகுத்திட மாவட்ட திட்டக்குழுவினை ஏற்படுத்துதல்.

viii) ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய கிராம சபை என்ற அமைப்பினைக் கொண்டு வருதல்.

**2.2. கிராம சபை**

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம சபை என்பது அடிப்படை மக்களாட்சி அமைப்பாகும். ஊராட்சி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, திட்டமிடல், பல்வேறு திட்டப் பணிகளைத் தேர்வு செய்தல், திட்டங்களுக்கான பயனாளிகளைத் தேர்வு செய்தல் மற்றும் செயலாக்கம் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்களிப்பு, சமுதாயத் தணிக்கை ஆகியவற்றை செயலாக்குவதில் கிராம சபை பெரும்பங்காற்றுகிறது. இரு கிராம சபைக் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படவேண்டும். ஒரு ஆண்டில் குறைந்த பட்சம் நான்கு முறை அதாவது, ஜனவரி 26, மே 1, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு



ஆணையிட்டுள்ளது. கிராம சபைக் கூட்டத்திற்கான பங்கேற்பாளர் குறைவெண் வரம்பினை ஊராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில் பின்வருமாறு அரசு நிர்ணயித்துள்ளது.

**அட்டவணை.2.1**

**கிராம சபை பங்கேற்பாளர் குறைவெண் வரம்பு**

| வ.எண் | ஊராட்சியின் மக்கள் தொகை | குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 முடிய | 50 |
| 2 | 501–3000 | 100 |
| 3 | 3001–10000 | 200 |
| 4 | 10000–க்கு மேல் | 300 |

கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டவர்களை வருகைப் பதிவேட்டில் பதிவு செய்தல், கூட்ட நடவடிக்கைகளை பதிவேட்டில் பதிவு செய்தல் மற்றும் புகைப்பட ஆவணங்களை வைத்திருத்தல் ஆகியவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கிராம சபை பின்வரும் முக்கியமான பணிகளை மேற்கொள்கிறது:

1) கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்

2) கிராம ஊராட்சியின் வரவு செலவு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்

3) தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குதல்

4) திட்டப் பணிகள் செயலாக்க முன்னேற்றத்தினை ஆய்வு செய்தல்

5) பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகள் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்தல்.

6) கிராமத்தில் உள்ள பல்வேறு இன மக்களுக்கிடையே சமுதாய மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

### i) கிராம வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 240ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும் அதற்கான வளர்ச்சித் திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் தயாரித்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றியக் குழுவுக்கு அனுப்பிட வேண்டும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியக் குழுவும் கிராம ஊராட்சிகளிலிருந்து பெறப்படும் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து ஊராட்சி ஒன்றிய வளர்ச்சி திட்டமாக தயாரித்து மாவட்ட ஊராட்சிக்கு அனுப்பிட வேண்டும். ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியக் குழுக்களிலிருந்து பெறப்படும் வளர்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய மாவட்ட வளர்ச்சித் திட்டத்தினைத் தயார்



செய்து பிரிவு 241ன் கீழ் அமைக்கப்பட்ட மாவட்டத் திட்டக் குழுவிடம் அளித்திட வேண்டும். ஊரக மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களைத் தொகுத்து, மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டத்தினை மாவட்ட திட்டக்குழு தயார் செய்யும். கிராம ஊராட்சி தயாரிக்கும் கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கிட கிராம சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

### ii) கிராம ஊராட்சி வரவு செலவுத் திட்டம்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 192(1)ன் கீழ் ஊராட்சியின் செயல் அலுவலர் ஒவ்வொரு ஆண்டும் அடுத்த ஆண்டிற்குரிய உத்தேச வருவாய் மற்றும் செலவினங்களை உள்ளடக்கிய வரவு செலவுத் திட்டத்தை தயாரித்திட வேண்டும். அரசாணை எண். 245, ஊரக வளர்ச்சித் (சி1)துறை, நாள் 19.11.1998ன்படி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26ல் கூடும் கிராம சபை மேற்கண்ட வரவு செலவுத் திட்டத்திற்கான ஒப்புதல் வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.

செம்மையான நிதி ஆதாரங்களுக்கான திட்டமிடுதலில் கிராம அளவிலான திட்டமிடுதல் மற்றும் வரவு செலவுத் திட்டம் ஆகியவை மிகவும் அவசியமானவை என்ற நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளுக்கான பிரதிநிதிகளுக்கு திறனாக்கப் பயிற்சி தர 2014–15ஆம் ஆண்டில் இந்த அரசு நடவடிக்கை எடுத்திட உள்ளது.

**2.2.1. மகளிர் சபை**

மகளிருக்கு அதிகாரம் அளிப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்ற பெருமை நெடுங்காலமாக உள்ளது. மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அதிகாரம் அளித்திட தமிழக அரசு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, குழந்தைகள் மற்றும் மகளிர் நலம், பெண் கல்வி, மகளிர் சுகாதாரம், அங்கன்வாடி மையங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், குழந்தைகள் பாலின விகிதம் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்டங்கள் குறித்து விரிவான முறையில் விவாதித்து, தீர்வு காண ஏதுவாக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம ஊராட்சித் தலைவர் தலைமையில் மகளிர் மட்டுமே பங்கேற்கும் மகளிர் சபையினை நடத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது.

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் முதல் மகளிர் சபைக் கூட்டம் **12.1.2014** அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊராட்சி அளவிலான அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர். ஊரகப் பகுதி மகளிர் பங்கேற்புடன் மகளிர் மற்றும் குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மகளிர் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் **26.1.2014**–ல் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் வைக்கப்பட்டது. இதுபோன்ற மகளிர் சபைக்கூட்டத்தினை தமிழ்நாட்டில் உள்ள **12,524** ஊராட்சிகளிலும் ஒவ்வொரு ஆண்டும் நடத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது.



**2.3. மாநிலத் தேர்தல் ஆணையம்**

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், அதிகாரப் பரவலாக்கம் மற்றும் சனநாயக முறைகளை வலுப்படுத்தும் விதமாக சுதந்திரமான மற்றும் சுய சார்புடைய அமைப்பாக **1994**–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தலை நடத்துதல் ஆகிய பணிகளைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகள் ஆணையரைத் தலைமையாகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

**1994**–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **239** உட்பிரிவு **(3)**–ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு, ஆணையர் மற்றும் இதர நிர்வாகப் பணியாளர்கள் நியமிக்கப்படுவர். ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை மொத்தம் ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். மாநிலத் தேர்தல் ஆணையராகப் பணியாற்றும் காலத்தில் **65** வயது நிறைவடையும் பொழுது அவர் பணியிலிருந்து ஓய்வு பெற வேண்டும். மாநிலத் தேர்தல் ஆணையரின் பணி நிபந்தனைகளும், பதவிக்காலமும் ஆளுநர் விதிகளின் வாயிலாக தீர்மானிக்கும்படி இருக்க வேண்டும். மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பதவியிலிருந்து நீக்கமுடியாது.

அவ்வாறு நீக்குவதாக இருந்தால் உயர் நீதிமன்ற நீதிபதியினை நீக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், மாநிலத் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்ட பின்னர் அவருடைய பணி விதிகள் தொடர்பான நிபந்தனைகள் எதுவும் அவரைப் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கக் கூடாது.

**2.4. உள்ளாட்சித் தேர்தல்**

தமிழ்நாட்டில், 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996–ம் ஆண்டு நடத்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது சாதாரண தேர்தல் அக்டோபர் 2001–ம் ஆண்டும், அதேபோல மூன்றாவது சாதாரண தேர்தல் அக்டோபர் 2006–ம் ஆண்டும் நடத்தி முடிக்கப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான நான்காவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் மாதம் 2011–ம் ஆண்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடத்தப்பட்டன. ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. 2011ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடைபெற்ற மூன்றடுக்கு ஊராட்சி



அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான தேர்தல் விபரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை.2.2</u>**

**மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பிற்கான அமைப்பில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள்**

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 99,333 |
| 2 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,471 |
| 3 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 655 |
| 4 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 |
| 5 | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 385 |
| 6 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 |
| | **மொத்தம்** | **1,19,399** |

## 2.5. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு ஒரு குறிப்பிட்ட ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் மேற்படி வகுப்பினர் எந்த விகிதாசாரத்தில் அமைந்துள்ளனரோ அந்த விகிதாசார அளவில், அந்த ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் முடிந்த அளவுக்கு அதே விகிதாசார அளவில் சுழற்சி முறையில் உரிய இட ஒதுக்கீடு இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 243 D–ன்படி வழங்கப்படவேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஆதிதிராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். இதற்காக, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவுகள் 11, 20, 32, 57 மற்றும் 1995–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள் ஆகியவற்றில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு இடஒதுக்கீடு செய்வது குறித்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.



**அட்டவணை.2.3**

### 2011–ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சித் தேர்தல் பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விபரம்

| வ.எண் | இட ஒதுக்கீடு வகை | மொத்த பதவி இடங்கள் | மகளிருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு | ஆதிதிராவிடருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு | பழங்குடியினருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 | 11 | 35 | 7 | 24 | 0 | 0 |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36 | 87 | 23 | 4 | 1 |
| 3 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 | 4,289 | 34 | 3,136 | 25 | 156 | 1 |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 655 | 228 | 35 | 154 | 24 | 8 | 1 |
| 5 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6,471 | 2,286 | 35 | 1,526 | 24 | 64 | 1 |
| 6 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 99,333 | 33,121 | 33 | 25,360 | 26 | 1,039 | 1 |

## 2.6. 2011ம் ஆண்டின் ஊராட்சி அளவிலான மக்கள் தொகை கணக்கெடுப்பு

மத்திய அரசின் மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரால் வருவாய் கிராம அளவில் 2011 முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பின் சுருக்கம் முடிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையும் இணைந்து கிராம ஊராட்சி அளவிலான மக்கள் தொகை விவரங்களை தொகுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, மக்கள் தொகை கணக்கெடுப்பு வட்டாரங்களை ஊராட்சி வாரியாக 100 விழுக்காடு சரிபார்ப்பு செய்ய அனைத்து உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது. அவ்வாறு சரிபார்க்கப்பட்ட விவரங்களை மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம் மேலாய்வு செய்து 31 மாவட்டங்களிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்குமான 2011ம் ஆண்டின் கிராம மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களை வெளியிட்டது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகை விவரங்களில் தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் இடம்பெற்றுள்ளன. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் வலைதளத்தில் (www.tnrd.gov.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.



மக்கள் தொகை அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட கிராம ஊராட்சி விவரங்கள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை.2.4**

**2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்**

| வ. எண் | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 500 மற்றும் அதற்குக் கீழ் | 46 |
| 2. | 501 முதல் 1000 வரை | 833 |
| 3. | 1001 முதல் 3000 வரை | 6,821 |
| 4. | 3001 முதல் 5000 வரை | 2,781 |
| 5. | 5001 முதல் 10000 வரை | 1,753 |
| 6. | 10,000க்கு மேல் | 290 |
| **மொத்தம்** | | **12,524** |

மாவட்ட வாரியாக தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் விபரங்களுடன் கூடிய ஊரக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

## அட்டவணை.2.5

### மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை விவரம்

| வ.எண். | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | ஆதிதிராவிடர் | பழங்குடியினர் | பெண்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 18,61,789 | 6,24,458 | 29,706 | 9,24,124 |
| 2 | திருவள்ளூர் | 15,85,280 | 5,04,115 | 37,708 | 7,90,170 |
| 3 | கடலூர் | 18,00,133 | 6,25,788 | 10,082 | 8,91,507 |
| 4 | விழுப்புரம் | 29,12,960 | 9,19,308 | 71,289 | 14,45,062 |
| 5 | வேலூர் | 24,82,556 | 6,05,248 | 65,230 | 12,41,612 |
| 6 | திருவண்ணாமலை | 20,39,049 | 5,02,044 | 87,096 | 10,14,486 |
| 7 | சேலம் | 19,57,105 | 3,54,545 | 1,12,334 | 9,45,014 |
| 8 | நாமக்கல் | 10,87,895 | 2,48,100 | 55,417 | 5,37,918 |
| 9 | தர்மபுரி | 12,90,530 | 2,13,538 | 60,609 | 6,24,646 |
| 10 | கிருஷ்ணகிரி | 14,65,743 | 2,20,945 | 20,980 | 7,17,175 |
| 11 | ஈரோடு | 11,30,722 | 2,16,689 | 19,084 | 5,59,797 |
| 12 | திருப்பூர் | 11,39,466 | 2,63,539 | 1,947 | 5,68,772 |
| 13 | கோயம்புத்தூர் | 10,21,359 | 2,13,492 | 19,565 | 5,10,409 |
| 14 | நீலகிரி | 3,10,591 | 91,446 | 22,767 | 1,59,447 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | தஞ்சாவூர் | 16,67,809 | 3,84,291 | 1,465 | 8,46,926 |
| 16 | நாகப்பட்டினம் | 12,61,288 | 4,60,876 | 2,214 | 6,37,194 |
| 17 | திருவாரூர் | 10,06,482 | 3,88,740 | 939 | 5,06,528 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14,71,945 | 3,05,109 | 14,519 | 7,39,563 |
| 19 | கரூர் | 6,68,360 | 1,59,718 | 201 | 3,36,684 |
| 20 | பெரம்பலூர் | 4,68,017 | 1,50,504 | 2,136 | 2,34,113 |
| 21 | அரியலூர் | 6,71,100 | 1,63,770 | 9,946 | 3,37,847 |
| 22 | புதுக்கோட்டை | 13,41,111 | 2,51,552 | 845 | 6,75,896 |
| 23 | மதுரை | 13,00,481 | 2,72,494 | 4,896 | 6,44,431 |
| 24 | தேனி | 5,75,394 | 1,43,589 | 1,377 | 2,84,527 |
| 25 | திண்டுக்கல் | 14,57,412 | 3,34,064 | 4,580 | 7,25,917 |
| 26 | இராமநாதபுரம் | 10,09,270 | 2,13,583 | 526 | 5,01,016 |
| 27 | விருதுநகர் | 12,86,543 | 3,15,796 | 1,197 | 6,44,603 |
| 28 | சிவகங்கை | 9,52,610 | 1,88,454 | 518 | 4,77,215 |
| 29 | திருநெல்வேலி | 16,45,509 | 3,58,487 | 4,099 | 8,32,916 |
| 30 | தூத்துக்குடி | 9,71,273 | 2,48,752 | 1,921 | 4,92,268 |
| 31 | கன்னியாகுமரி | 6,46,441 | 26,546 | 3,893 | 3,25,257 |
| | மொத்தம் | **404,86,223** | **99,69,580** | **6,69,086** | **201,73,040** |

## 2.7. ஊராட்சி வாரியான பரப்பளவு விவரம்

ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் பகிர்வு மானியம், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஊராட்சிக்கான மொத்த மக்கள் தொகை, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மக்கள் தொகை மற்றும் ஊராட்சியின் பரப்பளவு அடிப்படையில் வழங்க நான்காவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரையினை மாநில அரசு ஏற்றுக்கொண்டு அதனடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கான பகிர்வு மானியத்தினை விடுவித்திட ஆணையிட்டுள்ளது. ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு 1,04,149.61 சதுர கி.மீ. என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிக்கை அனுப்பியுள்ளனர். அதன்படி, 2013–14ஆம் ஆண்டிலிருந்து கிராம ஊராட்சிகளுக்கான மானியம் ஊராட்சி பரப்பளவினை அடிப்படையாகக் கொண்டும் விடுவிக்கப்படுகிறது.

**அட்டவணை 2.6**

**மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விபரம்**

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 633 | 3851.445 |
| 2 | திருவள்ளூர் | 526 | 2859.840 |
| 3 | கடலூர் | 683 | 2942.240 |
| 4 | விழுப்புரம் | 1,099 | 6509.430 |
| 5 | வேலூர் | 743 | 4022.300 |
| 6 | திருவண்ணாமலை | 860 | 4826.265 |
| 7 | சேலம் | 385 | 4561.410 |
| 8 | நாமக்கல் | 322 | 3119.430 |
| 9 | தர்மபுரி | 251 | 4407.430 |
| 10 | கிருஷ்ணகிரி | 333 | 4965.730 |
| 11 | ஈரோடு | 225 | 2626.990 |
| 12 | திருப்பூர் | 265 | 4545.500 |
| 13 | கோயம்புத்தூர் | 228 | 2534.241 |
| 14 | நீலகிரி | 35 | 1170.390 |
| 15 | தஞ்சாவூர் | 589 | 3657.669 |
| 16 | நாகப்பட்டினம் | 434 | 2400.310 |
| 17 | திருவாரூர் | 430 | 2322.690 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 404 | 4028.000 |
| 19 | கரூர் | 157 | 2656.250 |
| 20 | பெரம்பலூர் | 121 | 1609.540 |

| | | | |
|---|---|---|---|
| 21 | அரியலூர் | 201 | 1710.170 |
| 22 | புதுக்கோட்டை | 497 | 4433.780 |
| 23 | மதுரை | 420 | 3183.180 |
| 24 | தேனி | 130 | 1159.890 |
| 25 | திண்டுக்கல் | 306 | 4401.343 |
| 26 | இராமநாதபுரம் | 429 | 4116.190 |
| 27 | விருதுநகர் | 450 | 3282.080 |
| 28 | சிவகங்கை | 445 | 3075.900 |
| 29 | திருநெல்வேலி | 425 | 4283.060 |
| 30 | தூத்துக்குடி | 403 | 4260.780 |
| 31 | கன்னியாகுமரி | 95 | 626.140 |
| | **மொத்தம்** | **12,524** | **104149.613** |

### 2.8. மாநில நிதி ஆணையம்

73–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மற்றும் **1994–ம்** ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **198–ன்படி**, மாநில நிதி ஆணையம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் எல்லைகள் மற்றும் வரையறைகளாவன:–



1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறை.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

**1994–ம்** ஆண்டு அமைக்கப்பட்ட முதல் மாநில நிதி ஆணையம், **1997–98** முதல் **2001–02** வரையான **5** ஆண்டு காலத்திற்கான பரிந்துரைகளை வழங்கியது. இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக் காலம் **2002–03** முதல் **2006–07** வரை ஆகும் என்பதுடன், மாநில அரசின் சொந்த வரி வருவாயில் **8** விழுக்காட்டினை உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்வு மானியமாகப் பரிந்துரை செய்தது.

மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக் காலம் **2007–08** முதல் **2011–12** வரையிலான **5** ஆண்டுகளாகும். மாநிலத்தின் சொந்த வருவாயிலிருந்து பகிர்வு மானியமாக ஏற்கனவே வழங்கப்பட்ட **8**

விழுக்காட்டினை படிப்படியாக 10 விழுக்காடாக தமிழக அரசு உயர்த்தி வழங்கியது. அவ்வாறான பகிர்வு மானியம், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58 : 42 என்ற விகிதத்தில் பிரித்தளிக்கப்பட்டது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான 58 விழுக்காடு பகிர்வு மானியம், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையே பரிந்துரைக் காலத்தில் 60 : 32 : 8 என்ற விகிதத்தில் பங்கீடு செய்யப்பட்டது.

**2.8.1. நான்காவது மாநில நிதி ஆணையம்**

மாநில அரசால் அமைக்கப்பட்ட நான்காவது மாநில நிதி ஆணையம், 2012 முதல் 2017 வரையுள்ள ஐந்தாண்டு காலத்திற்கான பரிந்துரைகளை 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிக்கையாக அரசுக்கு சமர்ப்பித்தது. நான்காவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதன்படி நான்காவது மாநில நிதி ஆணையப் பரிந்துரைகள் மீதான நடவடிக்கை விவரங்கள் 14.5.2013–ல் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. பரிந்துரைகளின் மீது அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் கீழ்க்கண்டவை முக்கியமானவைகளாகும்.

அ) மாநில அரசின் சொந்த வரிவருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.



ஆ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58 : 42 என்ற விகிதத்தில் பகிர்வு மானியம் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத் தொகை, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 60 : 32 : 8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

ஈ) கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரை, 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை, ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மக்கள்தொகை மற்றும் ஊராட்சியின் பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையில் 60:20:20 என்ற விகிதத்தில் நிதி விடுவிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 100 விழுக்காடு நிதி விடுவிக்கப்படுகிறது.

உ) வரி விதிப்பில் 100 விழுக்காடு வரி நிர்ணயம், வசூல் மற்றும் மறுநிர்ணயம் மேற்கொள்ளும் கிராம ஊராட்சிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

ஊ) 2013–14 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

எ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.30 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

ஏ) ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைக்கென ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2011–12 முதல் 2013–14 வரை வழங்கப்பட்டுள்ள பகிர்மான நிதியின் அதிகரிப்பு விபரங்கள் கீழே பட்டியலாக தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.7**

**2011–12 முதல் 2013–14 வரை பகிர்வு நிதி விபரம்**

**(ரூ. கோடியில்)**

| ஆண்டு | மாநில நிதிக்குழு மான்யம் | முந்தைய ஆண்டைவிட அதிகரிப்பு | |
|---|---|---|---|
| | | தொகை | அதிகரிப்பு விழுக்காடு |
| 2011–12 | 3,332.47 | 517.59 | 18% |
| 2012–13 | 4,068.13 | 735.66 | 22% |
| 2013–14 | 4,687.70 | 619.57 | 15% |



**2.9. உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2013–14**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்படும் பகிர்வு மான்யத்தில் 10 விழுக்காடு கணக்கிட்டு அதனை கிராம ஊராட்சிகளுக்கான ஒதுக்கீட்டில் பிடித்தம் செய்து உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி ஏற்படுத்தப்படும் என தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இந்நிதி, திட்டப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். இவ்வொதுக்கீட்டில் 50 விழுக்காடு தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும், எஞ்சிய 50 விழுக்காடு நிதியில் ஒரு பகுதி, மாவட்டங்களில் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கும், மீதித் தொகை மக்கள் தொகை அடிப்படையில் மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் 2012–ம் ஆண்டு டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், மாவட்டங்களுக்கு விடுவிக்கப்படும் உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2013–14–ம் ஆண்டு முதல் ரூ.5 கோடியாக அதிகரிக்கப்படும் என அறிவித்தார்கள். ரூ.3 கோடி ஊரக உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதியிலிருந்தும் ரூ.2 கோடி நகர்ப்புற உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்தும் பகிர்ந்து கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாறாக, ஊரக உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி கீழ்கண்ட விவரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அட்டவணை 2.8

**ஊரக உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி ஒதுக்கீடு விபரம்**

**(ரூபாய் கோடியில்)**

| | | |
|---|---|---|
| 1 | 10 விழுக்காடு உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியினை கிராம ஊராட்சிக்கான ஒதுக்கீட்டிலிருந்து எடுத்தல் | 488.769 |
| 2 | தாய் திட்டத்திற்காக 50 விழுக்காடு ஒதுக்கீடு | 244.385 |
| 3 | மீதத் தொகை (1–2) | 244.384 |
| 4 | மாவட்டத்திற்கு ரூ.3 கோடி வீதம் 31 மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நிதி ஒதுக்கீடு | 93.000 |
| 5 | மீதத் தொகை (3–4) | 151.384 |
| 6 | அடிப்படை வசதிகள் மேற்கொள்ள 75 விழுக்காடு நிதியினை மக்கள் தொகை அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒதுக்கீடு செய்தல் | 113.539 |
| 7 | ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள மீதியுள்ள 25 விழுக்காடு நிதியினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலம் பயன்படுத்துதல் | 37.845 |



### 2.9.1 . உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி–மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கான ஒதுக்கீடு

2013–14ம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியாக ரூ.206 கோடி மாவட்டஆட்சித் தலைவர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் பணிகளைத் தேர்வு செய்யும்போது கீழ்க்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என வழிகாட்டி நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ) குக்கிராமங்களில் தாய் திட்டம் செயல்படுத்தப்படும் குடிநீர் விநியோகம், தெருவிளக்கு, சாலைகள், இடுகாடு, இடுகாட்டுப் பாதை போன்ற அடிப்படை வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் வகையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

ஆ) 2015ஆம் ஆண்டுக்குள் திறந்தவெளியில் மலம் கழித்தல் நிலையற்ற கிராம ஊராட்சிகளாக மாற்ற முனைப்பான நடவடிக்கை எடுக்கும் கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை.

இ) தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நீண்டகால நிலுவைத் தொகையினை செலுத்துதல்.

ஈ) தார்சாலை அல்லாத அனைத்து ஊரக சாலைகளையும் தார்ச்சாலைகளாக உயர்த்த தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நிலையில் மண்

மற்றும் கிராவல் சாலைகளை தார்சாலைகளாக மாற்ற முன்னுரிமை அளித்தல்.

உ) ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான கட்டடங்களை ஒரே தவணையில் முழுமையாக பராமரிப்பு மேற்கொள்ளுதல்.

இவ்வாறு 3,852 பணிகள் 2013–14ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.9**

**உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியில் எடுக்கப்பட்ட பணிகளின் வகைப்பாடு விபரம்**

| வ. எண். | பணி வகைப்பாடு | எடுக்கப் பட்ட பணிகள் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | அங்கன்வாடி மையங்கள் | 138 | 7.28 |
| 2 | பாலங்கள்/சிறுபாலங்கள் | 137 | 13.89 |
| 3 | தார் சாலைகள் | 447 | 54.91 |
| 4 | கட்டடங்கள் | 85 | 8.86 |
| 5 | சரளை சாலைகள் | 390 | 16.17 |
| 6 | கழிவுநீர் கால்வாய்கள் | 242 | 9.01 |
| 7 | குடிநீர் பணிகள் | 2035 | 56.15 |
| 8 | இதர பணிகள் | 378 | 13.63 |
| 9 | மின்கட்டணம் (TANGEDCO) | – | 7.78 |
| 10 | குடிநீர் கட்டணம் (TWAD Board) | – | 0.82 |
| | **மொத்தம்** | **3852** | **188.50** |



### 2.9.2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரளவில் பராமரித்திடும் உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2013–14

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் பராமரிக்கப்படும் நிதியிலிருந்து ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும், மேம்படுத்தவும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி, 2011–12 முதல் 2013–14 வரை ரூ.63.78 கோடி மதிப்பீட்டில் 358 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.10**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் பராமரிக்கப்படும் உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியில் 2011–12 முதல் 2013–14 வரை எடுக்கப்பட்ட பணிகள் வகைப்பாடு விபரம்**

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | வகைப்பாடு | 2011–12 | | 2012–13 | | 2013–14 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| 1 | சாலைகள் | 35 | 8.11 | 58 | 11.55 | 59 | 15.19 |
| 2 | பாலங்கள் | 0 | 0 | 3 | 0.89 | 12 | 14.91 |
| 3 | இதர உட்கட்டமைப்பு பணிகள் | 12 | 0.51 | 95 | 5.98 | 84 | 6.64 |
| | **மொத்தம்** | **47** | **8.62** | **156** | **18.42** | **155** | **36.74** |

## 2.10. மத்திய நிதி ஆணைய மானியம்

### பொது அடிப்படை மானியம்

2010–11 முதல் 2014–15 வரையுள்ள 5 ஆண்டு காலத்திற்கான 13–வது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியம் ரூ.2016.30 கோடியினை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கும் வகையில் மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 2010–11 முதல் 2013–14 வரையான காலத்தில் பெறப்பட்ட பொது அடிப்படை மானிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

<u>அட்டவணை 2.11</u>

**ஆண்டு வாரியான பொது அடிப்படை மானிய விவரம்**

| ஆண்டு | கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்ட நிதி (ரூ. கோடியில்) |
|---|---|
| 2010–11 | 287.10 |
| 2011–12 | 352.62 |
| 2012–13 | 408.83 |
| 2013–14 | 471.65 |
| **மொத்தம்** | **1520.20** |

அடிப்படை மானியத் தொகை முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு



விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படைப் பணிகளான குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம், மின்கட்டணம் (TANGEDCO) குடிநீர் கட்டணம் (TWAD) ஆகியவற்றிற்காக பயன்படுத்தப்படுகிறது.

## 2.11. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி, கேளிக்கை வரி ஆகியவற்றிலிருந்து பெறப்படும் வருவாய் நிதியினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. 2010–11–ம் ஆண்டில் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு நிதி, ஊரகப் பகுதிகளில் நடைபெறும் முன்னுரிமைப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, மீதியுள்ள மூன்றில் ஒரு பங்கு நிதி மட்டும் ஊராட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டது. ஆனால், 2011–12 மற்றும் 2012–13ஆம் ஆண்டுகளில் ஒப்படைக்கப்பட்ட வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு நிதி ஊராட்சிகளுக்கு விடுவிக்கபபட்டதுடன் மூன்றில் ஒரு பங்கு நிதியினை ஊரகப் பகுதிகளில் நடைபெறும் முன்னுரிமைப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன்படி, 2013–14 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியாக

ரூ.939.67 கோடி நிதியினை பின்வருமாறு அரசு அனுமதித்து ஆணையிட்டுள்ளது.

அ) மூன்றில் இரண்டு பங்கான ரூ.626.45 கோடி நிதியினை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 67:33 என்ற விகிதத்தில் 2011 மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளித்துள்ளது. அவ்வாறு ரூ.419.72 கோடி, கிராம ஊராட்சிகளுக்கும், ரூ.206.72 கோடி, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ஆ) மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு நிதியான ரூ.313.22 கோடி நிதி, குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஊரகப் பகுதிகளில் முன்னுரிமைத் திட்டங்களுக்காகவும், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும் (தாய்) 50:50 என்ற விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.11.1 . ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலரைத் தலைவராகக் கொண்ட குழுவிற்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட கூறு நிதியிலிருந்து பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள், கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள்,



பெரிய பாலங்கள், தரைப்பாலங்கள், இணைப்புச் சாலைகள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற பெரிய அளவிலான பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2011–12 முதல் 2013–14 வரை ரூ.421.69 கோடி மதிப்பீட்டில் 1,456 பணிகள் கீழ்க்கண்டவாறு எடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை.2.12**

**ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்**

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | பணிகள் விவரம் | 2011–12 | | 2012–13 | | 2013–14 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| 1 | ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் | 20 | 31.87 | 25 | 43.98 | 25 | 51.37 |
| 2 | ஊராட்சி மன்றக் கட்டடங்கள் | 55 | 4.01 | 182 | 14.83 | 200 | 20.00 |
| 3 | பேருந்து நிறுத்தங்கள் | 0 | 0.00 | 0 | 0.00 | 18 | 26.76 |
| 4 | சாலைகள் | 88 | 31.74 | 188 | 36.36 | 143 | 60.11 |
| 5 | பாலங்கள் | 29 | 32.37 | 12 | 18.60 | 33 | 29.73 |
| 6 | இதர உட் கட்டமைப்பு பணிகள் | 4 | 0.50 | 127 | 4.16 | 307 | 15.30 |
| | மொத்தம் | 196 | 100.49 | 534 | 117.93 | 726 | 203.27 |

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதி ஒதுக்கீட்டில் ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களுக்கு வாகனங்கள் வாங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி 2012–13ஆம் ஆண்டில் வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி இயக்குநர், உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் உள்ளிட்ட அலுவலர்களுக்கு ரூ.3.17 கோடி செலவில் 62 வாகனங்கள் வாங்கப்பட்டன. அதேபோல 2011–12 ஆம் ஆண்டில் ரூ.1.27 கோடி செலவில் 24 வாகனங்களும், 2013–14 ஆம் ஆண்டில் 0.39 கோடி செலவில் 7 வாகனங்களும் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியிலிருந்து வாங்கப்பட்டன.

### 2.12. கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களில் 79,394 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சி என்பது, அதற்கென உள்ள கிராமங்களை உள்ளடக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். ஒவ்வொரு ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப்பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும். ஆயினும், குறிப்பிட்ட சூழ்நிலைகளில்



ஊராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பினைக் கவனித்திட தனி அலுவலர்கள் நியமிக்கப்படுவர்.

கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் கீழ்க்கண்ட குழுக்களை அமைத்திட வேண்டும்.

1. நியமனக் குழு
2. வளர்ச்சிக் குழு
3. வேளாண்மை மற்றும் நீர்வடிப் பகுதி குழு
4. பணிகள் குழு
5. கல்விக் குழு

#### 2.12.1. சட்டரீதியான கடமைகள்

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 110–ன் படி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டியது கிராம ஊராட்சிகளின் முக்கியக் கடமையாகும்.

i) அனைத்து கிராமச்சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)

ii) பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

**அ) குடிநீர் விநியோகம்**

ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல், கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமையாகும். கிராம ஊராட்சிகளில் கைப்பம்பு மற்றும் விசைபம்புகள் முதன்மை குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மை குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.



**அட்டவணை 2.13**

**ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக அமைப்புகள்**

| வ. எண் | இனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கைபம்பு | 2,12,359 |
| 2. | விசைப் பம்பு | 95,353 |
| 3. | சிறுமின் விசைப்பம்பு | 69,633 |
| 4. | திறந்தவெளிக் கிணறு | 16,983 |
| 5. | மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி(OHTs) | 84,204 |
| 6. | தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி(GLRs) | 9,180 |

இவை மட்டுமின்றி 2013–14–ம் ஆண்டில் ரூ.1185.12 கோடி மதிப்பீட்டில் 83,334 குடிநீர் விநியோக பணிகள் தமிழ்நாடு குக்கிராம மேம்பாட்டுத்திட்டம் (தாய்), ஊரக கட்டிட பராமரிப்பு மற்றும் புனரமைப்பு திட்டம், ஊரக உள்கட்டமைப்பு இடைநிரவல் நிதி, மாநில நிதிக்குழு மானியம் போன்ற பல்வேறு திட்ட நிதியிலிருந்தும் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### ஆ) தெரு விளக்குகள்

தெருவிளக்குகள் இல்லாத இடங்களுக்கு விரிவுபடுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை கிராம ஊராட்சிகளின் அவசியமான பணிகளில் ஒன்றாகும். கிராம ஊாட்சிகளில் பராமரிக்கப்படும் பல்வேறு வகையான தெருவிளக்குகள் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.14**

**கிராம ஊராட்சிகளில் உள்ள தெருவிளக்குகள் விவரம்**

| வ. எண். | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | குழல் விளக்கு | 16,06,539 |
| 2. | பாதரச ஆவி விளக்கு | 9,944 |
| 3. | சோடியம் ஆவி விளக்கு | 1,03,697 |
| 4. | அடர் ஒளி விளக்கு | 3,52,452 |
| 5. | பல்பு | 203 |
| 6. | சூரியசக்தி தெருவிளக்கு | 27,566 |
| 7. | எல்இடி விளக்கு | 1, 179 |
| | **மொத்தம்** | **21,01,580** |



### இ) கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தினைப் பேணிக் காத்தல்.

ஊரகப் பகுதிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை பேணிக் காத்தல் என்பது கிராம ஊராட்சியின் கட்டாய கடமைகளில் ஒன்றாகும். அதன்படி, கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

i) தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.

ii) கழிவு நீர்க்கால்வாய் அமைத்தல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை வெளியேற்றுதல்.

iii) உபயோகமற்ற கட்டுமானப் பொருட்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.

iv) பொதுக் கழிப்பிடங்களில் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

v) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

vi) சுடுகாடு/இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்

vii) பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், சுகாதாரமற்ற குட்டைகள், குளங்கள், பாதாள சாக்கடைகள், குழிகள் அல்லது பள்ளங்கள் ஆகியவற்றை மூடுதல்

மற்றும் ஊராட்சியில் இதர சுகாதார மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல்.

கிராம ஊராட்சிகளில் ஏற்கனவே 9,896 துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். கிராம ஊராட்சிகளில் துப்புரவுப் பணிகளுக்காக அரசாணை (நிலை) எண். 129 மற்றும் 130 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை நாள் 14.9.2013ன்படி கூடுதலாக 16,726 பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மேலும், கிராமப் பகுதிகளில் ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மை திட்டங்களுக்காக ரூ.150 கோடியினை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. சுகாதார மேம்பாட்டிற்காகவும், தூய்மையான சுற்றுப்புற சூழ்நிலைக்காகவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சிறந்த கிராம ஊராட்சியைத் தேர்வு செய்து ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கும் வகையில் தூய்மையான கிராம இயக்கம் என்ற விருதினை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றிடவும், அதனைக் கொண்டு சாலைகள் அமைத்திடவும் சுய உதவிக் குழுக்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

### 2.12.2. விருப்புரிமைப் பணிகள்

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111–ன்படி பின்வரும் கடமைகளை ஊராட்சியின் தேவைக்கேற்பவும் நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் நிறைவேற்றிட வேண்டும்.



i) மரங்கள் நட்டு பாதுகாத்தல்.

ii) கிராமத்திலுள்ள சாலைகளில் இருபக்கங்களிலும் தெருவிளக்குகள் அமைத்தல்

iii) சந்தைகள் ஏற்படுத்தி பராமரித்தல்

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை கட்டுப்படுத்துதல்

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக்கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்தி பராமரித்தல் போன்றவையாகும்.

### 2.12.3. ஆதாரங்கள்

மூன்றடுக்கு கிராம ஊராட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள், கீழ்க்கண்ட வரி மற்றும் வரியில்லா வருவாய் ஆதாரங்களைப் பெற அதிகாரம் பெற்றுள்ளன.

#### அ. வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வருவாயாகப் பெற அதிகாரம் பெற்றுள்ளன.

i) வீட்டு வரி / சொத்துவரி

ii) தொழில்வரி

iii) விளம்பரவரி

**i) வீடு / சொத்துவரி**

**அ) வீட்டு வரி**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994,** பிரிவு **172–**ன்படி ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டு வரி விதிக்கப்பட வேண்டும். ஊரகப் பகுதிகளில் அடித்தள பரப்பளவு அடிப்படையில் வரி விதிக்கப்பட்டு வருகின்றன. **2011–12** முதல் **2013–14** வரையிலான வீட்டு வரி கேட்பு, வசூல் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 2.15**
**ஆண்டு வாரியான வீட்டுவரி கேட்பு மற்றும் வசூல் விவரங்கள்**

**(ரூ.கோடியில்)**

| ஆண்டு | கணக்கெடுப்பு எண்ணிக்கை | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 2011–12 | 1,08,72,024 | 98.79 | 98.79 | 0.00 |
| 2012–13 | 1,13,13,627 | 118.84 | 118.84 | 0.00 |
| 2013–14 | 1,16,74,370 | 160.79 | 154.34 | 6.45 |
| மொத்தம் | | **378.42** | **371.97** | **6.45** |



**ஆ) சுயநிதிக்கல்வி நிறுவனங்களிடமிருந்து சொத்து வரி வசூல் செய்தல்**

**1994**ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு **172** மற்றும் அரசாணை எண். **255,** ஊரக வளர்ச்சித் துறை, நாள் **13.12.1999–**ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டுவரி / சொத்துவரி, தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்தப்படவேண்டும். மேலும், அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறாமல் சுய நிதியிலிருந்து பாடத் திட்டத்தினைச் செயல்படுத்தும் போது அக்கட்டடங்களுக்கு வீட்டு வரி / சொத்து வரி விதிக்கப்படும். அதனடிப்படையில், **2008–09**ம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளால் சுயநிதிக்கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி நிர்ணயித்து வசூலிக்கப்பட்டு வருகிறது. **2011–12** முதல் **2013–14** வரை வசூலிக்கப்பட்ட சொத்து வரி விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 2.16**
**சுயநிதிக்கல்வி நிறுவனங்களிடமிருந்து ஆண்டு வாரியாக வசூலிக்கப்பட்ட சொத்து வரி விவரம்**

**( ரூ. கோடியில்)**

| ஆண்டு | சுயநிதி கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 2011–12 | 3, 804 | 18.21 | 17.22 | 0.99 |
| 2012–13 | 3,963 | 20.26 | 18.86 | 1.40 |
| 2013–14 | 4,270 | 22.89 | 20.49 | 2.40 |
| | மொத்தம் | **61.36** | **56.57** | **4.79** |

### ii) தொழில் வரி

ஊரகப் பகுதிகளில் தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சிகளிடம் உள்ளது. 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 121–ல் விவரிக்கப்பட்டவாறு தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித்தொகையிலிருந்து தொழில்வரி விதிக்கவும், வசூல் செய்யவும் வழிவகை உள்ளது. தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் தொகை தொடர்புடைய கிராம ஊராட்சிகளிடம் செலுத்தப்படவேண்டும். தொழில், வணிகம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வரி விதிக்க வழிவகை செய்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ம் ஆண்டு பிரிவு 198 அ–க்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. தொழில் வரி கேட்பு மற்றும் வசூல் விவரங்கள் பின்வருமாறு:-

**அட்டவணை 2.17**

**ஆண்டுவாரியான தொழில்வரி கேட்பு மற்றும் வசூல் விவரம்**

**(ரூ.கோடியில்)**

| ஆண்டு | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|
| 2011–12 | 51.85 | 51.85 | 0.00 |
| 2012–13 | 57.58 | 57.58 | 0.00 |
| 2013–14 | 83.37 | 82.43 | 0.94 |



### ஆ) வரியல்லாத வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற அதிகாரம் பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ii) அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான கட்டணங்கள்

iii) சந்தைக் கட்டணம்

iv) குடிநீர் கட்டணம்

v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி பட்டா கட்டணம்

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிந்து பெறப்படும் வருமானங்கள்

x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை.

**i) மனைப்பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்**

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 1997–ன்படி ஊரகப் பகுதிகளில் உள்ள மனைப்பிரிவுகளுக்கு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்கக முன் இசைவுடன் மனைப்பிரிவுகளுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சி செயல் அலுவலர் அதாவது ஊராட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன விதிகளின் கீழ் கட்டிட வரைபட அனுமதி வழங்கும் அதிகாரமும் செயல் அலுவலருக்கே அளிக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளுக்கான வரியில்லாத வருவாய் இனங்களில் முக்கியமானதாக மனைப்பிரிவுகளுக்கான உரிமக்கட்டணம் மற்றும் கட்டட வரைபட அனுமதி ஆகியவை உள்ளன.

**ii) அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமக்கட்டணம்**

அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமங்களை கிராம ஊராட்சிகள் வழங்குகின்றன. 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 159–ல் தெரிவித்துள்ளபடி அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க புதிய தொழில் தொடங்க விண்ணப்பிக்கவோ அல்லது புதுப்பிக்கவோ உள்ள விண்ணப்பதாரர், தொடர்புடைய கிராம ஊராட்சிகளில் விண்ணப்பித்தல் வேண்டும்.



2012–13 ஆம் ஆண்டில் மாவட்ட அளவில், ஊரகப் பகுதிகளில் உள்ள புதிய தொழில்களை கண்டறிந்ததுடன் ஏற்கனவே உள்ள தொழில்களின் பட்டியலை நாளது தேதி வரை இறுதி செய்து அனைத்து தொழில்களுக்கான உரிமக் கட்டணங்களைத் திருத்தியமைத்து மாவட்ட ஆட்சியர்களால் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுள்ளது. அதன்படி 2013–14ம் ஆண்டில் 2,03,075 வணிக நிறுவனங்களுக்கு கிராம ஊராட்சிகளில் தொழில் தொடங்க / புதுப்பிக்க உரிமம் வழங்கப்பட்டதுடன் உரிமக்கட்டணமாக ரூ.8.89 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**iii) குடிநீர் கட்டணங்கள்**

ஊரகப் பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிற்கும், குடிநீர் இணைப்பிற்கு கட்டணம் விதித்திட கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பு பெறுவதற்கு பிணைப்புத் தொகையாக கிராம ஊராட்சிக்கு ரூ.1000/– செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டு குடிநீர் இணைப்பிற்கும் மாதக்கட்டணம் ரூ.30/– செலுத்தப்படவேண்டும். 2011–12–ம் ஆண்டிலிருந்து வசூலிக்கப்பட்ட குடிநீர் கட்டண விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## அட்டவணை 2.18

### ஆண்டு வாரியான குடிநீர் கட்டணங்கள் வசூல் விவரம்

(ரூ.கோடியில்)

| ஆண்டு | வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 2011–12 | 9,71,768 | 42.68 | 42.68 | 0.00 |
| 2012–13 | 10,32,638 | 48.11 | 48.11 | 0.00 |
| 2013–14 | 12,82,644 | 55.52 | 48.85 | 6.67 |
| மொத்தம் | | **146.31** | **139.64** | **6.67** |

**iv) ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் (பத்தி எண். 2.11 ல் விவரமாக தரப்பட்டுள்ளது)**

**v) மானியம்**

மாநில நிதிக்குழு மானியம், மத்திய நிதிக்குழு மானியம் மற்றும் மத்திய, மாநில அரசு விடுவிக்கும் வளர்ச்சிப் பணிக்கான மானியம் ஆகியவை.

### 2.12.4. ஊராட்சிகளின் வருவாய் வரம்பு

தமிழ்நாட்டில் **12,524** கிராம ஊராட்சிகள் உள்ளன. **2013–14**ம் ஆண்டு வருவாய் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.



## அட்டவணை 2.19

### ஊராட்சிகளின் வருவாய் வரம்பு

| வருவாய் வரம்பு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ரூ. 5 லட்சம் முதல் 7 லட்சம் வரை | 160 |
| ரூ. 7லட்சத்திற்கும் மேல் 10 லட்சம் வரை | 963 |
| ரூ.10 லட்சத்திற்கும் மேல் 20 லட்சம் வரை | 6,275 |
| ரூ.20 லட்சத்திற்கும் மேல் 50 லட்சம் வரை | 4,332 |
| ரூ.50 லட்சத்திற்கும் மேல் 1 கோடி வரை | 675 |
| ரூ.1 கோடிக்கு மேல் | 119 |
| **மொத்தம்** | **12,524** |

### 2.13 . விருதுகள்

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் முன் முயற்சிகள் மற்றும் நடவடிக்கைளை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு மற்றும் மத்திய அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளன. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் பல்வேறு விருதுகள் விவரம் பின்வருமாறு:–

1) ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது (முன்பு ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டத்தின் கீழ் விருது என இருந்தது)

2) ராஷ்டிரிய கௌரவ கிராம சபை விருது

3) மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின் கீழ் சிறந்த கிராம ஊராட்சிக்கான விருது

4) நிர்மல் கிராம புரஸ்கர்

5) தூய்மையான கிராம இயக்கம்

6) சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையால் வழங்கப்படும் பிளாஸ்டிக் அற்ற சுற்றுச்சூழல் விருது

**2.13.1. ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது**

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளிப்பதுடன் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்த ஏதுவாக மாநில அரசுகளுக்கு உறுதுணையாக, ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை அளிக்கும் விருதினை ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது என மாற்றி மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் அறிவித்துள்ளது.

2012–13ஆம் ஆண்டில் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், சிறந்த கிராம ஊராட்சிக்கு ரூ. 7 இலட்சம், சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 20 இலட்சம் மற்றும் சிறந்த மாவட்ட ஊராட்சிக்கு ரூ.40 இலட்சம் வீதம் தமிழ்நாட்டில் உள்ள 6 கிராம ஊராட்சிகள் 2 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரொக்கப் பரிசுடன் விருது வழங்கி மொத்தம் ரூ.1.22 கோடி நிதியினை



விடுவித்துள்ளது. விருது பெற்ற ஊராட்சி / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சி விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.20**

**2012–13ம் ஆண்டு விருது பெற்ற ஊராட்சி அமைப்புகள் விவரம்**

| வ.எண் | ஊராட்சி அமைப்புகள் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சி | திருச்சிராப்பள்ளி |
| 2 | அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் | கடலூர் |
| 3 | செய்யாறு ஊராட்சி ஒன்றியம் | திருவண்ணாமலை |
| 4 | பாப்பரம்பாக்கம் கிராம ஊராட்சி | திருவள்ளூர் |
| 5 | நாட்டார்மங்கலம் கிராம ஊராட்சி | கடலூர் |
| 6 | திண்டமங்கலம் கிராம ஊராட்சி | சேலம் |
| 7 | ஈசனத்தம் கிராம ஊராட்சி | கரூர் |
| 8 | ஜி.கல்லுப்பட்டி கிராம ஊராட்சி | தேனி |
| 9 | பெத்துரெட்டிப்பட்டி கிராம ஊராட்சி | விருதுநகர் |

மேற்கண்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகத்தால் 2013, ஏப்ரல் 24ம் நாளன்று ரொக்கப் பரிசு மற்றும் விருதுகள் வழங்கப்பட்டன.

2013–14ம் ஆண்டுக்கான விருதுகளைப் பெற சிறந்த 6 கிராம ஊராட்சிகளும், 2 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஒரு மாவட்ட ஊராட்சியும் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு ஊராட்சிக்கு ரூ.8 இலட்சம், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.25 இலட்சம் மற்றும் மாவட்ட ஊராட்சிக்கு ரூ.50 இலட்சம் என்ற அடிப்படையில் ரூ.1.48 கோடி நிதியினை மத்திய அரசு

விடுவித்துள்ளது. விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி அமைப்புகள் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.21**
**2013–14–ம் ஆண்டு விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி அமைப்புகள் விவரம்**

| வ. எண். | ஊராட்சி அமைப்புகள் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சி | தஞ்சாவூர் |
| 2 | திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் | திண்டுக்கல் |
| 3 | சேரன்மாதேவி ஊராட்சி ஒன்றியம் | திருநெல்வேலி |
| 4 | நல்லூரர் கிராம ஊராட்சி | திருநெல்வேலி |
| 5 | முன்னூர் கிராம ஊராட்சி | விழுப்புரம் |
| 6 | ஓரக்காடு கிராம ஊராட்சி | திருவள்ளூர் |
| 7 | நல்லமநாய்க்கன்பட்டி கிராம ஊராட்சி | விருதுநகர் |
| 8 | பெல்லாரம்பள்ளி கிராம ஊராட்சி | கிருஷ்ணகிரி |
| 9 | மா.கொலக்குடி கிராம ஊராட்சி | கடலூர் |

### 2.13.2. ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது

வலுவான கிராம சபையின் மூலம் சிறப்பான சாதனைகள் புரியும் கிராம ஊராட்சிகளை அங்கீகரிக்கவும், ஊக்கமளிக்கவும் ஏதுவாக 2012ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருதினை ஏற்படுத்தியுள்ளது. 2011–12ம் ஆண்டிற்கான விருதிற்கு திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நெடுங்குணம் கிராம ஊராட்சியினை மத்திய அரசு தேர்வு செய்து விருது



வழங்கியது. 2012–13ம் ஆண்டிற்கான விருது மற்றும் ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசு பெற இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கருத்தனேந்தல் ஊராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

### 2.13.3. ராஜீவ்காந்தி ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம்.

இராஜீவ்காந்தி ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம் என்ற புதிய திட்டத்தினை 2012–13ம் ஆண்டில் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் அறிமுகப்படுத்தியது. பதினொன்றாவது திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களான ராஷ்டிரிய கிராம சுவராஜ் திட்டம், ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டம், ஊராட்சி மகிளா யுவ சக்தி திட்டம் மற்றும் ஊராட்சிகளை மின்னணு மயமாக்கல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு புதிய திட்டமாக ராஜீவ்காந்தி ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம் 2013–14ம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. 2013–14ம் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதியினைப் பெற தொலை நோக்கு திட்ட காலமான 2013–14 முதல் 2016–17ம் ஆண்டு வரை மற்றும்2013–14 ஆண்டுத் திட்டம் ஆகியவை தயார் செய்யப்பட்டு மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகத்திற்கு தமிழக அரசால் அனுப்பப்பட்டது. அதன்படி, 2013–14ம் ஆண்டிற்கான ராஜீவ்காந்தி ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டத்தினை செயல்படுத்த ரூ.155.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மொத்த ஒதுக்கீடான ரூ.155.04 கோடியினை, மத்திய மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதத்தில் விடுவித்திடும் வகையில் பங்கீடு செய்யப்படுகிறது. அதனடிப்படையில் மத்திய அரசு, அதன் பங்கான ரூ.116.28 கோடியில் முதல் தவணையாக ரூ.58.14 கோடியினை விடுவித்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதி, கீழ்க்கண்ட பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் :

i. நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக கிராம ஊராட்சிகளுக்கு உதவிடுதல்.

ii. கிராம ஊராட்சிகளின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு உதவிடுதல்

iii. திறனாக்கம் மற்றும் பயிற்சி

iv. பயிற்சி அளித்திட ஏதுவாக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்துதல்

v. வட்டார அளவிலான இடைநிலை வள ஆதார மையங்கள்

vi. கிராம ஊராட்சிகளை மின்னணு மயமாக்குதல்

vii. போதிய நிதி வசதி இல்லாத ஊராட்சிகளில் ஊராட்சி நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவிடுதல்

viii. தகவல், கல்வி மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள்



ix. மாநில/ மாவட்ட அளவில் திட்ட மேலாண்மை அலகுகளை உருவாக்குதல்

இத்திட்டத்திற்காக வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2.14. ஊராட்சி ஒன்றியம்**

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், 5000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் நேரடியாக தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுவார்.

## அட்டவணை 2.22

**கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடு**

| ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10– மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 11 முதல் 20 வரை | 80 |
| 21 முதல் 30 வரை | 80 |
| 31 முதல் 40 வரை | 83 |
| 41 முதல் 50 வரை | 65 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 54 |
| **மொத்தம்** | **385** |

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள பணியாளர்கள் இருப்பார்கள். 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 112–ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமான சில பணிகளின் விவரம் பின்வருமாறு:

1. மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல்.



2. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
4. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்
5. தொற்றுநோய் பரவாமல் இருக்கத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
6. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.
7. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளையும் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

2.14.1 நிதி

1. வரி நிர்ணயம் செய்யும் அதிகாரம் ஊராட்சி ஒன்றிய குழுவிடம் இல்லை.
2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை.
3. மாநில நிதிக்குழு மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகள் விடுவிக்கும் திட்டங்களுக்கான வளர்ச்சி நிதி ஆகியன.

**2.15. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளைப் பிரித்தல்**

தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958–ன்படி 385 ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக 75 ஊராட்சி ஒன்றியங்கள் 2.10.1960 அன்று அமைக்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக 129 ஊராட்சி ஒன்றியங்கள் 14.4.1961 அன்று அமைக்கப்பட்டன. மூன்றாவது கட்டமாக 155 ஊராட்சி ஒன்றியங்கள் 2.10.1961 அன்று அமைக்கப்பட்டன. நான்காவது கட்டமாக 26 ஊராட்சி ஒன்றியங்கள் 1962 முதல் 1986 வரையான காலங்களில் அமைக்கப்பட்டன.

அரசு ஆணை (நிலை) எண் 176 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள் 9.12.2013–ல் தர்மபுரி மாவட்டத்தில்



உள்ள பென்னாகரம் மற்றும் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து புதிதாக ஏரியூர் மற்றும் கடத்தூர் என்ற இரண்டு புதிய ஊராட்சி ஒன்றியங்கள் தோற்றுவித்திட ஆணை வெளியிடப்பட்டது. கடலூர், கிருஷ்ணகிரி, நீலகிரி, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே இருந்த ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து புதிதாக ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்கிடுதல் அரசின் நடவடிக்கையில் உள்ளது. ஏற்கனவே உள்ள ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தும், புதிய ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்கியும் அரசு ஆணை வெளியிட்ட பின்னர் 2016ஆம் ஆண்டு நடைபெறும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தலில் அதற்கான பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டு அவை செயல்படத் துவங்கும்.

**அட்டவணை2.23**

**ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல் மற்றும் புதிய ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்குதல்**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பிரிக்கப்படவுள்ள ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | பிரிக்கப்பட்ட பின் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள ஊராட்சி ஒன்றியத்தின்பெயர் |
|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | பர்கூர், மத்தூர், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியங்கள் | போச்சம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் |
| | | தளி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியங்கள் | அஞ்செட்டி ஊராட்சி ஒன்றியம் |

| | | | |
|---|---|---|---|
| 2 | கடலூா் | காட்டுமன்னார்கோவில், கீரப்பாளையம் மற்றும் கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியங்கள் | ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியம் |
| 3 | நீலகிரி | உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம் | குந்தா ஊராட்சி ஒன்றியம் |
| | | கூடலூர் ஊராட்சி ஒன்றியம் | பந்தலூர் ஊராட்சி ஒன்றியம் |
| 4 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் | சாலவாக்கம் ஊராட்சி ஒன்றியம் |
| 5 | விழுப்புரம் | முகையூர் ஊராட்சி ஒன்றியம் | மணம்பூண்டி ஊராட்சி ஒன்றியம் |
| | | வானூர் ஊராட்சி ஒன்றியம் | கிளியனூர் ஊராட்சி ஒன்றியம் |

### 2.16. மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் செயலராக ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, பின்வரும் நிலைக்குழுக்களை அமைக்கலாம்.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு.

இக்குழுக்கள், மாவட்ட ஊராட்சியில் ஒப்படைக்கப்படும் பணிகளைச் செயல்படுத்தும். இக்குழுக்கள் தவிர, மாவட்ட ஊராட்சியால் கூடுதல் நிலைக் குழுக்களைத் தேவையின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

#### 2.16.1. செயல்பாடுகள்

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.

2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கையினை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.

3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

4. ஊரக வீட்டு வசதிக்கான திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல், (குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு.)

5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

### 2.16.2. நிதி

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் 58 விழுக்காடு நிதியில் 8 விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.



## 2.17. மாவட்டத் திட்டக் குழு

மாவட்டத் திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 73வது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்டத் திட்டக் குழு 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது மாவட்டத் திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாவட்டத் திட்டக்குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதிவரையிலான விபரங்களைப் பெறுதல்.

2. தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்

3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.

4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும்

வளர்ச்சித் திட்டம் மற்றும் மாநிலத் திட்டக்குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருத்தல்.

5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.

7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.

8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

**2.18. ஊராட்சி அமைப்புகளுக்கான கணக்கீட்டு மென்பொருள் (Panchayat Raj Institutions Accounting Software-PRIA Soft) – மாதிரி கணக்கீட்டு முறை ( Model Accounting System – MAS)**

2012–13ம் ஆண்டு முதல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகிய மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் கணக்கீட்டு மென்பொருள் மாதிரி கணக்கீட்டு முறை **(PRIASOFT–Model Accounting System)** யினை செயல்படுத்த தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. 12,524 கிராம



ஊராட்சிகளுக்கும் புதிய கணினி, அச்சுப்பொறி, தடையற்ற மின்வழங்கி மற்றும் அகண்ட அலைக்கற்றை இணைப்பு வசதி ஆகியவை வழங்க அரசாணை எண். 26, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா 1)துறை, நாள் 12.4.2012ல் ரூ.79.50 கோடி நிதியினை அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது. கணினி மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்து ஊராட்சிகளில் நிறுவும் பொறுப்பினை தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்திற்கு (ELCOT)வழங்கி அரசு ஆணையிட்டது. அதன்படி எல்காட் நிறுவனம், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கணினி மற்றும் இதர உபகரணங்களை நிறுவி முடித்துள்ளது. 9,373 கிராம ஊராட்சிகளுக்கு அகண்ட வரிசை இணையதள இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனத்தின் மூலம் அனைத்து ஊராட்சி செயலர்களுக்கும் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு இதுவரை 7,406 கிராம ஊராட்சி செயலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இம்மென்பொருள் குறித்த பயிற்சியை மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்களுக்கும், ஊராட்சி செயலர்களுக்கும் வழங்க பயிற்றுநர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2012–13–ம் ஆண்டுக்கான அனைத்து ஊராட்சிக் கணக்குகள் பிரியாசாப்ட் மென்பொருளைப் பயன்படுத்தி இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.24**
**மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் 2012–13–ம் ஆண்டுக்கான பிரியாசாப்ட் பதிவேற்றம்**

| வ. எண் | ஊராட்சி அமைப்பு | எண்ணிக்கை | பதிவேற்றம் முடிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| 1 | கிராம ஊராட்சிகள் | 12,524 | 12,524 |
| 2 | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 | 385 |
| 3 | மாவட்ட ஊராட்சிகள் | 31 | 31 |

2013–14–ம் ஆண்டுக்கான கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவற்றின் கணக்குகளும் இம்முறையில் பதிவேற்றம் செய்யும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

**அட்டவணை 2.25**
**மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் 2013–14–ம் ஆண்டுக்கான பிரியாசாப்ட் பதிவேற்றம்**

| வ. எண் | ஊராட்சி அமைப்பு | எண்ணிக்கை | பதிவேற்றம் முடிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| 1 | கிராம ஊராட்சிகள் | 12,524 | 7,202 |
| 2 | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 | 122 |
| 3 | மாவட்ட ஊராட்சிகள் | 31 | 31 |



### 2.18.1 இதர மின்னணு மயமாக்கல் கூறுகள்

இதர மென்பொருள்களான Plan Plus, Action Soft, Area Profiler, Local Government Directory மற்றும் National Panchayat Portal ஆகியவற்றை செயல்படுத்திடத் தேவையான பயிற்சிகளை மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகத்தால் மாநிலத் திட்ட மேலாண்மை அலகு மற்றும் மாவட்டத் திட்ட மேலாண்மை அலகுப் பணியாளர்களுக்கு 2014 சனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் வழங்கப்பட்டுள்ளது. இவைகளை நடப்பாண்டில் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.19 ஊராட்சிகளின் நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் கிராமப்புற மக்களுக்கான சேவைகளை வழங்குதல்

### 2.19.1 வரி வசூலித்தல்

ஊராட்சியில் வரி மற்றும் வரியல்லாத வருவாய் இனங்கள் குறித்த தகவல்களை கணினி மயமாக்கி, அதனடிப்படையில் தானியங்கி மின்னணு கையடக்கக் கருவி மூலம் வசூல் செய்வதன் மூலம் வரி மற்றும் வரியல்லா வருவாய் சீரிய முறையில் பெருகிட வழி வகுக்கும். இம்முறை தற்போது நகர்புறங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014–15–ம் ஆண்டில் 385 நகர்ப்புறங்களையொட்டிய ஊராட்சிகளில் தானியங்கி மின்னணு கையடக்க கருவி மூலம் வரி வசூல் செய்யும்

முறை சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்படும். ரூ.99.46 லட்சம் மதிப்பீட்டில் மாநில திட்டக் குழுவின் பகுதி 2–திட்ட நிதியில் இருந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**நோக்கங்கள்**

1. கிராம ஊராட்சிகளின் பதிவேடுகளை முறைப்படுத்தி கணினி மயமாக்குதல்.
2. வரி மற்றும் வரியல்லாத வருவாய் இனங்களின் நிதி ஆதார விவரங்களை உருவாக்குதல்.
3. வரி செலுத்துவோர்களுக்கு வரி செலுத்தப்பட்ட விவரங்களை குறுஞ்செய்தி மூலம் தெரிவித்தல் மற்றும் உடனுக்குடன் ரசீது வழங்குதல்.
4. இணையதளம் வழியாக வரி செலுத்துவதை ஊக்குவித்தல்.
5. கிராம ஊராட்சிகளின் வரி மற்றும் வரியல்லாத வருவாய் இனங்களின் வசூல் முன்னேற்றத்தினை இணையதளம் வாயிலாக கண்காணித்தல்.

இத்திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப்படும். ஊராட்சிகளில் மின்னணுமயமாக்கலைக் கண்காணித்திடும் மாநில மற்றும் மாவட்டத் திட்ட மேலாண்மை அலகுகளின் பணியாளர்கள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் ஒருங்கிணைந்து பணியாற்றுவார்கள். கிராம ஊராட்சி செயலர்கள் இத்திட்டத்தினை செயல்படுத்தும் களப் பணியாளர்கள்



ஆவர். இத்திட்டத்தை வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) வட்டார அளவிலும், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மாவட்ட அளவிலும் கண்காணிப்பார்கள்.

### 2.19.2 . கிராம ஊராட்சிப் பணியாளர்கள் உரிய காலத்தில் ஊதியம் பெறுவதைக் கண்காணித்தல்

கிராம ஊராட்சிகள் பின்வரும் பணியாளர்களைக் கொண்டுள்ளன :

1. ஊராட்சி செயலர்
2. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்
3. துப்புரவுப் பணியாளர்

மேற்கண்ட பணியாளர்களுக்கான ஊதியம் வழங்கிடும் அலுவலர் கிராம ஊராட்சித் தலைவராவர். மாநில அரசுப் பணியல்லாத கிராம ஊராட்சிப் பணியாளர்களின் பணி சார்ந்த நடவடிக்கைகளில் ஒன்றான உரிய காலத்தில் ஊதியம் வழங்குவதை இணையதள வாயிலாகக் கண்காணிக்கும் முறை மாநிலம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படைக் கூறுகளாவன :–

கிராம ஊராட்சிப் பணியாளர்களின் விவரங்கள் அனைத்தும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு அவை சரிபார்க்கப்படும். 2013–14ம் ஆண்டில் கிராம ஊராட்சிப்

பணியாளர்களுக்கு மின்னணு முறையில் ஊதியம் வழங்கும் திட்டம் (ECS) சோதனை அடிப்படையில் முடிவடைந்துள்ளது. கிராம ஊராட்சிப் பணியாளர்களின் ஊதியப் பட்டியலை இணையதள வாயிலாகப் பெற தனியாக மென்பொருள் தேசிய தகவல் தொடர்பு மையத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. 2014–15ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சி பணியாளர்களுக்கும் மின்னணு முறையில் ஊதியம் வழங்க (ECS) நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 2.19.3. கிராம ஊராட்சிகளின் வங்கிக் கணக்குகளை கண்காணித்தல்

கிராம ஊராட்சிகளால் ஊரகப் பகுதியில் உள்ள பல்வேறு வங்கிகளில் கீழ்க்கண்ட கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | கணக்கு எண் 1 | கிராம ஊராட்சி பொது நிதி |
| 2 | கணக்கு எண் 2 | வரையறுக்கப்பட்ட செலவினங்கள் |
| 3 | கணக்கு எண் 3 | திட்ட நிதி |
| 4 | கணக்கு எண் 4 | மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் |
| 5 | கணக்கு எண் 5 | ஊரக வீட்டு வசதித் திட்டம் |
| 6 | கணக்கு எண் 6 | முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் |

கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தவும், தமிழ்நாடு மின் பகிர்மான நிறுவனத்திற்கு



செலுத்த வேண்டிய மின் கட்டணம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணம் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக பயன்பாட்டிற்காகவும் மேற்கண்ட கணக்குகளில் பராமரிக்கப்படும் நிதி பயன்படுத்தப்படுகிறது. மேற்கண்ட நிதி, முறையாகவும் விதிமுறைகளின்படியும் செலவு செய்யப்படுவதை கண்காணித்திட, ஊராட்சி வங்கிக் கணக்குகளை இணையதளம் மூலம் கண்காணிக்கும் முறையினை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளில் உள்ள அனைத்து வங்கிக் கணக்குகளிலும் நடைபெறும் நிதி பரிமாற்றங்கள் சென்னையில் உள்ள தேசிய தகவல் மையத்தில் உள்ள மைய கணினிக்கு அனுப்பப்படும். இதனால், மேற்கண்ட ஒவ்வொரு கணக்குகளின் ஆரம்ப இருப்பு, வங்கியில் செலுத்தப்படும் தொகை மற்றும் முடிவு இருப்பு ஆகிய விவரங்களை நேரடியாக கணினி வாயிலாகவே அறிந்து அவற்றை அன்றாடம் கண்காணிக்க இத்தகைய முறை பயன்படும். அத்துடன், மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் கிராம ஊராட்சிகளின் நிதி தொடர்பான அறிக்கைகளை தயார் செய்திடவும் மேற்கண்ட கிராம ஊராட்சி கணக்குகளின் நிதி பரிமாற்றங்களை சிறந்த முறையில் கண்காணிக்க இயலும்.

### 2.19.4. குக்கிராம அளவில் குடிநீர் விநியோகத்திற்கான திட்டமிடுதல்

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து 79,394 குக்கிராமங்களுக்கும் அன்றாடம் குடிநீர் விநியோகம்

செய்தல் என்ற நிலை ஊரக மக்களின் குடிநீர் தேவையினை நிறைவு செய்யும் இறுதி நிலையாகும். கிராம ஊராட்சிகளில் குடிநீர் விநியோகத்திற்கான நீடித்த நிலையான செயல் திட்டத்தை உருவாக்குவதற்கும், ஊரகப் பகுதிகளின் குடிநீர் தேவையின் அடிப்படையில் சிறந்த குடிநீர் விநியோகத்திற்கான திட்டமிடலுக்கும் ஊரகப் பகுதிகளின் குடிநீர் ஆதாரங்கள், சேகரிப்பு மற்றும் விநியோக அமைப்புகள் குறித்த அடிப்படை விவரங்கள் அவசியமாகிறது. கிராமப்புறங்களில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் குடிநீர் விநியோகம் மேற்கொள்வதை இணையதளம் வாயிலாக கண்காணித்திட மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளில் உள்ள குடிநீர் தொடர்பான விவரங்களைப் பதிவேற்றம் செய்வதும் அவ்விவரங்களை விரிவாகத் தொகுத்து குடிநீர் வழங்க எல்லாவிதமான முன் முயற்சிகளை எடுப்பதுவுமே இதன் நோக்கமாகும். கிராமப்புறங்களில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்குமான இப்பணி 2013–14ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வாறு இணையதளம் வாயிலாக கண்காணிக்கும் மென்பொருள் மேம்படுத்தப்பட்டு 2014–15ம் ஆண்டில் அனைத்து கிராமங்களிலும் குடிநீர் விநியோகம் செய்தல் உறுதி செய்யப்படுவதுடன், குடிநீர் பற்றாக்குறை உள்ள குடியிருப்புகளைக் கண்டறிந்து குடிநீர் வழங்கலை முறைப்படுத்தவும் இத்திட்டம் பெரிய அளவில் துணை புரியும்.



**2.19.5. அழைப்பு மையங்கள் மூலம் குறை தீர்க்கும் முறை**

கிராமப்புறங்களில் வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்பு, சுகாதாரம், திறன் மேம்பாடு மற்றும் சமூக, பொருளாதாரத்தில் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவை கிடைத்திட ஏதுவாக மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு உள்ளது. மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்தும்போது பொதுமக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்களிடமிருந்து குறைகேட்பு விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

மாநில அளவில் குறை கேட்பு விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து தீர்வு காண ரூ.44.91 லட்சம் செலவில் அழைப்பு மையங்கள் அமைக்கப்பட உள்ளன. குறைதீர் விண்ணப்பங்களைப் பதிவு செய்து அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களை மனுதாரருக்கு நேரடியாக தெரிவித்திடும் வகையிலும் பொதுமக்களின் குறைகள் எங்கு பெறப்படுகின்றதோ அந்த இடத்திலேயே அதற்கு தீர்வு காணும் வகையிலும் ஊரக வளர்ச்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகுகளில் அழைப்பு மையங்கள் ஏற்படுத்தப்படும்.

**2.19.6. தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகத்தால் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்புகளை வகைப்படுத்துதல் மற்றும் சரிபார்த்தல்.**

ஊராட்சிக் கட்டிடங்கள், தெரு விளக்குகள் மற்றும் மின்விசையிறைப்பான்கள் ஆகியவற்றுக்கான மின் கட்டணத் தொகை கிராம ஊராட்சிகளின் செலவினங்களில் பெரும் பங்கு வகிக்கிறது. கிராம ஊராட்சிகளின் மின் பயன்பாட்டை தணிக்கை செய்து முறைப்படுத்துதல் மற்றும் உரிய நேரத்தில் மின் கட்டணங்கள் செலுத்தப்படுவதை இணையதளம் வாயிலாக உறுதி செய்திட மென்பொருள் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மின் கட்டணத் தொகை உரிய காலத்தில் செலுத்துதல் கண்காணிக்கப்படுவதோடு ஊராட்சி அளவில் சீரான மின் பயன்பாட்டுக்கான திட்டமிடலுக்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**2.20. ஊரகப் பகுதிகளில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

கிராமப்புறங்களில் கொசு மற்றும் கொசுவின் இளம் பருவ புழுக்களை அறவே ஒழிப்பதன் மூலம் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த கிராம ஊராட்சிகளால் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஒருங்கிணைந்த அலகாக கிராம ஊராட்சி செயல்பட்டு கிராம மக்களிடையே டெங்கு காய்ச்சல் மற்றும் அது பரவும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



- ஊரக சுகாதார செவிலியர், ஊரக சுகாதார மேற்பார்வையாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்ட மலேரியா அலுவலர், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து வட்டார அளவில் தொடர்ச்சியான கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து தூய்மை குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.
- மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளூர் அளவில் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டு டெங்கு காய்ச்சல் குறித்த விவரங்கள் பரவச் செய்யப்பட்டது.
- கொசுக்கள் மற்றும் இளம்பருவ புழுக்களை ஒழிப்பதன் மூலம் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துதல் குறித்த துண்டு பிரசுரங்கள் மக்களிடையே விநியோகிக்கப்பட்டது. மேலும் ஊரகப் பகுதிகளில் தண்டோரா மூலம் டெங்கு காய்ச்சலைப் பற்றியும் கொசுக்கள் பரவாமல் தடுப்பது குறித்தும் அறிவிப்பு செய்யப்பட்டது.
- அனைத்து சுய உதவி குழுக்களின் உறுப்பினர்களையும் ஊரக வளர்ச்சி மற்றும் சுகாதார பணியாளர்களுடன் ஒருங்கிணைத்து தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- கிராமப்புறங்களில் முழு அளவில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் குப்பை கூளங்களை

தொடர்ந்து முறையாக அப்புறப்படுத்துவதை உறுதி செய்தல்.

- மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கைப்பம்புகளை ஒட்டியுள்ள பகுதிகள் ஆகியவை சுத்தம் செய்யப்பட்டு குளோரின் முறையாக தெளிக்கப்பட்டது.
- கிராம ஊராட்சிகளில் உள்ள தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் இருக்க தாழ்வான பகுதிகளில் சரளை மண் கொண்டு நிரப்ப வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன. அனைத்து கழிவு நீர் கால்வாய்களும் துப்புரவு செய்யப்பட்டு கழிவுநீர் தேங்காத வண்ணம் முறையாக பராமரிக்கப்பட்டது. நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுக்கும் நோக்கத்தில் உபயோகப்படுத்தப்பட்ட பழைய உருளிப்பட்டைகள், தேங்காய் ஓடுகள், உடைந்த பானைகளின் ஓடுகள் ஆகியவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- கிராம ஊராட்சிகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதை முற்றிலுமாக தடுத்திட ஊராட்சி ஒன்றிய அளவில் தினக்கூலி அடிப்படையில் போதிய பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு முழு வீச்சில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- பாதிக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் உள்ள வீடுகள் மற்றும் தெருக்களில் புகை மூட்டம் மூலம் கொசுக்களை



முற்றிலும் ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- கிராம ஊராட்சிகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதைக் கண்காணித்திட ஒவ்வொரு வட்டாரத்திற்கும் உதவி இயக்குநர் நிலையில் மண்டல அலுவலர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் நியமனம் செய்யப்பட்டு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.
- ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் போதுமான குடிநீர் அன்றாடம் விநியோகம் செய்வது உறுதி செய்யப்பட்டது.
- பாதிக்கப்பட்ட கிராம ஊராட்சிகளின் அருகாமையில் உள்ள இதர கிராம ஊராட்சிகளுக்கும் நோய் பரவாமல் தடுத்திட தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.
- மூடி வைக்கப்பட்ட பாத்திரங்களில் மட்டுமே நீர் சேகரித்து வைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வீடு வீடாகப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.
- கொசுக்களால் ஏற்படும் தீமைகள் குறித்து அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை மற்றும் சுகாதாரத் துறை பணியாளர்களுடன் ஒருங்கிணைந்து களப் பணி மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டது.

## 2.21. கால்நடைகளை பாதிக்கும் கோமாரி நோயினை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

ஊரகப் பகுதிகளில் கோமாரி நோய் பரவாமல் தடுத்திட கால்நடை பராமரிப்புத் துறையோடு ஊரக வளர்ச்சித் துறையும் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுத்திட ஊராட்சிகளின் ஆய்வாளரான மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன. கிராமப்பகுதிகளில் கோமாரி நோயினைத் தடுத்திட கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

- கோமாரி நோய் பாதிப்புள்ள பகுதிகளில் உரிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகளை உறுதி செய்திடவும் பிற கிராம ஊராட்சிகளுக்கு பரவுவதைத் தடுத்திடவும் அனைத்து உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.
- அனைத்து ஊராட்சிகளிலும் போதுமான அளவில் தரமான வெளுப்பு காரம் இருப்பில் வைக்கப்பட்டு தேவைப்படும் இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டது.
- கோமாரி நோய் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை ஊரகப் பகுதிகளில் உள்ள கால்நடை சந்தைகளை மூடவும், மாவட்ட அளவில் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.



# 3.மாநில அரசுத் திட்டங்கள்

## 3.மாநிலத் திட்டங்கள்

### 3.1. தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

மக்களுக்கு சிறந்த சேவை அளிப்பதற்காக வறுமை ஒழிப்பு, சிறந்த வாழ்வாதாரத்தை வழங்குதல், அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து திட்டங்களை அமல்படுத்துவதை உறுதி செய்வதே ஊரக வளர்ச்சியின் முக்கிய நோக்கமாகும். பொதுவாக திட்ட செயலாக்கம் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு "கிராம ஊராட்சி"யினையே அடிப்படை வளர்ச்சிக்கான அலகாகக் கொண்டு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஊரக வளர்ச்சித் துறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தற்போதுள்ள நடைமுறையைவிட ஒரு படி மேலாக, திட்டமிடுதல், நிதியளித்தல் மற்றும் திட்ட செயலாக்கம் ஆகியவற்றினை கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை அலகாக எடுத்துத் திட்டங்களைச் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்தது. அனைத்து குக்கிராமங்களுக்கும் சமமான நிதி ஆதாரம் வழங்கும் பொருட்டும், வள ஆதாரங்களை பகிர்ந்தளிப்பதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களையும் நோக்கிலும், குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்து குக்கிராமங்களுக்கும் சென்றடையும் வகையிலும் ஒரு முன்னோடித் திட்டமாக **'தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்'** என்னும் புதிய திட்டம் 2011–12ஆம் ஆண்டு முதல் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ***தேசிய அளவில் எந்த***



***மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில் மட்டும் தான் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு முதன்முறையாக, இம்முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.***

மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், சராசரியாக ஒரு கிராம ஊராட்சியில் 7 குக்கிராமங்கள் உள்ளன. எனினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 37 குக்கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 3 குக்கிராமங்களும் உள்ளன. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சம அளவிலான நிதி ஒதுக்கீடு அளித்தது வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச் சொத்துகள் உருவாக்குவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்ற தாழ்வுகளையும் உருவாக்கியது. எனவே, இந்த வேறுபாடுகளை களையும் வகையிலும் சம அளவிலான நிதி மற்றும் அடிப்படை வசதிகளை உருவாக்கும் நோக்குடனும், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் "குக்கிராமங்கள்" அடிப்படை அலகாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில், சென்னை நீங்கலாக உள்ள 31 மாவட்டங்களில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள சில கிராம ஊராட்சிகளில் மக்கள் தொகை 500க்குக் குறைவாகவும், சில ஊராட்சிகளில் மக்கள் தொகை 10,000க்கு அதிகமாகவும் உள்ளது.

குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம **ஊராட்சிகள்** கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1.1**

**குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில்**

**கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்.**

| வ.எண். | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5க்கும் கீழ் | 6,241 |
| 2. | 5–15 | 5,434 |
| 3. | 16–25 | 637 |
| 4. | 26–50 | 189 |
| 5. | 50க்கு மேல் | 23 |
| **மொத்தம்** | | **12,524** |

**3.1.1. நிதி ஒதுக்கீடு:**

குக்கிராமங்களின் எண்ணிக்கையையும், ஊராட்சியில் உள்ள மக்கள் தொகையையும் ஒப்புநோக்கும் போது, குக்கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மக்கள் தொகையும் கூடுகிறது என்பது தெளிவாகிறது. அதிகமாக



குக்கிராமங்களை கொண்டுள்ள கிராம ஊராட்சிகளின் தேவைகளும் அதிகமான அளவில் இருக்கும். இதைக் கருத்திற்கொணடு நிதி ஒதுக்கீட்டிற்காக குக்கிராமங்களின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் 5 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதிக அளவிலான மக்கள் தொகையும், அதிக குக்கிராமங்களும் கொண்டுள்ள கிராம ஊராட்சிகள் அதிக அளவிலான நிதி ஒதுக்கீட்டினைப் பெறுகின்றன. பின்வரும் அட்டவணையே இதற்குச் சான்றாகும்.

**அட்டவணை 3.1.2**

**“தாய்” திட்டத்திற்குத் தேவைப்படும் நிதி**

| வ. எண் | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகை (2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி) | ஒரு ஊராட்சிக்கான சராசரி மக்கள் தொகை | ஒரு ஊராட்சிக்கான ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைந்தபட்ச அடிப்படை மானிய நிதி | கூடுதல் நிதி | மொத்த நிதி |
| 1. | 5க்கும் கீழ் | 6241 | 12534047 | 2008 | 20 | 0 | 20 |
| 2. | 5–15 | 5434 | 17392688 | 3201 | 20 | 10 | 30 |
| 3. | 16– 25 | 637 | 3553429 | 5578 | 20 | 20 | 40 |
| 4. | 26–50 | 189 | 1557132 | 8239 | 20 | 30 | 50 |
| 5. | 50க்கு மேல் | 23* | 307557 | 13372 | 20 | 30 | 50 |
| மொத்தம் | | 12524 | 35344853 | 2822 | | –– | –– |

** 23 கிராம ஊராட்சிகளில் 50 மற்றும் அதற்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. இக்குக்கிராமங்களுக்கு மேலும் தேவைப்படும் பணிகளை கண்டறிந்து 2014–15ம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பிற திட்டங்களின் மூலம் ஒருங்கிணைந்து செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

2011–12 ஆம் ஆண்டில் ரூ.680 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. 2012–13 ஆம் ஆண்டு முதல் ஊரக குக்கிராமங்களில் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பை நிறைவு செய்வதில் உள்ள இடைவெளிகளை (Infrastructural gaps) நிரப்பிடும் நோக்கில் இத்திட்டத்திற்கான நிதியை ரூ.750 கோடியாக இந்த அரசு உயர்த்தியது. மேற்படி கூடுதல் நிதி ஒதுக்கீடான ரூ.70 கோடி "தாய்" திட்ட கிராமங்கள் மற்றும் அவற்றிற்கு அருகில் உள்ள கிராம சாலைகளை மேம்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தாய் திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் தோராயமாக 3 விழுக்காடு நிதி கணக்கெடுப்புப்பணி, ஆயத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல், ஆவணப்படுத்துதல், பணிகளின் முன்னேற்றம் குறித்த கண்காணிப்பு மற்றும் பணியாளர்களை அமர்த்துதல் மற்றும் இத்திட்டம் பற்றிய தகவல், கல்வி, தொடர்புச் செலவுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இத்திட்டம் பற்றிய தகவல் பலகைகள்



மற்றும் எடுக்கப்பட்ட பணிகள் குறித்த தகவல் பலகைகள் அமைப்பதையும் உள்ளிட்டதாகும்.

### 3.1.2. திட்டக் கூறுகள்

"தாய்" திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் மூன்று பிரிவுகளாக பின்வரும் அட்டவணையில் உள்ளபடி வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1.3**

| வ. எண் | குறைந்த பட்ச அடிப்படை தேவைகள் | கூடுதல் தேவைகள் | இதர பணிகள் |
|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகம் | அங்கன்வாடி மையம் | அனுமதிக்கப் பட்ட இதரப் பணிகள் |
| 2 | தெருவிளக்குகள் | பொது விநியோகக் கடை | |
| 3 | சாலைகள் | சுய உதவிக்குழு கட்டிடம் | |
| 4 | சுடுகாடு / இடுகாடு | கதிரடிக்கும் களம் | |
| 5 | சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் | விளையாட்டு மைதானம் | |

### 3.1.3. குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள்

#### 3.1.3.1. குடிநீர் விநியோகம்

கிராம ஊராட்சியில் உள்ள குடியிருப்புகளில் தனிநபர் ஒருவருக்கு 40 லிட்டருக்கும் குறைவாக குடிநீர்

விநியோகிக்கப்படும் குக்கிராமங்களை கண்டறிந்து அவற்றை மேம்படுத்தும் வகையில் சிறுமின்விசை இறைப்பான், குடிநீர்க் குழாய் விரிவாக்கம், தற்போதுள்ள தனிமின்விசைத் திட்டத்திற்கான நீராதாரத்தினைப் பெருக்குதல் போன்ற பணிகள் தேவையின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**3.1.3.2. தெரு விளக்குகள்**

30 மீட்டர் இடைவெளியில் ஒரு மின் விளக்கு அமைத்தல் என்ற நோக்குடன் புதிய குக்கிராமங்கள், விரிவாக்கப் பகுதிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள் அடங்கிய குடியிருப்புகளில் தேவைக்கேற்ப புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படுகிறது. ஏற்கெனவே உள்ள இடங்களில் தெரு விளக்குகள் பற்றாக்குறையாக இருந்தால் சூரிய சக்தி தெருவிளக்குகள் உட்பட கூடுதல் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**3.1.3.3. சாலைகள்**

**அ) சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்**

இருபுறங்களிலும் குடியிருப்புகள் அதிகமாக உள்ள தெருக்கள் மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கும் தெருக்கள் அல்லது சந்துகள், ஏற்கனவே சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்ட தெருக்களில் விடுபட்ட பகுதி ஆகியன முன்னுரிமை அடிப்படையில்



எடுக்கப்பட்டு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படுகின்றன.

**ஆ) இணைப்புச் சாலைகள்**

அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்றவகையில் சாலைகள் அமைய வேண்டும் என்ற நோக்கில் பேருந்துகள் செல்லும் இணைப்புச் சாலைகள், கற்சாலைகளைத் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல், ஒரு கிராம ஊராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேல் உள்ள குக்கிராமங்களை இணைத்துச் சாலை அமைத்தல், மண் சாலைகள் / சரளைச் சாலைகளை தரம் உயர்த்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.1.3.4. சுடுகாடு / இடுகாடு**

ஒவ்வொரு சுடுகாடு / இடுகாட்டிற்கும் அணுகு சாலைகள், சுற்றுச்சுவர், சுடுகாடு கொட்டகை / காத்திருப்பு கூடம், தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதிகள் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.1.3.5. சுடுகாடு/இடுகாட்டிற்கு சாலை வசதி செய்தல்**

ஏற்கெனவே சாலை வசதி உள்ளதெனில் அச்சாலையின் தற்போதைய தன்மையைக் கருத்திற்கொண்டு தேவையின் அடிப்படையில் சாலை மேம்படுத்தப்படுகிறது. சாலை வசதி இல்லாத

சுடுகாடு/இடுகாட்டிற்கு முன்னுரிமை அடிப்படையில் அணுகுசாலை அமைக்கப்படுகிறது.

- கூடுதல் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட பணிகள் தேவை மற்றும் அத்தியாவசியத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.
- தாய் திட்டம் தவிர ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்கள் அல்லது பிற துறைகளில் உள்ள பல வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### 3.1.4. கூடுதல் தேவைகள்

தேவைப்படும் என கண்டறியப்பட்ட இடங்களில் கூடுதல் அத்தியாவசிய பணிகளான பொது விநியோகக் கடைகள், அங்கன்வாடிகள், சுய உதவிக்குழு கட்டிடங்கள், கதிரடிக்கும் களம் மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அடிப்படை தேவைகள், கூடுதல் தேவைகள் தவிர பிற அத்தியாவசிய தேவைகளும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### 3.1.5. 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ஆண்டுகளுக்கான திட்ட செயலாக்கம்

நாட்டிலேயே முதன் முறையாக குக்கிராம அளவில் தற்போதுள்ள வசதிகளை மதிப்பீடு செய்யவும்,



குக்கிராமங்களுக்கு தேவைப்படும் அடிப்படை வசதிகள் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை நுண்ணிய அளவில் கண்டறியவும் விரிவான கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு www.tnrd.gov.in வலைதளத்தில் புள்ளிவிவரங்கள் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன.

இக்கணக்கெடுப்புப்பணி பின்வரும் 12 படிவங்களுடன் அடிப்படைத் தேவைகளான குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை குக்கிராம அளவில் கணக்கீடு செய்யும் அளவில் வடிவமைக்கப்பட்டதாகும்.

1. குக்கிராமம் குறித்த அடிப்படை விவரங்கள்
2. குடிநீர் விநியோகம்
   (அ). மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்
   (ஆ). சிறுமின்விசை இறைப்பான்கள்
   (இ). தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள்
   (ஈ). கைப்பம்புகள்
3. தெருவிளக்குகள்
4. தெருக்கள் மற்றும் சந்துகள்
5. இடுகாடு/சுடுகாடு

6 (அ). அனைத்து அரசு / உள்ளாட்சி கட்டிடங்கள்

(பள்ளி கட்டிடங்கள் நீங்கலாக)

(ஆ). அனைத்து அரசு/உள்ளாட்சி பள்ளி கட்டிடங்கள்

7. சிறுகுளங்கள் மற்றும் ஊரணிகள்

8. விளையாட்டு திடல்கள்

9. பேருந்து நிலையங்கள்

10. சந்தைகள்

11. சுய உதவிக்குழுக்கள் குறித்த விவரங்கள்

12 (அ). கிராம ஊராட்சி சாலைகள்

(ஆ). ஊராட்சி ஒன்றிய சாலைகள்

2011–12ஆம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளிலுள்ள 25,335 குக்கிராமங்களிலும், 2012–13ஆம் ஆண்டில் 2,250 கிராம ஊராட்சிகளிலுள்ள 18,581 குக்கிராமங்களிலும், 2013–14ம் ஆண்டில் 2,500 கிராம ஊராட்சிகளிலுள்ள 15,115 குக்கிராமங்களிலும் விரிவான புள்ளி விவர கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அப்புள்ளி விவர கணக்கெடுப்பு அடிப்படையில் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள், கூடுதல் அத்தியாவசிய தேவைகள் மற்றும் இதர தேவைகள் ஆகியவற்றினை கண்டறியப்பட்டு, தாய் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு ஏற்ப விரிவான திட்டம் செயல் வடிவமைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



‘தாய்’ திட்டம் தவிர, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் 13வது நிதிக்குழு மானியம் போன்ற பிற ஊரக வளர்ச்சித் திட்ட நிதியினை ஒருமுகப்படுத்துவதன் மூலம் அனைத்து இன்றியமையாத தேவைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. பிற துறைகளின் மூலமும் நிதியினை ஒருமுகப்படுத்தி கிராம ஊராட்சிகளுக்கு தேவைப்படும் அனைத்துப் பணிகளையும் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### 3.1.6. திட்ட செயலாக்கப் பகுதிகள்

- இத்திட்டம் 2011–12ம் ஆண்டு முதல் 2015–16ம் ஆண்டு வரை ஐந்து கட்டங்களாக செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.
- முதற்கட்டமாக, 2011–12ம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 25,335 குக்கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு ரூ.680 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2012–13ம் ஆண்டில் இத்திட்டம் 2,250 கிராம ஊராட்சிகளில் உள்ள 18,581 குக்கிராமங்களில் ரூ.750 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2013–14ம் ஆண்டில் இத்திட்டம் 2,500 கிராம ஊராட்சிகளில் உள்ள 15,115 குக்கிராமங்களில்

ரூ.750 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ***2014–15ம் ஆண்டில் இத்திட்டம் 2,741 கிராம ஊராட்சிகளில் உள்ள 12,095 குக்கிராமங்களில் ரூ.750 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.***
- **2015–16ம் ஆண்டில் இத்திட்டம் 3,013 கிராம ஊராட்சிகளில் உள்ள 8,268 குக்கிராமங்களில் ரூ.750 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இவ்வாறு அனைத்து **12,524** கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள **79,394** குக்கிராமங்களிலும் **2015–16**க்குள் தேவையான அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்படும்.

**3.1.7. சாதனைகள்**

**அ) 2011–12, 2012–13 மற்றும் 2013–14ம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள்**



**<u>அட்டவணை 3.1.4</u>**

**2011–12, 2012–13 மற்றும் 2013–14 ஆண்டுகளில் அடிப்படை வசதிகள் நிறைவு செய்திட எடுக்கப்பட்ட பணிகள் விவரம் பின்வருமாறு.**

(பணிகள் எண்ணிக்கையில்)

| வ. எண் | பணிகளின் வகை | 2011–12 | 2012–13 | 2013–14 |
|---|---|---|---|---|
| **குறைந்த பட்ச அடிப்படை தேவைகள்** | | | | |
| 1 | குடிநீர் விநியோகம் | 7754 | 11367 | 12133 |
| 2 | தெரு விளக்குகள் | 21590 | 21998 | 23335 |
| 3 | சாலைகள் | 14780 | 8327 | 8324 |
| 4 | சுடுகாடு/இடுகாடு | 3359 | 3549 | 3951 |
| 5 | சுடுகாடு/இடுகாட்டிற்கு சாலை வசதிகள் | 388 | 1137 | 1334 |
| **கூடுதல் தேவைகள்** | | | | |
| 1 | அங்கன்வாடி மைய கட்டடம் | 54 | 26 | 9 |
| 2 | பொது விநியோகக் கடை | 57 | 17 | 18 |
| 3 | சுய உதவிக்குழு கட்டடம் | 14 | 5 | 3 |
| 4 | கதிரடிக்கும் களம் | 161 | 84 | 30 |
| 5 | விளையாட்டு மைதானம் | 7 | 3 | 1 |
| **இதர தேவைகள்** | | | | |
| 1 | இதர பணிகள் | 1206 | 669 | 270 |
| **மொத்தம்** | | **49370** | **47182** | **49408** |

### 3.1.8. 2014–15ம் ஆண்டிற்கான திட்ட செயலாக்கம்

- தாய் திட்டம் 2014–15ம் ஆண்டில் 2,741 கிராம ஊராட்சிகளில் உள்ள 12,095 குக்கிராமங்களில் ரூ.750 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.
- மேற்காணும் குக்கிராமங்களுக்கு விரிவான கணக்கெடுப்புப் பணி முடிக்கப்பட்டு வலைதளத்தில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது. 26.1.2014ல் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் இறுதி செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. முந்தைய நிதி ஆண்டு 2013–14க்கு வெளியிடப்பட்ட திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் படி பணிகளை தொடங்க மாவட்ட ஆட்சியருக்கு அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் எடுக்கப்பட்ட பணிகளுக்கு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பணிகள் முடிக்கப்பட்டு, தற்பொழுது பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

## 3.2 முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

தமிழ்நாடு அரசு 2011–12 ஆம் ஆண்டில் 300 சதுர அடி பரப்பளவில் ரூ. 1.80 லட்சம் அலகுத் தொகையில், மாநில அரசின் முழு நிதி உதவியுடன் வீடுகள் கட்டும் நோக்கத்துடன் ‘‘முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்



கூடிய பசுமை வீடு திட்டம்’’ என்ற ஒரு சிறந்த திட்டத்தை துவக்கியது.

அதன்படி, அரசு ஆணை (நிலை) எண். 46 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி–1) துறை நாள் 17.08.2011–ன் வழியாக 2011–12–ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில் , ஆண்டிற்கு 60,000 வீடுகள் வீதம் 3 லட்சம் வீடுகள் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 09.04.2013 அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ‘‘முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்திற்கான அலகுத் தொகை ரூ.1.80 இலட்சத்திலிருந்து ரூ.2.10 இலட்சமாக 2013–14 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படும்’’ என அறிவித்தார்கள். இதில் ரூ.1.80 இலட்சம் வீடு கட்டுவதற்கும், ரூ.30,000/–சூரிய சக்தி விளக்குகள் அமைக்க தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கும் நேரடியாக வழங்கப்படும். இம்முகமையானது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்களுடன் ஒருங்கிணைந்து இப்பணியினை மேற்கொள்ளும்.

**ஏழைகளின் வீடுகளுக்கான தேவையை நிறைவு செய்யும் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் தமிழக அரசின் முன்னோடி திட்டம் ஆகும். நமது நாட்டிலேயே 300 சதுர அடி பரப்பளவில் சூரிய**

மின்சக்தி விளக்குகளுடன் கூடிய வீடுகள் வழங்குவது இதுவே முதன் முறையாகும்.

### 3.2.1. இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் அனைவரும் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் பெற தகுதியானவர்கள்.
- ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையுடன் மாநில அரசின் முழு நிதி உதவியுடன் கட்டப்படுகிறது.
- ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய வசதிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புடன் கட்டப்படுகிறது.
- ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி சக்தியில் எரியும் அடர்குறு விளக்குகள் (5) அமைக்கப்படும். இவை படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல்அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளில் ஒரு விளக்கு வீதம் அமைக்கப்படும். பயனாளிகளின் விருப்பத்தின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மின் இணைப்பு பெறும் விருப்பத்திற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- வீடுகள் கட்டும் பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்படுத்தும்.

- பசுமை வீடுகள், பயனாளிகளின் குடியிருப்பு அமைந்துள்ள இடம் (அவன்/அவளின் வசிப்பிடத்தை மாற்றியமைத்து) அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்குச் சொந்தமான இடங்களில் கட்டித்தரப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கென நில எடுப்புகள் ஏதும் செய்யப்படமாட்டாது. வீட்டுமனைப் பட்டா அல்லது சரியான நில உரிமை உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் வீடு பெறத் தகுதியானவர்கள் ஆவர்.

### 3.2.2. பயனாளிகளின் தகுதிகள்

பயனாளிகள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்:

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை இடத்திற்கு சொந்தக்காரராக இருக்க வேண்டும்.
- குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினரில் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டுமனைப் பட்டா இருக்க வேண்டும்.
- தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.
- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன்பெற்றவராக இருக்கக் கூடாது.

### 3.2.3. பயனாளிகள் தேர்வு செய்யும் முறை

- ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோரின் நிரந்தர காத்திருப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதில் மிகவும் வறிய நிலையில் உள்ளோர் தேர்வு செய்யப்பட வேண்டும்.
- மொத்தம் 60,000 வீடுகளில் 17,400 வீடுகள் அதாவது 29 விழுக்காடு ஆதி திராவிடர்களுக்கும், 600 வீடுகள் அதாவது 1 விழுக்காடு பழங்குடியினர்களுக்கும் மீதமுள்ள 42,000 வீடுகள் அதாவது 70 விழுக்காடு இதர இனங்களுக்கும் (ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாதோர்) வறுமை



கோட்டிற்கு கீழ் உள்ள கிராமப்புற மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

- மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு மாற்று திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
- பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும் போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் துணை இராணுவப் படையினர் ICDS துறையினரால் அடையாளம் காணப்பட்ட கிராமப் பகுதிகளில் வாழும் ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், HIV/AIDS/TB ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டு, துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) சான்றிதழ் பெற்றவர்கள், வெள்ளம், தீ விபத்து போன்ற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.
- தகுதியுள்ள ஏழை ஒருவரின் பெயர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் பட்டியலில்

விடுபட்டிருப்பின், விடுபட்ட நபர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர், விவரங்களை சரிபார்த்து மாவட்ட ஆட்சியரின் இசைவுடன் அவரது பெயரை பட்டியலில் இடம்பெற செய்து அதனை கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறவேண்டும். அவ்வாறு பெயர் சேர்க்கப்படும் நிகழ்வில், அவரது பெயரானது நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் ஒரு பகுதியாக்கப்பட்டு பயனாளி தேர்வுக்கு கருத்தில் கொள்ளப்படும்.

- கிராம ஊராட்சிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் தகுதியுள்ள பயனாளிகளின் பட்டியலை தயார் செய்து கிராம சபையின் ஒப்புதலுக்காக வைக்கவேண்டும்.

பயனாளிகள் தேர்வு, வீடுகள் ஒதுக்கீடு, கட்டுமானப் பொருட்கள் விநியோகம் மற்றும் இத்திட்டம் தொடர்பான நடைமுறைபடுத்தப்படும் வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண். 74 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி–1) துறை நாள் 25.06.2014–ல் உள்ளது. இதனை http://tnrd.gov.in/scheme/stcmspghs.php என்ற இணையதள முகவரியில் காணலாம்.



### 3.2.4 அலைபேசி அடிப்படையிலான கண்காணித்தல் மற்றும் தொகை விடுவித்தல்

தற்பொழுது ஒன்றிய பொறியாளர்களால் மதிப்பீட்டு சான்றிதழ் தயார் செய்வதற்கும் பயனாளி காசோலை பெறுதற்கும் இடையே குறிப்பிட்ட காலதாமதம் ஏற்படுகிறது. அது மட்டுமில்லாமல் நிதி விடுவிப்பு, பணி முன்னேற்றத்துடன் தொடர்பு படுத்தப்படாமல் இருப்பதால் ஒரு சில ஊராட்சிகளில் நிதி தேக்கமடைந்த நிலையிலும் மற்றும் வேறு சில ஊராட்சிகளில் நிதி பற்றாக்குறையாகவும் உள்ளது. இந்நிலைகளிலிருந்து விடுபட, ஆன்லைன் நேரடி கண்காணித்தல் மற்றும் நிதி மேலாண்மை முறை என்ற ஒரு புதிய முறை 2014–15 முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

திறனான கணிப்பாய்வு மற்றும் மேலாண்மை முறை மற்றும் பயனாளிகளுக்கு விரைவாக பட்டியல் தொகையை அளிக்கும் பொருட்டும் பின்வரும் முறையில் பட்டியல் தயாரிப்பு மற்றும் நிதி மேலாண்மை 2014–15ம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட உள்ளது:

- ஒவ்வொரு நிதியாண்டும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குனர் ஒவ்வொரு மாவட்டத்திற்கான வீடுகளின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வார்.
- மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிராம ஊராட்சிகளின் தேவையின் அடிப்படையில் அவற்றிற்கு வீடுகளை ஒதுக்கீடு செய்யும்.

- வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் அடங்கிய குழு வழிகாட்டு நெறிமுறைகளின்படி உண்மையாக வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளை தேர்ந்தெடுத்து அப்பயனாளிகளின் பட்டியலை கிராம சபையின் முன் வைத்து ஒப்புதலைப் பெற வேண்டும்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) பயனாளியின் தகுதி, வீடு கட்ட தேவையான இடத்தின் நில உரிமை மற்றும் அளவு ஆகியவற்றை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களைக் கொண்டு ஆய்வு செய்து தகுதியிருப்பின் அப்பயனாளிக்கு பணி ஆணையினை வழங்கவேண்டும்.
- பணி ஆணை வழங்கும் நேரத்தில், பயனாளியின் வங்கி கணக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் அதாவது வங்கியின் பெயர், வங்கி கிளையின் பெயர், வங்கி கணக்கு எண், வங்கியின் IFSC குறியீட்டு எண் ஆகிய அனைத்தும் சேகரிக்கப்பட்டு பணி ஆணையில் குறிப்பிடப்படும். பயனாளியின் வங்கி கணக்கு குறித்த விவரங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கணக்குகளில் செய்யப்பட்டுள்ளதுபோல் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலான அலுவலரால் சரிபார்க்கப்பட வேண்டும். பயனாளியின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை



உறுதித் திட்டம், முதியோர் உதவித் திட்டம் அல்லது இதர வங்கிக் கணக்குகளை இந்த நோக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். பயனாளிக்கு, வங்கியில் கணக்கு இல்லை எனில் ஒரு வங்கியில் புதிய கணக்கு துவங்கப்பட வேண்டும். ஆன்லைனில் உருவாக்கப்பட்ட பணி ஆணையினை பயனாளிக்கு வழங்கப்பட வேண்டும். மேலும் மேல் நடவடிக்கைக்காக இந்த பணி ஆணையின் நகல் பணி மேற்பார்வையாளர் மற்றும் உதவிப் பொறியாளருக்கு அனுப்பப்படவேண்டும்.

### 3.2.5. அலைபேசி அடிப்படையிலான ஆன்லைன் கண்காணிப்பு

- பயனாளிகளின் வங்கி கணக்கு குறித்த விவரங்கள், பணி உருவாக்கத்தின் போதே ஒன்றிய அளவில் ஆன்லைன் திட்ட கண்காணித்தலில் நிரப்பப்படும்.
- ஒன்றிய மேற்பார்வையாளர் / ஒன்றிய பொறியாளர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணி இடத்தை குறியீடு செய்யும்போதே, வீட்டின் கட்டுமானத்தின் வெவ்வேறு கூறுகள் பற்றியும், வீடு கட்டுதலில் கட்டுமானப் பொருட்கள் மற்றும் பட்டியல் வழங்குதல் உள்ளிட்ட துறையின் பங்கு மற்றும் பயனாளியின் பங்களிப்பு குறித்தும் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

- இந்த ஆன்லைன் கண்காணித்தல் முறையானது, ஒன்றிய மேற்பார்வையாளர் மற்றும் உதவி பொறியாளரிடம் உள்ள ஸ்மார்ட் தொலைபேசியில் பதிவு செய்யப்பட்ட அலைபேசி மென்பொருள் (நேரடி கண்காணிப்பு முறை) இணைக்கப்பட்டிருக்கும். இம்முறையை பயன்படுத்தி, வீட்டின் முன்னேற்றத்தினை தளத்திலிருந்து நேரடியாகவே, புகைப்படம் மற்றும் புவியமைப்பு கூறுகளுடன் (அட்ச–தீர்க்க ரேகை) பதிவு செய்ய முடியும். இது தொகை வழங்குதலுக்கு அடிப்படையாக அமையும். (சென்னை தேசிய தகவல் மையம் சாலைப் பணிகளின் முன்னேற்றத்தை பதிவு செய்ய ஏற்கனவே ஸ்மார்ட் தொலைபேசி பயன்பாடு முறையை வடிவமைத்துள்ளது)
- பணி இடத்தினை குறியீடு செய்த பிறகு, ஒன்றிய மேற்பார்வையாளர் / ஒன்றிய பொறியாளர் தன்னிடமுள்ள GPS பொருத்தப்பட்ட ஸ்மார்ட் அலைபேசியைக் கொண்டு வீடு கட்டப்படவுள்ள இடத்தை புகைப்படம் எடுப்பார். இப்புகைப்படமானது 10 மீட்டர் தொலைவிற்குள் அதாவது வீட்டினை முழுமையாக பார்க்கும் அளவிற்கு எடுக்கப்பட வேண்டும். இந்த புகைப்படம் ‘‘ஆன்லைன் திட்ட கண்காணித்தல் முறையில்’’ புவியமைப்பு கூறுகளுடன் பதிவு செய்யப்பட்டு, குறிப்பிட்ட அப்பயனாளிகளுக்கு நிலை வாரியான தொகை



விடுவித்தலுக்கு அடிப்படை ஆதாரமாகப் பயன்படுத்தப்படும்.

- வீடு கட்டுமானத்தில் தரைமட்ட நிலை முடிந்த பிறகு, மேற்பார்வையாளர்/ஒன்றிய பொறியாளர் தள குறியீட்டின் போது எவ்விடத்தில் நின்று புகைப்படத்தினை எடுத்தாரோ முடிந்தவரை அவ்விடத்திலேயே நின்று மற்றொரு புகைப்படத்தை எடுக்க வேண்டும்
- மேற்பார்வையாளர்/ஒன்றிய பொறியாளர் பணி தளத்திலிருந்தே பணியின் நிலையினையும், புகைப்படத்துடன் கூடிய வீட்டின் நிலையினையும் ஆன்லைன் திட்ட கண்காணித்தல் முறையில் பதிவு செய்ய வேண்டும். புவியமைப்பு கூறுகள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படம், வீடு குறிப்பிட்ட எந்த பயனாளியுடையது என்பதை சரிபார்க்க உதவுகிறது.

### 3.2.6. அலைபேசி அடிப்படையிலான மதிப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் நிதி மேலாண்மை

- ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீட்டு சான்றிதழ் மற்றும் தொகை விடுவித்தலுக்கான குறிப்பாணையுடன் கூடிய பட்டியல் தொகுதி ஊரக வளர்ச்சி வலைதளத்தில் உருவாக்கப்படும். இவற்றை அலைபேசி பயன்பாடு மற்றும் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள ஆன்லைன் திட்ட கண்காணித்தலுடன் இணைக்கப்படுவதின் மூலம்,

எப்பொழுதெல்லாம் வீட்டின் பணி முன்னேற்றம் அலைபேசியில் பதிவு செய்யப்பட்டு புவியியல் கூறுகளுடன் கூடிய புகைப்படத்துடன் சான்றுரைக்கப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் நிலைவாரியான மதிப்பீடு சான்றிதழ் மற்றும் தொகை தானியங்கி முறையில் உருவாகும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது.

- தற்போது உதவிப் பொறியாளர் குறிப்பிட்டுள்ள பயனாளிக்கான குறிப்பிட்ட நிலைக்கான ஆன்லைன் மதிப்பீட்டு சான்றிதழை, புகைப்படத்துடன் உருவாக்க முடியும். இந்த மதிப்பீட்டு சான்றிதழ், ஆய்வு செய்யும் அதிகாரியான உதவி செயற் பொறியாளரின் ஒப்புதலைப் பெற்ற பிறகு ஆன்லைன் திட்ட கண்காணித்தல் முறை மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) க்கு அனுப்பப்படும்.
- இந்த மதிப்பீட்டு சான்றிதழின் ஒரு நகல் உதவிப்பொறியாளரால் ஆன்லைன் கண்காணிப்பு தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு, உதவி செயற்பொறியாளரின் கையொப்பத்துடன், அலுவலகத்தில் ஆவணப்படுத்தலுக்கு சமர்ப்பிக்கப்படும்.
- வீட்டின் அடித்தள நிலையில், தொகை விடுவிக்க வேண்டுமெனில் அந்நிலையில் வீட்டின் புகைப்படம் பதிவு செய்யப்பட வேண்டும். தொடர்புடைய அலுவலர் ஊரக வளர்ச்சித் துறை வலைதளத்தினுள் சென்று, ஏற்கனவே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுச் சான்றிதழை நகல் எடுத்து, கையொப்பமிட்டு மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.



- உதவிப் பொறியாளர் / உதவிச் செயற் பொறியாளரிடமிருந்து மதிப்பீட்டுச் சான்றிதழை பெற்ற பிறகு தொடர்புடைய உதவியாளர் / கணக்காளர்/ துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஊரக வளர்ச்சித் துறை வலைதளத்தினுள் சென்று குறிப்பிட்ட அந்த வீட்டிற்கான தொகை விடுவித்தலுக்கான குறிப்பாணையை உருவாக்கி கோப்பினை தயாரித்து, பட்டியலை வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) க்கு வைக்க வேண்டும்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) சிமெண்ட், கம்பி உள்ளிட்ட பயனாளிக்கு வழங்கப்பட்ட கட்டுமானப் பொருட்களுக்கான தொகை ஏதேனும் இருப்பின் அதனை கழித்த பிறகு பட்டியலை அனுமதிக்க வேண்டும். தேவையான பதிவுகளை மதிப்பீட்டு ஒதுக்கீடு புத்தகம் மற்றும் தொடர்புடைய திட்ட ரொக்க புத்தகத்தில் பதிவு செய்தபிறகு, அந்த பட்டியல் மற்றும் தொகை விடுவித்தலுக்கான குறிப்பாணையை பயனாளிக்கு தொகை வழங்கும் பொருட்டு தொடர்புடைய கிராம ஊராட்சியின் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

- பட்டியல் மற்றும் தொகை வழங்குதலுக்கான குறிப்பாணையை பெற்ற பிறகு கிராம ஊராட்சியின் தலைவர், நடைமுறையில் உள்ள வழிமுறைகளை பின்பற்றி, தொடர்புடைய பயனாளிக்கு தொகையை வழங்க வேண்டும்.

**3.2.7. அலைபேசி அடிப்படையிலான ஆன்லைன் கண்காணித்தல் முறையின் அனுகூலங்கள்**

- அலைபேசி அடிப்படையிலான ஆன்லைன் கண்காணித்தல் முறையின் மூலம், பணி ஆணை வழங்குதல், மதிப்பீட்டு சான்றிதழ் தயாரித்தல் மற்றும் பயனாளிகளுக்கு தொகை வழங்குதல் ஆகியவற்றிற்கான கால அளவு குறைகிறது.
- மேலும், ஒவ்வொரு நிலையின் போதும் புகைப்படங்கள் பதிவு செய்யப்படுவதால், ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவிலான அதிகாரிகள், திட்டத்தை நுண்ணிய முறையில் கண்காணித்தலுக்கு உதவுவதுடன் வீடுகளின் பணி முன்னேற்றத்தை துரிதப்படுத்தவும் உதவுகிறது.

**3.2.8 முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்ட செயலாக்கம்**

- 2013–14 ஆம் ஆண்டில் ரூ. 1,260 கோடி மதிப்பீட்டில் 60,000 வீடுகள் கட்டுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.



- 2014–15 ஆம் ஆண்டிலும் ரூ. 1,260 கோடி மதிப்பீட்டில் 60,000 வீடுகள் கட்டப்படும்.

**3.3 சூரியசக்தி ஆற்றலுடன் கூடிய தெருவிளக்கு அமைக்கும் திட்டம்**

கிராம ஊராட்சிகளில் மின் செலவுகளை கட்டுப்படுத்திடவும் ஊரகப் பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டினை மேம்படுத்தும் நோக்கத்துடன் கிராம ஊராட்சிகளில் உள்ள தெருவிளக்குகளை, சூரியசக்தியுடன் கூடிய தெருவிளக்குகளாக மாற்றி அமைக்கும் திட்டம் 2011–12–ம் ஆண்டு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராம ஊராட்சிகளில் சோதனை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டமாக, 1,000 கிராம ஊராட்சிகளில், 2011 முதல் 2016 வரை 5 ஆண்டுகளில் 1 இலட்சம் தெருவிளக்குகளை சூரியசக்தியுடன் கூடிய தெருவிளக்குகளாக மாற்றப்படும். தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை இத்திட்டத்தினை செயல்படுத்தும் முகமையாகும்.

அதன்படி 2011–12 முதல் 2013–14 வரையான மூன்றாண்டுகளில் 60,000 தெருவிளக்குகளை சூரியசக்தியுடன் கூடிய தெருவிளக்குகளாக மாற்றி அமைத்திட ரூ.138.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 18,950 தெருவிளக்குகள் சூரியசக்தியுடன் கூடிய தெருவிளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

**3.4 ஊராட்சி மன்ற அலுவலகங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சூரிய மின் கலன்களை அமைத்தல்**

ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் மின் செலவுளை கட்டுப்படுத்தும் பொருட்டும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டும் 12,524 கிராம ஊராட்சி மன்ற கட்டிடங்கள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சூரியசக்தி பயன்பாடு படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. 2013–14–ம் ஆண்டில் 50 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் 500 கிராம ஊராட்சி மன்ற அலுவலகங்களில் சூரிய சக்தியுடன் கூடிய கலன்கள் அமைக்க ரூ.6.05 கோடியினை அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது. சூரியசக்தியுடன் கூடிய கலன்கள் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு மற்றும் நிறுவனங்கள் தேர்வு செய்யும் பணிகளை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (TEDA) மேற்கொள்ள அரசு தெரிவித்துள்ளது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, இதற்கான ஒப்பந்தப் புள்ளியினை கோர நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டம், மாவட்ட அளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர்களைக் கொண்டு செயல்படுத்தப்படும்.



**3.5. ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

இந்த அரசு, ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான, புதிய கட்டடங்கள், சமையல் அறை, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறைகள் ஆகியவைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் "ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" எனும் திட்டத்தை 2011–12ம் ஆண்டு துவக்கியது. தேவைப்படும் இடங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுகிறது. பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பள்ளிக் கட்டடங்கள் அனைத்தும் தட்டுஓடு பதித்த கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாத வகையில் கட்டப்படும். புதிய பள்ளிக் கட்டடங்கள், பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள காலி இடத்தில் அமைக்கப்படும். பள்ளிக் கட்டடம் கட்டத் தேவையான காலி இடம் இல்லாத நிலையில், ஏற்கனவே உள்ள கான்கிரீட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித்தன்மையை சரிபார்த்து அதன் மேல் தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படும்.

சமையல் அறை இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் புதிய சமையல் அறைகள் அமைக்கப்படும். தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல் / புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்படும். ஏற்கனவே உள்ள சமையல் அறைக் கட்டடத்தில் மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப்பொருட்களை இருப்பு வைத்துக் கொள்ளும் கூடுதல் அறைகளும் தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின், அவை பழுது நீக்கி சீரமைக்கப்படும். குடிநீர்க்குழாய் நீட்டிப்பு பணிகள், தேவைப்படும் இடங்களில் ஏற்படுத்தப்படும். தேவைப்படும் இடங்களில், ஊராட்சிகளின் தேவைக்கு பயன்படுத்தப்படும் குடிநீர் ஆதாரத்திலிருந்து புதிய இணைப்புகள் (அ) புதிய ஆழ்குழாய் கிணறுகள் ஏற்படுத்தப்படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் மாணவ மாணவியருக்கு போதுமான கழிப்பிட வசதிகளை செய்துதர இந்த அரசு உறுதி செய்யும். நடுநிலைப் பள்ளிகளில் மாணவிகளின் வசதிக்காக எரியூட்டிகள் (Incinerator) அமைக்கப்படும். நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் போதுமான நிதி இல்லையெனில், ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் கழிப்பறைகளை அமைக்கலாம்.



மேலும் தற்போது மேற்கொள்ளப்படும் பணிகளைத் தவிர, மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்த 2012–13 முதல் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டார அளவில் அமைக்கப்பட்டுள்ள குழு, தேவைப்படும் பணிகளைக் கண்டறிந்து இறுதி செய்கிறது. இக்குழுக்கள், தாய்த் திட்ட கணக்கெடுப்பின்படி தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படைப் பட்டியலுடன் நேரடி ஆய்வு மேற்கொண்டு அனைத்துப் பள்ளிகளிலும் உட்கட்டமைப்பு பணித் தேவைகளை கண்டறிகின்றன.

### 3.5.1. திட்ட செயலாக்கம் 2011–12 , 2012–13 மற்றும் 2013–14

2011–12, 2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டுகளில், இத்திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2011–12 (2,020 கிராம ஊராட்சிகள்), 2012–13 (2,250 கிராம ஊராட்சிகள்) மற்றும் 2013–14ல் (2,500 கிராம ஊராட்சிகள்) தாய் திட்டத்திற்கென தேர்வு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளான கட்டடங்கள், சமையற்கூடங்கள், கழிப்பறைகள், குடிநீர் பணிகள் மற்றும் சுற்றுச்சுவர் ஆகிய பணிகள் முழுமையாக விரிவு படுத்தப்பட்டுள்ளன.

2011–12–ம் ஆண்டில் 10,418 பணிகள் ரூ.87.40 கோடி மதிப்பீட்டிலும், 2012–2013–ம் ஆண்டில், 9,072 பணிகள் ரூ.95.37 கோடி மதிப்பீட்டிலும், 2013–14–ம் ஆண்டில், 10,043 பணிகள் ரூ.100.20 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3.5.2 . 2014–15 திட்ட செயலாக்கம்**

இத்திட்டம் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2014–15ம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

**3.6. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளில் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு பணிகளை கண்டறிந்து அதனை செயல்படுத்துவதற்காக மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தனது தொகுதியில் நிறைவேற்ற விரும்பும் பணிகளை கண்டறிந்து பரிந்துரை செய்வர். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேவையான கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் வழங்கப்பட்டு வந்த ரூ.1,75,00,000/– தொகையானது 2011–12ம் ஆண்டு முதல் ரூ.2,00,00,000/– தொகையாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.



தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கி செயல்படுத்தும் முகமையினை நிர்ணயிப்பார். தொகுதிக்கான மொத்த ஒதுக்கீட்டில் ரூ.1,12,50,000/ நிதியை அரசால் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைப் பணிகளுக்கும் மீதமுள்ள ரூ.87,50,000/– நிதியினை சட்ட மன்ற உறுப்பினர் தனது விருப்பப்படி திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யலாம்.

**3.6.1. சிறப்பம்சங்கள்**

**3.6.1.1. வரையறுக்கப்பட்ட நிதி தொகையான ரூ.1.125 கோடியில் மேற்கொள்ளப்படும் பணிகள்**

வரையறுக்கப்பட்ட நிதியின் கீழ் ரூ.1.125 கோடி மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ளலாம். ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், பழுதுற்ற கழிப்பறைகள், குடிநீர் வழங்கல், சமையலறைகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடங்கள், சத்துணவு மையக் கட்டிடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் எடுத்திட வேண்டும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் மாற்றுத் திறனாளிகளுக்குக் கருவிகள் மற்றும் உபகரணங்கள்

வாங்கிட ரூ.5.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும். மேற்படி தொகை ரூ.5.00 இலட்சத்தில், இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள், நவீன செயற்கை அவயம் மற்றும் காதுக்கு பின்புறம் அணியும் காதொலி கருவி ஆகியவற்றை வாங்குவதற்கு ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், அங்கன்வாடி சமையல் அறையை நவீனப்படுத்துவதற்காகவும், சமையல் எரிவாயு இணைப்பு (Gas connection) வழங்குவதற்காகவும், ஒரு அங்கன்வாடி மையத்திற்கு ரூ.6050/– வீதம் ஒருமுறை செலவினம் மேற்கொள்ள ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொகுதியில் உள்ள அனைத்து தகுதியுள்ள அங்கன்வாடி சமையல் அறை நவீனப்படுத்தும் பணிகளை மேற்கொண்டபின், மீதமுள்ள தொகையினை பள்ளி சமையலறை மையங்களை நவீனப்படுத்தும் பொருட்டு அரசாணை (நிலை) எண். 294 சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டம் (ச.ந. 7) துறை, நாள்11.12.2012–ல் தெரிவித்தவாறு ஒரு மையத்திற்கு ரூ.22,000 வீதம் ஒருமுறை செலவினம் மேற்கொள்ளலாம். அரசாணை (நிலை)எண்.60 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.1)துறை நாள் 26.6.2013ன்படி தற்போதுள்ள அரசு கட்டிடங்களில் சூரிய மின் ஒளிக் கலன்கள் நிறுவுவதற்கு உபகரணங்கள் வழங்க ரூ.5,00,000/– வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.5,00,000/– தொகையானது திடக்கழிவு மேலாண்மையின் கீழ் வீட்டு உபயோகம் சார்ந்த குப்பைகள் சேகரித்து, பிரித்து, பாதுகாப்பாக அகற்றுவதற்காக மூன்று சக்கர மிதி



வண்டிகள் (உடலுழைப்பு / இயந்திரத்தில் இயங்குவது) சேகரிக்கும் தொட்டிகள் கொண்ட தள்ளுவண்டிகள் ஆகியவற்றை உள்ளூர் தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ளலாம்.

வரையறுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள ரூ.42.50 இலட்சம் நிதியில், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளைத் தேர்வு செய்யலாம்.

**அ) ஊரகப் பகுதிகளில்**

1. சூரிய சக்தி தெரு விளக்குகள் பொருத்துதல்
2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச்சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்குக் கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள்,

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்தல்

7. பாலங்கள் கட்டுதல்

8. கூடுதல் இடுகாடு மற்றும் சுடுகாடு வசதி இல்லாத கிராம ஊராட்சிகளில் இவ்வசதிகளை அமைத்தல்.

9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பொது சொத்தாக பதிவு செய்யப்பட்ட மயானங்களுக்கு சுற்றுச்சுவர்/வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதால், இப்பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

**ஆ) நகர்ப்புறப் பகுதிகளில்**

1. சூரிய சக்தி தெரு விளக்குகள் அமைத்தல்

2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச்சாலையாக மேம்படுத்துதல்

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில்



உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்.)

4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்கு கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவைகளுக்குக் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்

8. சுடுகாடு/இடுகாடுகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள்அமைத்தல்

10. புதிய பொதுப் பூங்காக்கள்அமைத்தல்

11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்

12. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவகற்றும் இயந்திரங்களை வாங்குதல்.

13. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பொது சொத்தாக பதிவு செய்யப்பட்ட மயானங்களுக்கு சுற்றுச்சுவர்/வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதால், இப்பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

**3.6.1.2. வரையறுக்கப்படாத தொகையான ரூ.87.50 இலட்சத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட பட்டியலில் உள்ள கீழ்க்கண்ட பணிகளைத் தவிர, ஏனைய பணிகளை வரையறுக்கப்படாத திட்ட நிதியான ரூ.87.50 லட்சம் ஒதுக்கீட்டிலிருந்து எடுத்து செய்யலாம். அதேபோல் வரையறுக்கப்பட்ட நிதியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத நிதியில் மேற்கொள்ளலாம்.



**3.6.1.3. தடை செய்யப்பட்ட பணிகள்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சிறப்பினமாக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகளை எடுத்து செய்ய இயலாது.

1. மத்திய, மாநில அரசுத் துறைகள் (பொதுத் துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலக கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

**விதிவிலக்கு (i)** பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுதல், நேரடிக் கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மையக் கட்டடங்கள் (ii) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல்.

2. அனைத்து வகையான பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு** – அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2003 வரை கட்டப்பட்ட வீடுகளை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகள்

உட்பட வீடு ஒன்றுக்கு ரூ.25,000/–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், இப்பணிகளை எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மற்றும் தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்,

**விதிவிலக்கு** (i) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு தளவாடச் சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

(ii) அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான கழிவு செய்யப்பட்ட பேருந்துகளுக்கு (அரசாணை (நிலை) எண். 2552, போக்குவரத்துத் துறை, நாள் 26.9.91–ல் குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி கழிவு செய்யப்பட்ட பேருந்துகள்) பதிலாக மட்டும் புதிய சாதாரண வகை பேருந்துகள் வாங்குதல்,

(iii) பணிமனைகளுக்கு பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல், (iv) மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.



இருப்பினும் இத்தகைய பணிகளை எடுத்துச் செய்யும்போது இதற்கான பணியாட்களுக்கான (Man power) செலவினம் எதுவும் மேற்கொள்ளக்கூடாது.

4. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு:**–100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ் வழிக் கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச்செய்தல். பகுதி சுய நிதி பெறும் மற்றும் பகுதி நிதி உதவிப் பள்ளி அல்லது பகுதி தமிழ்வழிக் கல்வி அல்லது பகுதி ஆங்கில வழிக் கல்விப் பள்ளிகள் இத்திட்டத்தில் அரசு நிதி உதவி பெற தகுதியில்லை. நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்றுக்கு இத்திட்டத்தில் அரசு நிதி உதவி ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ரூ.15 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்று இத்திட்டத்தில் எவ்வளவு நிதி உதவி பெற்றிருப்பினும், அப்பள்ளி ஒரு முறை உதவி

பெற்றபின் இத்திட்டத்தின் கீழ் அடுத்த மூன்றாண்டுகளுக்கு உதவி பெற தகுதியில்லை.

மேற்படி பணிகளைப் பொருத்தமட்டில், மாவட்ட ஆட்சியர் தனது சொந்த விசாரணையை மேற்கொள்வதோடு, சம்பந்தப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கீழ்க்காணும் சான்றிதழ்களைப் பணி மேற்கொள்வதற்கு முன் பெற வேண்டும்.

(i) இந்தப் பள்ளி 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் வகுப்புகள் / பிரிவுகள் கொண்டது. ஆங்கில வழி வகுப்புப் பிரிவுகள் இல்லை.

(ii) இந்தப் பள்ளி 100 சதவீதம் அரசு உதவி பெறும் பள்ளி ஆகும். அதே பள்ளி நிர்வாகத்தால் அப்பள்ளி வளாகத்திலோ அல்லது வெவ்வேறு வளாகங்களிலோ நடத்தப்படும் சுய நிதிப் பிரிவுகள் / வகுப்புகள் இயங்கவில்லை.

5. தனி நபர் / குடும்ப பயனுள்ள சொத்துகளை உருவாக்குதல்

6. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.



7. மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

8 நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.

13. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

14. உயர் மின்கம்ப விளக்குகள் பொருத்துதல்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 21 சதவீதம் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில்

வாழும் பகுதி அல்லது நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

தேவையின் அடிப்படையில், வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்களை அரசு மேற்கொள்ளலாம்.

**3.6.1. 4. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம் 2011–12, 2012–13**

இத்திட்டத்தின் கீழ் 2013–14–ம் ஆண்டில் ரூ.470 கோடி நிதி ஒதுக்கீட்டில் 15,421 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றுள் 6,596 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.

2013–14 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் வரைபடத்தில் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

2014–15–ம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கு ரூ.470 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3.7 ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் பராமரிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கட்டடங்கள் முறையாகத் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தால் மட்டுமே அவற்றை



முழுமையாக பயன்படுத்த இயலும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களான அங்கன்வாடி மையங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிகள், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் போன்றவை இத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுகின்றன. ஏற்கனவே கட்டப்பட்டு பராமரிப்பின்றி இருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் 2011–12 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.170 கோடி செலவில் புனரமைக்கப்பட்டு பயன்படுத்தும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. அதேபோல, 2012–13ம் ஆண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், குடிநீர்க் குழாய்கள் சீரமைத்தல் போன்ற பணிகள் ரூ.175.22 கோடி செலவில் முடிக்கப்பட்டது.

2013–14–ஆம் ஆண்டில், ரூ.212.75 கோடி செலவில் பழுதுகள் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள 38,036 ஊரக கட்டடங்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**3.8 தன்னிறைவுத் திட்டம்**

கலந்தாலோசித்தல் மற்றும் கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதில் பொது மக்கள் பங்கேற்பினை ஊக்குவிக்கும் வகையில் இந்த அரசு, தன்னிறைவுத் திட்டத்தினை 2011–12ம் ஆண்டு முதல் மீண்டும் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

### 3.8.1. பணிகளை தேர்வு செய்தல்

1. ஒரு பணியினை எடுத்துச் செய்வதற்கான தேவையானது, தனிநபர்களிடமிருந்தோ, குழுவினரிடமிருந்தோ, தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்தோ அல்லது அப்பகுதி மக்களிடமிருந்தோ எழலாம்.
2. தேர்வு செய்யப்பட்ட பணி குறித்த விண்ணப்பமும், மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் தொகையினை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தினையும் பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெறலாம்.
3. வழிகாட்டி நெறிமுறைகளின்படி, தகுதியுடைய பணிகளின் தேவை மற்றும் செயல்படுத்தத்தக்க தன்மையினை உறுதிபடுத்திய பின்னரே மதிப்பீடுகள் தயார் செய்யப்படுதல் வேண்டும்.
4. நிதி ஒதுக்கீட்டைவிடத் தேவையான பணிகளின் மதிப்பீடு அதிகமாகும் நிலையில், முன்னுரிமை அடிப்படையில் பணியினைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
5. மாநில அளவில் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்களுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பங்களிப்பைப் பெறலாம்.



### 3.8.2 . பணிகளைச் செயல்படுத்துதல்

சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் பெரிய அளவில் மக்கள் பங்கேற்க ஏதுவாக பொதுமக்களோ, அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவரோ மேற்கண்ட பணிகளை தாமோ அல்லது வேறு முகவர்கள் மூலமாகவோ மேற்கொள்ள விரும்பினால் தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யும் போது எழுத்துபூர்வமாக தெரிவிக்கவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இக்கோரிக்கையினை ஆய்வு செய்து பணியின் மதிப்பீட்டில் பொது மக்களின் பங்களிப்பு 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் இருந்தால் பங்களித்தவரையோ, முகவரையோ அப்பணியை மேற்கொள்ள அனுமதி வழங்குவார். ஆனால் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள கண்மாய்களை தூர்வாரும் பணியைப் பொருத்தமட்டில் பொதுமக்கள் பங்களிப்பு 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே பணிகள் செய்யப்பட வேண்டும்.

### 3.8.3. 2011–12, 2012–13 மற்றும் 2013–14ம் ஆண்டிற்கான திட்ட செயலாக்கம்

இத்திட்டத்தில் 2011–12, 2012–13 மற்றும் 2013–14ம் ஆண்டுகளுக்கு பணிகள் மேற்கொள்ள ஆண்டொன்றுக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்த தொகையில் ரூ.25 கோடி சிறப்புத் திட்டங்கள் மற்றும் கூடுதல் நிதியாக மாவட்டங்களுக்கு வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.75 கோடியில் ரூ.1 கோடியினை தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகளுக்கு ஒதுக்கீடு செய்தும், ரூ.74 கோடியினை அனைத்து மாவட்டங்களுக்கும் மற்றும் சென்னை மாநகராட்சிக்கும் மக்கள் தொகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளது.

2011–12ம் ஆண்டு முதல் 2013–14ம் ஆண்டு வரை 6,842 பயனுள்ள சமுதாய சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



**அட்டவணை.3.8.1**

**தன்னிறைவுத் திட்டம் – முக்கியமாக கருதப்படும் சில பணிகள் விவரம் பின்வருமாறு**

| வ. எண் | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2011–12 | 2012–13 | 2013–14 |
| 1 | பள்ளிக்கட்டடங்கள் மற்றும் நூலகங்கள் கட்டுதல் | 87 | 42 | 31 |
| 2 | அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு தளவாடங்கள் வாங்குதல் | 92 | 90 | 57 |
| 3 | கணினிகளை கொள்முதல் செய்தல் | 127 | 25 | 22 |
| 4 | பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் கட்டுதல் | 93 | 60 | 119 |
| 5 | அங்கன்வாடி மற்றும் சமையற்கூடங்கள் கட்டுதல் | 21 | 32 | 23 |
| 6 | குடிநீர் ஆதாரத்தினை உருவாக்குதல் | 377 | 315 | 337 |
| 7 | சாலைகளை மேம்படுத்துதல் | 635 | 381 | 244 |
| 8 | சமுதாயக்கூடம் மற்றும் பொது விநியோகக் கடைகள் கட்டுதல் | 64 | 39 | 69 |
| 9 | கதிரடிக்கும் களம் அமைத்தல் | 8 | 3 | 11 |
| 10 | ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுதல் | 5 | 4 | 6 |
| 11 | இதர பணிகள் | 1058 | 1,240 | 1,125 |
| | **மொத்தம்** | **2,567** | **2,231** | **2,044** |

### 3.8.4. 2014–15ம் ஆண்டிற்கான திட்ட செயலாக்கம்

2014–15ம் ஆண்டில் இத்திட்டம் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 3.9. ஊரக உட்கட்டமைப்புத் திட்டம் (தொகுதி II) – மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கும் சொத்துக்களை நிலைப்படுத்துதல்

ஊரக பகுதிகளில் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகளுக்கிடையேயான இடைவெளியை நிறைவு செய்யும் நோக்குடன் அரசு ஊரக உள்கட்டமைப்பு திட்டத்தினை செயல்படுத்திவருகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துதலே ஊரக உள்கட்டமைப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அனைத்து ஊராட்சிகளிலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. அவ்வாறு உருவாக்கப்படும் சொத்துக்களை மக்களுக்கு பயன்படும் வகையில் நிலை நிறுத்தும் பொருட்டு **'ஊரக உள்கட்டமைப்புத் திட்டம்(தொகுதி II) – மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கும் சொத்துக்களை நிலைப்படுத்துதல்'** திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். 2011–12ம் ஆண்டிற்கு மகாத்மா காந்தி



தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்த மாநில நிதி குழு மானியத்தின் கீழ் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதேபோல் 2012–13ம் ஆண்டிற்கு ரூ.83.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு 2013–14ம் ஆண்டிற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பணிகள் பின்வரும் முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்படுகின்றன:

- சிறு பாசன குளங்கள், தொடர் நீராதாரக் குளங்கள் (System Tanks) மற்றும் தொடரா நீராதாரக் குளங்கள் (Non System Tanks) போன்றவற்றில் மடைகள், மறுகால் போன்றவை கட்டுதல் மற்றும் சீரமைத்தல்.
- அரசாணை (1D) எண்.487 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (மாஅதி.3) துறை நாள்.18.09.2012ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள சிறு பாசன குளங்கள் மற்றும் பெரிய ஊரணிகளில் அனைத்து விதமான கட்டுமான பணிகள்.
- சிறிய நீர் பாசன குளங்கள் / ஊரணி / வரத்து வாய்க்கால் (உபரி நீர் வரத்து கட்டமைப்புகளை சீரமைப்பு செய்தல்) ஆகியவற்றிற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் கட்டுமானப் பணிகள்.

- குளம் மற்றும் ஊரணிகளில் நீர் வரத்து / நீர் வெளியேற்றுக் கால்வாய்கள் கட்டுதல்
- குளங்கள்/ஊரணிகளுக்கு குளியல் படித்துறை கட்டுதல்.
- தூர் வாரப்பட்ட நீர்வரத்து கால்வாய்களின் குறுக்கே குறுக்கு கால்வாய் (Cross Drainage) மற்றும் சிறு பாலம் கட்டுதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சாலைகளில் கீழ்க்காணும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளலாம்.

- குறுக்கு கால்வாய் பணிகள்/ சிறு பாலம்.
- மிகவும் தேவையான இடங்களில் (Vantage Points) தடுப்புச் சுவர் கட்டுதல்
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மண் சாலை மேல் சரள் (Gravel) அமைத்து நிலைப்படுத்துதல் (Consolidation /Compaction)

**2011–12, 2012–13** மற்றும் **2013–14** ம் ஆண்டுகளுக்கு ஊரக உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:



**அட்டவணை.3.9.1**

**2011–12, 2012–13 மற்றும் 2013–14 ம் ஆண்டுகளுக்கு ஊரக உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகள்**

**(ரூபாய் கோடியில்)**

| வ.எண் | பணியின் விவரம் | 2011–12 | | 2012–13 | | 2013–14 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மதிப்பீடு | எண்ணிக்கை | மதிப்பீடு | எண்ணிக்கை | மதிப்பீடு |
| 1. | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கும் சொத்துக்களை நிலைப்படுத்துதல் | 6322 | 98.40 | 5048 | 82.37 | 4880 | 100.57 |

## 3.10. 2015ல் தமிழ்நாட்டை திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக்குவதற்கான தொலைநோக்கு

### 3.10.1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு:-

தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவரும் பெறுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இந்தியாவிலேயே சிறப்பாக தமிழ்நாடு பெற வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்கு 2023-ன் முக்கிய 10 மைய இலக்குகளில்

ஒன்றாகும். தமிழ்நாட்டை திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக 2015ம் ஆண்டுக்குள் ஆக்குவதற்கும், அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து மக்கள் புரட்சியாக சுகாதார எழுச்சி உருவாக பல்முனை உத்திகளை கையாள வேண்டும் என்று 17.12.2012ல் மாவட்ட ஆட்சியர்களுக்காக நடத்தப்பட்ட மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் பணித்துள்ளார்கள். 11.12.2013ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில், இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

முதற்கட்டமாக, ஊரக பகுதிகளில் அடிப்படை கணக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் சுகாதார குறைபாடுகளை கண்டறிந்து அவற்றை முறையாக சீர்படுத்தி, தமிழ்நாட்டை 2015க்குள் திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக ஆக்குவது அவசியமாகிறது. நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ், மத்திய அரசினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி திருத்திய திட்ட செயலாக்க வடிவம் தயாரிப்பதற்கு அடிப்படை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இறுதியாக திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை தமிழ்நாடு அடைவதற்கும், சுகாதார திட்டங்களை செயல் படுத்துவதற்கும் இந்த திட்ட வடிவம் ஒரு அடித்தளமாகவும் வழிகாட்டியாகவும் செயல்படும்.



### 3.10.2. அடிப்படை கணக்கெடுப்பு மற்றும் திருத்திய செயலாக்கத் திட்டம்:

நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் திருத்திய திட்ட செயலாக்க வடிவம் தயாரிக்கும் பொருட்டு அடிப்படை கணக்கெடுப்பு நடத்தப்பட்டதில், ஊரகப் பகுதிகளில் உள்ள 95.41 இலட்சம் குடும்பங்களில் 42.73 இலட்சம் குடும்பங்களில் கழிப்பறை வசதி உள்ளது என்றும், இதில் 13.02 இலட்சம் வீடுகளில் கழிப்பறைகள் பயன்பாடு அற்ற நிலையில் உள்ளன என்பதும் 52.68 இலட்சம் வீடுகள் கழிப்பறை இல்லாத வீடுகளாகும் என்பதும் கண்டறியப்பட்டது.

2011–12ம் ஆண்டு வரை, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு கழிப்பறை கட்ட ரூ.500 முதல் ரூ.3,200 வரை மானியமாக வழங்கப்பட்டது. துவக்க ஆண்டுகளில், குறைந்த மானியத்தில் கட்டப்பட்ட பெரும்பாலான தனிநபர் இல்லக் கழிப்பறைகள் பயன்பாடு அற்றதாகிவிட்டன. எனவே, 65.70 இலட்சம் தனிநபர் இல்லங்களில் (52.68 இலட்சம் கழிப்பறைகள் அற்ற மற்றும் 13.02 இலட்சம் பயன்பாடற்ற கழிப்பறைகள்) கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

### 3.10.3. சுகாதாரத் திட்டங்கள்

### 3.10.3.1. மாநில அரசின் முன்முயற்சிகள்

மாநிலத்தில் சுகாதார புரட்சி ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னோடியாக பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்கள். ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஊராட்சிக்கு ஒன்று வீதம் அப்போது இருந்த **12,618** கிராம ஊராட்சிகளில், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன. முழுமையான சுகாதாரத்தை எய்த ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு **2003**ம் ஆண்டு, தூய்மையான கிராம இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது.

நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லங்களில் கழிப்பறை கட்டுவதை ஊக்கப்படுத்த **2012**ம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கூடுதல் மாநில அரசு மானியம் வழங்க அறிவிப்பு செய்யப்பட்டது. ஊரக மகளிருக்கு சுகாதார வசதிகள் உருவாக்கப்பட்டதை போன்று, **2012–13**ம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது.

### 3.10.3.2. மத்திய அரசுத் திட்டம்:

**1999**ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட, முழு சுகாதார இயக்கம் ஊரகப் பகுதிகளில், சுகாதார மேம்பாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு, **2004**ம் ஆண்டு



முதல் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. தனிநபர் இல்லக் கழிப்பறை அமைத்தல், சமூக சுகாதார வளாகம், பள்ளிக் கழிப்பறை, அங்கன்வாடி கழிப்பறைக் கட்டுதல் போன்றவை இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாகும். இத்திட்டம், **1.4.2012** முதல், “நிர்மல் பாரத் அபியான்” என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் சிறப்பம்சங்கள் பிரிவு **4.4**ல், “மத்திய அரசு திட்டம்” பகுதி **4**ல் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

### 3.11. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைத்தல்

இந்த அரசு, ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிருக்கு சுகாதார வசதிகளை வழங்க அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சுகாதார வசதி குறைபாடுகளினால், குறிப்பாக மகளிர் உடல் நல சீர்கேட்டினால் துன்பப்படுகின்றனர். ஏழ்மை மற்றும் கலாச்சாரப் பழக்கங்களால் சுகாதார வசதி இல்லாதிருந்த நிலையிலிருந்து அவர்கள் மீள வேண்டியிருந்தது. எனவே, ஊரகப் பெண்களுக்கான தனித்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வது அவர்களின் பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மிகவும் அவசியமானதும் முக்கியமானதும் ஆகும்.

மகளிருக்கு சுகாதார தேவைகளை நிறைவேற்றும் விதமாக தமிழகத்திலுள்ள அப்போதிருந்த அனைத்து **12,618**

கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்ட, 2001ம் ஆண்டில் இந்த அரசால் முடிவெடுக்கப்பட்டது. பெண்கள் எளிய முறையில் உபயோகப்படுத்தும் வகையில், வளாகங்கள் கட்டுவதற்கான இடங்கள் தேர்வு செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டன. ஒவ்வொரு வளாகமும் 14 கழிவறைகள், 2 குளியலறைகள், 1 விசைப்பம்பு அறை, 1 தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கத் தேவையான கல் ஆகியவற்றை உள்ளடக்கியதாயிருந்தது. குளிக்கவும், துணி துவைக்கவும், தேவையான தண்ணீர் வசதி செய்யப்பட்டது. இவ்வளாகத்திலுள்ள கழிவறைகளை ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, உபயோகிப்பாளர்கள் இனங்கண்டு குழுவாக்கப்பட்டனர். தண்ணீர் வசதி மற்றும் விளக்குகளுக்கு தேவையான மின் வசதியைக் கிராம ஊராட்சிகள் வழங்கி சம்பந்தப்பட்ட குடும்பங்கள் அதனை பராமரித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டன.

தொடக்கத்தில், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மகளிர் சுகாதார வளாகம் என்ற அடிப்படையில், ஒரு வளாகத்திற்கு ரூ 2 இலட்சம் என்ற மதிப்பீட்டில், 385 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் அலகுத் தொகை ரூ 2.25 இலட்சமாக உயர்த்தப்பட்டு 2001 முதல் 2004 ஆம் ஆண்டு வரை மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் வளாகங்கள் கட்டப்பட்டன. 2006 முதல் 2011ம் ஆண்டு வரை, போதுமான கவனிப்பு இல்லாததால்,



பெரும்பாலான மகளிர் சுகாதார வளாகங்கள் முறையான பயன்பாடு மற்றும் பராமரிப்பு இல்லாமல் போனது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், பாழடைந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், 2011–12ம் ஆண்டில், ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு ஊரகப் பெண்களுக்கு அடிப்படை சுகாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.**

### 3.11.1. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களின் பராமரிப்பு

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தை முறையாகப் பயன்படுத்தவும், பராமரிக்கவும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் குக்கிராமவாரியான குழுமத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து ஒவ்வொரு வளாகத்திற்கும் பயன்படுத்துவோர் குழுக்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டு, வளாகங்களின் தினசரி பராமரிப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தண்ணீர்வசதி மற்றும் மின்விளக்கு ஆகியவற்றுக்கான மின்கட்டணம், பம்புசெட் பராமரிப்பு, கழிவுநீர்தொட்டி சுத்தம் செய்தல் போன்ற சிறு பழுது / பராமரிப்பு பணிகளை கிராம ஊராட்சி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இதற்கான செலவினத்தை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொண்டு சுகாதார வளாகம் தொடர்ந்து செயல்பட உறுதி செய்கின்றன.

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தின் பராமரிப்பைக் கண்காணித்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கண்காணிப்புக் குழுக்களை அமைத்துள்ளனர். சுகாதார வளாகங்களின் செயல்பாடுகள் குறித்து, இக்குழுக்கள் விவாதித்து அதன்படி நடவடிக்கை எடுத்து வருகின்றன.

**3.12. ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்**

ஊரக மகளிருக்கு ஏற்படுத்திக்கொடுத்த, ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாக வசதியைப் போன்று ஊரகப் பகுதிகளிலுள்ள ஆடவர்களும் தங்களுக்கு இது போன்ற வசதிகளை வழங்கக் கேட்டுக் கொண்டதின் பேரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2012–13ம் ஆண்டு, முதல் கட்டமாக ஒரு வட்டாரத்திற்கு இரண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் அமைத்திட ஆணையிட்டார்கள். தமிழ்நாட்டில் ரூ. 35 கோடி மதிப்பீட்டில், 770 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன.

ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டுவதற்கான இடங்கள், உள்ளூர் தேவையின் அடிப்படையிலும், திறந்த வெளி மலம் கழித்தல் அதிகமாக உள்ள பகுதிகள், வீடுகளில் கழிப்பறைகள் இல்லாமை, போதுமான தண்ணீர் வசதி இல்லாமை போன்ற தகுதிகளின் அடிப்படையிலும், மாவட்ட ஆட்சியர்களால் கண்டறியப்பட்டன. இந்த வளாகம் 570 சதுர அடி



பரப்பளவில், ஒவ்வொரு வளாகமும், 8 கழிப்பறைகள் உள்ளடக்கியதாகவும், இதில் முதியோர் / மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் ஒரு ஐரோப்பிய கழிவறையும் (Western Closet), இளம்சிறார்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் குழந்தை நேயக் கழிவறையும் (Baby Friendly Toilet) இருக்கும். தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்கும் இடம், துணி துவைக்கும் கல் ஆகியவையும் இருக்கும். இதன் தொடர் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வளாகத்திலும் தனியாக தண்ணீர் வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கென பயன்படுத்துவோர் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களை கட்டுமானப் பணியின் துவக்கத்திலிருந்தே ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படுவதுபோல, இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களே எடுத்துச் செய்வதுடன், இதன் தொடர் பராமரிப்பு சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியால் மேற்கொள்ளப்படும். இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்புப் பணியில் பயன்படுத்துவோர் குழுக்களுடன், கூட்டாண்மை அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்களும் பங்கேற்க ஊக்கப்படுத்தப்படும்.

2013–14ம் ஆண்டு தேவையின் அடிப்படையில் 519 கிராம ஊராட்சிகளில், ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் கட்டுவதற்கான இடங்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தேர்வு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.13. உயிர் செரிமானி– இணைக்கப்பட்ட ஒருங்கிணைந்த சமூக பசுமை சுகாதார வளாகங்கள்

2013–14ம் ஆண்டில், உயிர் செரிமானி இணைக்கப்பட்ட ஒருங்கிணைந்த சமூக பசுமை சுகாதார வளாகங்கள் கட்டுவதற்கு, வளாகம் ஒன்றிற்கு ரூ. 4.5 இலட்சம் வீதம் 25 வளாகங்களுக்கு மொத்தம் ரூ.113 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. இந்த பசுமை சுகாதார வளாகத்தில் மனிதக் கழிவுகளை உயிர் செரிமானி அமைக்கப்பட்ட தொட்டியில் செலுத்தப்பட்டு அவை செரிமானம் செய்யப்பட்டு, சுத்தமான தண்ணீர் மட்டும் வெளியேற்றப்படுகிறது. இந்த சுத்த தண்ணீர் மீளவும் கழிப்பறைக்கு பயன்படும்.

மேற்படி சமூக பசுமை சுகாதார வளாகங்களை அமைக்க அதிகமாக திறந்தவெளி மலம் கழிக்கும் சாத்தியக்கூறுகள் உள்ள இடங்கள், பேருந்து நிலையங்கள், சுற்றுலாத்தலங்கள் போன்ற இடங்களைக் கண்டறிந்து வளாகங்கள் கட்ட சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சி தலைவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். தகுதி வாய்ந்த தொழில்நுட்பம் உடையவர்கள் மூலம் உயிர் செரிமானிகள் இந்த வளாகங்களில் அமைக்கப்படும்.

சோதனை அடிப்படையில் அமைக்கப்படும் மேற்படி வளாகங்கள் மூலம், புதுமையான முறையில் கழிவுகள் அகற்றப்படுவதால், சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமலும் தண்ணீர் சேமிக்கவும், எளிதில் கட்டி பராமரிக்கவும் மற்றும் நீண்ட காலத்திற்கு உபயோகப்படுத்த முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



### 3.14. தூய்மையான கிராம இயக்கம்

தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு, இந்த அரசால் 2003ம் ஆண்டில் “தூய்மையான கிராம இயக்கம்” துவக்கப்பட்டது. இவ்வியக்கம் சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டு நடிவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்தல், மழை நீர் சேகரிப்பு மற்றும் கழிவு நீரினை மறு சுழற்சி செய்தல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவை தூய்மையான கிராம இயக்கத்தின் கூறுகளாகும். மேலும், தீவிர தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமாக கிராம ஊராட்சிகள் மற்றும் இதர துறைகளையும் சமூகத்துடன் ஒருங்கிணைப்பது இதன் முக்கிய நோக்கமாகும். திறந்தவெளி மலங்கழித்தலை முழுமையாக அகற்றி தூய்மையான சூழலை உருவாக்கிய 15 கிராம ஊராட்சிகள் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்பட்டு ரூ.5.00 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

2006ம் ஆண்டு கைவிடப்பட்ட இத்திட்டம் 2011–12ம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் ரூ.1.55 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்வு செய்யப்பட்டு, 31 கிராம ஊராட்சிகளுக்கும் தலா ரூ.5 இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2011–12ம் ஆண்டில், 31 கிராம ஊராட்சிகள் தெரிவு செய்யப்பட்டு, சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு 25.6.2013 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், ரூ.5.00 இலட்சம் ரொக்கப் பரிசும் கேடயமும் வழங்கப்பட்டது.

2012–13ம் ஆண்டிற்கு 31 மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து இந்த விருது பெறுவதற்காக 87 கிராம ஊராட்சிகள் பரிந்துரைக்கப்பட்டு முன் மொழிவுகள் பெறப்பட்டன. இந்த முன்மொழிவுகள் பரிசீலிக்கப்பட்டு, மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 31 கிராம ஊராட்சிகள் இவ்விருதிற்கென தேர்வு செய்யப்பட உள்ளன. 2013–14ம் ஆண்டிற்கும் இதே நடைமுறை பின்பற்றப்படும். 2014-15ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.15. மாநில அளவில் தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கம் மூலம் திறந்த வெளி மலம் கழித்தலை ஒழித்தல்

தமிழ்நாட்டினை திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக உருவாக்கும் பொருட்டு அரசாணை (ப).எண்.147, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி-1) துறை, நாள் 3.4.2013ன்படி, மாநில அளவில் தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கம் மேற்கொள்ள ஆணையிடப்பட்டதுடன், அது தொடர்புடைய சாதனங்களான சுவரொட்டிகள், ஒலிப்பேழைகள், சிற்றேடுகள், துண்டுப் பிரசுரம், காட்சி அரங்கம் ஆகியவற்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



தனிச்சிறப்பு பெற்ற நிறுவனம் மூலம் யுனிசெப் உதவியுடன் மேற்படி தகவல் தொடர்பு சாதனங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, 29.06.2013 அன்று மாநில திட்டக் குழுமத்தின் துணைத்தலைவர் அவர்களால் தமிழ்நாட்டை திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக உருவாக்குவது தொடர்பாகவும், தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனங்களை வெளியிடுதல் தொடர்பாகவும் மாநில அளவிலான விழிப்புணர்வு கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள், திட்ட அலுவலர்கள் (மகளிர் திட்டம்), புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி கருத்தரங்கில் தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கம் மாவட்டங்களில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துதல் குறித்த வழிமுறைகள் விவாதிக்கப்பட்டது.

இந்த இயக்கம், புதிர்நிலை (படிப்பவர்களின் ஆவலை தூண்டும் வகையில் அமையும் தகவல்கள்) மற்றும் வெளிப்படுத்தும் நிலை (சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் அமைந்த தகவல்கள்) ஆகிய இரண்டு நிலைகளில் செயல்படுத்தப்பட்டது. புதிர்நிலை 25.07.2013 அன்று துவங்கி 31.7.2013 வரை செயல்படுத்தப்பட்டது. வெளிப்படுத்தும் நிலை 1.8.2013 அன்று துவங்கப்பட்டு பல்வேறு ஊடகங்கள் வாயிலாக ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டது. சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக்கு வலுவூட்டும் வகையில் நேருக்கு நேர்

தகவல் பரிமாற்றம் துண்டு பிரசுரம், சுவர் விளம்பரம் மற்றும் சிற்றேடுகள் ஆகியவற்றின் மூலமும் மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டங்களில் செயல்படும் சுய உதவிக்குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சுகாதார தூதுவர்கள், பாரத் நிர்மான தொண்டர்கள், பள்ளி மாணவர்கள், சமூக வல்லுநர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைளை மிகப்பெரிய அளவில் மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் சுகாதாரம் குறித்த செய்தியினை அனைத்து ஊரக குடும்பங்களும் அறிந்திட செய்து அதன் வழியாக திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற மாநிலம் என்ற இலக்கை அடைய ஏதுவாகும்.

நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி கழிப்பறை இல்லாத குடும்பங்களிலிருந்து கழிப்பறையின் தேவை குறித்து பெறப்படும் கோரிக்கைகள் தேசிய தகவல் மையம் (NIC) மூலம் வடிவமைக்கப்பட்ட மென்பொருளில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### 3.15.1. நேர்முக தகவல் பரிமாற்றம்

கிராமங்களில் வீட்டுக்கு வீடு சென்று நேருக்குநேர் தகவல் பரிமாற்றங்கள் செய்வது மூலம் கிராம மக்களை ஊக்குவித்து சுகாதாரத்தில் உரிய இலக்கினை அடைவதற்கு சுகாதாரத் தூதுவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். கிராம



ஊராட்சி அளவில் சுகாதாரத் தூதுவர்கள் முக்கிய பங்காற்றும் நபர்களாக முன்னிலைப்படுத்தப்படுவதால் கிராம ஊராட்சி / வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு பாலமாக செயல்படுகிறார்கள். மொத்தம் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் **15,769** நபர்கள் சுகாதாரத் தூதுவர்களாக பணியாற்ற முன்வந்துள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பெண்களாகவும், சுய உதவிக்குழு / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பை சார்ந்தவர்களாகவும், சமூக வல்லுநர்களாகவும், பாரத் நிர்மான் தொண்டர்களாகவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பணிதளப் பொறுப்பாளர்களாகவும் உள்ளனர். மேற்படி சுகாதாரத் தூதுவர்கள் சிறப்பாக செயல்படும் வகையில் அனைவருக்கும் ஆக்கப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. சுகாதாரத் தூதுவர்கள் கிராம அளவில் செயல்படுவதால், நேர்முக தகவல் பரிமாற்றம் மூலம் அவர்கள் தம்முடைய ஊராட்சிகளில் சுகாதாரம் குறித்து கிராம மக்கள் மனதில் ஆழமாக பதியும் வகையில் எடுத்துரைக்க ஏதுவாக அமையும்.

### 3.15.2. பல்வேறு அரசுத்துறைகளை ஒருங்கிணைத்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி பல்முனை நடவடிக்கைகளை மேற்கொண்டு திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற நிலை தமிழ்நாட்டில் **2015**ம் ஆண்டுக்குள் எய்துவதில் அனைத்து பிரிவு பயன்தாரார்களும் பங்கு பெறுதல் அவசியமாகிறது. மொத்தமுள்ள **65.70** இலட்சம் வீடுகளில் (கழிப்பறை

இல்லாத 52.68 இலட்சம் வீடுகள் மற்றும் 13.02 குடும்பங்களில் பயன்பாடற்ற நிலையில் உள்ள கழிப்பறைகள்) கழிப்பறை வசதிகள் குறிப்பிட்ட கால இலக்கிற்குள் ஏற்படுத்தி தருவதை உறுதி செய்ய வேண்டி அரசுத் திட்டங்களில் பணியாற்றும் பயன்தாரர்களான சுய உதவிக்குழுக்கள், குக்கிராம அளவிலான கூட்டமைப்பு / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சமூக வல்லுநர்கள், பாரத் நிர்மான் தொண்டர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், மருத்துவர்கள், கிராம செவிலியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள் பொது விநியோக திட்ட பணியாளர்கள் ஆகியோர்களை ஈடுபடுத்தி நேர்முக தகவல்கள் பரிமாற்றம் மூலம் சுகாதார வசதிகளை உருவாக்க வழி காணப்படும். எனவே அனைத்து துறையைச் சார்ந்த கிராம அளவிலான அலுவலர்கள், களப்பணியாளர்கள் ஆகியோரை பங்கு பெறச் செய்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதனை மக்கள் இயக்கமாக மாற்றி 2015க்குள் தமிழ்நாட்டை திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற மாநிலம் என்ற இலக்கினை அடைய வழிவகை செய்யப்படும்.

சுகாதார குறைபாடு என்பதே மக்களின் அனைத்து உடல் நலக்குறைவிற்கும் முக்கிய காரணமாகும். இதனால் குழந்தைகள் தரமான கல்வி பெறுவது முடியாமல் போகிறது. பெரியவர்களின் பொருள் ஈட்டும் சாத்திய கூறுகள் குறையும் சூழ்நிலை ஏற்படுகிறது. இது ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கிறது. திறந்த



வெளியில் மலம் கழித்தல் உடல் நலத்தை பாதிக்கும் என்ற நிலையில், இது தொடர்பாக நாளதுவரை சமூக பொறுப்புணர்வுடன் பயனாளிகளின் தகுதி நிலையை தொடர்புபடுத்தி துறை சார்ந்த திட்டங்களிலும் ஊக்கத் தொகை வழங்குவதற்கான வழிமுறைகள் உருவாக்கப்படவில்லை. எனவே திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கம் அற்ற மாநிலம் என்ற குறிக்கோள் / இலக்கினை அடைய அனைத்து அரசுத் துறைகளும் குறிப்பாக சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சமூக நலத்துறை, பள்ளிக்கல்வித்துறை, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை போன்ற துறைகள் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது. பல்வேறு அரசுத்துறைகளின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் ஊரகப்பகுதி மக்கள் நலமாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோள் பூர்த்தியாகும். இத்தகைய ஒருமித்த முயற்சிகளின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு பார்வையான 2015ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற மாநிலம் என்ற இலக்கினை எய்த ஏதுவாகும்.

### 3.16. ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஊரகப் பகுதிகளில் ரூ.150 கோடி நிதி ஒதுக்கீட்டில், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயற்படுத்திட அறிவிப்பு செய்துள்ளார்கள். இது தொடர்பாக அரசாணை

(நிலை) எண்.116, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–1)த் துறை, நாள் 4.9.2013ல் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த திட்டமானது, மக்கிய மற்றும் மக்காத கழிவுகளை தனியாக பிரித்தெடுத்து வெளியேற்றுதல், திரவ கழிவுகளை வெளியேற்றுதல், கழிவு நீரை மறுசுழற்சி மூலம் பயன்படுத்துதல், உரக்குழி கட்டுதல், மண்புழு உரம் தயாரித்தல், பெரிய அளவிலான கரிம வாயு கலன்கள் அமைத்தல் போன்ற பல வகையான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளை கிராம ஊராட்சி மூலம் செயல்படுத்த வழிவகை செய்கிறது. திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கை மூலம் கழிவுகளை உரமாகவும், சமையல் வாயுவாகவும், மின்சாரமாகவும் மாற்றப்படுவதன் மூலம் கிராம ஊராட்சிக்கு நல்லதொரு பொருளாதார வருவாயைப் பெற்றுத்தருகிறது. பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கவும் ஊரக பகுதிகளில் உள்ள சுயஉதவிக்குழுக்களை ஊக்குவித்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை ஒரு பொருளாதார நடவடிக்கையாக மேற்கொள்ளவும் வழிவகுக்கிறது.

திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளை சுத்தமாக வைத்திருக்க உதவுவதோடு மட்டுமில்லாமல், அவைகளின் வருமானத்தை அதிகரிக்க வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன், மின் தேவையில்



தன்னிறைவு அடைவதற்கு உதவுகிறது. முதன் முதலாக இதே போன்று, ஒரு ஒருங்கிணைந்த முயற்சியானது, முக்கியமாக ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் வாயிலாக, மேற்கொள்ளப்படுவதுடன் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாததைப் போன்று, தனியாக நிதி ஒதுக்கீடும் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இதனைத் தொடர்ந்து 19.10.2013 அன்று மறைமலைநகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில், மாவட்ட அளவிலான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை திட்டத்திற்கான கருத்துரு தயார் செய்தல் மற்றும் திட்டத்தினை செயல்முறைப்படுத்துதல் சம்பந்தமாக, சிறந்த வல்லுநர் குழுவினால் ஒருங்கிணைந்த பயிற்சி அளிக்கப்பட்டது. வெற்றியடைந்த மாதிரிகளை உருவாக்கவும் பயன்தாரார்களுக்கு பல வகையான தொழில்நுட்ப முறைகளைப் பற்றி கற்பிப்பதற்கு, திறன்வளர் பயிற்சிகள் தொடர்ந்து நடைபெறும். அதைப்போல மாநில அளவிலான வல்லுநர்களைக் கொண்டு மாவட்ட அளவில் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்வதன்மூலம், இத்திட்டம் தொடர்ந்து செயல்படும் தன்மை உறுதி செய்யப்படும்.

### 3.16.1. மாவட்ட அளவிலான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை குழு

திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உரிய இடத்தை தேர்வு செய்வதற்கும்,

அதற்குரிய முன்மொழிவுகள் தயார் செய்து, மாநில அளவிலான குழுவில் ஒப்புதல் பெறுவதற்கு பரிந்துரை செய்யவும், அனுமதிக்கப்பட்ட இத்திட்டத்தை செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுவதற்கும், அதன் செயல் திறனை கண்காணிக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை குழு இது நாள் வரையில் 144 கிராம ஊராட்சிகளை அடையாளங்கண்டு, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவதற்காக தங்களது விரிவான திட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளன.

### 3.16.2. 2014–15ம் ஆண்டிற்கான திட்டச் செயலாக்கம்

2014–15ம் ஆண்டில் இத்திட்டம் ரூ.200 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 3.17. சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

நக்சலைட்டுகளின் வளர்ச்சியைத் தடுத்திடும் வகையில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்பு திட்டமாக 2003–04ம் ஆண்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அரசு பிற்படுத்தப்பட்டோர் / ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்கும் விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் பள்ளி



விடுதிகளில் நீர் கொதிப்பான் மற்றும் சூரியசக்தியுடன் கூடிய விளக்குகள் அமைத்தல், தேன் சேகரிக்கும் பெட்டிகள் வழங்குதல், நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கு விளையாட்டு சாதனங்கள் வழங்குதல், புதிதாக அமைக்கப்பட்டுள்ள நூலகங்களுக்கு உரிய தளவாட சாமான்கள் வழங்குதல், இளைஞர்களை போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்வதற்கு தயார்படுத்துவதற்கு பயிற்சியளித்தல், கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி மற்றும் கணினி பயிற்சி வழங்குதல், சீருடைப் பணிகளில் சேருவதற்கான பயிற்சிகள், கிராம அளவில் சிறு பால் பண்ணைகள் அமைத்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் பயனாளிகள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தேவையான விவசாய உபகரணங்கள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2013–14ம் நிதியாண்டில் தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 700.00 இலட்சம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ரூ. 50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் பல்வேறு பயிற்சி திட்டங்கள், தனிநபர் உதவித் திட்டங்கள், சமுதாய சொத்துக்கள் உருவாக்குதல் ஆகிய பணிகள் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2014–15ம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.7.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2013–14ம் ஆண்டில் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகள் விவரம் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| தருமபுரி மாவட்டம் | | | |
| 1 | அரசு பிற்படுத்தப்பட்டோர் / ஆதி திராவிட மாணவர்கள் தங்கும் விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் பள்ளி விடுதிகளில் நீர் கொதிப்பான் மற்றும் சூரிய சக்தியுடன் கூடிய விளக்குகள் அமைத்தல்<br>நீர் கொதிப்பான்<br>சூரிய சக்தி விளக்குகள் | | <br>104 எண்ணிக்கை<br>104 எண்ணிக்கை |
| 2 | தேன் சேகரிக்கும் பெட்டிகள் வழங்குதல்<br>4 பெட்டிகள் வீதம் | | 200 பயனாளிகள் |
| 3 | விளையாட்டு சாதனங்கள் வழங்குதல் | | 2005 எண்ணிக்கை |
| 4 | நூலகங்களுக்கு தளவாட சாமான்கள் வழங்குதல் | | 2 எண்ணிக்கை |
| 5 | அ | போட்டித் தேர்வுகளுக்கு இளைஞர்களை தயார் செய்தல் | 1 அணி |
| | ஆ | இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி வழங்குதல் | 1 அணி |
| | இ | இளைஞர்களுக்கு சீருடைப் பணிகளில் சேருவதற்கான பயிற்சி அளித்தல் | 1 அணி |
| 6 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டப் பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்குதல் | | 6000 எண்ணிக்கை |



| | | |
|---|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்டம் | | |
| 1 | தெருவிளக்குகள் | 69 எண்ணிக்கை |
| 2 | குடிநீர் பணிகள் | 16 எண்ணிக்கை |
| 3 | சிமெண்ட் சாலைகள் | 6 எண்ணிக்கை |
| 4 | வடிகால் | 4 எண்ணிக்கை |

### 3.18. தானே வீடு வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் டிசம்பர் 2011–ஆம் ஆண்டு "தானே" புயல் காற்று உருவாகி லட்சக்கணக்கான வீடுகளை சேதப்படுத்தியதோடு லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் பாதித்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி தமிழக அரசு மிகத் துரிதமாகச் செயல்பட்டு அதிக அளவிலான உடனடி மீட்பு பணிகளை விரிவாக மேற்கொண்டு, அனைத்து மீட்பு பணிகளையும் குறித்த கால அளவிற்குள் செய்து முடித்தது. இருந்த போதிலும், "தானே" புயலினால், முழுமையாக சேதமடைந்து குடிசைகளை இழந்த ஊரக மக்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவது தேவையாக இருந்தது.

எனவே, தமிழக அரசு, கடுமையான தானே புயலினால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட, ஊரக மக்கள் பயனடையும் வகையில் "தானே வீடு வழங்கும் திட்டம்" என்ற திட்டத்தை துவக்கியது. தமிழக அரசு "தானே" புயல் காற்றினால் பாதிக்கப்பட்ட கடலூர் (90,000 வீடுகள்) மற்றும் விழுப்புரம் (10,000 வீடுகள்) மாவட்டங்களில்

பாதிக்கப்பட்ட வீடுகளை மாற்றியமைக்கும் பொருட்டு ரூ. 1000 கோடி மதிப்பீட்டில், 1,00,000 கான்கிரீட் வீடுகள் கட்ட ஆணையிட்டது.

**3.18.1. இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- தானே புயலால் பாதிக்கப்பட்ட ஊரக குடும்பங்கள் அனைத்தும் இத்திட்டத்தில் பயன்பெறத் தகுதியுள்ளவர்கள்.
- ஒவ்வொரு வீடும் 200 சதுர அடி பரப்பளவு கொண்டதாக இருக்கும்.
- ஒவ்வொரு வீட்டிலும் வசிக்கும் அறை, சமையலறை மற்றும் கழிவறையுடன் மழை நீர் சேகரிப்பு அமைப்பும் கட்டப்படும். நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டித்தரப்படும்.
- ஒரு வீடு கட்டுவதற்கான அலகுத் தொகை ரூ.1 லட்சம் என்ற அடிப்படையில், மாநில அரசின் முழு நிதி உதவியுடன் கட்டப்படும்.
- கட்டுமானப் பணிகளை பயனாளிகளே மேற்கொள்வர்.
- இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே புயலால் பாதிக்கப்பட்ட பழுதடைந்த வீடுகள் இருந்த இடத்திலேயோ அல்லது ஊராட்சியில் அந்த பயனாளிக்கு சொந்தமான வேறு இடத்திலேயோ வீடுகளைக் கட்டி கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ்



எவ்வித நில எடுப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது.

- பொதுப்பணித் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள நாட்டு செங்கற்கள், நிலக்கரி சாம்பல் கற்கள் அல்லது சிமெண்ட் கற்கள் (hollow block) கொண்டு பயனாளிகள் விருப்பத்திற்கேற்ப கட்டிக்கொள்ளலாம்.

ரூ. 1,000 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட வீடுகளில் கடலூர் மாவட்டத்திற்கு 90,000 வீடுகளும், விழுப்புரம் மாவட்டத்திற்கு 10,000 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

# 4. மத்திய அரசுத் திட்டங்கள்



## 4. மத்திய அரசு திட்டங்கள்

### 4.1 . மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மட்டுமே சட்டப்பூர்வ பாதுகாப்பு கொண்ட ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக 100 நாட்கள் வேலை வழங்குவதும் துணை குறிக்கோளாக நிலையான சொத்துக்களை உருவாக்குவதுமாக இருந்தது. ஆனால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை I–ன்படி இத்திட்டத்தின் குறிக்கோள்கள் கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

அ) ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.

ஆ) ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் அடிப்படை வளத்தை உருவாக்குதல்.

இ) சமூகப் பங்களிப்பை உறுதி செய்ய திறம்பட செயலாற்றுதல்.

ஈ) ஊராட்சி அமைப்பு முறையை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில், முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் 2.2.2006ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக 01.04.2007 முதல் இத்திட்டம் மேலும் 4 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு மற்றும் மூன்றாம் கட்டமாக அதாவது 01.04.2008 முதல் இத்திட்டம் மீதமுள்ள அனைத்து 21 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

**4.1.1. திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

1. ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளித்தல்.
2. திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு மத்திய அரசால் வழங்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவு, மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது



3. ஒப்பந்ததாரர்கள் மற்றும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.
4. இத்திட்டத்தின் வேலைகளுக்கான ஊதியம் மற்றும் பொருட்களுக்கிடையேயான விகிதாச்சாரம் 60:40 ஆகும்.
5. கிராம சபை ஒப்புதல் அளித்தபின், அதில் கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த 50 விழுக்காடு வேலைகள் ஒதுக்கப்பட வேண்டும்.
6. திறன்சாரா, உடல் உழைப்பு மேற்கொள்ள விருப்பம் உள்ள வயது வந்தோர், திறன்சாரா வேலையினை மேற்கொள்வதற்கான விருப்பத்தினை வாய் மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ, கிராம ஊராட்சிக்கு தெரிவித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.
7. கிராம ஊராட்சி தேதியுடன் கூடிய ஒப்புகைச் சீட்டு வழங்குவதுடன் 15 நாட்களுக்குள் வேலை அட்டை வழங்கப்படவேண்டும். இது அவர்களுக்கு 15 நாட்களுக்குள் வேலை வழங்குவதற்கு உத்தரவாதமாக விளங்கும்.
8. வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 சதவீதம் கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம்

2 கி.மீ சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் உருவாக்கப்படுகின்றன.

9. திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது ஓர் வயது வந்த நபர் 1 மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய 8 மணி நேர பணியில் பெறப்படக்கூடிய (அதாவது 7 மணி நேர வேலை) ஊதியத்திற்கு சமமாக இருக்கும்.

10. ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும். 2014–15–ஆம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் ரூ.167/– ஆகும்.

11. பொதுவாக, வாரம் தோறும் ஊதியம் வழங்கப்படுகிறது. 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

12. மூன்றில் ஒரு பங்கு பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும்.

13. வேலை நடைபெறும் இடங்களில், குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.

14. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, கிராம சபை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள ‘‘கிராம சமூகத் தணிக்கையாளர்கள்’’ மூலம் மேற்கொள்ளப்படுகிறது. குறைகளைத் துரிதமாகத்



தீர்க்கும் வகையில், குறை தீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை (Toll free Helpline) ‘‘1299’’ ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

15. இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும், ‘‘தமிழ்நாடு அரசு மாநில வேலை உறுதி மன்றம்’’ என்ற அமைப்பு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பிரிவு 12–ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

### 4.1.2. அனுமதிக்கப்பட்ட பணிகள்

மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

I. **வகைப்பாடு அ:** இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப்பணிகள்

நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்புப் பணிகள், நீர் மேலாண்மைப் பணிகள், சிறு மற்றும் குறு நீர்ப்பாசனப் பணிகள், குளங்கள்/ஏரிகள் தூர் வாருதல், மரக்கன்றுகள் நடுதல், மற்றும் பொது இடங்களில் நில மேம்பாட்டு பணிகள்.

II. **வகைப்பாடு ஆ:** நலிவுற்ற இனத்தினற்கான பொதுச் சொத்துக்கள் அல்லது தனி நபர் சொத்துக்களை உருவாக்குதல்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், நாடோடி பழங்குடியினர், பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள இதர குடும்பத்தினர், பெண்கள் குடும்பத்தலைவராக உள்ள குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் குடும்பத்தலைவராக உள்ள குடும்பங்கள், நிலச் சீர்திருத்த பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட பயனாளிகள், பாரம்பரிய வனப்பகுதிகளில் வசிப்பவர்கள் (வன உரிமை அங்கீகாரம் சட்டம், 2006 – 2007ல் 2 ன்படி) போன்ற குடும்பத்தினருக்கு தனிச்சொத்துக்களை உருவாக்கும் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளுதல்.

தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான நீர்ப்பாசன பணிகள், தோட்டக்கலை சார்ந்த பணிகள், தரிசு நிலம் அல்லது பயனற்ற நிலங்களை மேம்படுத்தி விவசாய நிலங்களாக மாற்றுதல், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்ட அனுமதிக்கப்பட்ட வீடுகள் அல்லது மாநில அல்லது மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகள் கட்டுவதற்கான திறன்சாரா செலவினத்தினை மேற்கொள்ளல், வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை கால்நடைகளுக்கு ஏற்படுத்த கோழி கொட்டகை, ஆட்டு கொட்டகை, பன்றி கொட்டகை, மாட்டு கொட்டகை மற்றும் கால்நடைத் தீவனம் உருவாக்குவதற்கான எருக்குழிக்களை உருவாக்குதல் மற்றும் மீன் வளத்தினை மேம்படுத்தும் வசதிகளை உருவாக்க மீன் உலர் தளம், சேமிப்பு வசதிகள் மற்றும் பொது



இடங்களில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளத்தினை மேம்படுத்துதல்.

**III. வகைப்பாடு இ:** தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்கள் உள்ளிட்ட சுய உதவிக் குழுக்களுக்கான பொது உட்கட்டமைப்பு வசதிகளான சேமிப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் பொது பணிமனை அமைத்தல்.

**IV. வகைப்பாடு ஈ:** ஊரக உட்கட்டமைப்பு வசதிகள்

ஊரக சுகாதார பணிகள், இணைப்பில்லா கிராமங்களுக்கு அனைத்து பருவங்களுக்கும் ஏற்றவகையில் ஊரக சாலை இணைப்பினை ஏற்படுத்துதல், விளையாட்டு மைதானம் அமைத்தல், அத்தியாவசிய பொது உட்கட்டமைப்புகளான வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் தடுப்பு பணிகள், கிராம ஊராட்சிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், புயல் நிவாரணக் கூடங்கள், அங்கன்வாடி மையங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் கிராமங்களில் இடுகாடு மற்றும் சுடுகாட்டு கொட்டகைகளை ஊராட்சி மற்றும் வட்டார அளவில் கட்டுதல், தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013 ( 20/2013) ன்படி உணவு சேமிப்பு கட்டிடங்கள் கட்டுதல், கட்டுமான பணிகளுக்கான பொருட்களை அப்பணியின் மதிப்பீட்டிற்குள் கட்டுதல் மற்றும் இத்திட்டத்தில்

உருவாக்கப்பட்ட பொது சொத்துக்களை பராமரித்தல்.

ஒவ்வொரு மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளரும், மொத்த நிதி ஒதுக்கீட்டில் 60% நிலம், நீர் மற்றும் மரங்கள் மேம்பாட்டிற்கான விவசாயம் சார்ந்த பணிகள் எடுப்பதை உறுதி செய்ய வேண்டும்.

*உறுதியற்ற, அளக்க இயலாத, திரும்ப செய்யக்கூடிய பணிகளான புல் பூண்டுகள் அகற்றுதல், வேளாண்மை சார்ந்த பணிகள் போன்றவை மேற்கொள்ள இயலாது.*

**4.1.3. 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ம் ஆண்டுகளுக்கான சாதனைகள்:**

நிர்ணயிக்கப்பட்ட 30.02 கோடி மனித சக்தி நாட்கள் என்ற இலக்கினை ஒப்பிடுகையில் 2011–12ம் ஆண்டில், இந்த அரசால் 33 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது. 2012–13–ம் ஆண்டில் 40.80 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டது. இச்சாதனை வறட்சியின் காரணமாக ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் வேலைநாட்கள் 100லிருந்து 150 நாட்களாக உயர்த்தப்பட்டதால் உருவாக்கப்பட்ட மனிதசக்தி நாட்களையும் உள்ளடக்கியதாகும்.



2013–14ம் ஆண்டில் 42.85 கோடி மனித சக்தி நாட்கள் இலக்கீட்டிற்கு 37.29 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழான மொத்த செலவினம் ரூ.4,114.29 கோடியாகும். இதில், ரூ.3808.24 கோடி ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

2013–14ம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தேசிய அளவில், தமிழ்நாடு செயல்பாட்டில் கீழ்க்கண்டவாறு சிறந்து விளங்குகிறது :

**அட்டவணை 4.1.1**

**2013–14ம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தேசிய அளவில், தமிழ்நாட்டின் செயல்பாடு**

| | | |
|---|---|---|
| 1 | மனிதசக்தி நாட்கள் | 37.29 கோடி மனித சக்தி நாட்களை எய்தியதன் மூலம் நாட்டிலேயே தமிழ்நாடு **முதலிடத்தை** பெற்றுள்ளது. |
| 2 | தொழிலாளர்களுக்கான ஊதிய செலவினம் | தொழிலாளர்களுக்கான ஊதியமாக ரூ.3808.24 கோடி செலவழித்ததன் மூலம் நாட்டிலேயே தமிழ்நாடு **முதலிடத்தை** பெற்றுள்ளது. |
| 3 | பெண்களின் பங்களிப்பு விகிதம் | சதவீத அடிப்படையில் கேரளாவிற்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது (84%). ஆனால் 30.70 மனித சக்தி நாட்கள் மகளிரால் எய்தியதன் மூலம் நாட்டிலேயே **முதலாவது** இடத்தில் உள்ளது. ஆனால் கேரள மாநிலத்தில் மகளிரால் உருவாக்கப்பட்ட மனிதசக்தி நாட்கள் 8.08 கோடி மட்டுமே ஆகும். |

| | | |
|---|---|---|
| 4 | ஒரு குடும்பத்திற்கான சராசரி வேலை நாட்கள் | தேசிய அளவில் ஒரு குடும்பத்திற்கான சராசரி வேலை நாட்கள் 47 என்பதை ஒப்பு நோக்கும் போது ஒரு குடும்பத்திற்கு சராசரியாக 59 நாட்கள் வேலைவாய்ப்பு அளித்து தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. |

**4.1.4. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான விருதுகள்**

**அ) 2011–12ம் ஆண்டிற்கான விருதுகள்.**

- 2011–12ம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக **தேசிய அளவில் 7 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டது. நமது மாநிலத்தில் மட்டும் 2 மாவட்டங்கள் தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி விருதினை பெற்றன.**
- அதேபோன்று **தேசிய அளவில் 11 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டதில், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காடம்பாடி கிராம ஊராட்சியும் ஒன்றாகும்.**

**ஆ) 2012–13ம் ஆண்டிற்கான விருதுகள்.**

- முதன்முறையாக மாநிலங்களுக்கான விருது மூன்று வகைப்பாட்டின் கீழ் 2012–13 முதல் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் **தமிழ்நாடு "சமூகப் பங்களிப்பு" (social inclusion) என்ற வகைப்பாட்டில் சிறந்த மாநிலமாக தேர்வு**



**செய்யப்பட்டு மத்திய அரசால் விருது வழங்கப்பட்டுள்ளது.** "சமூகப் பங்களிப்பு" பிரிவில் விருதுபெற்ற ஒரே மாநிலம் தமிழகம் மட்டுமே.

- **2012–13ம்** ஆண்டில் தோட்ட தொழிலாளர்களது வேலைவாய்ப்பினை பெருக்க வாய்ப்பளித் தமைக்காக **நீலகிரி மாவட்டத்திற்கு சிறந்த மாவட்டத்திற்கான விருது வழங்கப்பட்டது.**
- மேலும் தேசிய அளவில் தேர்வு செய்யப்பட்ட **11** சிறந்த **கிராம ஊராட்சிகளில்** நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த **தாணிக்கோட்டகம் கிராம ஊராட்சியும் ஒன்றாகும்.**

**4.1.5. 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ம் ஆண்டுகளுக்கான சாதனைகள்:**

**4.1.5.1. கிராம ஊராட்சிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளை எடுத்து செய்ய அனுமதித்தல்**

15.5.2011க்கு முன்னர் கிராம ஊராட்சிகளில் அனுமதிக்கப்பட்ட பணிகளில் ஒரே நேரத்தில் ஒரு பணியை மட்டுமே எடுத்து செய்ய உத்திரவிடப்பட்டிருந்தது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பினை வழங்கிடுவதற்காக, வசிக்கும் குடியிருப்புகளுக்கு அருகாமையில் பணியை செய்திட ஏதுவாக ஒவ்வொரு

கிராம ஊராட்சியிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை எடுத்து செய்ய அக்கிராம ஊராட்சிகளில் உள்ள குடியிருப்புகள் தொகுதிகளாக பிரிக்கப்பட்டு, ஒரு தொகுதிக்கு குறைந்தபட்சம் ஒரு பணி செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு ஊராட்சியில் எத்தனை தொகுதிகள் உள்ளனவோ அத்தனை பணிகள் ஒரே நேரத்தில் செயல்படுத்தப்படுகிறது. அக்டோபர் 2011 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் மூலம் அதிக அளவில் தொழிலாளர்கள் பணித்தளத்திற்குச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நில மேம்பாட்டு பணிகளான பண்ணைக் குட்டைகள் மற்றும் மரக்கன்றுகள் நடுதல் போன்றவை 2012–13ல் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு தொகுதியிலும் மேற்கொள்ளப்படும் பணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இது அதிக அளவிலான குடும்பங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணிகளில் ஈடுபட வழிவகை செய்துள்ளது.

### 4.1.5.2. 2012–13ம் ஆண்டில் வறட்சி நிலையினை எதிர்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து 31 மாவட்டங்களிலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்படி ஒரு குடும்பத்திற்கான வேலைவாய்ப்பு 100 நாட்கள் என்பதிலிருந்து 150 நாட்களாக உயர்த்தப்பட்டது.



21.02.2013 முதல் 31.03.2013 வரையிலான காலத்தில் 12.73 இலட்சம் குடும்பங்களுக்கு 100 நாட்களுக்கு மேல் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இதனால் இக்குடும்பங்களுக்கு கூடுதல் ஊதியமாக ரூ.271 கோடி வழங்கப்பட்டது.

- வறட்சி காலத்தில் வேலை வழங்கும் விதமாக விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டன.

### 4.1.5.3. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பணிகள்

- மாற்றுத்திறனாளிகள் உரிமை (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995ல் தெரிவித்துள்ளவற்றை மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் செயல்படுத்தும் வகையில், தமிழக அரசு அரசாணை நிலை எண்.52, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை, நாள் 25.06.2012ன் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

<u>அரசாணையின்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனாளிகள் மேற்கொள்வதற்கான சிறப்பு பணிகள் கீழ்க்கண்டவாறு :</u>

பணித்தளத்தில் தொழிலாளர்களுக்கு தண்ணீர் வழங்கும் பணியாளர், குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பாளர், பணித்தள பொறுப்பாளருக்கு

முன்அளவீட்டினை மேற்கொள்ள உதவுதல், பணித்தளத்தில் அகற்றப்பட்ட மரங்களை அப்புறப்படுத்துதல் (இலை, தழைகள் மற்றும் சிறு மரங்கள்) ஆழப்படுத்தப்படும் இடங்களில் தண்ணீர் தெளித்தல் (குறிப்பாக கோடை காலங்களில்) மண்வெட்டி, கடப்பாறை போன்றவற்றை கொண்டு கரைகளில் கொட்டப்படும் மண்களை சமப்படுத்துதல், கரைகளை சமன்படுத்துதல் (benching) மற்றும் கரைகளின் சரிவுப்பகுதியினை சீர்செய்தல்.

<u>மண்தொடர்பான பணிகளில் சிறப்பு வழிமுறைகள்</u>

- உடல் உழைப்பினை மேற்கொள்ளத் தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகளை மண்வேலை தொடர்பான பணிகளான முட்புதர்களை அகற்றுதல், ஆழப்படுத்துதல், நடுதல், மண்நிரப்புதல் மற்றும் நீர்பாய்ச்சுதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தலாம்.

2012–13ம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளால் 31.89 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு ரூ.47.20 கோடி ஊதியமாக வழங்கப்பட்டது. 2013–14ம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளால் 40.41 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு ரூ.59.81 கோடி ஊதியமாக வழங்கப்பட்டது.



### 4.1.5.4. செயற்கைகோள் மூலம் தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் அடிப்படையில் பணிகள் தெரிவுசெய்தல்

- இவ்வரசு செயற்கைகோள் உதவியுடன் தற்போதுள்ள நீர் நிலை ஆதாரங்களை (குளம் / ஊரணி / வரத்துக் கால்வாய்) கொண்ட வரைபடம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்தது.
- அண்ணா பல்கலைக்கழக தொலை உணர் தொடர்பு நிறுவனம் மூலம் வள ஆதார வரைபடம் (Resource Map) அனைத்து மாவட்டங்களுக்கும் தயார் செய்யப்பட்டுள்ளது.
- மேற்படி வரைபடங்களின் அடிப்படையில், முதலில் இருந்த கொள்ளளவை பெறும் வகையிலும் நிலத்தடி நீர் அளவை உயர்த்தும் பொருட்டும் செயற்கைகோள் உதவியுடன் தயார் செய்யப்பட்ட படங்களின் உதவியுடன் நீராதாராப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் சோதனை முயற்சியாக மதகு மற்றும் மறுகால் சீரமைத்தல் உள்ளிட்ட தொடர் நீராதாரக் குளங்கள் (System Tanks), புனரமைக்கும் பணிகள் மாநில அரசின் ஊரக உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- பெரிய ஊரணிகள் மற்றும் நீர் ஆதாரங்களை புனரமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாணை (1டி) எண்.487, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.3) துறை, நாள் 18.09.2012ன்கீழ் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதன் சாராம்சத்தை http://tnrd.gov.in/Centralschemes/nregs_2012.html என்கிற வலை தளத்தின் மூலம் பெறலாம்.

**4.1.5.5. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்கள் அதிக ஊதியம் பெறுதல்**

15.5.2011ற்கு முன்னர் தொழிலாளர்கள், பெரும்பாலான நேரங்களில் ரூ.80/– முதல் ரூ.90/– வரை மட்டுமே ஊதியம் பெறும் நிலை இருந்தது. ஆகையால், இத்திட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு பணித்தளத்தில் மாதிரி குழிகள் அமைத்தல், தொழிலாளர்கள் சரியான ஊதியம் பெற தேவையான அளவு வேலை செய்ய வேண்டிய அளவீடுகள் குறித்து எடுத்துரைத்தல் மற்றும் பணி மேற்பார்வையாளர்களுக்கு முன் அளவீடு செய்தல், அளவெடுப்பது குறித்த பயிற்சி நடத்துதல் உள்ளிட்ட விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்பட்டது. இதன் விளைவாக, தொழிலாளர்கள் பெறும் சராசரி ஊதியம் ரூ.90/– லிருந்து 2012–13ம் ஆண்டில் ரூ.105/– ஆக உயர்ந்துள்ளது.



- கால நிர்ணய வேலை அளவு மேற்கொள்ளப்பட்டு, அதன்படி ஓர் திருத்திய ஊரக விலைப்பட்டியல் அரசாணை (நிலை) எண் 110 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–1)த் துறை நாள் 15.11.12 ல் வெளியிடப்பட்டது.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் உறுதியான நடவடிக்கைகள் மூலம் சராசரி ஊதிய விகிதம் அதிகரிக்கப்பட்டு, பல ஊராட்சிகளில், முழுமையான ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**4.1.5.6. நில மேம்பாட்டு பணிகள்**

- அரசாணை (நிலை) எண்.61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி.1) துறை, நாள்.23.07.2012–ல் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் தனி நபர் நில மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

**4.1.5.6.1. தனி நபர் விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்தல்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 2012–13ம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்யப்படும் என அறிவித்தார்கள். அதன்படி தமிழக அரசால் அமைக்கப்பட்ட

உயர்மட்ட குழு வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டது. இக்குழுவின் முன்பு விவசாயிகள் வைத்த கோரிக்கைகளில் வறட்சி நிலையினை சமாளிக்க பண்ணைக் குட்டைகள் அமைத்தல் ஒன்றாகும்.

விவசாயிகளது கோரிக்கையை நிறைவேற்ற அரசாணை (நிலை) எண்.17 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி.1) துறை, நாள்.15.02.2013ன்படி 8 டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 15,000 பண்ணைக் குட்டைகள் அமைக்க ஆணையிடப்பட்டது. அதன்படி தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியின விவசாயிகள் மற்றும் சிறு / குறு விவசாயிகளது நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. விவசாயிகளது சாதகமான ஏற்பினை தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16.04.2013 அன்று சட்டமன்ற பேரவையில் டெல்டா அல்லாத மாவட்டங்களில் ரூ.750 கோடி மதிப்பீட்டில் 50,000 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படும் என அறிவித்தார்கள்.இதைத் தொடர்ந்து டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



**4.1.6. ஒருமுகப்படுத்தும் நடவடிக்கைகள்**

**4.1.6.1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்.**

**அ. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துடன் நிர்மல் பாரத் அபியான் திட்டத்தினை ஒருமுகப்படுத்துதல்**

மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி மாநில அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினை மத்திய அரசு திட்டமான நிர்மல் பாரத் அபியான் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு செய்ய அரசாணை (நிலை) எண்.121 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி.1) துறை, நாள்.28.11.2012ன்படி ஆணையிட்டது. அதன்படி தனி நபர் இல்ல கழிப்பறை பணிகள் மற்றும் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை பணிகள் ஒருங்கிணைப்பு செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

- தனி நபர் இல்ல கழிப்பறை கட்டுவதற்கான தொழிலாளர்களுக்கான ஊதியம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழும் கட்டுமான பொருட்களின் செலவினம் நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழும் மேற்கொள்ளப்படுகிறது.
- தனி நபர் இல்லக் கழிப்பிடத்திற்கு, ரூ.11,100 அலகுத் தொகையாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இது

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியான ரூ.4,500—ம் உள்ளிட்டதாகும்.

**ஆ.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் பிரத்யேகமாக தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுதல்:**

2013—14 ம் ஆண்டுவரை தனி நபர் இல்லக் கழிப்பறைகள் நிர்மல் பாரத் அபியான் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வந்தது. அரசாணை (நிலை) எண்.32 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.1) துறை, நாள்.03.03.2014ன் படி தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிகள், ஒரு கழிப்பறைக்கு ரூ.10,000 அலகு தொகையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் பிரத்யேகமாக மேற்கொள்ளப்படுகிறது.

**திடக் கழிவு மேலாண்மை (மக்கு குழி) :** நுண்ணுயிரின கழிவுகளை அதிக அளவில் கொண்டுள்ள ஊரக பகுதிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும் வகையில், நுண்ணுயிரின கழிவுகளை உரங்களாக மாற்றக்கூடிய மக்குக் குழிகளை உருவாக்கும் பணி இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. 2013—14 ஆம் ஆண்டில் 1,363 கிராம ஊராட்சிகளில் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2014—15 ஆம் ஆண்டில் அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் இப்பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**இ. காடு வளர்ப்பு நடவடிக்கைகள்**

கிராம ஊராட்சிகளுக்கு சொத்துக்களை உருவாக்கவும் பசுமைமயமாக்கவும் அரசு மற்றும் பொது இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அதிக அளவில் காடு வளர்ப்பு பணிகள், அரசு / பொது இடங்கள், கிராம ஊராட்சி இடங்கள் மற்றும் தனிநபர் விவசாயிகளது நிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014—15 ஆம் ஆண்டில் இப்பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஈ. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் சாலைகளில் மரக்கன்றுகளை நடுதல்**

ஊரகப் பகுதிகளை பசுமையாக்கும் வண்ணம் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் இருமருங்கிலும் நிழற்சாலை மரக்கன்றுகள் அமைக்கும் பணி 2013—14—ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள், பாரதப் பிரதமர் கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களில் அமைக்கப்பட்ட சாலைகள் ஆகியவற்றில் சாலைகளின் இருமருங்கிலும் மரக்கன்றுகள் 2014—15—ஆம் ஆண்டில் பெருமளவில் நடப்படும்.

**உ. கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்களில் நாற்றுகளை வளர்த்தல்**

கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்களே காடுவளர்ப்பு பணிகளை மேற்கொள்ள பல்வேறு மாவட்டங்களில், கிராம ஊராட்சிகள்/ஊராட்சி

ஒன்றியங்களே நாற்றுகளை வளர்ப்பதற்கு ஊக்குவிக்கப்படுகிறது. அதனடிப்படையில், இராமநாதபுரம், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமான நிலங்களில் நாற்றுகள் வளர்க்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் வேம்பு, புங்கை, நாட்டு வாகை, நாட்டு பூவரசு, சவுக்கு, மருதம் போன்ற மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றது. இதே போன்று நாற்றுகளை வளர்க்க இதர மாவட்டங்களில், நிலங்களை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**ஊ. கிராம ஊராட்சி சேவை மையங்கள் மற்றும் வட்டார ஊராட்சி சேவை மையங்கள் கட்டுதல்**

ஊரக மக்களுக்கு அதிகாரம் அளித்திடும் வகையில், 2013–14ம் ஆண்டில், 4,174 கிராம ஊராட்சி சேவை மையங்கள் மற்றும் 120 வட்டார ஊராட்சி சேவை மையங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4.1.6.2. பிற துறைகளுடன் ஒருமுகப்படுத்துதல்**

**அ.சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையுடன் ஒருமுகப்படுத்துதல்**

அரசு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையுடன் ஒருமுகப்படுத்தி கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான குளங்களில் 4,000 ஹெக்டர் பரப்பளவிற்கு கருவேல் மரக்கன்றுகளை நடுவதற்கு



அரசாணை எண்.104, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை, நாள் 09.11.2012 அன்று ஆணை வெளியிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூட்டாக கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய ஏரிகளில் இடத் தேர்வு மேற்கொள்ளப்பட்டது. வனத்துறையின் மூலம் நாற்றுகள் வளர்க்கப்பட்டு வழங்கப்பட்டது. நாற்றுகள் வளர்ப்பதற்கான தொழிலாளர் ஊதியம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திலிருந்து வழங்கப்பட்டது. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை கண்காணிப்பின் கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் குழிபறித்தல் மற்றும் நாற்று நடும் பணிகளை மேற்கொண்டுள்ளார்கள். 4,000 ஹெறக்டரில் கருவேல் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது .

**ஆ. மீன்வளத் துறையுடன் ஒருமுகப்படுத்துதல்**

தங்களது நிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைத்துள்ள விவசாயிகளில் விரும்புவோருக்கு மீன்வளத் துறை மூலம் மீன் குஞ்சுகள் குறைந்த விலையில் வழங்கப்படுகிறது. 2013–14ம் ஆண்டில், மீன்வளத் துறையின் இலக்கீடான 1,700 பண்ணைக் குட்டைகள் முழுவதிலும் மீன்குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன.

**இ. பட்டுவளர்ப்பு பண்ணைகளில் பண்ணைக்குட்டைகள் அமைத்தல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் பட்டுவளர்ச்சித் துறைக்கு சொந்தமான அரசு பட்டுவளர்ப்பு பண்ணைகளில் 50 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படும் என அறிவித்தார்கள்.

அதனடிப்படையில், கிணற்றில் கோடைக் காலத்திலும் தண்ணீர் தொடர்ந்து கிடைத்திடவும், மல்பேரி கன்றுகளை வளர்த்து அவைகளை விவசாயிகளுக்கு வழங்கி, உள்ளூர் பட்டுப்பூச்சிகளுக்கு உணவாக வழங்க வேண்டும் என்ற நோக்கிலும், 2013–14ம் ஆண்டில், அனைத்து மாவட்டங்களிலும் மொத்த இலக்கீடான 50 பண்ணைக் குட்டைகளை விட அதிகமாக 61 பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

**4.1.7. வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குதல்**

இந்த அரசு நடைமுறையில் இருந்த தொழிலாளர்களுக்கு ரொக்கமாக ஊதியம் வழங்கும் முறையினை நிறுத்த முடிவு செய்தது. அதனடிப்படையில், முறைகேடுகள் ஏதும் நடைபெறாமலிருப்பதை உறுதி செய்தல் மற்றும் செயல்படுத்தும் முகமை மற்றும் ஊதியம் வழங்கும் முகமை வேறுவேறாக இருத்தல் ஆகிய நோக்கங்களுக்காக வங்கிகள் மூலம் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.



- 2012–13ம் ஆண்டில் முதற்கட்டமாக, 385 கிராம ஊராட்சிகளில் (அதாவது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஊராட்சி வீதம்) வங்கி மூலம் ஊதியம் வழங்கும் முறை சோதனை முறையில் மேற்கொள்ளப்பட்டது. 2012–13ம் ஆண்டின் இறுதியில் 6,480 ஊராட்சிகளில் வங்கி மூலம் ஊதியம் வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

**4.1.7.1 மின்னணு நிதி மேலாண்மை முறை மூலம் ஊதியம் வழங்குதல் (Electronic Fund Management System)**

வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படாமலிருப்பதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு 2013–14 முதல் மின்னணு நிதி மேலாண்மை முறை மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது.

மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) என்பது மாநில அளவில் நிர்வகிக்கப்படும் வங்கி கணக்கிலிருந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதாகும்.

மின்னணு நிதி மேலாண்மை முறை (eFMS) காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை

சேர்ந்த 4 கிராம ஊராட்சிகளில் சோதனை முறையில் 17.06.2013 நடத்தப்பட்டது.

தற்போது மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் இம்முறை செயல்படுத்தப்படுகிறது.

### 4.1.8. 2014–15ம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ள புதிய முயற்சிகள்

- 2014–15ம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த கீழ்க்கண்ட புதிய முயற்சிகள் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:
  - ➢ ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் போன்றவற்றை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருமுகப்படுத்தி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் திறன்சாராபணிகளுக்கான ஊதியக் கூறினை மேற்கொள்ளுதல்.
  - ➢ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் திருத்திய அறிவிக்கை–1 பத்தி 4 (1)ல் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.



➢ *<u>பொது உட்கட்டமைப்பு வசதிகள்</u>*

- கிராம ஊராட்சிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல்
- மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்
- அங்கன்வாடி மையங்கள்
- உணவுதானிய இருப்பு கிட்டங்கி அமைப்புகளை கட்டுதல்
- இயற்கை உரங்கள் மற்றும் அறுவடைக்கு பின்னர் விவசாய உற்பத்தி பொருட்களை சேமித்து வைப்பதற்கான நிலையான உட்கட்டமைப்புகள் உருவாக்குதல்
- சுயஉதவிக் குழுக்கள் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பணிமனைகள்
- விளையாட்டுத் திடல்களை அமைத்தல்
- புயல் நிவாரண இல்லங்களை கட்டுதல்
- கிராம சந்தைகள் கட்டுதல்
- சுடுகாடுகளை கட்டுதல்
- பள்ளிக் கழிப்பிடங்கள்
- அங்கன்வாடி கழிப்பிடங்கள்

➢ *<u>தனிநபர் உட்கட்டமைப்பு வசதிகள்</u>*

- கோழிக் கொட்டகை
- ஆட்டுக் கொட்டகை
- மாட்டுக் கொட்டகை
- கால்நடைகளுக்கான தண்ணீர் தொட்டி

மத்திய அரசு தெரிவித்துள்ளபடி, தகவல், கல்வி தொடர்பின் (IEC) ஒரு அங்கமாக ஒளி / ஒலி ஊடகங்கள் மற்றும் திட்ட வழிகாட்டி நெறிமுறைகள், பணி விவரம், பணி செய்யவேண்டிய அளவு போன்றவை குறித்த தகவல் பலகைகள் ஊராட்சி / குக்கிராமங்கள் / பணித்தளங்களில் நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு தொடர்பு முறைகள் செயல்படுத்தப்படும். இதனால், தொழிலாளர்கள் திட்டம் குறித்த விழிப்புணர்வு, பணி குறித்த கடமைகள் மற்றும் உரிமைகளையும் தெரிந்துகொள்வார்கள்.

**4.1. 9. சமூக தணிக்கை**

**4.1. 9.1. சமூக தணிக்கை**

அலுவலர்களோ, வெளி அமைப்புகளோ அல்லாது பொது மக்களே செய்யும் தணிக்கை சமூக தணிக்கை ஆகும். நிதி செலவினம் மட்டுமல்லாது, திட்டத்தின் செயல்முறை மற்றும் சமூக ஏற்ற தாழ்வு, பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்தும் ஆய்வு செய்வது சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கை ஒரு தகவல்



பரிமாற்றம் மற்றும் கல்விக்கான கருவி, வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை அமல்படுத்த உதவும். சமூக தணிக்கை வளர்ச்சித் திட்டங்களில் எல்லா நிலைகளிலும் (திட்டமிடுதல், வடிவமைத்தல், அமல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்), மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்த உதவும். சமூக தணிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்த காரணத்தினால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தில், கிராம சபை ஆறு மாதத்திற்கொருமுறை சமூக தணிக்கை செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட தணிக்கை விதிகள் 2011, சமூக தணிக்கையை சீராக செய்வதற்கான நடைமுறைகளை நிர்ணயித்துள்ளது.

**4.1.9.2. தோற்றுவித்தல்**

1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தணிக்கை விதிகள் 2011ன் அடிப்படையில் தமிழக அரசாணை (நிலை) எண். 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 27.7.2012ன்படி, சுதந்திரமாக செயல்படக்கூடிய சமூக தணிக்கை அலகு ஒன்று உருவாக்க உத்திரவிடப்பட்டது. அலகிற்குத் தேவையான அலுவலர்கள் மற்றும் அவர்களின் பொறுப்புகளையும் அரசு நிர்ணயம் செய்துள்ளது.
2. சமூக தணிக்கை அலகில், ஒரு இயக்குநர் (கூடுதல் இயக்குநர் அளவில்), இரு இணை இயக்குநர்கள் மற்றும் ஒரு உதவி இயக்குநர் பணியில் உள்ளனர்.

3. தமிழக அரசு, அரசாணை (நிலை) எண்.125, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 21.12.2012–ல் தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் உருவாக்கிடவும் மற்றும் அதற்கான உப விதிகளுக்கு ஒப்புதல் வழங்கியும் ஆணையிட்டுள்ளது.
4. தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் 9 ஜனவரி 2013ல் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. சமூக தணிக்கை சங்கம் சிறப்பாக செயல்பட, ஒரு சமூக தணிக்கை வல்லுநர் மற்றும் மாநில அளவிலான கண்காணிப்பு நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

19 பிப்ரவரி 2013 அன்று சமூக தணிக்கை சங்கத்தின் ஆளுமைக் குழு கூட்டப்பட்டு, சங்கம் நடைமுறைகளுக்கான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது. ஆளுமைக் குழு 2013–14 ஆம் ஆண்டிற்கு ரூ.54.11 கோடி ஒதுக்கீடு செய்தது.

### 4.1.9.3. சமூக தணிக்கை செயல்முறை

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், கிராம சபை சமூக தணிக்கை செய்வதற்கு உதவியாக 5 கிராம சமூக தணிக்கையாளர்களை தேர்வு செய்து (குறைந்தது 25 நாட்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை செய்தவர்கள் மற்றும் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்), அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். மேற்கண்ட 5 சமூக தணிக்கையாளர்கள் தாங்கள்



குடியிருக்கும் கிராம ஊராட்சி அல்லாது வேறு ஒரு கிராம ஊராட்சியில் சமூக தணிக்கை செய்வதற்கு உதவுவார்கள். அவர்கள் கிராம ஊராட்சி / வட்டார அளவில் உள்ள பதிவேடுகள் மற்றும் இதர ஆவணங்களை சரிபார்ப்பார்கள். பணியிடங்களுக்குச் சென்று அளவீடு செய்து, அளவீட்டு புத்தகத்தில் உள்ள அளவீட்டுடன் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். தொழிலாளர்களின் வீட்டிற்குச் சென்று வருகை பதிவேட்டில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவார்கள். பிறகு சமூக தணிக்கை அறிக்கையினை தயார் செய்து, கிராம சபையில் சமர்ப்பிப்பார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இந்த பணி ஆறு மாதத்திற்கு ஒருமுறை நடைபெறும்.

### 4.1.9.4. பணியாளர் வளம் முகமை மூலம் பணியாளர்கள் தேர்வு

அரசாணை (நிலை) எண்.64 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள் 27.7.2012ல் தெரிவித்துள்ளவாறு, பணியாளர்களை தேர்வு செய்ய, தகுதி பெற்ற ஆர்வமுள்ள பணியாள் வளம் முகமைகளிடமிருந்து நிதி சார்ந்த மற்றும் தொழில் நுட்பம் குறித்த கருத்துரு பெறப்பட்டது. தமிழ்நாடு திறந்த ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998ன்படி கருத்துருக்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, டி அண்டு எம் சர்வீசஸ் கன்சல்டிங் பிரைவேட் லிட், மும்பை (T&M Services Consulting Pvt, Ltd, Mumbai) என்ற நிறுவனம் தேர்வு

செய்யப்பட்டு, அந்நிறுவனத்தின் மூலம் 44 மாவட்ட சமூக தணிக்கை ஒருங்கிணைப்பாளர்கள், 770 வட்டார சமூக தணிக்கை ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் 31 மாவட்ட உதவி பணியாளர்கள் தேர்வு செய்யும் பொறுப்பு அளிக்கப்பட்டது. மொத்தம், 12,984 நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்பட்டு, தமிழகத்தின் 9 நகரங்களில் 8004 நபர்களுக்கு எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. 23.10.2013 மற்றும் 27.10.2013 ஆகிய நாட்களில் நேர்முகத் தேர்வு நடைபெற்ற பின்னர் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தேர்வு பெற்ற நபர்களின் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

#### 4.1. 9. 5. திறன் வளர்த்தல்

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம், சமூக தணிக்கையின் முக்கியத்துவம், அவசியம் மற்றும் நடைமுறை ஆகியவை அனைத்தையும் உள்ளடக்கிய பயிற்சியினை இத்துறை சார்ந்த அனைத்து அலுவலர்கள், கிராம ஊராட்சி தலைவர்கள் மற்றும் கிராம ஊராட்சி செயலாளர்களுக்கு அளித்துள்ளது. இதுவரை 5 பயிற்சி சுற்றுகள் மூலம் 36,828 பங்குதாரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது

இதுவரை 5 பயிற்சி கையேடுகள் (பயிற்சியாளருக்கான பயிற்சிக்காக 2, கிராம ஊராட்சி தலைவர்களுக்காக 1, கிராம ஊராட்சி செயலாளர்களுக்காக 1, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி



துறை அலுவலர்களுக்காக 1) தயாரிக்கப்பட்டு, பயிற்சியில் பங்கு பெற்றவர்களுக்கு அளிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட கிராம ஊராட்சி உறுப்பினர்கள் உள்ளனர். கிராம சமூக தணிக்கையாளர்கள் சுமார் 60000 நபர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் சமூக தணிக்கை குறித்த பயிற்சி அளித்திட ஆளுமைக்குழு தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்த அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாடு வெளிப்படை ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998ன்படி தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தேர்வு செய்யும் பணி விரைவில் முடிக்கப்படும்.

#### 4.1.9.6. மாதிரி சமூக தணிக்கை

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் இதுவரை 19 மாவட்டங்களில், 19 மாதிரி சமூக தணிக்கைகள் மேற்கொண்டு முக்கிய குறைபாடுகளினை கண்டறிந்து, அமல்படுத்தும் முகமைகளுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவித்துள்ளது. இது போன்ற சமூக தணிக்கைகளின் விளைவாக, தொழிலாளர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டுள்ளது. மேலும், திட்டம் பற்றிய விழிப்புணர்ச்சி அதிகரித்துள்ளது. வேலைக்கான அளவீடு மேம்பாடு செய்யப்பட்டு, சொத்துக்களின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. பணித்தள மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இணைய தளத்தில் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத ஆவணங்கள் மற்றும்

பதிவேடுகளின் பராமரிப்பு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி அளவில் பணியிட வசதிகள் அளிக்க நிர்வாக செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலைக்கான கூலி வழங்குவதில் ஏற்படும் தாமதம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. கூடுதல் பொறியியல் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அலுவலர்கள் மத்தியில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையின் அவசியம் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சமுக தணிக்கை சங்கத்திற்காக தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு (44 மாவட்ட சமுக தணிக்கை ஒருங்கிணைப்பாளர்கள், 770 வட்டார சமூக தணிக்கை ஒருங்கிணைப்பாளர்கள், 31 மாவட்ட உதவி பணியாளர்கள்) விரிவான பயிற்சி அளிக்கப்பட்டு, எல்லா கிராம ஊராட்சிகளிலும் சமூக தணிக்கை பணிகள் துவங்கப்படும். சமூக தணிக்கை பணிகளுக்காக 2014–15ம் ஆண்டிற்கான மதிப்பீடு **ரூ.46.84 கோடி** ஆகும்.

### 4.2 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு அங்கமாக இருந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் (Indira Awass Yojana) ஒரு மத்திய அரசு திட்டமாகும். இத்திட்டம் 1997–98 ஆண்டு முதல் தனித்திட்டமாக உருவாகியது. கிராமப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும், வீடில்லாத ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித்தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள், தேர்வு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்திற்கான ஒரு நிதியாண்டின் மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 60 விழுக்காடு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு (SC/ST) புதிய வீடுகள் மற்றும் கச்சா வீடுகளை மேம்பாடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக 40 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மேற்கண்ட இனங்களில் 3 விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு ஒதுக்கப்படுகிறது. மொத்த வீடுகளில் 15 விழுக்காட்டினை சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 75:25 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2011–12 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒரு வீட்டுக்கான அலகுத்தொகை ரூ.45,000/– ஆக இருந்தது. இதில் மத்திய

அரசின் பங்குத்தொகை ரூ.33,750/– ஆகவும், மாநில அரசின் பங்குத்தொகை ரூ.11,250/– ஆகவும் இருந்தது. கான்கிரீட் கூரை அமைப்பதற்காக மாநில அரசு கூடுதல் நிதியாக ரூ.55,000/– வழங்கி, ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.1 இலட்சமாக இருந்தது. அதன்படி, தமிழ்நாட்டில் இந்திரா நினைவுக்குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒரு வீட்டிற்கான அலகுத்தொகை 2011–12 மற்றும் 2012–13 ஆண்டுகளில் ரூ.1 இலட்சமாக இருந்தது. இதில் மாநில அரசின் பங்குத்தொகை மட்டும் ரூ.66,250/– (66.25%), மத்திய அரசின் பங்குத்தொகை ரூ.33,750/– (33.75%) ஆகும். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் அலகுத்தொகையினை மத்திய அரசு 2013–14ம் ஆண்டு முதல் ரூ.45,000/–லிருந்து ரூ.70,000/– ஆக உயர்த்தியுள்ளது. **அதன்படி தமிழக அரசும் கான்கிரீட் கூரை அமைப்பதற்கான தொகை ரூ.50,000–ஐயும் சேர்த்து இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வீட்டிற்கான அலகுத் தொகையினை அரசு ஆணை எண். 99 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை நாள் 2.8.2013 மூலம் ரூ. 1.20 லட்சமாக உயர்த்தியுள்ளது.** எனவே 2013–14 –ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட வீட்டின் அலகுத் தொகை ரூ.1.20 லட்சம் ஆகும். இதில் மாநில அரசின் பங்கு தொகை ரூ.67,500 (56.25%) மற்றும் மத்திய அரசின் பங்கு ரூ.52,500 (43.75%). இருப்பினும் மத்திய அரசின் அலகுத் தொகை தமிழக அரசு பின்பற்றும் அலகுத் தொகையை விட குறைவாகவே உள்ளது. 2013–14 ஆம்



ஆண்டில், 88,436 வீடுகள் ரூ. 1061.23 கோடி மதிப்பீட்டில் கட்ட எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் வழக்கமான ஒதுக்கீட்டிற்கு கூடுதலாக, சிறப்பு திட்டத்தின் கீழ் 34,380 வீடுகள் ரூ.412.56 கோடி ஒதுக்கீட்டில் கடலூர் (22,707) மற்றும் விழுப்புரம் (11,673) மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2014–15 ஆம் ஆண்டில் ரூ. 641.15 கோடி மதிப்பீட்டில் 53,429 வீடுகள் கட்டப்படும். ரூ.15,000 மதிப்பிற்கான 90 மனித நாட்களை வழங்குவதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தை ஒருங்கிணைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.3. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஏற்கெனவே பல்வேறு மாநிலத் திட்டங்கள் மற்றும் மத்திய திட்டங்களால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியினை நிரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய அரசு, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியினை ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக 2011–12–ம் ஆண்டு முதல் உயர்த்தியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி

மற்றும் ஊராட்சிகள் துறையே தொடர்பு துறை ஆகும். தமிழ்நாட்டில் 39 மக்களவை உறுப்பினர் தொகுதிகளுக்கும், 19 மாநிலங்களவை உறுப்பினர் தொகுதிகளுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிர்வாக செலவினங்களுக்காக மொத்த ஒதுக்கீட்டில் வழங்கப்பட்ட தொகை 0.5 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக 2011–12ம் ஆண்டு முதல் உயர்த்தியுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும் மேலும் தடை செய்யப்பட்ட பணிகள் குறித்து வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற பணிகள் பராமரிப்பு பணிகளாக கருதப்பட்டு இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய இயலாது.

இத்திட்டத்தின் கீழ் 2013–14–ம் ஆண்டில் ரூ.295 கோடி ஒதுக்கீட்டில் மொத்தம் ரூ.253.90 கோடி மதிப்பீட்டில் 5,401 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.



**அட்டவணை.4.3.1**

**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி 2013–14–ம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணிகள் விபரம்**

| வ.எண். | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில் ) |
|---|---|---|---|
| 1 | கட்டிடங்கள் | 1066 | 78.77 |
| 2 | சமுதாய மேம்பாடு மற்றும் நீர்பாசன பணிகள் | 874 | 53.15 |
| 3 | உபகரணங்கள் | 772 | 29.00 |
| 4 | சாலைகள் | 1579 | 72.95 |
| 5 | கதிரடிக்கும் களம் | 51 | 0.92 |
| 6 | குடிநீர் வழங்கல் | 1233 | 30.78 |
| | **மொத்தம்** | **5575** | **265.57** |

### 4.4. நிர்மல் பாரத் அபியான்

ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி, திறந்தவெளி மலம் கழித்தலை அடியோடு ஒழிப்பதை உறுதி செய்யும் பொருட்டு மத்திய அரசால் “முழு சுகாதார இயக்கம்” என்ற திட்டம் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஊரக சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அனைத்து வீடுகளுக்கும் சுகாதார வசதிகள் மற்றும் சுகாதாரப் பழக்கங்களில் முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தேவையின் அடிப்படையிலும், மக்களை மையப்படுத்தியும் ஊரக ஏழைக் குடும்பங்கள் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு இத்திட்டம் ஊக்கம் அளிக்கிறது. ஊராட்சி அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்

மற்றும் சமூக அமைப்புகளை ஈடுபடுத்தி, தகவல், கல்வி மற்றும் தொடர்பு, திறன் வளர்த்தல் மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவற்றைச் செம்மையாக அளிப்பதன் மூலம் ஊரக மக்களின் செயல்பாடுகளில் மாற்றம் கொண்டுவருவதை முழு சுகாதார இயக்கம் வலியுறுத்துகிறது.

முழு சுகாதார இயக்கம் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, முதலில் கடலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் பின்னர் 2004 ஆம் ஆண்டுக்குள் அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

### 4.4.1. திட்டத்தின் முக்கியக் கூறுகள்

இத்திட்டமானது, மத்திய அரசால் "நிர்மல் பாரத் அபியான்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் 1.4.2012 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு :

- சுகாதார மேம்பாட்டின் செயல்பாடுகளை விரைவுபடுத்தி நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளையும் தூய்மை கிராமங்களாக மாற்றி, 2022ம் ஆண்டுக்குள் திறந்த வெளி மலம் கழிக்கும் பழக்கமற்ற நாடாக மாற்றுதல்.
- இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் மட்டுமல்லாமல் வறுமை



கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், வீடு உள்ள ஆனால் நிலமற்ற விவசாய உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் தலைமையில் செயல்படும் குடும்பங்கள் ஆகியோர் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கான மானியம் பெறுவதற்குத் தகுதியுடையவராவர்.

- தனிநபர் கழிப்பறை கட்டுவதற்கான மானியத் தொகை ரூ.3,200/—லிருந்து ரூ.4,600/-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. (கடினமான மற்றும் மலைப் பிரதேசங்களுக்கு ரூ.5,100/—). இதில் மத்திய அரசின் பங்கு ரூ.3,200/— ஆகும். (கடினமான மற்றும் மலைப் பிரதேசங்களுக்கு மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.3,700/—). மாநில அரசின் பங்கு ரூ.1,400/— ஆகும். பயனாளியின் குறைந்தபட்ச பங்கு ரூ.900/— ஆகும். மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட மாநில அரசின் பங்குத்தொகை ரூ.1,400/-வுடன் தமிழ்நாடு அரசு ரூ.1,100/— கூடுதலாக வழங்குகிறது.
- அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின் கீழ் ஊரக பகுதிகளில் முறையான சுகாதார வசதிகள் பெறாது விடுபட்டுள்ள அரசுப் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை செய்து தருதல்,

மாணவர்களிடம் சுகாதார பழக்கங்களை வளர்த்தல் மற்றும் சுகாதார கல்வி வளர்ச்சிக்கு தேவையான முன்னேற்றம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஏற்றவாறு இணைந்து செயல்பட வழிவகுப்பதுடன், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தனிநபர் இல்லக் கழிப்பறைக்கும் ரூ.4,500 உதவித் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- சுகாதார வசதிகளை பெருக்குவதற்கு பயனாளிகளுக்கு தரப்படும் மானிய வசதிகளை, இதுவரை கழிப்பறை வசதி பெறாத இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் அனைத்து வீடுகளும் மற்றும் இதர மாநில வீட்டு வசதி குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளும் பெற தகுதியானவை.
- திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை பணிகளானது ஏற்கனவே நிர்மல் கிராம புரஸ்கார் விருது பெற்ற மற்றும் விருதிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள ஊராட்சிகளில் மேற்கொள்ளலாம். நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை பணிகளுக்கான நிதியுதவி கிராம ஊராட்களில் உள்ள மொத்த குடியிருப்பு வீடுகளின் அடிப்படையில் அதிகபட்சமாக



கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படும் :

- ✓ 150 குடும்பங்கள் வரை உள்ள கிராம ஊராட்சிகளுக்கு ரூ.7 லட்சம்
- ✓ 300 குடும்பங்கள் வரை உள்ள கிராம ஊராட்சிகளுக்கு ரூ.12 லட்சம்
- ✓ 500 குடும்பங்கள் வரை உள்ள கிராம ஊராட்சிகளுக்கு ரூ.15 லட்சம் மற்றும்
- ✓ 500 குடும்பங்களுக்கு மேல் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு ரூ.20 லட்சம்.

<u>அட்டவணை 4.4.1</u>

**மத்திய, மாநில மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகைக்கான பங்கீட்டு விவரம் பின்வருமாறு:-**

| வ. எண் | கூறுகள் | மத்திய அரசு | மாநில அரசு | பயனாளி யின் பங்குத் தொகை | மொத்த அலகுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | தனிநபர் இல்லக் கழிப்பறை | 3,200* (ம.கா. தே.ஊ.வே.உ.திட்டத்தின் கீழ் நிதி உதவி ரூ.4,500/–) | 2,500** | 900 | 6,600 (ம.கா. தே.ஊ வே.உ. திட்ட நிதி உதவியுடன் சேர்த்து ரூ.11,100/–) |
| 2 | பள்ளிக் கழிப்பறை | 24,500 (70%) | 10,500 (30%) | –– | 35,000 |
| 3 | அங்கன்வாடி கழிப்பறை | 5,600 (70%) | 2,400 (30%) | –– | 8,000 |
| 4 | சுகாதார வளாகங்கள் | 1,20,000 (60%) | 60,000 (30%) | 20,000 (10%) | 2,00,000 |
| 5 | திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை | 70% | 30% | –– | |

* கடினமான மற்றும் மலைப் பிரதேசங்களுக்கு மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.3,700/–

**மாநில அரசின், கூடுதல் பங்குத்தொகை ரூ.1,100 சேர்ந்தது.



### 4.4.2. தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் திட்டத்தை செயல்படுத்துதல்.

தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் வேலைகள் பின்வரும் இரு முறையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன:

அ. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துடன் இணைந்து தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுதல்.

ஆ. தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தனியாக செயல்படுத்துதல்.

**அ. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்து சுகாதாரப் பணிகளை செயல்படுத்துதல்.**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் சுகாதார வசதிகள் ஏற்படுத்தும் வேலைகளை மேற்கொள்வது தொடர்பாக ஜுன் மற்றும் செப்டம்பர் 2012ல் மத்திய அரசு விரிவான நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

தமிழக ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, தனி நபர் இல்லக்கழிப்பறை கட்டுதல் மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டப்பணிகளை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் நிர்மல் பாரத் அபியான் திட்டம் இரண்டினையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த

அனுமதித்து அரசாணை(நிலை) எண்.121, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.1)த் துறை நாள் 28.11.2012–ல் அரசு ஆணையிட்டுள்ளது. விரிவான வழிகாட்டி நெறிமுறைகளை இத்துறையின் இணையதளத்திலிருந்து (www.tnrd.gov.in) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். (மேலும் விவரங்களுக்கு பகுதி 4.1.6.1 அ–வை காணவும்).

2013–14ம் ஆண்டில் 3,13,402 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 2014–15ம் ஆண்டில் ரூ.854.62 கோடி நிதி ஒதுக்கீட்டில் 7,69,923 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் நிர்மல் பாரத் அபியான் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து கட்டப்படும்.

**ஆ. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தனியாக தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டும் திட்டம்.**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் அட்டவணை I-ஐ திருத்தம் செய்து, மத்திய அரசு 20.12.2013ல் வெளியிட்ட அறிவிப்பின்படி பயனாளி விருப்பப்படி நிர்மல் பாரத் அபியான் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்தோ அல்லது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தனியாகவோ ரூ10,000/– மதிப்பீட்டில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணி மேற்கொள்ளலாம். தமிழ்நாடு அரசாணை எண். 32, ஊரக



வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி 1)த் துறை, நாள் 3.3.2014ல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டிக் கொள்வதற்கான விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. (மேலும் விவரங்களுக்கு 4.1.6.1.ஆ–வை காணவும்).

2014-15ல், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் 10 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்படும்.

**4.4.3. நிறுவனக் கழிப்பறைகள்**

மாணவர்கள், புதிய சிந்தனைகளை உடன் ஏற்றுக்கொள்ளும் திறன் கொண்டவர்களாதலால் திறந்தவெளி மலம் கழித்தலைத் தவிர்த்துக் கழிப்பறைகள் உபயோகிப்பதைக் கல்வி மற்றும் ஊக்கப்படுத்துதல் மூலம் அவர்களின் எண்ணங்கள் மற்றும் நடவடிக்கைகளை மாற்றுவதில் பள்ளிகளும், அங்கன்வாடிகளும் சிறந்த பங்கு வகிக்கின்றன. ஆசிரியர்கள் கற்பிக்கும் சுகாதாரக் கல்வி மற்றும் கழிப்பறைகளை உபயோகிப்பதால் கிடைக்கும் அனுபவம் ஆகியவை மாணவர்கள் மூலம் வீடுகளை அடைந்து அதன் மூலம் பெற்றோர்கள் சுகாதாரப் பழக்கங்களைக் கடைபிடிக்க ஏதுவாகும். எனவே, நிர்மல் பாரத் அபியான் திட்டத்தில் பள்ளி சுகாதாரம் மற்றும் அங்கன்வாடி கழிவறைகள் ஒருங்கிணைத்த பகுதியாக செயல்படுத்தப்படுகிறது.

#### 4.4.3.1. பள்ளிக் கழிப்பறைகள்

பள்ளிக் கழிப்பறைகள், ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என அனைத்து வகையான அரசுப் பள்ளிகளில் இத்திட்டத்தின் மூலம் கழிப்பறைகள் கட்டப்படுகின்றன. நிர்மல் பாரத் அபியான் திட்டத்தில் பள்ளி சுகாதாரத்திற்கான மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி 70:30 என்ற விகிதத்தில் அளிக்கப்படுகிறது.

இதுவரை 50,078 பள்ளிக் கழிப்பறைகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தருவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது.

சுகாதாரம் மற்றும் சுகாதாரக் கல்வி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பள்ளிக் கல்வித்துறையுடன் ஒருங்கிணைந்து பள்ளிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. பள்ளிக் கல்வித் துறையினரால் அளிக்கப்பட்ட பட்டியலில் இருந்த பள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டு கழிப்பறைகள் இல்லாத 2,057 பள்ளிகளிலும் கழிப்பறை வசதி ஏற்படுத்த உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, கழிப்பறை கட்டித்தரப் பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் கழிப்பறைகளும் அமைக்கப்படுகின்றன.



#### 4.4.3.2. அங்கன்வாடி கழிப்பறைகள்

இளவயதிலேயே சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் அங்கன்வாடிக் கழிப்பறைகளை குழந்தைகள் பயன்படுத்தச் செய்வதன் மூலம் அவர்களிடையே ஒரு பெரிய மன மாற்றத்தை ஏற்படுத்த அடித்தளமாக அமையும். மேலும் குழந்தைகளின் தாய்மார்களுக்கும் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்த இது வழிவகுக்கும். ஒவ்வொரு அங்கன்வாடியிலும் குழந்தைகள் நேய கழிப்பறைகள் அமைக்கப்படுகின்றன. அங்கன்வாடிகளில் கழிப்பறை அமைப்பதற்கான நிதியை மத்திய அரசு மற்றும் மாநில அரசு 70:30 என்ற விகிதத்தில் அளிக்கப்படுகிறது

முழு சுகாதாரத் திட்டம் / பாரத் நிர்மல் அபியான் திட்டம் துவங்கப்பட்ட நாளில் இருந்து தமிழ்நாட்டில் இதுவரை 28,386 அங்கன்வாடிக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது. மேலும், அங்கன்வாடி மையங்களில் 2012ல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி கழிப்பறைகள் இல்லாத / செயல்பாட்டில் இல்லாத அரசு கட்டடங்களில் செயல்படும் 13,344 அங்கன்வாடி மையங்கள் கண்டறியப்பட்டு, ரூ.22.36 கோடி தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்திலும் கழிப்பறை வசதி செய்து தரப்பட்டுள்ளன.

### 4.4.4. சமூக சுகாதார வளாகங்கள்

சமூக சுகாதார வளாகங்கள் கட்டுதல் முழு சுகாதார இயக்கத்தில் ஒரு முக்கிய கூறாகும். சமூக சுகாதார

வளாகங்கள் கிராமத்தில் பயன்படுத்துவோர் ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் எளிதில் அணுகக்கூடிய இடத்தில் அமைக்கப்படுகின்றன. இவ்வளாகங்களை, கிராம ஊராட்சிகள் மற்றும் பயன்படுத்துவோர் முறையாகப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும் அல்லது அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாயப் பங்குத் தொகை 60:30:10 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. கிராம ஊராட்சியும், சமுதாயப் பங்களிப்பை அளிக்கலாம். இதுவரை **1,804** வளாகங்கள் ரூ.**36.02** கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

**4.4.5. ஊரக சுகாதார அங்காடிகள்**

ஊரக சுகாதார அங்காடிகள், சமூக நோக்குடன் உள்ள வர்த்தகச் செயல்பாட்டு அமைப்பு ஆகும். சுகாதார வளாகங்கள் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள தனி நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு கழிப்பறை கட்டத் தேவையான பொருட்களை வழங்குவதே ஊரக சுகாதார அங்காடிகளின் நோக்கமாகும். சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கேற்ற தொழில்நுட்பம் மற்றும் நிதி வசதிகளுக்கு ஏற்பக் கட்டப்படும் பல்வேறு விதமான கழிப்பிடங்களுக்கான பொருட்கள், அவை சார்ந்த சேவை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை இதன் குறிக்கோளாகும். இந்த அங்காடிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக்



குழுக்கள், மகளிர் நிறுவனங்கள், ஊராட்சி அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளால் துவக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்திலுள்ள **31** மாவட்டங்களில், **195** அங்காடிகள் ரூ.**2.93** கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

**4.4.6. உற்பத்தி மையங்கள்**

குறைந்த செலவில், தரமான கட்டுமானப் பொருட்களின் உற்பத்தியை பெருக்குவதற்கு இந்த உற்பத்தி மையங்கள் உதவி புரிகின்றன. ஒவ்வொரு மையத்தினை அமைப்பதற்கும் கொத்தனார் பயிற்சி வழங்குவதற்கும் சுழல் நிதியாக அதிகபட்சம் ரூ.**3.50** இலட்சம் வழங்கப்படுகிறது. இதுவரை, ரூ. **65** இலட்சம் செலவில் **65** உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**4.4.7. நிர்மல் கிராம புரஸ்கார் விருது**

சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், நாட்டிலேயே முதன் முறையாக ஜுலை **2003**–ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ‘‘தூய்மையான கிராம இயக்கம்‘‘ என்ற விருது, சுகாதார திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து, மத்திய அரசாலும், முழு சுகாதார இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் நிர்மல் கிராம புரஸ்கார் விருது **2005**–ம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது தங்கள் பகுதிகளில் முழு

சுகாதாரத்தை எய்தும் கிராம ஊராட்சிகளுக்கும் இதர அமைப்புகளுக்கும் ஒரு அங்கீகாரமாகத் திகழ்கிறது.

### 4.4.7.1. நிர்மல் கிராம புரஸ்காரின் இலக்குகள்

1. சமூக மற்றும் அரசியல் தொடர்புகளை ஏற்படுத்தி இந்தியாவில் உள்ள ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதியினை மேம்படுத்தி வளர்ச்சி பெறச் செய்தல்.
2. திறந்தவெளியில் மலம் கழித்தலைத் தடுத்தலும் தூய்மையான கிராமத்தை உருவாக்குதலும்.
3. முழுமையான சுகாதார நிலையினை எய்த ஊராட்சி அமைப்புகள் மேற்கொண்ட நிலைத்த முயற்சிகளுக்கு ஊக்கத் தொகை அளித்தல் .
4. முழு சுகாதாரத்தை எய்த பாடுபடும் அமைப்புகளை அங்கீகரிப்பதன் மூலம் சமூக ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

நிர்மல் கிராம புரஸ்கார் விருதுக்கான மானிய தொகையானது, மக்கள் தொகைக்கேற்ப கிராம ஊராட்சிக்கு ரூ.50,000/–ல் இருந்து ரூ.5.00 இலட்சம் வரையும், வட்டார ஊராட்சிக்கு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சம் வரையும் வழங்கப்படுகிறது.

2011 வரை தமிழ்நாட்டில் 5 வட்டார ஊராட்சிகள் மற்றும் 2,385 கிராம ஊராட்சிகள் சுகாதாரம் மற்றும் முழுமையான தூய்மைக்காக இவ்விருதினைப் பெற்றுள்ளன. டிசம்பர் 2012ல் இந்திய அரசால் நிர்மல் கிராம புரஸ்கார்



தொடர்பாக புதிதாக வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, 2012 ஆம் ஆண்டு முதல் நிர்மல் கிராம புரஸ்கார் விருதுக்கான கிராம ஊராட்சிகளை மாநில அரசாலும், வட்டார மற்றும் மாவட்ட ஊராட்சிகளை மத்திய அரசாலும் தேர்வு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013ம் ஆண்டு இந்த விருதுக்காக மாவட்ட அளவிலான குழுவினால் கள ஆய்வு செய்யப்பட்டு தகுதியான 104 கிராம ஊராட்சிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட கிராம ஊராட்சிகளை மத்திய அரசு மாதிரி ஆய்வு செய்த பின்னர், இறுதியான தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளின் பட்டியல் அறிவிக்கப்படும்.

### 4.5. பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி

தமிழகத்தில் பின்தங்கிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட தேசிய வளர்ச்சி மற்றும் புனரமைப்புத் திட்டம் (Rashtriya Sam Vikas Yojana) மத்திய திட்டக் குழுவிலிருந்து மத்திய ஊராட்சி அமைச்சகத்திற்கு மாற்றப்பட்டது. ஊராட்சி அமைச்சகம் இத்திட்டத்தைப் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி (Backward Regions Grant Fund) என மாற்றியமைத்தது. இத்திட்டம், தற்போது தமிழ்நாட்டில் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும்

சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

### 4.5.1. நோக்கங்கள்

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளர்ச்சியில் பல்வேறு பகுதிகளில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்காக உருவாக்கப்பட்டதே பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி ஆகும். தற்போதுள்ள திட்டங்களின் செயல்பாடுகளால் வளர்ச்சியில் முழுமை பெறாத பகுதிகளுக்கு ஏற்றவாறு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை மேம்படுத்துதல், அவற்றுக்கு ஒப்படைக்கப்பட்ட முக்கியக் கடமைகளை நிறைவேற்றுதலில் திறனை மேம்படுத்த உதவுதல் மற்றும் வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வுகளைக் களைதல் ஆகியவை இத்திட்டம் மையப்படுத்தப்படுகிறது.

### 4.5.2. இத்திட்டத்தின் கீழ் இரு வழிகளில் நிதி அளிக்கப்படுகிறது.

**1. மேம்பாட்டு நிதி**

ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் பகுதிகளில் உள்ள அடிப்படை வசதிகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் களையும் விதமாக மக்களோடு இணைந்து திட்டமிடல் வாயிலாக



ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் வரையறுக்கப்படாத மானியத்தை வழங்குதல்.

**2. திறன் வளர்ச்சி நிதி**

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குப் பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படையான தன்மையை ஏற்படுத்தும் வகையில் திட்டமிடல், செயலாக்கம், கண்காணித்தல், கணக்குகளைப் பராமரித்தல் ஆகியவற்றில் அவர்களின் திறனை மேம்படுத்தப் பயிற்சி அளித்தல்.

பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மான்ய நிதியில் வளர்ச்சி மானியமாக 2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டுகளில் 6 மாவட்டங்களுக்குக் கீழ்க்கண்டவாறு மத்திய அரசால் ஒப்பதலளிக்கப்பட்டுள்ளது.

<u>**அட்டவணை 4.5.1**</u>

**2012–13 மற்றும் 2013–14 ஆம் ஆண்டுகளுக்கான பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான நிதி ஒதுக்கீடு.**

**(ரூ.கோடியில்)**

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | 2012–13 | 2013–14 |
|---|---|---|---|
| 1 | கடலூர் | 19.33 | 23.71 |
| 2 | விழுப்புரம் | 24.10 | 29.53 |
| 3 | திருவண்ணாமலை | 21.14 | 25.92 |
| 4 | திண்டுக்கல் | 20.46 | 25.09 |
| 5 | நாகப்பட்டினம் | 16.08 | 19.73 |
| 6 | சிவகங்கை | 16.63 | 20.40 |
| | **மொத்தம்** | **117.75** | **144.41** |

2012–13ம் நிதி ஆண்டில் 4,586 பணிகள் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. அதேபோல், 2013–14ஆம் ஆண்டில் 2,792 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஊரக மற்றும் நகர் பகுதிகளில் அடிப்படை வசதிகளான அங்கன்வாடி கட்டிடங்கள், சுய உதவிக்குழு கட்டிடங்கள், துணை சுகாதார கட்டிடங்கள், பொது விநியோக கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், பயணியர் நிழற்கூடங்கள், தார்சாலைகள், பாலங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2014–15 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.130.49 கோடி என மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியான நிதி ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 4.5.2**

**மாவட்ட வாரியான நிதி ஒதுக்கீடு விவரம்**

| வ. எண். | மாவட்டம் | நிதி ஒதுக்கீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | கடலூர் | 21.42 |
| 2 | விழுப்புரம் | 26.71 |
| 3 | திருவண்ணாமலை | 23.42 |
| 4 | திண்டுக்கல் | 22.68 |
| 5 | நாகப்பட்டினம் | 17.83 |
| 6 | சிவகங்கை | 18.43 |
| | **மொத்தம்** | **130.49** |



## 4.6. தேசிய கரிமவாயு மேலாண்மைத் திட்டம்

இயற்கை கழிவுகளை சக்தியாக மாற்றம் செய்து முழுமையாக பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டம் 100 சதவீதம் மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது. மலைப்பாங்கான இடங்களில் ரூ.10,000/–க்கும் இதர இடங்களில் ரூ.8,000/–க்கும் கரிம வாயு கலன்கள் அமைக்கப்படுகின்றன. கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்களுக்கு ரூ.9,000/– மானியம் ஆகும்.

2013–14–ம் நிதி ஆண்டில் 1100 கரிம வாயு கலன்கள் அமைத்திட செயல்திறன் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, 440 கலன்கள் முடிக்கப்பட்டுள்ளது மற்றும் 10 சதவீதம் முதல் 20 சதவீதம் இலக்கு ஒன்று அல்லது இரண்டு தொகுப்பு கிராமங்களில் செயல்படுத்தப்படும்.

## 4.7. சமூக பொருளாதார மற்றும் சாதி கணக்கெடுப்பு

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மூலமாக சமூக பொருளாதார சாதி கணக்கெடுப்பு 2011–ஐ இந்திய அரசு துவக்கியுள்ளது. இக்கணக்கெடுப்பின் மூலம் ஊரக மற்றும் நகர்புறத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் அனைத்து குடும்பங்களும் கண்டறியப்படும். சாதி மற்றும் மதம் தொடர்பான அனைத்து புள்ளி விவரங்களும் இக்கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்டாலும் சாதி, மதம் தொடர்பான விவரங்கள் மட்டும் பொதுமக்கள் பார்வைக்கு

அல்லாமல், இந்திய அரசின் பொது பதிவாளரால் சமூக பொருளாதார புள்ளி விவரங்கள் தொகுப்பது தொடர்பான பயன்பாட்டிற்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்படும்.

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் நிதியினைக் கொண்டு மாநில நிர்வாகத்தின் மூலம் இக்கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பு பணியானது, விவரங்கள் எழுத்துப்பூர்வமாக பதியப்படாமல் பெங்களூரிலுள்ள மத்திய அரசின் நிறுவனமான பாரத மின்னணு நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட கைக்கணினியில் நேரடியாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்ட கணக்கெடுப்பாளர்களுக்கு, கணக்கெடுப்பு பகுதி வாரியான வீட்டுப் பட்டியல் சுருக்கம் மற்றும் கள வரைபடம் ஆகியவை மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்ககம் வழங்கியுள்ளது. தேசிய மக்கள் தொகை பதிவேட்டில் சேகரிக்கப்பட்டுள்ள வீட்டு விவர பட்டியல் இலக்கைக் கணினிகளில் கணக்கெடுப்பு தொடங்குவதற்கு முன் பதிவு செய்யப்பட்டன. மாநில அரசால் நியமிக்கப்பட்ட கணக்கெடுப்பாளர் மற்றும் பாரத மின்னணு நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்ட புள்ளி விவர பதிவாளர் (Data Entry Operator) ஆகியோர் இக்கணக்கெடுப்பு பணியினை களத்தில் ஒருங்கிணைந்து மேற்கொண்டனர். இக்கணக்கெடுப்பு பணிக்கு மாவட்டம் முழுமைக்கும் மாவட்ட ஆட்சியர், முதன்மை சமூக பொருளாதார சாதி



கணக்கெடுப்பு அலுவலராவார். இவரது கண்காணிப்பின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனி நபர் மற்றும் வீடுகளில் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்கள்: தொழில், கல்வி, மாற்றுத்திறன், மதம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவரம் சாதி / பழங்குடியினரின் பெயர், பணி, வருமானம் மற்றும் வருமான ஆதாரம், அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், நுகர்வோர் வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் நிலம். மேலும், மேற்படி கணக்கெடுப்பானது வீட்டு வசதி குறித்த விவரங்கள், பணி விவரங்கள், கல்வி நிலை, வீட்டு உறுப்பினர்களின் மாற்றுத்திறன் மற்றும் நில உடமை விவரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இக்கணக்கெடுப்பில், கணக்கெடுக்கப்படுபவரின் விவரங்கள் அவர் சுயமாக அளிக்கும் விவரங்களை இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வினா படிவத்தில் பதியப்பட்டுள்ளது. குடும்பத் தலைவர் அளிக்கும் விவரங்கள் தவறானவை என கணக்கெடுப்பாளர் கருதும் பட்சத்தில் அவை சரியானவை அல்ல என்று கணக்கெடுப்பாளர் பதிவு செய்த இனங்களில் மேற்பார்வையாளர், மேற்கண்ட வீட்டிற்கு நேரடியாக சென்று தகவல்களின் உண்மைத் தன்மையினை சரிபார்த்துள்ளனர். இதனைத் தொடர்ந்து பெறப்படும் கோரிக்கைகள், மறுப்புகள் மற்றும் அது தொடர்பான முடிவுகள் குறித்து உரிய வழிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சேகரிக்கப்பட்ட தகவல்கள் கிராம சபை கூட்டத்தில் சரிபார்க்கப்பட்டு

ஒப்புதல் பெறப்பட வேண்டும். முதற்கட்டமாக, வரைவு பட்டியல் வெளியிடப்பட்டு அதன் பின்னர் ஊரகப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் 45வது நாள் நிறைவிலும், நகர்ப்புறத்தை பொறுத்தமட்டில் 52வது நாள் நிறைவிலும் இறுதி பட்டியல் வெளியிடப்பட்டு இணைய தளத்தின் வாயிலாகவும் வெளியிடப்படும்.

தமிழ்நாட்டில் இப்பணியினை மேற்கொள்ள மத்திய அரசு ரூ.89.21 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டில், இப்பணி உள்ளாட்சிகளுக்கு நடைபெற்ற சாதாரண தேர்தலுக்கு பின்பு டிசம்பர் 2011ல் தொடங்கப்பெற்று செப்டம்பர் 2012ல் கணக்கெடுப்பு மற்றும் மேற்பார்வையாளரின் சரிபார்ப்பு பணிகள் முடிவடைந்துவிட்டன. நவம்பர் 2012ல் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட மென்பொருள் மூலம் இதற்கென கொடுக்கப்பட்ட கூடுதல் வரைமுறைகளை பின்பற்றி தரவுத் தளத்தில் சரிபார்த்தல் மற்றும் திருத்தம் தொடர்பான பணிகளும் முடிக்கப்பட்டன. தற்போது, மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தெளிவுரைகளின் அடிப்படையில், மென்பொருள்களில் காணப்படும் குறைபாடுகளை நீக்கும் பணிகளையும் வரைவு பட்டியல் (Draft publication files) தயாரிக்கும் பணிகளையும் பாரத மின்னனு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. வரைவுப் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர் கோரிக்கைகள் மற்றும் மறுப்புகள் தொடர்பான பணிகள் தொடங்கப்பட்டு பின்னர் இறுதிப் பட்டியல், குறிப்பிட்ட



காலவரையறைகளின்படி சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் / முதன்மை சமூகப் பொருளாதார சாதி கணக்கெடுப்பு அலுவலரால் வெளியிடப்படும்.

# 5. ஊரக உட்கட்டமைப்பு



## 5. ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்

சுகாதாரம், கல்வி மற்றும் பிற சமூக மற்றும் பொருளாதார சேவைகளை ஊரக சமுதாயத்திற்கு வழங்கிட, நேரடித் தொடர்பு வசதியினை ஏற்படுத்துதல் மிக முக்கியமானதாகும். நேரடித் தொடர்பு வழங்குவதில் சாலைகள் முக்கிய அங்கமாக விளங்குகிறது. ஊரகச் சாலைகள், போக்குவரத்து வலையமைப்பில் பெரும்பாலும் கடைசி இணைப்பாக கருதப்படுகின்றன. இருப்பினும், ஊரகச் சாலைகள்தான் ஊரகப் பகுதி மக்களுக்கு போக்குவரத்து வசதியினை வழங்குவதில் மிக முக்கிய இணைப்பாக உள்ளது. இச்சாலைகளின் நிரந்தர அல்லது பருவகால துண்டிப்பால், அடிப்படை சேவைகளான கல்வி, ஆரம்ப சுகாதாரம், குடிநீர் வசதி, உள்ளூர் சந்தைகள் மற்றும் பொருளாதார வாய்ப்புகள் போன்றவைகளை அடைவது கடுமையாக பாதிக்கப்படுகிறது.

ஊரகச் சாலைகள் இணைப்பானது, சமூகப் பொருளாதார சேவைகளை அணுகுதலை மேம்படுத்துவதால், விவசாயம் மற்றும் விவசாயம் சாராத பொருள் உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது. இது, ஊரக வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் உண்மையான வருவாயினை அதிகரிக்கச் செய்வதால், இதன் மூலம் வறுமை குறைக்கப்படுகிறது.

ஊரகச் சாலைகளில் முதலீடு செய்வது, உள்ளூர் வளத்தை பயன்படுத்துதலுக்கும், வேலை வாய்ப்பு

உருவாக்கத்திற்கும், உள்ளூர் வணிகத்தை வலுப்படுத்துவதற்குமான ஆற்றல் கொண்டுள்ளதால், இது, ஊரகப் பகுதிகளின் சமூகப்பொருளாதார மேம்பாட்டிற்கும் , வறுமை ஒழிப்பிற்கும் வழிகோலுகிறது.

இந்த அரசு ஏற்கனவே "500க்கும் அதிகமாக மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் தார்ச் சாலைகள் அமைக்கப்படும் எனவும், பிற குக்கிராமங்களுக்கு அனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தத்தக்க சாலைகள் அமைக்கப்படும்" எனவும் அறிவித்துள்ளது. இதன் நோக்கம், தொலை தூர மற்றும் தொடர்புகளற்ற பகுதிகளுக்கும், அனைத்து பருவ காலத்திற்கும் ஏற்ற சாலை வசதிகள் சென்றடைவதை உறுதிப்படுத்துதல் ஆகும்.

**5.1 ஊரகச் சாலைகளின் தொகுப்பு**

மாநிலத்தில் உள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:–



**அட்டவணை 5.1**

**ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்**

| வ. எண். | மேற்பரப்பின் வகை | ஊராட்சி சாலைகள் | ஊராட்சி ஒன்றிய சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | | |
| 1. | தார் சாலை | 54793.23 | 29195.16 | 83988.39 |
| 2. | சிமெண்ட் சாலை | 1904.53 | 167.96 | 2072.49 |
| 3. | ஈரடுக்கு கப்பிசாலை | 3729.91 | 489.54 | 4219.45 |
| 4. | ஓரடுக்கு கப்பிசாலை | 9211.64 | 848.39 | 10060.03 |
| 5. | சரளைக்கல் சாலை | 8929.76 | 490.79 | 9420.55 |
| 6 | மண்சாலை | 32031.69 | 1284.71 | 33316.40 |
| **மொத்தம்** | | **110600.76** | **32476.55** | **143077.31** |

இந்த அரசு, வருடம் முழுவதும், அனைத்து பருவ காலங்களிலும் தொடர்ந்து பயன்படுத்தத்தக்க வகையில் சாலை வசதியினை உறுதி செய்ய முயற்சி எடுத்து வருகிறது. இந்த நோக்கத்திற்காக, இந்த துறை, பெருமளவிலான ஊரகச் சாலைகள் தொகுப்பை வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் வைத்துக் கொள்ள ஏதுவாக கீழ்க்கண்டவாறு மூன்று வகையான உத்திகளை கையாளுகிறது.

- **தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்**
- **ஏற்கனவே உள்ள சேதமடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல்**
- **ஏற்கனவே உள்ள தார்ச் சாலைகளை பராமரித்தல்**

### 5.1.1. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல்

மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, 57,016 கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலை அல்லாத சாலைகள் ஊரகப் பகுதிகளில் உள்ளன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமை அடிப்படையில் தார்ச்சாலை அல்லாத சாலைகளை மேம்பாடு செய்ய உத்தேசித்துள்ளது.

- சாலை இணைப்பு இல்லாத குக்கிராமங்களுக்கு சாலை இணைப்பு வழங்குதல்
- பேருந்து செல்லும் சாலைகளை மேம்படுத்துதல்
- பயன்பாட்டு சேவைகளின் இணைப்பு, நேர்முகமாகவும், மறைமுகமாகவும் இணைக்கப்படும் குக்கிராமங்களின் எண்ணிக்கை ஆகிய காரணிகளின் அடிப்படையில் முக்கியமான பிற தார்ச் சாலை அல்லாத சாலைகளை மேம்பாடு செய்தல்



மேற்கண்டவாறு, 2012–13ம் ஆண்டில் மொத்தம் 9,236 கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலை அல்லாத சாலைகள் மேம்பாட்டிற்காக தாய் திட்டம், நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, ஊரக உட்கட்டமைப்புத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி போன்ற பல்வேறு திட்டங்களிலிருந்து ரூ.1,448 கோடி நிதி ஒருங்கிணைக்கப்பட்டு, சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

2013–14ம் ஆண்டில், இதுவரை, 4,459.88கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ. 1,105.85 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

2014–15ம் ஆண்டில், 9,235 கி.மீ. நீளமுள்ள தார்ச்சாலை அல்லாத சாலைகளை தார்ச் சாலைகளாக ரூ.2,100 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி, தாய் திட்டம், நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, ஊரக உட்கட்டமைப்புத் திட்டம், மாநில நிதிக்குழு மான்யம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதி மற்றும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதியினை ஒருங்கிணைத்து பெறப்படும்.

### 5.1.2. சேதமடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல்

மிகவும் சேதமடைந்த தார்ச் சாலைகள், தனது பயன்பாட்டு காலம் முடிவடையும் நிலையிலுள்ள சாலைகள் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள் ஆகியவை முன்னுரிமை அடிப்படையில் வலுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்கு தேவையான நிதி நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம், உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதி, மாநில நிதிக்குழு மானியம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் பெறப்படுகிறது. இந்த வகையின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில், 5,892.86 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.1,113.17 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இதன் விவரம் கீழ்க்கண்டவாறு:–

<u>அட்டவணை.5.2</u>

**கடந்த மூன்று ஆண்டுகளில் சேதமடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள பணிகள் விவரம்**

| வ.எண் | ஆண்டு | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 830.83 | 99.70 |
| 2 | 2012–13 | 1,534.94 | 205.58 |
| 3 | 2013–14 | 3,527.09 | 807.89 |
| மொத்தம் | | 5,892.86 | 1,113.17 |



2014–15ம் ஆண்டில், பல்வேறு திட்டங்களின் கீழ், 2,000 கி.மீ. நீளமுள்ள சாலைகள், ரூ. 600 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### 5.1.3. ஏற்கனவே உள்ள தார்ச் சாலைகளைப் பராமரித்தல்

சாலை இணைப்பின் பயன் நீடிக்க வேண்டுமெனில், சாலை அமைத்த பின் நன்கு திட்டமிடப்பட்ட பராமரிப்பு முறை இருத்தல் வேண்டும்.

முறையான பராமரிப்பு இல்லையெனில், சாலைகள் மிகவும் சேதமடைந்து அங்கு வசிக்கும் மக்களுக்கு நீண்ட காலப் பயன் கிடைப்பது தடைபடும்.

காலதாமதமான சாலை பராமரிப்பு மறைமுகச் செலவையும் ஏற்படுத்தும். பராமரிப்பு இல்லாத சாலைகளைப் பயன்படுத்துவது சிரமமானது மட்டுமின்றி, வாகனங்கள் இயக்கும் செலவும் அதிகரிப்பதால், போக்குவரத்து நிறுவனங்கள் இத்தகைய சாலைகளைப் பயன்படுத்துவதற்கும் தயக்கம் கொள்கின்றன. இது அரசிற்கு மிகுந்த நிதிச் சுமையை ஏற்படுத்துகிறது. **சாலைகள் பராமரிப்பின் முக்கிய நோக்கமே சொத்துக்களை பயன்பாட்டில் இருக்குமாறு பாதுகாப்பதாகும்.**

ஊரகச் சாலைகளை முறையாக பராமரிப்பதற்காக, பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன:

- ஊரகச் சாலைகள் பராமரிப்பிற்காக முழுமையான திட்டம் வகுத்தல்

- இணையதள சாலைப் பதிவேட்டில் கூடுதல் விவரங்களான போக்குவரத்து எண்ணிக்கை, California Bearing Ratio (CBR), சாலைகளின் மேற்பரப்பு நிலை (PCI) மற்றும் சிறுபாலம் மற்றும் வடிகால் கட்டமைப்பு குறித்த அடிப்படை விவரங்கள் முதலியவற்றை பதிவு செய்தல்
- ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை புவிசார் தகவல் அமைப்பு (GIS) தளத்தில் கொண்டு வருதல்
- ஊரகச் சாலைத் தொகுப்பை கண்காணிக்கும் பொருட்டு “சாலை மேலாண்மை முறையை” நிறுவுதல்

## 5.2. ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம் (Rural Roads Maintenance Scheme)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை, குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து பராமரிப்பு செய்யும் வகையில் ரூ. 400.00 கோடி மொத்த ஒதுக்கீட்டில் “ ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்” என்ற புதிய திட்டத்தை சட்டப்பேரவையில் அறிவித்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ், 2013–14ம் ஆண்டிற்கு ரூ. 400.00 கோடி மதிப்பீட்டில், 4,000 கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலைகளை பராமரிப்பு செய்திட ரூ. 150 கோடி பதிமூன்றாம்



நிதிக்குழு மானியத்தில் இருந்தும் ரூ.250 கோடி மாநில நிதிக் குழு மானியத்தில் இருந்தும் ஒருங்கிணைத்து அரசாணை (நிலை) எண். 88, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 23.07.13ன்படி ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணையின் முழு விவரம் http://tnrd.gov.in/archi_state_schemes.php என்ற இணைய முகவரியில் உள்ளது).

இத்திட்டத்தின் கீழ், 3,978.71 கி.மீ. நீளமுள்ள 2,001 சாலைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில், இந்த வகையின் கீழ், 8,735.62 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ. 815.94 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு:–

**அட்டவணை 5.3**
**கடந்த மூன்றாண்டுகளில் பராமரிப்பிற்காக எடுக்கப்பட்டுள்ள சாலைகள் விவரம்**

| வ.எண். | வருடம் | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 1,973.73 | 159.06 |
| 2 | 2012–13 | 2,393.09 | 220.91 |
| 3 | 2013–14 | 4,368.80 | 435.97 |
| மொத்தம் | | 8,735.62 | 815.94 |

2014–15ம் ஆண்டில், இத்திட்டத்திற்கு ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இதற்காக பதிமூன்றாவது நிதிக்குழு மானியத்திலிருந்து ரூ.169 கோடி மற்றும் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து ரூ.131 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 5.3. பாலங்கள் கட்டுதல்

ஊரகச் சாலை இணைப்பின் முக்கியத்துவம் நன்கு அறியப்பட்ட ஒன்று. இயற்கையான ஓடைகள் மற்றும் நீர் நிலைகள் ஆகியவற்றின் குறுக்கே நிரந்தர போக்குவரத்து வசதிகள் அமைக்காமல், அனைத்து பருவகாலங்களிலும் இணைப்பு வசதி என்பது முழுமையடையாது. இந்த செயல்திட்டத்தின் அடிப்படையில் இத்துறையானது முக்கியமான பெரிய பாலங்கள் கட்டும் பணிகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் அனுமதி வழங்குகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில், இத்துறை 147 பாலங்களை ரூ. 187.09 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளது. இதன் விவரம் கீழ்க்கண்டவாறு:—



**அட்டவணை 5.4**

**கடந்த மூன்றாண்டுகளில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள பாலங்கள் விவரம்**

| வ.எண். | ஆண்டு | பாலங்களின் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 30 | 40.42 |
| 2 | 2012–13 | 24 | 30.27 |
| 3 | 2013–14 | 93 | 116.40 |
| **மொத்தம்** | | **147** | **187.09** |

2014–15ம் ஆண்டில், ரூ. 159.83 கோடி மதிப்பீட்டில் 105 பாலங்கள் கீழ்க்கண்ட திட்டங்களில் எடுக்கப்படவுள்ளன.

**அட்டவணை 5.5**

**2014–15ம் ஆண்டில் எடுக்கப்படவுள்ள பாலங்கள் விவரம்**

| வ. எண். | திட்டம் | பாலங்களின் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டம் – கட்டம் IX | 6 | 8.65 |
| 2 | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் மற்றும் உள்கட்டமைப்பு இடை நிரவல் நிதி | 17 | 42.31 |
| 3 | நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி | 26 | 35.21 |
| 4 | உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதி | 56 | 73.66 |
| **மொத்தம்** | | **105** | **159.83** |

## 5.4. நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி சாலைகள் (NABARD-RIDF)

ஊரக உட்கட்டமைப்பு வசதியினை மேம்பாடு செய்வதில் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின் கீழ், “ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி” யினை மத்திய அரசு அறிவித்தது. இந்நிதியின் கீழ், பெரும்பான்மையான முதலீடுகள், விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகள், சமூகத் துறைகள், ஊரகச் சாலை இணைப்பு போன்றவற்றில் செய்யப்படுகின்றன.

ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் பகுதி XVI வரை, 10,577.42 கி.மீ. நீளமுள்ள 4,305 சாலைப் பணிகள் ரூ. 1,321.17 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.6**

**ஆண்டு வாரியாக நபார்டு திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்**

| ஆண்டு | பகுதி | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 2011–12 | XVII | 958 | 2,598.65 | 451.77 |
| 2012–13 | XVIII | 381 | 1,000.46 | 198.07 |
| 2013–14 | XIX | 185 | 367.63 | 100.00 |
| மொத்தம் | | **1524** | **3,966.74** | **749.84** |



### 5.4.1. கூடுதல் கருத்துரு

நபார்டு திட்டம் பகுதி XIXன் கீழ் ரூ. 56.21 கோடி மதிப்பீட்டில் 53 சாலைப் பணிகள் மற்றும் 26 பாலங்கள் கட்டுவதற்கு கூடுதல் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு, தற்போது நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது.

### 5.4.2. 2014–15ம் வருடத்திற்கான ஒதுக்கீடு

நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் 2014–15ம் வருடத்திற்கு ரூ. 250.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,280.81 கி.மீ. நீளமுள்ள, 643 சாலைப்பணிகளுக்கு ரூ. 339.91 கோடி மதிப்பீட்டில் கருத்துரு நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 5.5. பதிமூன்றாம் நிதிக்குழு மானியம் (13th Finance Commission Grant)

அரசு ஆணை (நிலை) எண். 11, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் (H.N.I) துறை நாள் 23.01.12ன்படி சாலைகள் மற்றும் பாலங்கள் பராமரிப்பிற்கான மானியம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுக்கு இடையே 2:1 என்ற விகிதப்படி பிரித்தளிக்கப்படுகிறது. இந்த நிதி ஏற்கனவே உள்ள தார்ச் சாலைகளை பராமரிப்பு செய்ய பயன்படுத்தப்படுகிறது.

## அட்டவணை.5.7

**ஆண்டு வாரியாக பதிமூன்றாம் நிதிக்குழு மானியத்தில் எடுக்கப்பட்ட சாலைப் பணிகளின் விவரம்**

| வ.எண். | ஆண்டு | எடுக்கப்பட்ட பணிகள் | | |
|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
| 1 | 2011–12 | 923 | 1,778.48 | 143.00 |
| 2 | 2012–13 | 810 | 1,659.14 | 151.00 |
| 3 | 2013–14 | 752 | 1,535.68 | 159.00 |
| மொத்தம் | | **2485** | **4,973.30** | **453.00** |

### 5.5.1. 2014–15ம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

2014–15ம் ஆண்டிற்கு ரூ. 169.00 கோடி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பராமரிப்பு செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,599.83 கி.மீ. நீளமுள்ள 842 சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 5.6. ஊரக உட்கட்டமைப்பு திட்டம் (RIS)

ஊரக உட்கட்டமைப்பின் ஒரு பகுதியான ஊரகச் சாலை இணைப்பில் தற்போதுள்ள இடைவெளியினை குறைப்பதும், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்தி நிலையான சொத்துக்களை உருவாக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மொத்த ஒதுக்கீட்டில் 60% சாலைகளின் மேம்பாட்டிற்காகவும், 40% மகாத்மா காந்தி தேசிய ஊரக



வேலை உறுதி திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்தவும் வழங்கப்படுகிறது.

## அட்டவணை 5.8

**ஆண்டு வாரியாக ஊரக உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்**

| ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 2011–12 | 1348 | 1638.33 | 150.00 |
| 2012–13 | 1361 | 1259.27 | 166.67 |
| 2013–14 | 746 | 744.51 | 150.00 |
| **மொத்தம்** | **3,455** | **3,642.11** | **466.67** |

### 5.6.1 2014–15ம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

2014–15ம் ஆண்டிற்கு, ரூ. 250.00 கோடி ஊரக உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும். இதில் 60% (ரூ. 150.00 கோடி) சாலைகள் மேம்பாட்டிற்காகவும், 40% (ரூ.100.00 கோடி) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்தவும் பயன்படுத்தப்படும்.

## 5.7. பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச் சாலை அமைத்தல்

பிளாஸ்டிக் கழிவுகளின் தீமைகளிலிருந்து சுற்றுச் சூழலை பாதுகாப்பது இந்த அரசாங்கத்தின் முன்னுரிமைகளில் ஒன்றாகும். அதன்படி, 2011–12ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், அரசு, ''பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு சாலை அமைக்கவும், கிராமங்களிலிருந்து பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றவும்'' நிதி வழங்கப்படும் என அறிவித்தது. பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு சாலை அமைக்கும் பணி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி (EPREDF), நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, பதிமூன்றாவது நிதிக்குழு மானியம், ஊரக உட்கட்டமைப்புத் திட்டம் மற்றும் ஊரகச் சாலைகள் பராமரிப்பு திட்டம் ஆகியவற்றின் கீழ் எடுக்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை 5.9**

**ஆண்டுவாரியாக பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட சாலைப் பணிகள் விவரம்**

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 82 | 193.84 | 16.28 |
| 2 | 2012–13 | 442 | 1060.22 | 138.41 |
| 3 | 2013–14 | 2572 | 4456.00 | 563.28 |
| மொத்தம் | | **3,096** | **5710.06** | **717.97** |



சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரி சக்தி மேம்பாட்டு நிதியின் (EPREDF) மூலம் ரூ. 80 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 20 பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு மையங்களிலிருந்து பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கத் தேவைப்படும் துகளாக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

**இதுவரை பிளாஸ்டிக் சாலைகள் அமைப்பதற்கு 17,176 மெட்ரிக்டன் பிளாஸ்டிக் கழிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.**

## 5.8. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் (PMGSY)

சாலை வசதியில்லாத குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலத்திற்கும் ஏற்ற இணைப்புச் சாலையினை, தேவையான சிறுபாலம் மற்றும் வடிகால் கட்டமைப்பு அமைப்புகளுடன் ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் மத்திய அரசால் 2000ம் ஆண்டில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் துவங்கப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் கட்டத்திலிருந்து (phase I-2000-01) ஏழாவது கட்டம் வரை (Phase VII 2007-08), 9,970.15 கி.மீ. நீளமுள்ள 4,946 சாலைப்பணிகள், மொத்தம் ரூ.2,022 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

## 5.8.1. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி – VIII (2012-13)

தமிழக அரசின் தொடர் முயற்சியால், மத்திய அரசின் ஊரக வளர்ச்சித்துறை, பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் பகுதி VIII பணிகளுக்கு அனுமதியளித்துள்ளது.

மொத்தம் 3,093.77 கி.மீ நீளமுள்ள 1,341 சாலை மற்றும் பாலங்கள் கட்டும் பணிகளுக்கு ரூ.1,129.70 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.108.95 கோடி மாநில அரசின் பங்கும் அடங்கும். இப்பணிகளின் 5 வருட பராமரிப்பிற்காக, ரூ.65.81 கோடி ஒதுக்கீடும் மாநில அரசால் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.10**

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி – VIII –ல் அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்**

| வ. எண் | துறை | பணிகளின் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் (கி.மீ.) | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | சாலைகள் (ஊரக வளர்ச்சித் துறை ) | 966 | 2031.222 | 772.98 |
| 2 | சாலைகள் (நெடுஞ் சாலைத் துறை ) | 330 | 1062.542 | 278.54 |
| | **சாலைகள் (மொத்தம் )** | **1296** | **3093.764** | **1051.52** |
| 3 | பாலங்கள் (ஊரக வளர்ச்சித் துறை) | 45 | – | 78.18 |
| **பெருமொத்தம்** | | **1341** | **3093.764** | **1129.70** |



## 5.8.2. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி – VIIIல் கீழ்க்கண்ட புதிய முன்னோடி திட்டங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன

### 5.8.2.1. தென்னை நார் தொழில் நுட்ப சாலை (Coir – Geo Textiles)

தென்னை நார் கயிறுகளைப் பயன்படுத்தி, ரூ.16.74 கோடி மதிப்பீட்டில், 42.20 கி.மீ நீளமுள்ள, 19 சாலைகளை அமைத்தல்.

### 5.8.2.2. RBI Grade 81

மண்ணை நிலைப்படுத்தி சாலை அமைய உள்ள நிலத்தை வலுப்படுத்தும் RBI Grade 81 எனும் வேதிப்பொருளைப் பயன்படுத்தி, ரூ. 5.71 கோடி மதிப்பீட்டில், 16.51 கி.மீ. நீளமுள்ள 7 சாலைகளை அமைத்தல்.

### 5.8.2.3. நீண்ட பாலங்கள்

அனுமதிக்கப்பட்ட பணிகளில் ரூ.78.18 கோடி மதிப்பீட்டிலான 45 பாலங்களும் அடங்கும். இதில், 50 மீ நீளத்திற்கு மட்டும், மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மீதமுள்ள நீளத்திற்கு, தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 5.8.2.4. சிறுபாலங்கள் மற்றும் பாதுகாப்புச் சுவர்கள்

ஊரகச் சாலைகள், பொதுவாக, முறையான வடிகால் வசதிகளுடன் அமைக்கப்படாததால், மழைக்காலங்களில் சாலைகள் வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றதாக

இருப்பதில்லை. எனவே, பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் பகுதி VIIIக்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் பொழுது உரிய கவனம் செலுத்தப்பட்டு, தேவையான சிறுபாலங்கள் மற்றும் சாலைப் பாதுகாப்பு அமைப்புகள் சேர்க்கப்பட்டன.

1,296 சாலைப் பணிகளில் மொத்தம் 4,663 சிறுபாலம் மற்றும் பாதுகாப்புச் சுவர் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. சிறுபாலம் மற்றும் பாதுகாப்புச் சுவர் கட்டும் பணிகள் முடிந்த பின்னர்தான், சாலைப்பணிகளுக்கான கட்டமைப்பு அடுக்குகளை தொடங்க இயலும். எனவே, இத்துறை சிறுபாலம் மற்றும் சாலைப் பாதுகாப்பு அமைப்பு கட்டும் பணிகளை முடிக்க சிறப்பு கவனம் செலுத்துகிறது.

### 5.8.3. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி – IX

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி – IX ன்கீழ், 980 கி.மீ நீளமுள்ள, 418 சாலைகளை ரூ.364 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 5.9. உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி, நகர் ஊரமைப்பு இயக்குநரால் நிர்வகிக்கப்படுகிறது. உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி கட்டணமானது,



2007ம் ஆண்டிலிருந்து, குடியிருப்பு, வணிக, நிறுவன மற்றும் தொழிற்சாலைக் கட்டடங்களிலிருந்து வசூலிக்கப்படுகிறது.

இந்த நிதியில் கீழ்கண்ட பணிகள் அடங்கும்:

அ) உட்கட்டமைப்பு முதலீட்டுத் திட்டங்களை தயாரித்தல்

ஆ) உட்கட்டமைப்பு முதலீட்டுத் திட்டங்களை முழுமையாக அல்லது பகுதியாக நிறைவேற்றுதல்

இ) உட்கட்டமைப்பு முதலீட்டுத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல் தொடர்புடைய ஏதாவது நோக்கத்திற்கான செலவினம்

முதல் முறையாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை 56 பாலங்கள் மற்றும் தரைப்பாலங்கள் அமைக்க ரூ.73.66 கோடி மதிப்பீட்டில் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பித்தது.

அதற்கிணங்க, 9 மாவட்டங்களில் ரூ. 73.66 கோடி மதிப்பீட்டில், 56 பாலங்கள் கட்ட உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின் கீழ் குழுவால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**5.10. கடந்த மூன்றாண்டுகளில், திட்ட வாரியாக எடுக்கப்பட்டுள்ள சாலைப் பணிகளின் விவரம்.**

**அட்டவணை 5.11**

**மூன்றாண்டுகளில், திட்ட வாரியாக எடுக்கப்பட்டுள்ள சாலைப் பணிகளின் விவரம்.**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ.) | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 2,031.22 | 851.16 |
| 2 | நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி | 3,966.74 | 753.51 |
| 3 | பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச்சாலை அமைத்தல் | 429.87 | 37.50 |
| 4 | 13வது நிதிக்குழு மான்யம் | 4,973.30 | 453.00 |
| 5 | ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம் | 2,443.03 | 250.00 |
| 6 | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டு (தாய்) திட்டம் | 4,039.17 | 682.48 |
| 7 | ஊரக உட்கட்டமைப்பு திட்டம் | 3,642.11 | 466.67 |
| 8 | மாநில நிதிக்குழு மானியம் | 1,302.41 | 224.10 |
| 9 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1,605.18 | 211.36 |
| 10 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 576.54 | 78.68 |
| 11 | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம் | 717.67 | 209.56 |
| 12 | இதர திட்டங்கள் | 3,997.53 | 677.17 |
| மொத்தம் | | 29,724.77 | 4895.19 |



**5.11. வடிவமைப்பு , தரக் கட்டுப்பாடு மற்றும் தொழில்நுட்ப தணிக்கைப் பிரிவு**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையானது, ஆண்டிற்கு சுமார் 15,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை செயல்படுத்துகிறது. மத்திய, மாநில அரசுத் திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் இப்பணிகள், கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், குடிநீர் மற்றும் கழிவு நீர் வாய்க்கால் பணிகள், மற்றும் மழைநீர் சேகரிப்பு உள்ளிட்ட பல வகையானவை. இப்பணிகள் மாநிலத்தின் பரவலாக உள்ள 79,000த்திற்கும் மேற்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில், இத்துறை பல உயர் மதிப்பீட்டு கட்டடங்கள் மற்றும் பாலங்களை செயல்படுத்தி வருகிறது. இவற்றில் சில ரூ.5 கோடி மதிப்பீட்டிற்கும் மேலானவை.

அரசு, வளர்ச்சிப் பணிகளுக்கு பெருந்தொகையினை செலவிட்டு வருகிறது. இந்தப் பணிகள் சரியான முறையில் வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு செய்யப்படாமல், குறிப்பிடப்பட்ட தரத்திற்கு ஏற்ப செயல்படுத்தப்படவில்லை எனில், இதன் மூலம் மக்களுக்கு கிடைக்கவேண்டிய பலன்கள் நீண்ட காலத்திற்கு கிடைக்காது. மேலும், செலவிடப்பட்ட நிதியும் பயனற்றதாகிவிடும்.

எந்த ஒரு திட்டத்தின் முறையான செயல்பாடும் கீழ்க்கண்டவைகளைச் சார்ந்திருக்கும்.

- இடம் மற்றும் செயல்பாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பொருத்தமான வடிவமைப்பு
- நிதி தேவையை கண்டறிந்திட சரியான மதிப்பீடு
- செயலாக்கத்தின்போது, தரமான பொருட்கள் மற்றும் சரியான பணித் திறனை பயன்படுத்துதல்.
- தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு

மேலே குறிப்பிட்டவற்றை அடைந்திட, கீழ்க்கண்டவை நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

i) மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்வடிவமைப்பு (in-house) பிரிவை நிறுவுதல் மற்றும் தேவையான திறனை வழங்குதல்.

ii) உயர் மதிப்பு பணிகளுக்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்ய முன்னணி கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆலோசகர்களை கொண்ட பட்டியல் தயாரித்தல்.

iii) மதிப்பீட்டினை கட்டுமானம் தொடங்குவதற்கு முன்னும், பணிகளை நடைபெறும் பொழுதும், முடிந்த பின்பும் தொழில்நுட்ப தணிக்கை செய்ய தொழில்நுட்ப தணிக்கை பிரிவு நிறுவுதல்.

iv) தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாட்டை உறுதி செய்ய, முழு தர மேலாண்மை முறையை நிறுவுதல். இவ்வமைப்பு, ஒரு உள் தரக்கட்டுப்பாட்டு பிரிவு



மற்றும் சுதந்திரமான மூன்றாம் தரப்பு தரக்கட்டுப்பாட்டு குழுவினைக் கொண்டிருக்கும்.

**5.11.1. வடிவமைப்பு பிரிவு**

ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு, இத்துறையின் மூலம் பல உயர் மதிப்பு பாலங்கள் மற்றும் கட்டடங்கள் நடைபெற்று வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் 100க்கும் மேற்பட்ட உயர் மதிப்பு கட்டடங்கள் ரூ. 180 கோடி மதிப்பீட்டிலும், 147க்கும் மேற்பட்ட பாலங்கள் ரூ. 187.09 கோடி மதிப்பீட்டிலும் கட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும், 105 பாலங்கள் கட்ட விரைவில் அனுமதி வழங்கப்படவுள்ளது. இப்பணிகளுக்கு தனியார் ஆலோசகர்கள் மூலமாகவோ அல்லது பொறியியல் நிறுவனங்கள் மூலமாகவோ வடிவமைப்பு தயார் செய்யப்பட்டு வருகிறது. இருப்பினும், இவ்வடிவமைப்பினை ஆய்வு செய்ய இதற்கென தனிப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்கள் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ இல்லை. எனவே மாவட்ட மற்றும் மாநில அளவில் வடிவமைப்பு பிரிவை உருவாக்க முன்மொழியப்படுகிறது. இதன் தொடக்கமாக தற்போதுள்ள பொறியாளர்களை பணி மாற்றம் செய்து இந்த அமைப்புகள் செயல்படுத்தப்படும். இப்பிரிவில் பணியமர்த்தப்படும் பொறியாளர்களின் தகுதியை மேம்படுத்த தேவையான பயிற்சி மற்றும் ஆற்றல் அளிக்கப்படும். வடிவமைப்பு பிரிவிற்கென தனிப் பணியிடங்கள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

## 5.11.2. தரக்கட்டுப்பாடு மற்றும் தொழில் நுட்ப தணிக்கைப் பிரிவு

தரக்கட்டுப்பாடு (Quality control) என்பது, பணிகளின் தரத்திற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொழில்நுட்பம் அல்லது செயல்பாடுகள் மூலம் குறைகளைக் கண்டறிந்து சரி செய்யும் "பொருள் சார்ந்த" (product oriented) முறையாகும்.

தர உறுதி (Quality assurance) என்பது, ஒரு நல்ல தர மேலாண்மை முறையை நிறுவி, அதன் மூலம் தவறுகளை தடுப்பதில் கவனம் செலுத்தும், செயலாக்கம் சார்ந்த (process oriented) நிர்வாக முறையாகும்.

**முழு தர மேலாண்மை** (Total Quality Management) என்பது, தர உறுதி மற்றும் தரக்கட்டுபாடு ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோளினை அடைய, முதல் கட்டமாக முழுநேர "தரக்கட்டுப்பாடு மற்றும் தொழில் நுட்ப தணிக்கைப் பிரிவு" மாநில, மண்டல மற்றும் மாவட்ட அளவில் நிறுவப்படும். மாநில அளவிலான பிரிவு, கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் உள்ள, மாநில தர ஒருங்கிணைப்பாளர் தலைமையின் கீழ் செயல்படும். மண்டல அளவிலான பிரிவு, செயற்பொறியாளரின் தலைமையின் கீழும், மாவட்ட அளவிலான பிரிவு உதவி செயற்பொறியாளரின் தலைமையின் கீழும் செயல்படும்.



இந்தப் பிரிவுகளுக்குத் தேவையான உதவி அலுவலர்கள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு மையத்திற்கு தேவையான பிற வசதிகளும் ஏற்படுத்தப்படும். இந்தப் பிரிவுகளின் பணி, பல்வேறு தர வரையறை ஆய்வுகளை சுதந்திரமான முறையில் தொடர்ந்து மேற்கொள்வதே ஆகும். இது மட்டுமல்லாது, இந்தப் பிரிவுகள், பணிகளின் செயல்பாட்டிற்கு முன்பும், செயல்படுத்தப்படும் போதும், பணி முடிந்த பின்பும் தொழில்நுட்ப தணிக்கையை மேற்கொள்ளும்.

தற்பொழுது மாநில தரக்கட்டுப்பாட்டு கண்காணிப்பாளர்கள் (ஓய்வு பெற்ற பொறியாளர்கள்) சுதந்திரமான தரக்கட்டுப்பாட்டு கண்காணிப்பாளர்களாக செயல்பட்டு வருகின்றனர். வெளிப்படையான செயல்பாட்டை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, இத்துறை இந்த முறையை மறு ஆய்வு செய்து, தர அளவை மேம்படுத்துவதற்கு முக்கிய கருவியாக இதை பயன்படுத்த தேவையான மாற்றங்களைச் செய்யும்.

முழு தர மேலாண்மை செயல்முறைகளை தொடர்ந்து கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் இணைய வழி தரக்கட்டுப்பாட்டு பிரிவு (Quality control module) நிறுவப்படும். இந்த பிரிவு நடப்பிலுள்ள இணையவழி திட்டங்களை கண்காணிக்கும் அமைப்புடன் இணைக்கப்படும். தரக்கட்டுப்பாட்டு பிரிவுகள் ஆய்வு மேற்கொள்ள வேண்டிய பணிகளின் பட்டியல் இணையதளம் மூலம் தயாரிக்கும் வசதி ஏற்படுத்தப்படும். இவ்வாறு

தயாரிக்கப்பட்ட பணிகளின் பட்டியல் ''ஆய்வு முன்னுரிமை பட்டியல்'' என்று அழைக்கப்படும். இது, பணியின் மதிப்பு, பணியின் தன்மை, திட்டம், பணி மேற்கொள்ளப்படும் இடம், போன்ற பல விவரங்களின் அடிப்படையில் அமையும். தர ஆய்வுகள், தர கட்டுபாட்டு சோதனைகளின் விவரங்கள் உள்ளிட்ட அனைத்து ஆய்வுகளின் பதிவுகளையும் இணையதளத்தில் மூன்று அடுக்கு தரக்கட்டுபாட்டு பிரிவுகளின் மூலமும் பதிவேற்றப்படும். ஆய்வு குறிப்புகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கைகளும் இவ்வமைப்பில் பதிவேற்றப்படும்.

இவ்வமைப்பு தரக்கட்டுபாட்டு அமைப்பின் காலமுறை ஆய்விற்கு ஒரு அடிப்படையாக அமையும்.

**5.12. பொறியாளர் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு**

ஒரு துறையின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு அலுவலர்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு மிக முக்கியமான காரணி என்பதால், இத்துறை அலுவலர்களுக்கு அவ்வப்போது பயிற்சி வழங்குவதற்கு அதிக முக்கியத்துவம் செலுத்துகிறது. இது இத்துறைக்கும், துறை அலுவலர்களுக்கும், பயனுள்ளதாக அமைகிறது. பயிற்சி, புதிதாக பணியமர்த்தப்பட்ட அலுவலர்களை ஒருமுகப்படுத்துவதாகவும், ஏற்கனவே பணியிலுள்ள அலுவலர்களுக்கு அவர்களின் திறமை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதாகவும் அமைகிறது. இது, அலுவலர்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பதுடன்,



துறையின் வெற்றிக்கு அவர்களை பங்களிக்க உதவுகிறது. துறையின் கண்காணிப்பு தேவைகளையும் இது கணிசமாக குறைக்கிறது. இது தவறுகளை குறைத்து மொத்த செயல் திறனை அதிகபடுத்துவதன் மூலம் அலுவலர்களின் தரமான செயல்பாட்டிற்கு வழிவகை செய்கிறது.

**பயிற்சியினை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்**

- **ஒருமுகப்படுத்தும் பயிற்சி/அறிமுகப் பயிற்சி :–** இந்த பயிற்சி புதிதாக பணியமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கு கட்டாயமானதாகும்.
- **புத்தாக்கப் பயிற்சி:–** அலுவலர்களின் பணிக்கு பயன்படக்கூடிய புதிய தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் அண்மைக்கால தொழில் சார்ந்த முன்னேற்றங்கள் ஆகியவற்றைப் பற்றி தெரிவிக்க அவ்வப்பொழுது நடத்தப்படும் பயிற்சி.
- **சிறப்புப் பயிற்சி:–** இந்த பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களுக்கு பணியின் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

**5.13. பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு பயிற்சி அளித்தல்**

ஒப்பந்ததாரரது தரம், பணி தொடர்பான விவரம், மற்றும் திறன், எந்த ஒரு திட்டத்தின் வெற்றிக்கும் மிக முக்கியமானதாகும். இருப்பினும் இது பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை. திட்டம் தொடங்குவதற்கு முன் பணி குறித்து ஒப்பந்ததாரருக்கு உணர்த்திட எந்தவித

முயற்சியும் எடுக்கப்படுவதில்லை. இது விரும்பத்தகாத தாமதம், பொருளாதார இழப்பீடு, தரம் குறைந்த கட்டுமானம், மற்றும் திட்ட மதிப்பீடு உயர்தலுக்கு வழி வகுக்கிறது. சரியான ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுப்பது சில நேரங்களில் மிகப்பெரிய சவாலாக அமைகிறது.

எனவே ஒப்பந்ததாரர்களுக்கு திட்டத்தின் தேவைகளையும் அவர்களின் பொறுப்புகளையும் உணர்த்திட, மாநிலத்தில் உள்ள இத்துறையின் கீழ் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு படிப்படியாக பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரரின் தகுதி மற்றும் திறன் அளவை மேம்படுத்தி அதன் மூலம் திட்ட பயன்கள் ஊரகப் பகுதி மக்களுக்கு நல்ல முறையில் சென்றடைந்திட இது நல்ல வாய்ப்பாக அமையும்.



## 6. கண்காணிப்பு

## 6.கண்காணிப்பு

இந்த அரசு, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம், கடந்த பல ஆண்டுகளாக தனது நோக்கங்களான வறுமை ஒழிப்பு, வாழ்வாதாரம் வழங்குதல், சுகாதாரம் மற்றும் துப்புரவு மேம்பாடு, கல்வி மற்றும் இதர அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் போன்றவற்றை அடைய பல உத்திகளை மேற்கொண்டு வருகிறது. இந்த துறையினால் மாநிலத்தின் அகன்ற புவியியல் பரப்பில் மேற்கொள்ளப்படும் பன்முக செயல்பாடுகளால், திட்டமிடப்பட்ட நோக்கங்களை, உரிய காலத்தில், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் நிறை வேற்றுவது, ஒரு பெரும் நிர்வாக சவாலாக இருக்கின்றது.

பல்வேறு திட்டங்களின் நோக்கங்களும், செயலாக்க வழிமுறைகளும், பெரிய தகவல் தளத்தை உருவாக்கி பல்வேறு பங்கேற்பாளர்களை ஈடுபடுத்தி, பல்வேறு நடைமுறைகளை பின்பற்றுவதை அவசியமாக்குகிறது. இத்தகைய முக்கிய கூறுகளின் மீது நிர்வாகரீதியான கட்டுப்பாடு வைத்திருக்க, கணினி மூலமான சரிபார்ப்பு முறையுடன் கூடிய, நன்கு வரையறுக்கப்பட்ட கண்காணிப்பு முறை அவசியமாகிறது.

கண்காணிப்பு முறையானது நிர்வாகிகளுக்கும், முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ளவர்களுக்கும், பங்கேற்பாளர்களுக்கும், பணிகளின் செயல்பாட்டு நிலை மற்றும் சரிசெய்ய வேண்டிய பிரச்சனைகள் குறித்த



தகவல்களை தொடர்ந்து வழங்குகிறது. எதிர்பார்க்கும் பலன்களை உறுதிப்படுத்தவும், குறுகிய மற்றும் நீண்டகால இலக்குகளை அடையவும், சரியான கண்காணிப்பு முறை முக்கிய தேவையாகும். இத்துறை, தேசிய தகவலியல் மையத்தின் உதவியோடு, www.tnrd.gov.in என்ற இணைய பக்கத்தை உருவாக்கியுள்ளது. இந்த இணைய பக்கத்தில் இத்துறை மேற்கொள்ளும் திட்டங்கள், இத்துறையின் நடவடிக்கைகள், இத்துறை தொடர்பான முக்கியமான சட்டங்கள், விதிகள் மற்றும் ஆவணங்கள், அரசாணைகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சம்பந்தப்பட்ட அடிப்படை விவரங்கள் தரப்பட்டுள்ளன.

கண்காணிப்பு முறையை மேம்படுத்தும் பொருட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஒரு தனிப்பட்ட ‘‘இணையதளம் மூலம் திட்டங்களை கண்காணிக்கும் முறை’’ என்ற முறையை தேசிய தகவலியல் மையத்தின் மூலம் **2011**ல் tnrd.gov.in என்ற வலைப்பக்கத்தில் நிறுவியது. இதன் நோக்கம், மாவட்டம், வட்டாரம், கிராம ஊராட்சி மற்றும் குக்கிராம அளவில் பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிதி செலவினத்தை ஒரே இணையதளத்தின் மூலம் கண்காணிப்பதே ஆகும்.

உதாரணமாக, இந்த முறையானது ஊரக வளர்ச்சித் துறையினால் மாநிலம் முழுவதும் பல்வேறு திட்டங்களின் வாயிலாக **2013–14**ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட **7.78** லட்சம் பணிகளின் செயல்பாட்டுத் திறனை தொடர்ந்து

கண்காணிக்கவும், இலக்கு நிர்ணயிக்கவும், பணிகளை உரிய நேரத்தில் முடிக்க செயலாக்க அலகுகள் மூலம் செயல் திட்டம் தீட்டவும் உதவுகிறது. இந்த முறை, பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் நிதியினை விடுவித்து, அதன்மூலம், நிதி பல்வேறு மாவட்டங்களில் பயனற்று இருப்பதை தவிர்க்கவும் வழிவகுக்கிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், பல்வேறு வகையிலான பணிகள், மிக அதிக அளவில் மேற்கொள்ளப்படுவதால், திட்ட நிர்வாகம், ஒரு பெரும் சவாலாக உள்ளது. இதனால், கண்காணிப்பு முறையை பலப்படுத்தும் வகையில், பணி முன்னேற்றம் மற்றும் நிதி செலவினத்தை கண்காணிப்பது மட்டும் அல்லாது, தேவை அடிப்படையிலான, பிற கண்காணிப்பு அமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்துறை கடந்த மூன்று ஆண்டுகளாக, இந்த இணைய தளத்தை பலவழிகளில் பயன்படுத்தி, அதன் மூலம் விரைவாகவும், சரியான முறையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வழிவகுத்துள்ளது. கீழ்காணும் விவரங்கள் இந்த இணையதளத்தில் உள்ளன.

- கணக்கெடுப்பு அறிக்கைகள்
- கண்காணிப்பு அறிக்கைகள்
- திட்ட பிரேரணைகள்
- அடிப்படைத் தகவல்கள்
- நிதி மேலாண்மை
- பொருட்கள் மேலாண்மை



- கூட்ட அறிக்கைகள்
- குறுஞ்செய்தி சேவை

குக்கிராமங்கள் வாரியான தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டு திட்டக் கணக்கெடுப்பு விவரங்கள், சுகாதாரம் குறித்த கணக்கெடுப்பு விவரங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகள் பற்றிய தினசரி அறிக்கைகள், அனைத்து திட்டங்களின் பணி முன்னேற்றம் மற்றும் நிதி செலவினம் பற்றிய தகவல்கள், சாலை தொகுப்பின் விரிவான விவரங்கள், சிறுபாசன ஏரிகள் குறித்த விவரங்கள் உள்ளிட்ட 300 வகையான அறிக்கைகள் இந்த இணைய வலைவாசலில் அடங்கும்.

தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு எல்லையற்றது என்பதனால், இந்த துறையானது, இதை அதிக அளவில் பயன்படுத்த பெருமுயற்சி எடுத்துவருகிறது. நிர்வாகத்தை இன்னும் வெளிப்படையாகவும், பொறுப்பாகவும், திறமையாகவும் செயல்படுத்த, இந்த துறை எடுத்துள்ள முக்கிய முயற்சிகள் கீழே விரிவாக தரப்பட்டுள்ளன:

### 6.1. நிகழ் நேர கண்காணிப்பு அமைப்பு (RTMS)

இணையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் எவ்வித முறையின் வெற்றியும், அவ்வப்பொழுது தகுந்த நேரத்தில் விவரங்களை இணையத்தில் புதுப்பிப்பதை சார்ந்தே அமைகிறது. தற்போதைய அமைப்பில், ஒரு குறிப்பிட்ட பணியின் கள ஆய்வும், இணைய வலைவாசலில் ஆய்வு

விவரங்களைப் பதிவு செய்வதும், இரண்டு தனித்தனி செயல்பாடுகளாக அமைந்துள்ளன. மேலும், களப்பணி முடிவுற்ற பின்னரே, விவரங்களை கணினியில் ஏற்றுவது என்பது நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருகிறது. இது, தகவல் பதிவில் இடைவெளி ஏற்படும் வாய்ப்பை அதிகரிப்பதோடு, பிழையான விவரங்கள் பதிவு செய்யப்படுதலையும் அதிகரிக்கிறது. இந்த நிகழ்வுகளைத் தவிர்க்கவும், பணிகளின் நிலையை உடனுக்குடன் பெறும் பொருட்டும், தேசிய தகவலியல் மையத்தின் துணையுடன் 'நிகழ் நேர கண்காணிப்பு முறை' உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முறையானது, களப்பொறியாளர்கள் வலைதளத்தில் விவரங்களை பதிவு செய்யும் பணிச்சுமையை வெகுவாகக் குறைக்கும்.

### 6.1.1. நிகழ் நேர கண்காணிப்பு அமைப்பின் அம்சங்கள்

- முன்னேற்றத்தை உடனுக்குடன் கண்காணித்தல்
- பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை ஆரம்பத்திலேயே கண்டறியவும், அதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவும் வழிவகுத்தல்.
- செயல்பாட்டு குறைபாடுகளை, அவ்வப்போதே கண்டறிதல்
- உரிய நேரத்தில் சரியான முடிவெடுக்க உதவுதல்

மேற்கண்ட நோக்கங்களுடன், இந்த துறை, பணிகளின் நிகழ்நேர கண்காணிப்பை எளிதாக்க



ஆண்ட்ராய்டு (Android) அடிப்படையிலான ஒரு பயன்பாட்டு மென்பொருளை உருவாக்கியுள்ளது. இதற்கு தேவையான உள்ளமைவு உடைய அனைத்து ஆண்ட்ராய்டு (Android) அடிப்படையிலான நுண்ணறிவு கைபேசியிலும் (smart phone) இந்த பயன்பாட்டை மென்பொருளாக செயல்படுத்த முடியும். இதன் மூலம் களப்பொறியாளர்கள் கள ஆய்வு மேற்கொள்ளும்பொழுதே, எவ்வித நேர மற்றும் தகவல் இடைவெளியின்றி, பணிகளின் நிலையை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய இயலும்.

இந்த பயன்பாட்டு மென்பொருள் புவிசார் இடம் காட்டும் அமைப்புடன் (GPS) கூடிய நுண்ணறிவு கைபேசியினால் (smartphone) இயக்கப்பட்டு, பணிகளின் புகைப்படங்களை பணித் தளத்திலிருந்தே பதிவேற்றம் செய்ய உதவுகிறது. மேலும், இணைய தொடர்புடன் (online) மற்றும் இணைய தொடர்பு இல்லாத நிலையிலும் (off line) இந்த மென்பொருளை பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளதால், இணைய தொடர்பற்ற தொலைதூரப் பகுதிகளிலிருந்தும் கூட இதனை செயல்படுத்த முடியும். இந்த பயன்பாட்டு மென்பொருள் 'இணையம் மூலம் திட்டங்களை கண்காணிக்கும் முறையுடன்' இணைக்கப்பட்டுள்ளது. உபயோகிப்பாளரின் நுண்ணறிவு கைபேசியின் மூலம் பணிகளின் விவரங்களைப் பதிவிறக்கம் செய்து அவற்றில் தற்போதைய நிலையையும், புகைப்படத்தையும் "இணையம் மூலம் திட்டங்களை

கண்காணிக்கும் முறையில்'' பதிவேற்றம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மற்றும் திருப்பூர் மாவட்டங்களை முன்னோடியாக வைத்து, பல விரிவான களச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், இப்பயன்பாடு மற்ற அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. தேவையான உள்ளமைவு உடைய நுண்ணறிவு கைபேசிகள், அனைத்து மாவட்டங்களிலுள்ள உதவிப் பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்குரிய பயிற்சி, மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, 2014–15ல் எடுக்கப்பட்டுள்ள அனைத்து வீடுகள் மற்றும் சாலைப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் புவி–குறியீடு (geo-tagged) கொண்ட புகைப்படங்களை பணித்தளத்திலிருந்தே பதிவேற்றம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த அமைப்பு மற்ற அனைத்து திட்டப் பணிகளுக்கும் படிப்படியாக நீட்டிக்கப்படும். இந்த நிகழ் நேர கண்காணிப்பு முறையில் (RTMS), பணி மேற்கொள்ளப்படும் இடங்கள் புவியிட வேலிக்குள் (geo- fencing) கொண்டு வரப்படுவது ஒரு முக்கிய அம்சமாகும். இதனால் பிழைகள்/ முரண்பாடுகள்/ தவறான அறிக்கைகள் தவிர்க்கப்படுகின்றன.



## 6.2 இணைய வழி மதிப்பீட்டுச்சான்று

ஊரகக் குடியிருப்பு, ஊரக வளர்ச்சித் திட்டங்களின் முக்கிய அங்கங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும், இத்துறையானது சுமார் 1,60,000 வீடுகளை அனைத்து மாவட்டங்களிலும் கட்டுகிறது. துறையின் மூலம், முக்கிய கட்டுமானப் பொருட்களான சிமெண்ட், இரும்பு கம்பி, கதவு, ஜன்னல்களை வழங்குதல் மற்றும் குறித்த நேரத்தில் பட்டியல் தொகை வழங்குவது ஆகியனவே பணியினை உரிய நேரத்தில் முடிக்க முக்கிய காரணிகளாகும். பணிக்கான பட்டியல் தயாரிக்க தேவைப்படும் நேரத்தினை குறைக்கும் பொருட்டு, பயனாளிகளுக்கான பட்டியல் தொகையினை மதிப்பீட்டு சான்றுகள் மூலம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

பட்டியல் தொகை வழங்கும் முறையினை மேலும் துரிதப்படுத்தும் பொருட்டு, இணையவழி மூலம் மதிப்பீட்டுச் சான்று தயாரிக்கும் முறையினை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மதிப்பீட்டுச் சான்று தயாரிப்பதற்கும், பயனாளிகளுக்கு தொகை வழங்கப்படுவதற்கும் இடையிலான நேரம் மேலும் குறைக்கப்படும்.

இந்த முறையின் முக்கிய அங்கங்கள் பின்வருமாறு :

- இணையவழி மூலம் திட்டங்களை கண்காணிக்கும் முறையில் உள்ள குடியிருப்புத் திட்டத்தின்

பயனாளிகள் குறித்த அனைத்து தகவல்களும் நிகழ் நேர கண்காணிப்பு முறையுடன் இணைக்கப்படும்.

- tnrd.gov.in என்ற ஊவ (ம) ஊ துறையின் இணையதளத்தில் ஒரு பட்டியல் தயாரிக்கும் பிரிவு (Billing Module) உருவாக்கப்படும். இதில் ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட மதிப்பீட்டுச் சான்று மற்றும் தொகை வழங்கும் குறிப்பாணை ஆகியவை இருக்கும். இவை நிகழ் நேர கண்காணிப்பு முறை மற்றும் இணையவழி திட்டங்கள் கண்காணிக்கும் முறை ஆகியவற்றோடு இணைக்கப்படும். இதன் மூலம், நுண்ணறி பேசியில் வீடுகளின் முன்னேற்ற நிலை புதுப்பிக்கப்படும்போது, நிலை வாரியான மதிப்பீட்டுச் சான்று மற்றும் தொகை வழங்கும் குறிப்பாணை ஆகியவை தானாகவே தயாரிக்கப்படும். மதிப்பீட்டுச் சான்றில், பணித் தளத்தில் எடுக்கப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட புவி குறியீட்டுடன் (Geo-tagged) கூடிய வீட்டின் புகைப்படம் இருக்கும்.
- உரிய தகுதியுடைய அலுவலரது ஒப்பத்துடன், இணையவழி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுச் சான்று மற்றும் தொகை வழங்கும் குறிப்பாணை உதவியோடு பயனாளிகளுக்கு தொகை வழங்கப்படும்.

இதன் முதல் கட்டமாக, களப் பொறியாளர்கள், பணியின் நிலையினை உறுதி செய்த பின்னர்,



பணித்தளத்தில் இருந்து நேரடியாக தொகை வழங்குவதற்கான மதிப்பீட்டு சான்று தயாரிக்க இந்த முறை வழிவகுக்கும். அடுத்த கட்டத்தில், பட்டியல் தொகையினை நேரடியாக பயனாளியின் வங்கிக் கணக்கில் மின்னணு நிதி மாற்றல் ஆணை (eFTO) மூலம் செலுத்த வழி வகை செய்யப்படும்.

### 6.3. சிமெண்ட் வழங்கு தொடர் மேலாண்மை முறை (CSCMS)

பல்வேறு வளர்ச்சி பணிகளை நிறைவேற்றுவதை எளிதாக்கவும், வேகப்படுத்தவும், ஊவ (ம) ஊ துறை முக்கியமான கட்டுமானப் பொருட்களான சிமெண்ட், இரும்புக் கம்பி, தார், இரும்புக் கதவு மற்றும் ஜன்னல்கள் ஆகியவற்றை துறை மூலம் வழங்குகிறது. ஒவ்வொரு வருடமும், மிக அதிக அளவிலான கட்டுமான பொருட்கள் வட்டார கிடங்குகள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன. பொருட்களின் வரவு, பணிகளுக்கு வழங்குதல், தொகை வழங்குதல், கணக்கு வைப்பு மற்றும் தொகை பிடித்தம் செய்தல் ஆகியவற்றை கண்காணிக்கும் பொருட்டு, இந்த துறை, இணையவழி செயல்படும் ‘‘சிமெண்ட் வழங்கு தொடர் மேலாண்மை முறையை’’ தனியாக ஏற்படுத்தியுள்ளது. இந்த முறை, தேவையின் அடிப்படையிலான கொள்முதல் ஆணை வழங்குதல், தேவைக்கிணங்க கட்டுமானத்திற்கான பொருட்கள் வழங்குதல், முறையாக கணக்குகளைப் பதிவு செய்தல், குறித்த நேரத்தில் தொகை வழங்குதல்

போன்றவற்றிற்கு வழிகோலுகிறது. இதன் அடுத்த கட்டத்தில், இரும்பு கம்பி, தார் போன்ற பொருட்கள் வழங்குவதும், இணையத்தின் வழி கண்காணிக்கும் முறைக்கு கொண்டுவரப்படும். இணையத்தின் வழி செயல்படுத்தப்படும் சிமெண்ட் வழங்கு தொடர் மேலாண்மை முறை, தேசிய தகவலியல் மையம், சென்னை மூலமாக உருவாக்கப்பட்டுள்ளது.

## 6.4. விரிவான பணி செயல் வழி மேலாண்மை முறை (CWFMS)

இந்த அரசு, முழுமையான திட்ட வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் மேலாண்மை முறை அறிமுகப்படுத்தப்படும் என்ற அறிவிப்பின் மூலம், வெளிப்படையான, திறமையான மற்றும் முன் உதாரணமான நிர்வாகத்தினை வழங்கும் தனது உறுதிப்பாட்டினை வலியுறுத்தியுள்ளது. இதற்காக பணிகள் செயலாக்கும் முறையினை, மதிப்பீடுகள் தயாரித்தலில் இருந்து, ஒப்பந்தப்புள்ளி கோருதல், ஒப்பந்தப்புள்ளி வழங்குதல், தொகை வழங்குதல் வரை, ஒருமுகப்படுத்தி கணினிமயமாக்கப்படும்.

பல்வேறு செயலாக்க முறைகள், தகவல் பரிமாற்றம் மற்றும் தாமதமின்றி தீர்வுகள் போன்றவற்றை முறைப்படுத்தி நிர்வகிக்க, அரசின் இந்த கொள்கையினை ஒத்து, இந்த துறை ஒரு விரிவான இணையத்தின் வழி செயல்படும் பணி செயல்வழி மேலாண்மை முறையினை உருவாக்கும்.



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கட்டடங்கள், பாலங்கள், சாலைகள், குடிநீர் வசதி போன்ற பல்வேறு தரப்பட்ட பணிகளை அதிக அளவில் மேற்கொண்டு வருகிறது.

நீண்ட கால மற்றும் குறுகிய கால இலக்கினை அடைவதை உறுதி செய்திட, இத்துறையின் மூலம் பல்வேறு திட்டங்களின் கீழ் எடுக்கப்படும் பணிகளின் அளவும் அதன் எண்ணிக்கையும், இந்தப் பணிகளை பல கட்டங்களில் நெருக்கமாக கண்காணிப்பதை அவசியமாக்குகிறது.

பொதுவாக, பணிகளின் செயலாக்கம், வரிசையான, ஒன்று அல்லது அதிக அளவிலான, எளிதான அல்லது கடினமான நடவடிக்கைகள் மற்றும் செயலாக்க முறைகளை உள்ளடக்கியதாக இருக்கும். சாதாரணமாக ஒரு பணி, பிரேரணை சமர்ப்பித்தல், மதிப்பீடு தயாரித்தல், நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்குதல், ஒப்பந்தபுள்ளி கோருதல், பணிகள் செயலாக்கம், கண்காணிப்பு மற்றும் தொகை வழங்குதல் ஆகிய செயல்களை உள்ளடக்கியதாக இருக்கும். இணையவழி திட்டங்களை கண்காணிக்கும் முறையில் (OSMS), நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பின்னர், பணிகளின் செயலளவு முன்னேற்றம் மற்றும் நிதிச் செலவினம் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறது. பணிகளின் செயலாக்கத்தில் உள்ள பிற நிலைகள்/ செயலாக்க வழிமுறைகள் தற்போதுள்ள முறையில் எடுத்துக்

காட்டப்படுவதில்லை. இதனால் மற்ற செயல்பாட்டு வழி முறைகளில் ஏற்படும் காலதாமதம் அல்லது பிரச்சினைகள் இதில் பிரதிபலிக்கப்படுவதில்லை. தற்போது திட்டமிடப்பட்டுள்ள “விரிவான பணி செயல்வழி மேலாண்மை முறை” ஏற்கனவே உள்ள இணையவழி திட்டங்களை கண்காணிக்கும் முறை, சிமெண்ட் வழங்கு தொடர் மேலாண்மை முறை, இணைய சாலைகள் பட்டியல் போன்றவற்றுடன் ஒருங்கிணைக்கப்படும். இதன் மூலம் விரிவான பணி செயல்வழி மேலாண்மை முறையினை ஏற்படுத்த முடியும்.

விரிவான பணி செயல்வழி மேலாண்மை முறையை அறிமுகப்படுத்துவது, இந்த அரசின் திறமையான மற்றும் ஒளிவு மறைவற்ற நிர்வாகம் வழங்கும் உறுதியை அடைய எடுக்கப்படும் மற்றுமொரு முக்கிய நடவடிக்கையாகும்.



# 7. மனித வள மேம்பாடு

## 7. மனித வள மேம்பாடு

துறையின் பணியாளர்களும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு, அவர்களது நலனுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அதிக முன்னுரிமை அளிக்கிறது. அவர்களது பணிச் சூழலை மேம்படுத்துவதும், அவர்களது உரிமைகள் உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்வதும், பணியாளர்களின் ஆற்றலை மேம்படுத்தி துறை திறம்பட செயல்பட வழிவகுக்கும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த வகையில் மொத்தம் 57,981 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**அட்டவணை 7.1**

**வகைவாரியாக பணியாளர்கள் விவரம்**

| **அ) அரசு பணியாளர்கள்** | | |
|---|---|---|
| **வ. எண்.** | **பணியாளர் வகை** | **பணியாளர்கள் எண்ணிக்கை** |
| 1. | அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு | 1,455 |
| 2. | அரசிதழ் பதிவுறா பணியமைப்பு | 11,802 |
| 3. | பொறியியல் பணியமைப்பு | 5,335 |
| | **மொத்தம்** | **18,592** |
| **ஆ) உள்ளாட்சி பணியாளர்கள்** | | |
| 1. | வட்டார ஊராட்சி | 2,692 |
| 2. | கிராம ஊராட்சி | 36,697 |
| | **மொத்தம்** | **39,389** |
| | **நிகர மொத்தம்** | **57,981** |



### 7.1. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

**7.1.1.** கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் போன்ற பல்வேறு வகையான பணியிடங்களில் உள்ள காலி பணியிடங்களை நிரப்பிடுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது. இத்துறை பணியாளர்களுக்கு அவ்வப்போது வழங்கிட வேண்டிய பதவி உயர்வுகள் உள்ளிட்ட அனைத்து வகையான பயன்களும் உடனுக்குடன் கிடைப்பதை அரசு உறுதி செய்துள்ளது. **2013–14**ம் ஆண்டில் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் உள்ளிட்ட பணியிடங்களுக்கான தகுதி வாய்ந்தோர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்த **3** இணை இயக்குநர்கள் கூடுதல் இயக்குநர்களாகவும், தகுதி வாய்ந்த **21** உதவி இயக்குநர்கள் இணை இயக்குநர்களாகவும், தகுதி வாய்ந்த **85** வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதவி இயக்குநர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

**7.1.2.புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள்**

அரசாணை (நிலை) எண்.**63**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.**3**) துறை, நாள் **28.06.2013**ன்படி புது வாழ்வு திட்டத்தின் கீழ் ஒரு கூடுதல் இயக்குநர் பணியிடமும், அரசாணை (நிலை) எண்.**183**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.**3**) துறை, நாள்

31.12.2013ன்படி தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்ககத்தின் கீழ் (TNSRLM) 32 உதவி இயக்குநர் பணியிடங்களும் புதிதாக தோற்றுவிக்கப்பட்டன. அரசாணை (நிலை) எண்.171, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 13.11.2013ன் படி ஐநூறுக்கு மேற்பட்ட ஊராட்சிகளைக் கொண்ட விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கூடுதலாக 5 உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பணியிடங்களும் மற்றும் 5 உதவி இயக்குநர் (தணிக்கை) பணியிடங்களும் புதிதாக தோற்றுவிக்கப்பட்டன. மேற்படி உதவி இயக்குநர் அலுவலகங்களில் கீழ்க்கண்ட பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.2**

**ஒவ்வொரு உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் விபரம்**

| பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | மொத்த பணியிடங்கள் |
|---|---|---|
| உதவி இயக்குநர் | 1 | 10 |
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 2 | 20 |
| உதவியாளர் | 4 | 40 |
| இள நிலை உதவியாளர் | 3 | 30 |
| சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 | 10 |
| தட்டச்சர் | 1 | 10 |
| ஊர்தி ஓட்டுநர் | 1 | 10 |
| பதிவறை எழுத்தர் | 1 | 10 |
| அலுவலக உதவியாளர் | 2 | 20 |
| **மொத்தம்** | **16** | **160** |



**7.1.3. சட்டப்பிரிவு தோற்றுவித்தல்**

அரசாணை (நிலை) எண்.160, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 22.10.2013ல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் ஒரு சட்டப்பிரிவினை தோற்றுவித்து அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பிரிவில் துணை செயலாளர் (சட்டம்), இளநிலை உதவியாளர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**7.1.4.** இத்துறையிலுள்ள கூடுதல் இயக்குநர் முதல் உதவி இயக்குநர் நிலை வரையிலாக உயர் நிலை அலுவலர்கள் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாநில திட்டக்குழு, கால்நடை மற்றும் மீன் வளத்துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மோனோ ரயில், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், மன்னார் வளைகுடா உயிர்க் கோள காப்பகம் போன்ற பல்வேறு பிற துறை மற்றும் முகமை அலுவலகங்களில் மாற்றுப் பணியிடங்களில் பணிபுரிகிறார்கள்.

**7.2. பொறியியல் பிரிவு பணியமைப்பு**

**7.2.1.** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் செலவினம் மற்றும் வேலைகளின் எண்ணிக்கை மிக அதிக அளவில் கூடியுள்ளது. குறிப்பாக, நூற்றுக்கணக்கான இடங்களில் நடைபெறும் பணிகளை கண்காணிப்பது குறித்த

தேவை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதன்படி அரசாணை எண். 157, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள்: 22.10.2013ல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை நிறைவேற்ற கூடுதலாக தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவு பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

<u>அட்டவணை எண் 7.3.</u>

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளை மேற்பார்வையிட அனுமதிக்கப்பட்டப் பணியிடங்கள் விவரம்**

| வ. எண். | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | செயற்பொறியாளர்கள் | 5 |
| 2. | உதவி செயற்பொறியாளர்கள் | 10 |
| 3. | உதவிப் பொறியாளர்கள் | 100 |
| 4. | பணி மேற்பார்வையாளர்கள் | 385 |
| II. செயற்பொறியாளர் பதவிக்கான ஆதரவு பணியிடங்கள் | | |
| 1. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 1 |
| 2. | உதவியாளர் | 1 |
| 3. | ஓட்டுநர் | 1 |
| 4. | அலுவலக உதவியாளர் | 1 |
| III. உதவி செயற்பொறியாளர் பதவிக்கான ஆதரவு பணியிடங்கள் | | |
| 1. | உதவியாளர் | 1 |
| 2. | இளநிலை உதவியாளர் | 1 |
| 3. | ஓட்டுநர் | 1 |
| 4. | அலுவலக உதவியாளர் | 1 |
| | மொத்தம் | 508 |



**7.2.2.** அரசாணை எண். 13, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 11.02.2014–ன்படி புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 5 கூடுதல் செயற்பொறியாளர் பணியிடங்களை விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும், அம்மாவட்டங்களுக்குள் கூடுதல் செயற் பொறியாளர்களின் அதிகார எல்லை வரம்பினை நிர்ணயித்தும் உத்திரவிடப்பட்டுள்ளது.

**7.2.3.** அரசாணை எண். 15, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள்: 13.02.2014ல் ஏற்கனவே உள்ள 100 ஊரக வளர்ச்சி உபகோட்டங்களை மறுசீரமைப்பு செய்து கூடுதலாக 10 உபகோட்டங்களை தேவையின் அடிப்படையில் உருவாக்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இந்த 110 உபகோட்டங்களின் அதிகார எல்லை வரம்பினை ஊராட்சி ஒன்றியங்களை மறுபகிர்வு செய்வதின் மூலம் நிர்ணயம் செய்து அரசு உத்திரவிட்டுள்ளது.

**7.2.4** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உள்ள தொழில்நுட்ப பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவினை பலப்படுத்துவதற்காக கூடுதலாக செயற்பொறியாளர் / உதவி செயற்பொறியாளர்/ இளநிலை வரைதொழில் அலுவலர் / கணக்கு அலுவலர் பணியிடங்கள் அரசாணை எண். 161, ஊரக

வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள்: 24.10.2013ன்படி கீழ்க்கண்டவாறு அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்.7.4**

**மாநில அளவிலான தொழில்நுட்பப் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் விவரம்**

| வ. எண். | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| அ. மாநில நிர்வாகப் பிரிவு | | |
| 1. | கணக்கு அலுவலர் | 1 |
| 2. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| 3. | உதவியாளர் | 2 |
| ஆ. மாநில தொழில்நுட்ப பிரிவு | | |
| 4. | செயற்பொறியாளர் | 1 |
| 5. | உதவி செயற்பொறியாளர் | 1 |
| 6. | இளநிலை வரைதொழில் அலுவலர் | 1 |
| இ. மாநில நிர்வாக தகவல் அமைப்பு பிரிவு | | |
| 7. | தகவல் பகுப்பாளர் மற்றும் கணினி உதவியாளர் | 2 |
| | மொத்தம் | 9 |

**7.2.5.** அரசாணை எண். 139, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள்: 28.09.2013ன்படி கட்டிட மையத்தில் பணிபுரிந்த 10 திட்டப் பொறியாளர்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவிப்



பொறியாளர்களாக ஈர்த்துக் கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

**7.2.6.** 2013–2014ம் நிதியாண்டில் 17 பணிமேற்பார்வையாளர்களுக்கு இளநிலைப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**7.2.7** அரசாணை எண். 45, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள்: 23.05.2013ன்படி பி.இ.(சிவில்) படித்த 130 பணிமேற்பார்வையாளர்களுக்கு, உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெறுவதற்கான சிறப்பு விதிகளை தளர்வு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் பிரிவு பணி விதிகளில் பணிமேற்பார்வையாளர் மற்றும் இளநிலை வரைதொழில் அலுவலர் பதவிக்கு முதுநிலை பட்டியல் தயார் செய்வதில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டது. அந்த முரண்பாடுகளை களையும் விதமாக அரசாணை எண். 19, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள்: 24.02.2014ன்படி தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் பிரிவு பணிவிதிகள் (5)(A)க்கு உரிய திருத்தம் செய்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**7.2.8** 2013–14 ஆம் ஆண்டில் 108 சாலை ஆய்வாளர் நிலை II காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது.

**7.2.9.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினை சேர்ந்த செயற்பொறியாளர் / உதவி செயற்பொறியாளர் நிலையில் தொழில்நுட்பப் பணியாளர்களை தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகம், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டு கழகம் (சிப்காட்) போன்ற துறைகள் / நிறுவனங்களுக்கு மாற்றுப் பணியில் பணிபுரிய உத்திரவிடப்பட்டுள்ளது.

## 7.3 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு

**7.3.1.** 2011–12 –ம் ஆண்டு முதல் 2013–14–ம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமன முறையில் மொத்தம் 3735 காலிப்பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு நிரப்பப்பட்டுள்ளன.

**<u>அட்டவணை 7.5</u>**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமன முறையில் காலிப்பணியிடங்கள் 2011–12 முதல் 2013–14 வரை நிரப்பப்பட்டுள்ள விவரம்**

| பணியிடத்தின் பெயர் | நிரப்பப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உதவியாளர் | 1,534 |
| இளநிலை உதவியாளர் | 1,388 |
| தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர் | 813 |
| மொத்தம் | 3,735 |



**7.3.2.** 2011–12 முதல் 2013–14 –ம் ஆண்டு வரை வெவ்வேறு பதவிகள் வகித்த அலுவலர்களுக்கு அடுத்த கட்ட பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. **269** துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், **625** உதவியாளர்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், **920** இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள் உதவியாளர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். மேலும் கருணை அடிப்படையில் நியமனம் மூலம் **347** நபர்கள் இளநிலை உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். **86** பதிவறை எழுத்தர் / அலுவலக உதவியாளர் / இரவுக் காவலர் பணியிலிருந்தவர்கள் **10%** ஒதுக்கீட்டின் கீழும் **299** ஊராட்சி செயலர்கள் **20%** ஒதுக்கீட்டின் கீழும் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

**7.3.3.** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **09.04.2013** அன்று சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க கிராம ஊராட்சிகளில் கூடுதலாக **16,726** துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசாணை (நிலை) எண்.**129**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை நாள். **14.09.2013–ல்** ஆணைகள் வெளியிடப்பட்டது. துப்புரவுப் பணியாளர்களை நியமித்தல் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை **130** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் **14.09.2013–ல்** வெளியிடப்பட்டது. மேற்படி

அரசாணைகளின்படி மொத்தம் 16,457 துப்புரவுப் பணியாளர்கள் கிராம ஊராட்சிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**7.3.4** கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி செயலர்களுக்கான பணிவிதிகள் அரசாணை (நிலை) எண்.72 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள்.09.07.2013–ல் வகுக்கப்பட்டுள்ளது.

**7.3.5.** கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகுகளில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிபவர்களில் 15.09.2010–ல் 3 ஆண்டுகள் பணி முடித்த துப்புரவுப் பணியாளர்களுக்கு சிறப்புக் காலமுறை ஊதியம் ரூ.1300 – 3000 தர ஊதியம் ரூ 300/– வழங்க அரசாணை (நிலை) எண். 39 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை, நாள். 07.05.2013ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி 8,581 துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

**7.3.6.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பணிவிதிகளின்படி இதுவரை இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர்களிலிருந்து பதவி உயர்வு மற்றும் பணிமாற்றம் மூலமே உதவியாளர்/ஊர் நல அலுவலர் நிலை–1/ கணக்கர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வந்தன. ஆனால் உதவியாளர்



பணியிடங்களில் அதிக காலிப்பணியிடங்கள் இருந்த காரணத்தால் ஒருமுறை நிகழ்வாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அரசாணை (நிலை) எண். 35. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ4) துறை, நாள்.17.05.2011–ல் 3200 காலிப்பணியிடங்களில் 50% அதாவது 1600 பணியிடங்களை நிரப்ப ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. 2013–14 வரை மேற்படி 1600 பணியிடங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 1534 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. வரும் 2014–15–ம் ஆண்டில் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நேரடி நியமன உதவியாளர்களுக்கான பணி விதிகள் வகுக்கப்படும்.

**7.3.7.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்த உயர் அலுவலர்கள் அலுவலக நிமித்தமாக சென்னை வரும்போது தங்குவதற்கு ஏதுவாக, காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கத்தில் உள்ள, பரங்கிமலை ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் 12,500 ச.அடியில், **தங்கும் விடுதி** கட்டுவதற்காக அரசாணை எண்.103, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (எஸ்.ஜி.எஸ். IV) துறை, நாள் 8.8.2013–ன்படி ரூ.662.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் முதல் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**7.3.8.** மேலும், திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் பகுதியில் 15,200 ச.அடியில் ஊ.வ (ம) ஊ துறை **அதிகாரிகளுக்கான குடியிருப்புகளை** கட்டுவதற்காக அரசாணை எண்.168, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (எஸ்.ஜி.எஸ். IV) துறை, நாள் 5.11.2013ன்படி ரூ.699.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் முதல் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**7.3.9.** 2014–15ஆம் ஆண்டிற்கு **பகுதி–II** திட்டத்தின் கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநருக்கு குடியிருப்பு கட்டவும், தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பொறியியல் பிரிவிற்கு ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் பெரம்பலூர், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்களுக்கு (வளர்ச்சி) தலா ஒரு ஈப்பு வீதம் 3 ஈப்புகள் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**7.3.10.** 2014–15ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியிலிருந்து 33 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளது. அதில் 8 வாகனங்கள் கழிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாகவும், புதியதாக



தோற்றுவிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு 25 புதிய வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளது.

### 7.4. திறன் மேம்பாடு

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையினைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தத்தம் கடமைகளையும், பொறுப்புகளையும் சிறப்பாக நிறைவேற்றிடவும், ஊரக வளர்ச்சிக்கான திட்டங்களை செவ்வனே செயல்படுத்திடவும் திறன் மேம்பாடானது ஒரு முக்கிய கருவியாகும். மாநில அளவில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்திய விஜய நகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய 5 மண்டலங்களில் அமைந்துள்ள 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

#### 7.4.1. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் பயிற்சி பங்கேற்பாளர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் சார்பு

துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 7.4.2. பயிற்சி திட்டங்கள்

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் நடைபெறும் பயிற்சிகளில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் மற்றும் தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் திட்டங்கள், ஊரக சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி ஆகிய பொருள்கள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவை தவிர தொழில்நுட்பப் பணிகள் மற்றும் கணினி பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. 2014-15 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் மூலம் குறைந்தபட்சம் 5,000 லிருந்து அதிகபட்சம் **25,000** நபர்களுக்கு பயிற்சி அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.4.3. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கூடுதல் இயக்குநர்/ இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்களால் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.



### 7.4.4. நிதி

ஊதியம் மற்றும் ஊதியம் சாராத வழக்கமான செலவினங்களுக்கு தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு நிதி வழங்குகிறது. மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20/– இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது.

### 7.4.5. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனமானது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் ஓர் சங்கமாக **1990–**ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலைநகரில் தனது சொந்த இடத்தில் செயல்பட்டு வருகிறது.

### 7.4.6. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் குறிக்கோள்

பல்வேறு நிலையிலான பயிற்சியாளர்களின் அறிவினை மேம்படுத்துவதும், அவர்களின் தனிநபர் திறமையை உயர்த்துவதும் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை மாற்றுவதின் மூலம் அரசின் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்த வைப்பதே இந்நிறுவனத்தின் முதன்மை குறிக்கோளாகும்.

### 7.4.7. விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாக பணியாளர்கள்

இந்நிறுவனத்தில் பயிற்சிகள் நடத்துதல் மற்றும் அது சார்ந்த பணிகளை செய்திட விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. மேலும், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஐந்து விரிவுரையாளர்கள் / ஆலோசகர்கள் ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### 7.4.8. பயிற்சிக்கான நிதி ஆதாரம்

இந்நிறுவனம் பல்வேறு வகையான பயிற்சிகளை நடத்துவதற்கு மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஹைதராபாத் மற்றும் மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் பயிற்சித்துறை ஆகியவற்றிடமிருந்து நிதியினை பெறுகிறது. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் நிர்வாகச் செலவினங்களுக்கு நிதி உதவியினை (Grants in aids) பெறுகின்றது. பயிற்சி தொடர்பான அடிப்படை ஆதார வசதிகளான பயிலரங்கு கூடங்கள், பயிற்சியாளர் தங்கும் விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கு மத்திய அரசின் ஊரக அமைச்சகம் 100 விழுக்காடு நிதி உதவி வழங்குகிறது.



### 7.4.9. பயிற்சி பங்கேற்பாளர்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு, கூட்டமைப்பு உறுப்பினர்கள், சமுதாய பயிற்றுநர்கள், கிராம தன்னார்வலர்கள், பயிற்சி வல்லுநர்கள், பயிற்றுநர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர நபர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

### 7.4.10. பயிற்சி முறைகள்

இந்நிறுவனத்தில் நடத்தப்படும் பயிற்சிகளில் ‘விரிவுரை மற்றும் கலந்துரையாடல் அடிப்படையிலான பயிற்சி முறை’ மற்றும் பயிற்சி சார்ந்த விளையாட்டுகள், தனி நடிப்பு, புத்துணர்வு நடவடிக்கைகள், பங்கேற்பு அணுகுமுறைகள், குழு விவாதங்கள், கள பணி வெற்றி கதைகளை கூறுதல், அனுபவ பகிர்வு, பட்டறிவுப் பயணங்கள், பயிற்சி அட்டைகள் (Charts Preparation) தயாரித்தல் செயல்முறை பயிற்சி ஆகியவற்றோடு குழு அடிப்படையிலான பணிகள் ஆகிய பல்வேறு விதமான பயிற்சி முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

### 7.4.11. பயிற்சிகள் நடத்துதல்

இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை மறைமலைநகரில் உள்ள நிறுவன வளாகத்தில்

நடத்துகின்றது. பிற பயிற்சிகளை வெளி வளாக பயிற்சிகளாக மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது

**7.4.12. பயிற்றுநர்கள்**

இந்நிறுவனத்தில் பணிபுரியும் பல்வேறு விரிவுரையாளர்கள் தவிர தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஐதராபாத், தேசிய தகவல் தொழில்நுட்ப மையம், சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள தொலையுணர்வு மையம், சென்னை, அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை, விவசாய அறிவியல் மையம், காட்டுப்பாக்கம் மற்றும் திண்டிவனம் போன்ற நிறுவனங்களிலிருந்து சிறப்பு விரிவுரையாளர்கள் பயிற்சிக்கு பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களைத் தவிர சிறப்பாக பணியாற்றும் கிராம ஊராட்சித்தலைவர்கள், பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள், மகளிர் திட்டத்தின் மாவட்ட முதன்மை பயிற்றுநர்கள் மற்றும் சமுதாய வள பயிற்றுநர்கள் ஆகியோரும் பயிற்சிகளில் பயிற்றுநராக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர்.

**7.4.13. நிறுவன உள்கட்டமைப்பு வசதிகள்**

பயிற்சிகளை நடத்துவதற்குத் தேவையான குளிரூட்டப்பட்ட பயிற்சி அறைகள், பயிற்சி உபகரணங்கள், ஒலி, ஒளி அமைப்பு சாதனங்கள், படிப்பகத்துடன் கூடிய நூலகம், இணைய தள வசதியுடன் கூடிய கணினி பயிற்சி



கூடங்கள், பயிற்சியாளர்கள் தங்கி உணவருந்தக் கூடிய வகையில் விடுதி வசதி, தானியங்கி மின்னாக்கி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் உள்ளன.

**7.4.14. 2013–14–ஆம் ஆண்டின் சாதனைகள்**

- தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RGSY) பயிற்சி திட்டத்தின் கீழ் கணினி தகவல் தொழில்நுட்பம் குறித்து கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் கிராம ஊராட்சி செயலர்கள் ஆகியோருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் 16,103 நபர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் திட்டத்தில் பணியாற்றும் பணித்தள பொறுப்பாளர்கள் 49,673 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.
- புதிய விடுதிக் கட்டடம் ரூ.1436.13 இலட்சம் மதிப்பீட்டிலும் பல்நோக்கு கருத்தரங்கு கூடம் ரூ.814.31 இலட்சம் மதிப்பீட்டிலும் இந்நிறுவன வளாகத்தில் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகள் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

- 2013-14ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மூலம் 2,19,891 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் 90,275 நபர்கள், துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் 1,29,616 நபர்கள் ஆகியோர் அடங்குவர்.

**7.4.15. 2014-15ஆம் ஆண்டின் முக்கியத்துவம் வழங்கப்படும் இனங்கள்**

**அ) ராஜீவ்காந்தி ஊராட்சிகள் வலிமைப்படுத்தும் திட்டம் (RGPSA)**

ராஜீவ்காந்தி ஊராட்சிகள் வலிமைப்படுத்தும் திட்டம் மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் நிதி உதவி மற்றும் மாநில அரசின் நிதி உதவியோடு செயல்படுத்தக்கூடிய திட்டமாகும். இதில் மத்திய அரசு 75 விழுக்காடு நிதியினையும், மாநில அரசு 25 விழுக்காடு நிதியையும் பகிர்ந்து அளிக்கின்றன. இத் திட்டத்தில் பின்வரும் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன.

**(i)** மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் மாநில அளவிலான ஊராட்சி வள மையம் ரூ.1.00 கோடி செலவில் அமைக்கப்படும். இந்த மாநில ஊராட்சி வள மையத்தில் நவீன பயிற்சி உபகரணங்களுடன் கூடிய பயிற்சி அறைகள், ஊராட்சி தொடர்பான விரிவுரையாளர்கள்/ஆலோசர்களுக்கான அறைகள்,



நூலகம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது. மாநில ஊராட்சி வள மையம் பயிற்சிக்கான கருப்பொருள்கள், பயிற்சி பாடத்திட்டம், பயிற்சி கையேடுகள் ஆகியவற்றை வடிவமைப்பதுடன் பயிற்றுநர்களுக்கான பயிற்சி, செயல் ஆராய்ச்சி ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

**(ii)** மாவட்ட அளவிலான ஊராட்சி வள மையம் 3 மாவட்டங்களில் தலா ரூ. 50.00 இலட்சம் செலவில் தளவாடங்களுடன் கூடிய புதிய கட்டிடத்துடன் அமைக்கப்படவுள்ளது.

**(iii)** வட்டார அளவிலான ஊராட்சி வள மையங்களுக்கான பயிற்சி உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் ரூ.10.00 இலட்சம் வீதம் 100 வட்டார வள மையங்களுக்கு வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு வட்டார ஊராட்சி வள மையத்திற்கும் கணினி, அச்சு இயந்திரம், ஸ்கேனர், ஸ்மார்ட் போர்டுகள், ஓவர்ஹெட் புரொஜக்டர்கள், வண்ண நகல் இயந்திரம் மற்றும் உள்வட்ட தொலைபேசி இணைப்பு போன்றவை வழங்கப்படும்.

**(iv) மாநிலத்திற்குள்ளும் மற்றும் வெளிமாநிலங்களுக்கும் பட்டறிவு பயணம்**

தெரிவு செய்யப்பட்ட 200 தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் நமது மாநிலத்திற்குள்ளேயே சிறப்பான செயல்பாடுகளைக்

கொண்டுள்ள இடங்களுக்கு பட்டறிவு பயணம் ரூ.12.00/- இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது. இதனைப் போன்றே, தெரிவு செய்யப்பட்ட 200 தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் வெளி மாநிலங்களுக்கு பட்டறிவு பயணம் ரூ.30.00இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

**(v) பயிற்சிகள்**

சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பயிற்சி, நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, குடிநீர் வழங்கல் குறித்த பயிற்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சி, தலைமைத்துவம் மற்றும் தொடர்பு திறன்கள் குறித்த பயிற்சி, பஞ்சாயத்து ராஜ் நிர்வாகம் குறித்த பயிற்சி, ஊரக வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்துதல் குறித்த பயிற்சி, பெண் கிராம ஊராட்சி தலைவர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின கிராம ஊராட்சி தலைவர்களுக்கான பயிற்சிகள் நடத்தப் படவுள்ளது.

**7.4.15 ஆ) சமுதாய பங்கேற்புடன் கூடிய பேரிடர் மேலாண்மைத்திட்டம்**

சமுதாய பங்கேற்புடன் கூடிய பேரிடர் மேலாண்மைத் திட்டம் என்பது கடலோர பேரிடர் இன்னல் குறைப்பு திட்டத்தின் ஒரு பகுதி ஆகும். இத்திட்டத்தினை உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.



மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அமைப்பாக உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர் கால கட்டங்களில் கடலோர பகுதி வாழ் மக்களின் பாதிப்புகளைக் குறைக்க மற்றும் அவ்வாறான காலங்களில் ஏற்படும் இடையூறுகளை சமாளிக்க அவர்களுக்குத் தேவையான திறன்களை வலுப்படுத்த ஆபத்து குறைப்பு திட்ட வரைவினை தயார் செய்தல் ஆகும். கடலோர பகுதிகளில் வசிக்கக் கூடிய பாதிப்புக்குள்ளாகும் சமுதாயத்தினர் இத்திட்டத்தின் முக்கிய பங்காளர்களாக உள்ளனர். மேலும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும், சமுதாயம் சார்ந்த அமைப்புகளும் அப்பகுதியில் பணியாற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பயிற்றுநர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரும் இத்திட்டத்தின் பங்காளர்கள் ஆவர்.

இத்திட்டமானது காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூார், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், தஞ்சாவூர், விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருவாரூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள கடற்கரையோர கிராமங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூ.15.00/- கோடி ஆகும். ஜூன் 2013 முதல் ஜூலை

2018 வரையிலான காலகட்டத்திற்கு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**இந்நிறுவனத்தால் 2014-15 ஆம் ஆண்டில் ரூ.2,285.13 இலட்சம் செலவில் 2,55,223 நபர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.**



## 8. புது வாழ்வு திட்டம்

## 8. புது வாழ்வு திட்டம்

தமிழ்நாடு அரசின் முன்னோடித் திட்டமான புது வாழ்வு திட்டம் வறுமையை அகற்றுவது மற்றும் அனைத்து தரப்பினர்களின் வளர்ச்சியை உள்ளடக்கியதாகும். உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டம், மக்களை முன்நிறுத்தி அவர்களாகவே தங்களின் முன்னேற்றத்திற்கு பொறுப்பாகும் அணுகுமுறையைப் பின்பற்றி அமைந்துள்ளது. ஏழைகள் மற்றும் வசதிவாய்ப்பற்ற மக்களை, சமுதாய வளர்ச்சி பாதையில் இணைத்திட வழிவகுப்பதுடன் அவர்கள் தங்களது வாழ்வாதாரத்தில் முக்கிய முடிவுகள் மேற்கொள்ளவும், முழுமையாக இத்திட்டத்தில் பங்கேற்று தங்களின் வளர்ச்சியை தாங்களே கண்காணிக்கும் ஆற்றலை பெற்றவர்களாகவும் உருவாக்கியுள்ளது. இத்திட்டம் கிராம அளவில் மக்களை ஆற்றல் படைத்தவர்களாக மாற்றுதல் மற்றும் நிலையான வாழ்வாதார மேம்பாடு அடையச் செய்தல் ஆகிய குறிக்கோள்களை, சரியான பயனாளிகளின் தேர்வின் அடிப்படையில் வெளிப்படையான வள ஆதார பங்கீடு மற்றும் மக்கள் பங்கேற்பு முறையிலான நடவடிக்கைகள் மூலம் செயல்பட்டு சாதனை அடைந்துள்ளது.

புது வாழ்வு திட்டம் வலுவான மக்கள் அமைப்புகளின் பல்வேறு செயல்பாடுகளை மையமாக வைத்து உருவாகியுள்ளது. இலக்கு மக்களை முதன்மையாக கொண்டு முனைப்புடன் செயலாற்றும் இவ்வமைப்புகள்



மக்களின் திறனை வளர்த்து, நிலைத்த வாழ்வாதார மேம்பாடு அடையச் செய்வது மட்டுமின்றி வெளிப்படையான நிர்வாக செயல்பாடுகள் மூலம் மக்களை சமுதாய பொறுப்புணர்வுடன் செயல்படச் செய்து சிறந்து விளங்குகிறது.

### 8.1 திட்டசெயலாக்க பகுதிகள்

இத்திட்டம் 2005ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தமிழ்நாட்டில் உள்ள 16 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களில் உள்ள 2509 ஊராட்சிகளில் 5.8 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.717 கோடி நிதி ஒதுக்கீட்டில் துவங்கப்பட்டது. மேலும் 2011–12 ஆம் ஆண்டில், 10 மாவட்டங்களில் பின் தங்கிய 50 வட்டாரங்களில் உள்ள 1665 ஊராட்சிகளில் 3.8 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் ரூ.950 கோடி செலவினத்தில் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 9.6 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையும்.

### 8.2. திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

- வலுவான மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய மக்கள் அமைப்புகள் மூலம் ஏழை மற்றும் நலிவுற்றோர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடையவும், சமூக பொருளாதார பங்களிப்பு மற்றும் ஆற்றல் பெற்றிடச் செய்வதுமே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

- ஏழை மக்கள், தங்களது திறன் வளர்ப்பதற்கும் மற்றும் நிலையான வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் நிதி பெறுவதற்கும் புது வாழ்வு திட்டம் தனிக்கவனம் செலுத்துகிறது.
- இதனை உறுதி செய்வதற்காக மக்களை முன்நிறுத்தி அவர்கள் தங்களின் முன்னேற்றத்திற்கு பொறுப்பாகும் மாறா கோட்பாட்டு அணுகு முறையை பின்பற்றுகிறது. மேலும் இத்திட்டத்தின் அனைத்து பங்குதாரர்களையும் அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் சமூக பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைதன்மையையும் கட்டுப்படுத்தும்.

**8.3. திட்ட செயலாக்க முறை**

இத்திட்டம் ஏழை மக்களின் தேவைகளை கண்டறிந்து மக்களுக்காக மக்களே திட்டமிட்டு செயலாற்றும் அணுகு முறையை பின்பற்றி, இலக்கு மக்களை ஆற்றல் படுத்தும் பொருட்டு முனைப்பான செயல்பாடுகளால், நிலையான வாழ்வாதாரம் பெற்று வருவாய் பெருகிட வழிவகை செய்கிறது. மேலும், பல்வேறு அரசு திட்டங்களின் மூலம் அளிக்கப்படும் நலன்களை உறுதிப்படுத்தவும், தங்கள் உரிமைகளை பெற்றிட மக்களை ஆற்றல் படுத்திட பிற துறைகளுடன் இணைந்தும் இத்திட்டம் செயல்படுகிறது.

வாழ்வாதார மேம்பாடு மற்றும் ஆற்றல் படுத்துதல் ஆகிய குறிக்கோள்களை அடைந்திட, கீழ்க்கண்ட இரண்டு



வகையான செயல்திட்டங்கள் திட்டப் பகுதிகளில் நிறைவேற்றப்படுகின்றன:

- முதற்கட்டமாக இத்திட்டம் துவங்கப்பட்ட 16 மாவட்டங்களில் இலக்கு மக்களின் சமூக பொருளாதார, மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதி முதலீடுகள் மற்றும் முயற்சிகளை வலுப்பெறச் செய்து அடித்தள மக்கள் அமைப்புகள் நிலைத்த ஆதாரம் பெற்று செயல்பட, மாவட்ட மக்கள் கற்றல் மையங்கள் (மகமைகள்) போன்ற இரண்டாம் தலைமுறை நிறுவன அமைப்புகள் துவங்கப்பட்டு அவற்றின் மூலம் திட்ட செயல்பாடுகளை விரிவாக்கம் மேற்கொண்டு, இலக்குமக்களின் நிலையான வாழ்வாதாரத்தை ஒருமுகப்படுத்தி செயல்படுத்துவது இவ்வமைப்பின் முதல் செயல்திட்டமாகும். மகமை மூலம் இலக்கு மக்களுக்கு நீடித்த நிலைத்த வாழ்வாதாரம் மற்றும் ஆற்றல் படுத்தப்படும்.
- இரண்டாம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 10 மாவட்டங்களில் ஏற்கனவே திட்ட செயலாக்கத்திலுள்ள முதற்கட்ட மாவட்டங்களில் பின்பற்றப்பட்ட செயல்பாடுகளின் அடிப்படையில், ஏழை, எளியோர் மற்றும் நலிவுற்றோர்கள் கண்டறியப்பட்டு, ஆற்றலளிப்பு மற்றும் சமுதாய ஒருங்கிணைப்புடன் செயலாற்றப்படும். இதற்கான

விரிவாக்க உதவி மகமை மூலம் அளிக்கப்படும். அடிப்படை மாறா கோட்பாடுகள் மற்றும் செம்மையான நிர்வாக நெறிமுறைகள், அனைத்து செயல்பாடுகளிலும் பிரதிபலிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 8.4. திட்ட செயலாக்க அமைப்பு

#### 8.4.1. மாநில அளவில்

தமிழ்நாடு புது வாழ்வு சங்கம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் தலைமையில் செயல்படுகிறது. இச்சங்கம் மாநில அளவில் திட்ட நிர்வாகத்தினை மேற்கொள்கிறது. திட்ட இயக்குநர் தலைமையில் மாநில திட்ட மேலாண்மை அலகு செயல்படுகிறது. திட்ட செயல்பாடுகளை சரியான முறையில் வழிநடத்த வேண்டிய சிறப்புத் திறன்கள் கொண்ட வல்லுநர் குழு இதில் அடங்கும். திட்டத்தின் நிர்வாகம், செயலாக்கம், வழிநடத்துதல், நிதி விடுவித்தல் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றை மாநில அலகு மேற்கொள்கிறது.

#### 8.4.2. மாவட்ட அளவில்

மாவட்ட அளவில், புது வாழ்வு சங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் செயல்படுகிறது. மாவட்ட திட்ட மேலாண்மை அலகிற்கு மாவட்ட திட்ட மேலாளர் தலைமை வகிக்கிறார். இவருடன் இணைந்து செயல்பட உதவித் திட்ட மேலாளர்கள் குழு மற்றும் பகுதி அளவில் திட்ட ஒருங்கிணைப்பு அணி செயல்படுகிறது.



#### 8.4.3. பகுதி அளவில்

அடித்தள மக்கள் அமைப்புகளுக்கு உறுதுணையாக 10–15 கிராம ஊராட்சிகள் அடங்கிய ஒவ்வொரு களப்பகுதிக்கும் 5 நபர்கள் கொண்ட திட்ட ஒருங்கிணைப்பு அணி செயலாக்கத்திற்கு தேவையான உதவி அளிக்கின்றது.

#### 8.4.4. கிராம அளவில்

கிராம அளவிலான திட்ட செயல்பாட்டிற்கு, திட்டத்தால் கண்டறியப்பட்ட இலக்குமக்களை உள்ளடக்கிய தன்னாட்சி அமைப்பாக கிராம வறுமை ஒழிப்பு சங்கம் செயல்படுகிறது. மிகவும் ஏழை, மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட நலிவுற்றோர் மற்றும் மலைவாழ் மக்கள் ஆகியோர் பங்கேற்பு முறையில் மக்கள் நிலை ஆய்வு மூலம் கண்டறியப்படுகின்றனர். இலக்கு மக்களின் தேவையான சேவைகளை பெற்றிடவும், அவர்களின் நலனுக்காக செயல்படக்கூடியதாகவும் இருந்திடும் வகையில் வலுவான மக்களமைப்புகளை உருவாக்குவதில் திட்டம் கவனம் செலுத்துகிறது. மேலும், ஏழைகளின் திறன்களை வளர்த்து அவர்கள் வறுமையிலிருந்து மீள்வதற்கு தேவையான ஆற்றல் அளிக்கிறது.

ஊராட்சிமன்றத் தலைவரை தலைவராகக் கொண்டு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் கீழ்மட்ட அளவில் உயர்வான அமைப்பாக, திட்ட செயல்பாடுகளை கள அளவில் அமல் படுத்துதல், இலக்கு மக்களின் தேவையை அடையச்செய்தல்,

அனைத்து சமூக செயல்பாடுகளும் செய்ய அவர்களது திறமையை வளர்த்தல் ஆகியவற்றின் மூலம் கடை நிலை சேவையினை உறுதி செய்ய வழி வகுக்கிறது. கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மேம்பட்ட நிலையான கிராம கற்றல் மையங்களாக செயல்படும். இதன் வாயிலாக அரசு திட்டங்கள், இலக்கு மக்களுக்கான உரிமைகள், சந்தை விலை, தொலைதூர மருத்துவ ஆலோசனை, வாழ்க்கை வழிகாட்டி, போன்றவைகளை பெற உறுதுணையாக செயல்படுகிறது.

### 8.5. முக்கிய செயல்பாடுகள்

**8.5.1. விழிப்புணர்வு ஏற்படுத்தும்** வகையில், மக்கள் தொடர்பு நடவடிக்கைகள், சீரான திறன் வளர்ப்பு பயிற்சிகள் மூலம் மக்களமைப்புகளால் கண்டறியப்பட்ட ஏழை மக்களுக்கு தேவையான தகவல் அளித்து திறன்கள் மேம்படுத்தப்படுகின்றன.

**8.5.2. மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிதல்** ஒரு சிறந்த முறையாக உருவெடுத்துள்ளது. இது சமூக வரைபடம் மற்றும் பொருளாதார நிலை மதிப்பீட்டின் அடிப்படையில், இலக்கு மக்களை கண்டறியும் முறையைப் பயன்படுத்தி, அம்மக்களின் வறுமையை அகற்றிடவும், பல்வேறு செயல்பாடுகள் மூலம் வறுமையின் பிடியிலிருந்து அவர்களை வெளிக்கொணரவும், திட்ட பயன்கள் நேரடியாகச் சென்றடைவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.



### 8.5.3. கிராம அளவில் மக்கள் அமைப்புகள்

- கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், இலக்கு மக்களுக்கான சேவைகள் மற்றும் உரிமைகளை திட்ட நிதியிலிருந்து அல்லது பிற திட்டங்களிலிருந்து உறுதியாக பெற்றிட முனைப்புடன் செயல்படுகிறது.
- திட்ட மாறா கோட்பாடுகள் பின்பற்றப்படுவதைக் கண்காணிக்கும் அமைப்பாக சமூக தணிக்கை குழு செயல்படுகிறது. அனைத்து இலக்கு மக்கள் அமைப்புகளின் திட்ட செயல்கள் மற்றும் செயல்பாடுகளை கண்காணித்து அதன் விவரங்களை கிராம சபைக்கு நேரடியாக சமர்பிக்கின்றது.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் புது வாழ்வு திட்ட நிதி, நபார்டு (ADFT) மற்றும் வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற்று சுய உதவிக் குழுவின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு இடைநிதி நிறுவனமாக செயல்படுகிறது.
- ஊராட்சி அளவில் ஏழை மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்தி வளர்ச்சி பரிமாணத்தின் அனுகூலங்களை பெற்றுத் தருவதற்கு ஒத்த தொழில் குழுக்கள் செயல்படுகின்றன.

கடை நிலை வரை சேவைகள் திட்ட மக்களுக்கு சென்றடைவதையும் திட்டம் நீடித்த நிலைத்த தன்மை அடைவதையும், இம்மக்கள் அமைப்புகள் உறுதி செய்கின்றன. இலக்கு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மேற்கூறப்பட்ட அனைத்து மக்கள் அமைப்புகளுக்கும் புது வாழ்வு திட்டப் பணியாளர்கள் உறுதுணையாக இருக்கின்றனர்.

**8.5.4. நலிவுற்ற தன்மை குறைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு** பெற்றிட, முனைப்புடன் கூடிய சிறப்பான சேவைகள் மூலம் ஏழை, இளைஞர், மாற்றுத் திறனாளி, மலைவாழ் மக்கள் மற்றும் நலிவுற்ற மக்கள் பயன் அடைவதை இத்திட்டம் உறுதி செய்கிறது. திட்டத்தின் முக்கிய குறிக்கோள் மக்களை பாதிக்கக்கூடிய இடர்களைக் கண்டறிந்து அவற்றைத் தவிர்த்திட மக்கள் பங்கேற்புடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு ஆற்றலளிப்பின் அடுத்த நிலைக்கு கொண்டுச் செல்லுதல் மற்றும் இலக்கு மக்களிடையே நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்கிடுதல். ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீடு, தமிழக அரசின் பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களின் வாயிலாக அளிக்கப்படும் உதவிகள் மற்றும் ஒய்வூதியம் போன்ற பயன்களைப் பெற்றுத் தருதல், மருத்துவ உதவி, உணவு மற்றும் சுய தேவைகள் போன்றவற்றை பூர்த்தி செய்வதால் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. இவ்வாறு நலிவுற்ற தன்மை குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் சமூக பாதுகாப்பு மூலம் இலக்கு மக்கள் குடும்பங்கள் மீண்டும் வறுமையில் சிக்கி விடாமல்



பாதுகாத்து கொள்ளும் ஆற்றல் பெற்றிட இத்திட்டம் வழிவகை செய்கிறது.

**8.5.5. இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்கான திறன் வளர்ப்பு** பெறும் வகையில், வேலைவாய்ப்பு சந்தையில் தேவைப்படும் திறன்களைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் அவர்களின் திறன்களைக் வளர்ப்பது, வாழ்வாதார மேம்பாட்டிற்காக திட்டத்தால் மேற்கொள்ளப்படும் ஒரு பெரும் முயற்சியாகும். 18 முதல் 35 வயதுடைய வேலைவாய்ப்பற்ற அல்லது தகுந்த வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு உரிய பயிற்சிகளால் தேவையான திறன்களை மேம்படுத்தி வேலைவாய்ப்பு பெறச் செய்வது, அவர்களை வேலை வாய்ப்பு முகாம்களில் கலந்து கொள்ளச் செய்து நேரடி வேலைவாய்ப்பு பெற வழிவகை செய்வது ஆகியனவற்றை இத்திட்டம் மேற்கொள்கிறது.

**8.5.6. வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு,** கிராமம் மற்றும் கிராமங்களுக்கு இடையே ஒத்த தொழில் குழுக்கள் வாயிலாக வருவாய் பெருக்கும் செயல்பாடுகள் மூலம் சொத்துக்களை உருவாக்கி, வருவாய் மேம்பாட்டிற்கான வாய்ப்புகளைக் கண்டறிவது (பண்ணை மற்றும் பண்ணை சாரா) மற்றும் சந்தைப்படுத்துதலைக் கருத்தில் கொண்டு கிராம அளவில் தொழில் நடவடிக்கைகளை, இத்திட்டம் மேற்கொள்கிறது. ஒத்த தொழில் குழுக்கள் அமைப்பதன் மூலம், தொழில் பெருக்கத்தால் கிடைக்கும் நன்மைகள், பொதுவான உட்கட்டமைப்புகள் மூலம் தேவையான மூலப்பொருட்களை

கூட்டுக்கொள்முதல் செய்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றால் ஏற்படும் பயன்களை பெற இயலும்.

**8.6. இரண்டாம் கட்ட நிறுவன கூட்டமைப்புகள்**

இரண்டாம் கட்ட நிறுவன கூட்டமைப்புகளான வட்டார மற்றும் மாவட்ட மக்கள் கற்றல் மையங்கள் (மகமைகள்) திட்டக்காலத்திற்கு பின்பும் மக்கள் தொடர்ந்து சேவைகளைப் பெற்றிடும் வகையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்புகள் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சமூக வல்லுனர்கள் மற்றும் ஒத்த தொழில் குழுக்களின் கூட்டமைப்புகளாகத் தொடர்ந்து கிராம அளவிலான மக்களமைப்புகளுக்கு உறுதுணையாக இருந்து, தேவையான உதவிகளைப் புரிந்து, நீடித்த நிலைத்த தன்மை பெற்று வலுவான அமைப்புகளாக உருவாகி பணியாற்றும் நோக்கத்துடன் துவங்கப்பட்டுள்ளது. சமூக அமைப்புகளான இவைகள் இலக்கு மக்கள் தரமான சேவைகளை பெறுவதற்கும், வாழ்வாதார மேம்பாட்டிற்கான கூட்டு நடவடிக்கைகளை கண்டறிவதற்கும் மற்றும் அவற்றை துவங்கி வழிநடத்த தேவையான முயற்சிகள் மேற்கொள்வதற்கும் கிராமங்களுக்கிடையே எழும் பிரச்சினைகளை களைந்திட உதவும். இக்கூட்டமைப்புகள் தங்களுடைய செயல்பாடுகள் மற்றும் அடிப்படை மக்கள் அமைப்புகளின் செயல்பாடுகளை பொறுத்து திட்ட நிதி பெறும்.



**8.7. ஒத்த தொழில் குழுக்கள் கூட்டமைப்பு**

வாழ்வாதார செயல்பாடுகளுக்காக ஒத்த தொழில் குழுக்கள் (CLG) ஒருங்கிணைக்கப்பட்டு, ஒத்ததொழில் குழுக்கள் கூட்டமைப்பாக (CLF)உயர்மட்ட அளவில் உருவாக்கப்படுகிறது. இவை கிராமங்களுக்கிடையே, பகுதி அளவில், வட்டார அல்லது மாவட்ட அளவில் அமைக்கப்படுகிறது. இந்த கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்களின் நீடித்த நிலைத்த தன்மை, பொருட்களின் தரம், சான்றளித்தல், சந்தை இணைப்பு ஆகியவற்றின் மூலம் அடைவதை உறுதி செய்கின்றது.

**8.8. தேசிய வள நிறுவனமாக புது வாழ்வு திட்டம்**

புது வாழ்வு திட்டத்தை தேசிய வள நிறுவனமாக மத்திய அரசு அடையாளம் கண்டறிந்துள்ளது. கற்றல் மற்றும் தொழில் நுட்ப உதவி தமிழ்நாட்டிற்கும் பிற மாநிலங்களுக்கும் ஒருங்கிணைத்து வழங்கும் பொருட்டு புது வாழ்வு திட்டத்தின் அங்கமாக இயங்கி வருகிறது.

**8.9. புது வாழ்வு மனநலத் திட்டம்**

ஜப்பான் மனிதவள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மானியமாக அளிக்கப்படும் நிதியுதவியுடன் புதுவாழ்வு மனநலத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டம், சமூக அமைப்பான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோர், மனநலம் குன்றியோர் மற்றும் அவர்கள் குடும்பத்தார்க்கு மக்கள் அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படும்

முதன்மையான அரசு திட்டமாகும். இதற்கான தொழில் நுட்ப உதவிகள் மண்டல வள ஆதார நிறுவனங்கள் மற்றும் சுகாதார துறையின் மூலம் அளிக்கப்படும். சமூக பரிசீலனை, மருத்துவ பாதுகாப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், வாழ்வாதார உதவி, மறுவாழ்வு மற்றும் மேற்குறிப்பிட்ட நபர்களை சமுதாய நீரோட்டத்தில் இணைப்பது ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள்.

**அட்டவணை 8.1**
**சாதனைகள் 2013 –14**

| வ. எண் | நடவடிக்கைகள் | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| திட்ட நிதி | | | |
| 1 | சுய உதவிக் குழுக்கள் அமைத்தல் (ம) உதவிப் புரிதல் | | |
| அ | பெண்கள் மற்றும் இளைஞர்கள் | 3,197 | - |
| ஆ | மாற்றுத் திறனாளிகள் | 1,824 | - |
| 2 | வாழ்வாதார நடவடிக்கைகள் தொடங்குவதற்கு நிதி பெற்ற மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் எண்ணிக்கை | 46,765 | - |
| 3 | தொழிற்பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்கள் எண்ணிக்கை மற்றும் நிதி | 47,047 | 2.09 |
| 4 | வேலை வாய்ப்பு பெற்றுள்ள இளைஞர்கள் எண்ணிக்கை | 33,712 | - |
| 5 | மறு சீரமைக்கப்பட்டுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் விடுவிக்கப்பட்ட வாழ்வாதார நிதி | 209 | 38.48 |
| 6 | அமைக்கப்பட்ட ஒத்த தொழில் குழுக்கள் (பூச்சரம்) மற்றும் நிதி விடுவிப்பு | 856 | 2.79 |



| வ. எண் | நடவடிக்கைகள் | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| திட்ட நிதிக்குட்படாத சாதனைகள் | | | |
| 7 | முதல் வங்கி இணைப்பு பெற்ற சுய உதவிக் குழுக்கள் | 26,046 | 178.30 |
| 8 | இரண்டாம் (ம) மூன்றாம் வங்கி இணைப்பு பெற்ற சுய உதவிக் குழுக்கள் | 16,685 | 259.01 |
| 9 | திட்டத்தின் உதவியால் பராமரிப்புத் தொகை பெற்ற மாற்றுத் திறனாளிகள் | 4,977 | 0.50 |
| 10 | உதவி மற்றும் உபகரணங்கள் பெற்ற மாற்றுத் திறனாளிகள் | 7,200 | 9.54 |
| 11 | முதியோர் ஓய்வூதியம் பெற்றவர்கள் | 54,590 | 5.50 |

## 8.10. திட்டத்தின் தாக்கம்

திட்டத்தின் தாக்கம் குறித்து மேற்கொண்ட ஆய்வு அறிக்கையில் (ஜீ.எப்.கே மற்றும் உலக வங்கியின் சமூக கண்காணித்தல் பிரிவு) மக்களின் கடன் சுமை **29.29** விழுக்காடு குறைந்து, தொழில் திறன் வேலைவாய்ப்பை நோக்கி வாழ்வாதார இலக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.

புது வாழ்வு திட்டப் பகுதிகளில் வாழும் குடும்பங்களின் திறன் பெற்ற பயனாளிகளின் விழுக்காடு **31.57** சதவீதம் அதிகரித்துள்ளது. இதன் மூலம் சொத்து உருவாக்கம் அதிகரித்துள்ளது. சொத்து குறியீடு **22.42** விழுக்காடு உயர்ந்துள்ளது. இது திட்ட செயலாக்க கிராமங்களில் உள்ள பயனாளிகளின் சொத்து உடைமை அதிகரிப்பு அடைந்துள்ளதைக் காண்பிக்கின்றது.

புது வாழ்வு திட்ட பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் சமூக பாதுகாப்பு வலையாக திறம்பட செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடும்பத்தின் இரண்டாம் நிலை வாழ்வாதாரமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் தனிநபர்களின் பணி விழுக்காடு திட்டப் பகுதிகளில் 15.27 விழுக்காடு அதிகம் காணப்படுகிறது.

புது வாழ்வு திட்டத்தின் முக்கிய வெளிப்பாடு மக்களின் அரசியல் பங்கேற்பு ஆகும். கடந்த கிராம சபைக் கூட்டங்களில் பெண்களின் பங்கேற்பு 65.48 விழுக்காடு அதிகமாக உள்ளது.

புது வாழ்வு திட்ட செயலாக்க பகுதிகளில் பெண்களின் குரல் வலுப்பெற்று குடும்பத்திற்குள் தொடர் முடிவு எடுப்பதில் மட்டுமல்லாமல், பொது இடங்களில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் போது மிகவும் சாதுரியமாக செயல்படுகின்றனர். புது வாழ்வு திட்டப் பகுதிகளில் வாழ்வாதார செயல்பாடுகளை தேர்ந்தெடுப்பதில், பெண்கள் எடுக்கும் முடிவுகளை குடும்பங்கள் அங்கீகரிப்பது 21.01 சதவீதம் அதிகமாக உள்ளது.



**8.11. நிதி செலவினம்**

திட்டம் தற்போது செயல்பட்டு வரும் மாவட்டங்கள் மற்றும் கூடுதல் நிதி பெற்று செயல்பட்டு வரும் புதிய மாவட்டங்களையும் சேர்த்து 01.04.2013 முதல் 31.03.2014 வரையிலான காலத்தில் இத்திட்ட செலவினம் ரூ.174.86 கோடி ஆகும்.

தற்போது திட்டம் செயல்பட்டு வரும் மாவட்டங்கள் மற்றும் புதிய திட்ட மாவட்டங்களையும் சேர்த்து 2014–15ஆம் ஆண்டிற்கு ரூ.155.04 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

# 9. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்



## 9. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாட்டில் மகளிரை சுய உதவிக் குழுக்களாக அமைத்து, திறன் வளர் பயிற்சிகள் வழங்கி, கூட்டமைப்புகள் மூலம் ஒருங்கிணைத்து, வங்கிகள் மூலம் கடனுதவிகள் பெறச் செய்து, சிறு தொழில்களில் ஈடுபடுத்தி வருவாயைப் பெருக்குவதன் மூலம் வறுமையை குறைத்து சமுதாய மற்றும் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காக 'தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்' 1983ல் நிறுவப்பட்டது. இந்நிறுவனம், மாநிலத்திலுள்ள வறுமையில் வாடும் ஏழை மக்களுக்கு நீடித்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் 2012–13ம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை செயல்படுத்தி வருகிறது.

மாநிலத்திலுள்ள ஏழை குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் மகளிரை அதிகாரப்படுத்துதல் மற்றும் வாழ்வாதார முயற்சிகளை உட்கூறுகளாக கொண்டுள்ள ஒருங்கிணைந்த செயல்திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு தொலை நோக்கு திட்டம் 2023 ன் அடிப்படையில் கிராமப்புற ஏழை மக்கள் பொருளாதார மேம்பாடு அடைவதற்கு ஏதுவாக அவர்களது நிர்வாக திறமையை ஊக்கப்படுத்தும் வகையில் சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் வலுவூட்டப்படுகின்றன. இந்த உத்திகளினால் ஏழைகள்

பொருளாதார வாய்ப்புகள் மற்றும் நவீன கட்டமைப்பு வசதிகள் பெறுவதோடு மாநிலத்தில் ஒரே சீரான வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

**9.1. மகளிர் திட்டம்**

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வாழும் மகளிரை சுய உதவிக் குழுக்களாக அமைத்து சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடையச் செய்திட தமிழ்நாடு அரசால் ‘‘மகளிர் திட்டம்’’ செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்கி, சிறு தொழில்கள் துவங்கிட பொருளாதார கடன் அளித்து, திறன் வளர் பயிற்சிகள் மூலம் திறமையான தொழில் முனைவோர்களாக அவர்களை உருவாக்கிடவும், அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்தும் வாய்ப்புகள் மூலம் நீடித்த பொருளாதார மேம்பாட்டை பெற்றிடவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.



**அட்டவணை 9.1**

**செயல்பாடுகளின் முன்னேற்ற விபரம் (31.03.2014 வரை)**

| வ.எண் | விபரம் | சாதனை |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 5.86 இலட்சம் |
| 2 | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 88.70 இலட்சம் |
| 3 | வங்கிக்கடன் இணைப்பு | ரூ.25,701 கோடி |
| 4 | மொத்த சேமிப்பு | ரூ.4,510 கோடி |
| 5 | மொத்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | 12,524 |
| 6 | பெருங்கடன் பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் எண்ணிக்கை | 1,251 |
| | பெறப்பட்ட தொகை | ரூ. 288 கோடி |

**9.2. மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள்**

**9.2.1. மக்கள் அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலிமைப்படுத்திட செயலாற்றும் வங்கிகளுக்கான விருதுகள்**

சுய உதவிக் குழு இயக்கத்தின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் பங்காளர்களை கௌரவிக்க மாநில மற்றும் மாவட்ட அளவில் விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய விருதுகள்

சாதனையாளர்களை கௌரவப் படுத்துவதோடு மற்றவர்களை ஊக்குவித்திடும் வகையிலும் அமைந்துள்ளன.

**அட்டவணை 9.2**

**வங்கியாளர்களுக்கான விருதுகள் விவரம்**

| வ. எண் | விருதுகளின் பெயர் | பரிசு விவரம் |
|---|---|---|
| அ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட வங்கிக்கான விருது | முதல் மூன்று வங்கிகளுக்கு - நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| ஆ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட – சுய உதவிக் குழு /பெண்களுக்கான தனி வங்கிக் கிளைக்கான விருது | முதல் பரிசு – ரூ.1 லட்சம்<br>இரண்டாவது பரிசு – ரூ.75,000/- |
| இ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட – பிற வங்கிக் கிளைக்கான விருது | முதல் பரிசு – ரூ.1 லட்சம்<br>இரண்டாவது பரிசு – ரூ.75,000/-<br>மூன்றாவது பரிசு - ரூ.50,000/- |
| ஈ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக்கான விருது | ஒரு நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| உ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக் கிளைக்கான விருது | முதல் பரிசு ரூ.15,000/–<br>இரண்டாவது பரிசு - ரூ,10,000/–<br>மூன்றாவது பரிசு - ரூ.5,000/– |



### 9.2.2. சிறந்த சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருதுகள்

சுய உதவிக் குழுக்களிடையே சிறந்த ஆளுமைத் தன்மை மற்றும் சமூக விழிப்புணர்வு ஏற்படுவதை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த சுய உதவிக் குழுக்களும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய விருதுகள், பெறுபவர்களின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதுடன் அவர்களின் சிறந்த செயல்பாடுகளைக் கண்டு மற்றவர்களும் சாதனை புரிய வழிவகுக்கும்.

**அட்டவணை 9.3**
**சுய உதவிக்குழு /**
**கூட்டமைப்புகளுக்கான விருதுகளின் விவரம்**

| வ.எண் | விருதுகளின் பெயர் | பரிசு விவரம் |
|---|---|---|
| **1.** | **சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான விருதுகள்** | |
| அ) | 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கு மாநில அளவிலான விருதுகள் | தலா ரூ. 1 லட்சம் வீதம் |
| ஆ) | சிறந்த மூன்று சுய உதவிக் குழுக்களுக்கு மாவட்ட அளவிலான விருதுகள் | தலா ரூ. 25,000/- வீதம் |
| இ) | ஒரு சிறந்த சுய உதவிக் குழுவிற்கு வட்டார அளவிலான விருது | சான்றிதழ் |
| **2.** | **சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருதுகள்** | |
| அ) | மாநில அளவில் சிறந்த 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருதுகள் | தலா ரூ.3 லட்சம் வீதம் |
| ஆ) | மாவட்ட அளவில் சிறந்த ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு விருது | ரூ.1 லட்சம் |

### 9.2.3. 100 விழுக்காடு கல்வியறிவு பெற்ற சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருதுகள்

**"கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவர்க்கு**
**மாடல்ல மற்றை யவை"**

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க, பெண்களுக்கான நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கிட பல நல்ல திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசு, அனைத்து செல்வங்களிலும் தலையாய செல்வமான கல்விச் செல்வத்தை மகளிர் பெறுவதை ஊக்குவித்திட விருது ஒன்றினை நிறுவியுள்ளது. சுய உதவிக் குழுக்களில் உள்ள கல்வியறிவு பெற்ற மகளிர், தங்களது கூட்டமைப்பில் உள்ள பிற உறுப்பினர்களும் கல்வி அறிவு பெறுவதை ஊக்கப்படுத்தி, 100 விழுக்காடு உறுப்பினர்களும் எழுத்தறிவு பெற்றிட இவ்விருது வழி வகுக்கிறது. தமிழ்நாடு அரசு 100 விழுக்காடு கல்வியறிவு பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ. 50,000 ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழும் கொண்ட விருதினை ஏற்படுத்தியுள்ளது. ஆண்டு தோறும் 30 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

2014–15ம் ஆண்டில் இவ் விருதுகள் ரூ.15 இலட்சம் செலவில் வழங்கப்படும்.



### 9.2.4. பெண்களுக்கு எதிரான சமூக அநீதிகள் மற்றும் வன்கொடுமைகளை எதிர்த்து போராடும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான விருதுகள்

சமத்துவம் இல்லாத சமூகத்தின் பொருளாதார வளர்ச்சி நிலைத்த தன்மை உடையதாக இருக்காது என்ற கருத்தின் அடிப்படையில் சமூக அநீதி மற்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை எதிர்த்து துணிவுடன் போராடும் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்தும் விதமாக அரசு விருதுகள் வழங்கி சிறப்பிக்கிறது. அவ்வாறு துணிவுடன் செயல்பட்ட 5 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் மாநில அளவில் தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் விருதுகள் வழங்கப்படுகின்றன.

2014–15ம் ஆண்டில் இந்த சுய உதவிக் குழுக்களுக்கான விருதுகள் ரூ. 5 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

### 9.2.5. சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான தனி நபர் அடையாள அட்டை

அடையாள அட்டைகள் அரசுத் துறைகள், வங்கிகள் மற்றும் இதர நிறுவனங்களை அணுகும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நம்பகத் தன்மையை நல்கும். சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் சலுகைகள் மற்றும் வாய்ப்புகள் வழங்கப்படுவதால் ஒரு தனி நபர் ஒன்றுக்கு மேற்பட்ட உதவிகள் பெறுவதை தவிர்க்கவும், ஒருவரே இரட்டிப்பு உறுப்பினராக ஆவதை தடுக்கவும்

ஏதுவாக ஒவ்வொரு தனி உறுப்பினரையும் அடையாளம் கண்டு கொள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தனி நபர் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதுவரை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் முதற்கட்டமாக செயல்படுத்தப்படும் 60 வட்டாரங்களில் 4.67 இலட்சம் மகளிருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் மீதமுள்ள வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

### 9.2.6. கலாச்சாரப் போட்டிகள்

சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமை, திறன் மற்றும் கூட்டு முயற்சியை வெளிக்கொணரும் நோக்கத்தில் வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு பண்பாட்டு கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இக்கலாச்சாரப் போட்டிகள் சுய உதவிக் குழு மகளிரிடையே பெற்றுள்ள ஆதரவையும் வரவேற்பையும் மற்றும் அதன் பயன்களையும் கருத்தில் கொண்டு 2013–14ம் ஆண்டில் ரூ.160 இலட்சம் செலவினத்தில் இப்போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. 2014–15ம் ஆண்டில் இத்தகைய கலாச்சாரப் போட்டிகள் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே தொடர்ந்து நடத்தப்படும்.

### 9.2.7. சுய உதவிக் குழு வங்கி இணைப்புத் திட்டம்

சுய உதவிக் குழு வங்கி இணைப்புத் திட்டம் என்பது வங்கிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு இடையே



தொடர்பினை ஏற்படுத்தி, தொழிற்கடன் மற்றும் நுகர்வோர்க்கான கடன் வழங்கி முறையாக கடனை திருப்பிச் செலுத்தும் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கிகள் உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவியை வழங்குவதன் மூலம் பெண்களை பொருளாதார ரீதியாக அதிகாரப்படுத்தி, வாழ்வாதார நடவடிக்கைகளில் முதலீடுகள் செய்ய ஊக்கப்படுத்தி, வருவாய் ஈட்டிடவும், கடன் சுமையிலிருந்து விடுபடவும் வழிவகை செய்யப்படுகிறது. வங்கிகள் இணைப்பு திட்ட செயலாக்கத்தில் ரூ. 6,000 கோடி நிதி வழங்கியதன் மூலம் இந்தியாவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. தொடர்ந்து சேமித்தல், கணக்குகளை முறையாகப் பராமரித்தல், உறுப்பினர்களிடையே கடன்கள் வழங்குதல் மற்றும் தவறாமல் திரும்பச் செலுத்துதல் ஆகியவை நமது மாநிலத்தில் உள்ள சுய உதவிக் குழுக்களிடையே நிலவி வரும் சிறந்த நடைமுறைகளாகும். இதுவரை ரூ. 25,701 கோடி நம் மாநிலத்தில் வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2013–14ம் ஆண்டில் வங்கிக் கடன் இணைப்பு இலக்கானது எப்போதும் இல்லாத உயர்ந்த அளவில் ரூ. 6,000 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டு அச்சாதனையும் எய்தப்பட்டுள்ளது.

**9.2.8. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன்**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பல்வேறு நிதி மற்றும் நிதி சாரா உதவிகளை சமுதாயத்திற்கு பெற்று தந்து சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தி தலைமை ஏற்று நடத்துகின்ற மக்கள் அமைப்புகளாக உருவாக்கப்பட்டுள்ளன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து பெருங்கடன் பெற்று அதனை சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நுகர்வு மற்றும் பொருளாதார தேவைகளுக்கான கடன்களாக வழங்குகின்றன. வங்கிகளிடமிருந்து சுய உதவிக் குழுக்கள் பெற்றுவரும் கடன் அளவு போதுமானதாக இல்லாததால் பெருங்கடன் கூடுதல் நிதி ஆதாரமாக பயன்படுகிறது. இதுவரை மாநிலத்தில் 1,251 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகள் மூலம் பெருங்கடனாக ரூ. 288 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**9.2.9. சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு அங்கமாக வட்டி மானியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 3 இலட்சம் வரை வங்கிக் கடன் 7 விழுக்காடு வட்டியில் கிடைக்கும் வகையில், வங்கிகளால் 7 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டித் தொகை



குழுவிற்கு மீள வழங்கப்படும். இது இரு வகையாக செயல்படுத்தப்படுகிறது

1) தேசிய அளவில் தெரிவு செய்யப்பட்ட 150 மாவட்டங்களில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் வங்கிகள் மூலம் அதிகபட்சம் ரூ. 3 இலட்சம் வரை 7 விழுக்காடு வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. மேலும் கடன் தவணை தவறாமல் திருப்பிச் செலுத்தும் சுய உதவிக் குழுக்களுக்கு 3 விழுக்காடு கூடுதல் வட்டி மானியம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் சுய உதவிக் குழுக்கள் 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடன் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வழிமுறையின் கீழ், தமிழ்நாட்டில் விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் தர்மபுரி ஆகிய 4 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2) இதர 27 மாவட்டங்களில் வங்கிகளிடமிருந்து பெறப்படும் ரூ. 3 இலட்சம் வரையிலான கடன் தொகையின் மீது 7 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டித்தொகை மானியமாக மீள வழங்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நெறிமுறையான 75 விழுக்காடு உறுப்பினர்கள் மக்கள் நிலை ஆய்வின் மூலம் அடையாளம் கண்டறியப்பட்ட ஏழை மகளிராக இருக்க வேண்டும் என்ற

விதிக்கு உட்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருந்து இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது. 2014–15ம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானிய திட்டம் செயலாக்கப்படும். 2013–14ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.44 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2014–15ம் ஆண்டில் ரூ. 52 கோடி இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.3. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

போட்டிகள் நிறைந்த இன்றைய சூழலில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்கள் பொருட்களை சந்தைப்படுத்தி விற்பனை செய்யும் திறன்களை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது. ஆகவே மகளிரின் திறனை வளர்த்திடும் பொருட்டு சந்தை பற்றிய தகவல் சேகரித்தல், ஆய்வுகள் மேற்கொள்ளுதல், சிப்பமிடுதல், வணிக மையங்கள் அமைத்தல், விற்பனை கண்காட்சிகள் நடத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தர மேம்பாடு மற்றும் விற்பனையை அதிகரிக்க பல்வேறு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து வணிகப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களின் விற்பனையை



பெருக்கிட 100 மதி நடமாடும் கடைகள் மற்றும் விற்பனை பிரிவுகள் நகர்ப்புற பகுதிகளில் வர்த்தக மையங்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்களான சுற்றுலா தலங்கள், விமான நிலையங்கள், இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், அரசு அலுவலகங்கள், தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

### 9.3.1. வணிகக் குறியீடு மற்றும் வணிகச் சின்னம்

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் தரமானதாகவும் மற்றும் நியாயமான விலையிலும் உள்ளன. எனினும் இப்பொருட்களுக்கு பொதுவான வணிகச்சின்னம் இல்லாததாலும், வாடிக்கையாளர்களை கவரும் வகையில் விவரங்கள் அடங்கிய மேலுறைகள் இல்லாததாலும், நுகர்வோர் அங்காடிகளில் இவற்றை முழுமையாக விற்க இயலவில்லை. கடந்த ஆண்டு மாநிலம் முழுவதும் வாடிக்கையாளர்களை கவரும் விதத்தில் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள் அனைத்தையும் ஒரே ‘வணிகக் குறியீடு மற்றும் வணிகச் சின்னத்தின்’ கீழ் கொண்டு வர அரசு நடவடிக்கை மேற்கொண்டது. மேலும் 2014–15ல் இப்பொருட்களை சந்தைப்படுத்தும் திறன்களுக்கான முன்னோடி பயிற்சிகளை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கி, மதிப்பு கூட்டுப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சந்தைப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும். மாநில அளவில் வணிக குறியீடுகள் மற்றும் வாடிக்கையாளர்களை கவரும் வகையில்

சிப்பமிடுதல் (Packaging) முறைகளை உருவாக்கி தந்திட தொடர்பு நிறுவனம் ஒன்று நியமிக்கப்படும். மாவட்ட வணிக வளாகங்களை மாவட்டக் குழுவில் தெரிவு செய்யப்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடம் ஒப்படைத்து சுய உதவிக் குழுக்களின் தரமான பொருட்களை சந்தையின் தேவைக்கேற்ப விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**9.3.2. மதி பஜார்**

தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் மின்வணிக சந்தையின் மூலம் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்திட ''மதிபஜார்'' என்ற இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளம் வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கு பொருட்களை கொண்டு சேர்த்து, விற்பனைத் தொகையை இணையதளம் மூலம் செலுத்திடும் வசதியை ஏற்படுத்தி தருவதால் சுய உதவிக் குழுக்களின் கைவினை பொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இம்மின் வணிகச் சந்தை முயற்சி சுய உதவிக் குழுக்களின் பொருட்களுக்கு உலகளவில் ஒரு அறிமுகத்தை ஏற்படுத்தித் தரும்.

**9.3.3. கண்காட்சிகள்**

ஒவ்வொரு ஆண்டும் தேசிய மற்றும் மாநில அளவில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை பிரபலப்படுத்தவும், சந்தைப்படுத்தவும் தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் விற்பனைக் கண்காட்சிகளை



வெற்றிகரமாக நடத்தி வருகிறது. இக்கண்காட்சிகளில் 2013–14ம் ஆண்டில் மட்டும் ரூ. 188 இலட்சம் மதிப்பிலான சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மாநில அளவிலான கண்காட்சிகள் ''மகளிர் மேளா'' என்று பெயரிட்டு சிறந்த முறையில் விளம்பரம் செய்யப்பட்டதன் காரணமாக கடந்த மூன்று வருடங்களில் ரூ.418 இலட்சம் மதிப்பீட்டில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. சர்வதேச அளவில் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் கண்காட்சிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**9.3.4. கல்லூரிச் சந்தைகள்**

இளைஞர்களிடையே சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை பிரபலப்படுத்தும் நோக்கத்தோடு விழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளின் போது கல்லூரிகள் மற்றும் பல்கலைகழக வளாகங்களில் 'கல்லூரிச் சந்தைகள்' நடத்தப்படுகின்றன. 2013–14ம் ஆண்டில் மாநில அளவில், 152 கல்லூரிகளில் இக்கண்காட்சிகள் நடத்தப்பட்டு, 3,232 சுய உதவிக் குழுக்கள் கலந்துக் கொண்டு ரூபாய் 218.47 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஏழை மகளிரின் வாழ்வாதார முயற்சிகளுக்கு இளைஞர்களின் ஆதரவை மேலும் பெருக்கும் வண்ணம் 2014–15ம் ஆண்டிலும் கல்லூரிச் சந்தைகள் தொடர்ந்து நடத்தப்படும்.

### 9.3.5. மாநில, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் மூலம் சந்தைப்படுத்துதல்

மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–ன் கீழ் பதியப்பட்டுள்ளது. இச்சங்கம் சுய உதவிக்குழுக்களின் பொருட்களை தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் சந்தைப்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் தேசிய, மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் சிறப்புக் கண்காட்சிகளை நடத்துவதோடு, சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள் வெளிச் சந்தையில் போட்டியிடும் வண்ணம் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக அழகிய தோற்றத்துடன் மேலுறையிட்டு விற்பனை செய்ய சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கின்றன.

### 9.3.6. ஒத்த தொழில் குழு

தனி நபர்களாகவோ, குழுக்களாகவோ வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாராத தொழில்களின் உற்பத்தி நடவடிக்கைகளில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் ஒருங்கிணைக்கப்படாத காரணத்தால் அவர் தம் பொருளாதார நடவடிக்கைகள்



நீடித்த நிலையை பெறும் அளவிற்கு உற்பத்தியை அதிகரிக்க இயலவில்லை. எனவே தனித்தனியே ஒத்த தொழில்களில் ஈடுபடும் ஒரே பகுதியைச் சேர்ந்த சுய உதவிக் குழுவினரை ஒருங்கிணைத்து, பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள், அங்காடி வசதிகள் மற்றும் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதனால் பலரின் கூட்டு உழைப்பின் மூலம் உற்பத்தி திறன் பெருக்கம் மற்றும் புதிய சந்தை வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று, அதிக வருவாய் அடைந்திட வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

ஒத்த தொழில் குழுக்களின் முயற்சிகள் நீடித்த தன்மை பெறும் பொருட்டு தேவையான பொது கட்டமைப்பு நிதி வழங்கி அவர்கள் திறன் வளர்ச்சி, பொது உட்கட்டமைப்பு வசதிகள், மூலப்பொருட்களை கொள்முதல் செய்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த நிதி ஒத்த தொழில் குழு ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதங்கள் கடந்த நிலையில் தரமதிப்பீட்டின் அடிப்படையில் விடுவிக்கப்படுகிறது. மேலும் தொழில் முனைப்பு மற்றும் நிர்வாகம் குறித்த பயிற்சி குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 9.4. பிளாஸ்டிக் பொருட்களின் மறுசுழற்சி

வாழ்வாதார முயற்சிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒரு முக்கிய அங்கம் என்பதை வலியுறுத்தும் வகையில், மாநிலம் முழுவதும் 23 பிளாஸ்டிக் பொருட்களின் மறுசுழற்சி அலகுகள் தலா ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டில்

உருவாக்கப்பட்டு சுய உதவிக் குழுக்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்த அலகுகளில் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு சிறு துகள்களாக்கி தார்ச்சாலைகள் அமைத்திட பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான நிதி உதவி சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சி நிதியின் மூலம் வழங்கப்பட்டது. இதுவரை மறுசுழற்சி மையங்கள் மூலம் பிளாஸ்டிக் துகள்கள் ரூ. 94.10 இலட்சம் மதிப்பீட்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 9.5. சுய உதவிக் குழு அடிப்படை கல்வியறிவுத் திட்டம்

வாழ்வாதாரம் நீடித்த தன்மையுடன் விளங்கவேண்டும் எனில் மகளிருக்கு கல்வி அவசியமாகிறது. எனவே கல்வியறிவு பெறாத பெண்கள் அடிப்படை கல்வியறிவு பெறும் வகையில் இந்த திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு அடிப்படைக் கல்வியறிவு குறித்த பயிற்றுநர் பயிற்சி வழங்கப்படும். பின்னர் இப்பயிற்றுநர்கள் மூலம் கல்வியறிவு இல்லாத சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவு பயிற்சி 6 மாதங்களுக்கு வழங்கப்படும். பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம் மற்றும் மாநில வள மையம் மூலம் எழுத்தறிவு திட்டம் செயல்படுத்தப்படும் 9 மாவட்டங்கள் தவிர்த்து, இதர 22 மாவட்டங்களில் உள்ள 180 வட்டாரங்களில் 50,000 சுய



உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அடிப்படை கல்வி அறிவு அளித்திட அரசால் ரூ.9.50 கோடி செலவில் பயிற்சி நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

### 9.6. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / நகர்ப்புற அண்டை வீட்டு கூட்டமைப்புகளுக்கு ஊக்கநிதி

நகர்ப்புற மற்றும் ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் பொருளாதார மற்றும் சமூக வாய்ப்புகளை நல்கும் ஆதாரமாக விளங்குகின்றன. இக் கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டு நிர்வாகத் திறன், நிதி மேலாண்மை மற்றும் சமூகத்தணிக்கை போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு ஒரு தனிப்பட்ட வலுவான மக்கள் நிறுவனமாக உருவாக்கப்படுகின்றன. சுய உதவிக் குழுவால் தனியாக செய்ய இயலாததை கூட்டமைப்புகள் தங்களின் நிதியாதாரங்களை ஒருங்கிணைத்து கூட்டு முயற்சி திறன்களை பயன்படுத்தி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலில் பெருமளவில் ஈடுபடுவதால் ஏற்படும் அதிக பலன்களை பெற வழிவகை செய்யும்.

சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / நகர்ப்புற அண்டை வீட்டு கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் வகையில் தரமதிப்பீட்டின் அடிப்படையில் ரூ. 1 இலட்சம் ஊக்க நிதி வழங்கப்படுகிறது. 2012-13ம் ஆண்டு வரை சிறப்பாக செயல்பட்டு தரமதிப்பீடு செய்யப்பட்ட 8,000 கூட்டமைப்புகளுக்கு ரூ.80 கோடி

குறிப்பாக ரூ.78.50 கோடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் ரூ. 1.50 கோடி நகர்ப்புற அண்டை வீட்டு கூட்டமைப்புகளுக்கும் ஊக்க நிதியாக விடுவிக்கப்பட்டுள்ளது. 2013–14ல் 4,000 கூட்டமைப்புகளுக்கு ஊக்கநிதியாக ரூ. 40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**9.7. பாலின விழிப்புணர்வு பயிற்சி**

பெண்களுக்கு எதிரான பாலின வன்கொடுமைகளை தடுத்திட அரசாணை எண் 86, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 23.07.2013 –ன் படி பாலின விழிப்புணர்வு பயிற்சி 12,524 ஊராட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கும், கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கும் ஒவ்வொரு கட்டமாக வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. பாலினக் கருத்துகள், உடல் மற்றும் மன உணர்வுகள், பெண் ஆரோக்கியம், மகளிருக்கு எதிரான கொடுமைகளை தடுத்தல், பெண் உரிமைகளை பாதுகாத்தல், சிக்கலான சமயங்களில் தக்க உதவி பெறுதல் மற்றும் ஆட்கடத்தலை தடுத்தல் போன்ற தலைப்புகளில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக 2013–14ம் ஆண்டில் 2,323 ஊராட்சிகளில் பாலின விழிப்புணர்வு பயிற்சி நடத்த ரூ. 1.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.



**9.8.1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அதன் குறிக்கோள்கள்**

தமிழ்நாடு அரசு கிராமப்புறங்களில் ஏழை மக்களின் வறுமையை ஒழித்து அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை தீட்டி முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. வறுமையை ஒழிக்க செயல்படுத்தப்பட்டு வந்த பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் மறு சீரமைக்கப்பட்டு, உலக வங்கி நிதியுடன் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் புதுவாழ்வுத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2012–13ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

இவ்வியக்கம் தமிழ்நாட்டில் புதுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்கள் தவிர்த்து மீதமுள்ள வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இவ்வியக்கத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

- கிராமப்புற ஏழைகளுக்கான வலுவான உயிரோட்டமுடைய மக்கள் அமைப்புகளை உருவாக்குதல்.
- நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- கிராமப்புற மக்களின் திறன்களைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் வழங்குதல்.
- அரசுத் துறைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற்று திறம்பட பயன்படுத்திட வழிவகை செய்தல்.
- ஊரக ஏழை மக்களின் குடும்ப வருமானத்தைப் பெருக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்துதல்
- மதிப்புக்கூட்டும் வகையிலான தொழில்கள் மற்றும் உள்ளூர் வளங்களுக்கு ஏற்ப புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்.
- சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் தரத்தை மேம்படுத்தி அவற்றைச் சந்தைப்படுத்த வழிவகை செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்களின் ஆற்றலை வெளிக்கொணர்ந்து தன்னம்பிக்கையினை வளர்த்து சமூக மேம்பாடு அடையச் செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை உரிமைகளைப் பெறச் செய்து தங்களது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கச் செய்தல்.

### 9.8.2. திட்டப்பகுதிகள்

தமிழ்நாட்டிலுள்ள 31 மாவட்டங்களில் (சென்னை நீங்கலாக) புதுவாழ்வுத் திட்டம் செயல்படும் 120 வட்டாரங்களை தவிர்த்து பிற 265 வட்டாரங்களில் தமிழ்நாடு



மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூன்று கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றுள் திருச்சி, ஈரோடு, நீலகிரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள 16 வட்டாரங்களில் 'திட்ட கருத்தாக்க நிரூபணமாக' (proof of concept) உலக வங்கி நிதியுதவியுடன் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (NRLP) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கடைபிடிக்கப்படும் சமுதாய முதலீட்டு நிதி, பணியாளர் அமைப்பு மற்றும் ஏழைகளுக்கான இதர ஆதரவுகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் பின்பற்றப்படுகிறது.

### 9.8.3. உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு

மாண்புமிகு அமைச்சர் நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அவர்களின் தலைமையில் உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற பணிகளை இக்குழு மேற்கொண்டு வருகிறது. முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களின் தலைமையில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரை முதன்மைச் செயல் அலுவலராக கொண்டு இந்த இயக்கம் செயல்பட்டு வருகிறது. மாநில, மாவட்ட, வட்டார மற்றும் பகுதி அளவில் பிரத்யேகமான நிர்வாக அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 9.4**

## திட்டம் வாரியாக செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விபரம்

| வ எண் | திட்டம் | மாவட்டங்கள் | வட்டாரங்கள் | பகுதிகள் | ஊராட்சிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் | 26 | 120 | 302 | 4,174 |
| 2 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | 31 | 249 | 694 | 7,892 |
| 3 | தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் | 4 | 16 | 48 | 458 |
| | மொத்தம் | 31 | 385 | 1,044 | 12,524 |

**அட்டவணை 9.5**

**ஆண்டு வாரியான திட்ட செயலாக்கம்**

| வ.எண் | அலகுகள் | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|
| 1 | மாவட்டங்கள் | 15 | 27 | 21 |
| 2 | வட்டாரங்கள் | 60 | 110 | 95 |
| 3 | ஊராட்சிகள் | 2,323 | 3,491 | 2,536 |
| 4 | பயன் பெறும் வறுமைக் குடும்பங்கள் (இலட்சத்தில்) | 7.76 | 9.85 | 11.12 |



### 9.8.4. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள் கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள், தொழில் திறன் பயிற்சி மற்றும் பணியமர்த்துதல் மற்றும் மகளிர் விவசாயிகளை வலிமைப்படுத்தும் திட்டம் ஆகிய மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது.

**i. சமூக அணி திரட்டல் மற்றும் சமூக உள்ளாக்கம்**

சமுதாயத்தில் நலிவுற்றோர்களான ஆதரவற்ற பெண்கள், பெண்களை தலைவியாக கொண்ட குடும்பங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள், நிலமற்றோர், இடம்பெயரும் தொழிலாளர்கள், தனிமைப்படுத்தப்பட்ட சமூகத்தினர் மற்றும் பிற ஏழைகளை கண்டறிந்து இயக்கத்தில் விடுபட்டு போகாமல் ஒருங்கிணைக்க மக்கள் பங்கேற்புடன் கூடிய முறைகளை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பின்பற்றுகிறது. மேலும் தங்களின் அமைப்பை வழி நடத்திச் செல்ல தேவையான நிர்வாக திறன்களை வளர்த்து சமுதாயம் சார்ந்த மேம்பாட்டை அடைந்திட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### ii. மக்கள் நிலை ஆய்வு

ஏழை மக்கள் மற்றும் நலிவுற்றோர்களை கண்டறிந்திட சமுதாயப் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு முறையை இவ்வியக்கம் கடைப்பிடிக்கிறது. சமுதாயத்தில் வாழும் நலிவுற்றோர், ஏழை குடும்பங்கள் விடுபடா வண்ணம் பின்வரும் பங்கேற்புடன் கூடிய வழி முறைகள் பின்பற்றப்படுகின்றன.

- சமூக வரைபடம் தயாரித்தல்
- மக்களின் பிரச்சினைகளை அறிந்து அவற்றை முன்னுரிமைப் படுத்துதல்
- பொருளாதார நிலை ஆய்வு மற்றும் முடிவெடுத்தல்.

### iii. மக்கள் அமைப்புகளை உருவாக்குதல்

ஏழ்மை மற்றும் நலிவுற்ற நிலையை களைந்திட நீடித்த நடவடிக்கைகளை இவ்வியக்கம் முனைப்புடன் எடுத்து ஏழை மக்களின் அமைப்புகளை உருவாக்கி வலிமைப்படுத்தி வருகிறது. ஏழை மக்களின் பல்வேறு அமைப்புகள் பின்வருமாறு.

- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்
- சமூகத் தணிக்கைக் குழு
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு
- ஒத்த தொழில் குழு
- சுய உதவிக் குழு



### iv. திறன் மேம்பாட்டு அணுகுமுறை

1. **திட்டப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது திட்டப் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்திட மாநில, மாவட்ட, வட்டார மற்றும் பகுதி அளவில் கீழ்கண்ட பயிற்சிகள் மற்றும் களப்பயணங்களை நடத்தி வருகிறது. திட்டப் பணியாளர்களுக்கான முதல் கட்ட பயிற்சி 28 நாட்களில் மூன்று பகுதிகளாக அளிக்கப்படும். முதலில் 7 நாட்கள் கிராமத்திலேயே தங்கி மேற்கொள்ளும் உள்ளார்ந்த பயிற்சி, அடுத்ததாக 16 நாட்கள் நிறுவனப் பயிற்சி மற்றும் 5 நாட்கள் களப்பயிற்சியாக அளிக்கப்படும். முதல்கட்ட பயிற்சி முடித்து 2 மாதங்களுக்கு பின்னர் இரண்டாம் கட்ட பயிற்சியானது 12 நாட்களுக்கு அளிக்கப்படுகிறது. பின்னர் திட்டப் பணியாளர்களின் பொறுப்பிற்கு ஏற்றவாறும் குறிப்பிட்ட தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட பயிற்சிகள் தவிர தேவையின் அடிப்படையிலான பயிற்சிகளும், புத்தாக்க பயிற்சிகளும் குறிப்பிட்ட இடைவெளியில் அளிக்கப்பட்டு திட்டப் பணியாளர்களின் திறன்கள் மேம்படுத்தப்படுகின்றன. பயிற்சியின் ஒரு பகுதியாக தமிழ்நாடு மற்றும் வெளி மாநிலங்களில், சிறப்பாகச் செயல்படும் நிறுவனங்களை பார்வையிட பட்டறிவுப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. திறன் மற்றும் வேலைவாய்ப்பு, மக்கள் நிலை ஆய்வு, கருத்து பரிமாற்ற அடிப்படையிலான கற்றல் போன்ற தலைப்புகளில்

கருத்துப்பட்டறைகள் நடத்தப்பட்டு திட்டத்தின் அனைத்துப் பங்காளர்களும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கொள்கைகள், வழிகாட்டிக் கோட்பாடுகள் மற்றும் செயல்பாட்டு நெறிமுறைகளை தெளிவாக அறிந்திட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**2. கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திறன் மேம்பாட்டு செயல்பாடுகளின் ஒரு பகுதியாக பயிற்றுநர் பயிற்சிகள், சமுதாய வல்லுநர், மாவட்ட அளவிலான தலைமை பயிற்றுநர் மற்றும் வங்கியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மாநில, மாவட்ட மற்றும் வட்டார வாரியாக உள்ள பயிற்றுநர்கள் விபரம் தொகுக்கப்பட்டு அவர்களின் திறனுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பல்வேறு பயிற்றுநர் பயிற்சிகள் இத்திட்டத்தில் வழங்கப்படுகின்றன. இப்பயிற்றுநர்கள் மூலமாக கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், ஊக்குனர் மற்றும் பிரதிநிதிகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் கூட்டமைப்பின் கணக்காளர்கள் ஆகியோர்களை சமூக மூலதனமாக மாற்றும் பொருட்டு வரையறுக்கப்பட்ட திட்டத்தின்படி பயிற்சிகள் நடத்தப்படுகிறது.



**v. நிதி உள்ளாக்கம்**

ஏழைக்குடும்பங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் நிதி உள்ளாக்கம் பெற்றிட இந்த இயக்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. நிதிக்கான தேவை மற்றும் நிதி அளிப்பு குறித்து ஆய்ந்தறிந்து உரிய நடவடிக்கைளை மேற்கொள்கிறது. வங்கி இணைப்புக் கடன், மறுகடன், கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன் போன்ற பல்வேறு கடன்கள் பெற வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள எல்லா வங்கி கிளை மேலாளர்களும் சுய உதவிக் குழுக்களுக்கு தரமான வங்கி சேவைகளை வழங்கிட உரிய புரிந்துணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 9.8.5. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சித் திட்டம்

மாநிலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியின் காரணமாக உற்பத்தி மற்றும் சேவை பிரிவுகளில் அதிகமான தொழில்நுட்ப வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். 18 முதல் 35 வயதிற்கு (பெண்களுக்கு 40 வயது வரை) உட்பட்ட இளைய சமுதாயத்தினருக்கு பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபடுவதற்கு தேவையான திறன் வளர்க்கும் பயிற்சியளித்து, அவர்களின் தகுதிக்கேற்ப பணியமர்த்தப் படுகின்றனர். இந்த முயற்சிகள் மூலம் குடும்ப வருமானம் அதிகரித்திட வழிவகை ஏற்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திறன் வளர்ப்பு நிதி

மூலம் கடந்த இரு ஆண்டுகளில் சிறந்த நிறுவனங்கள் வாயிலாக 19,175 இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 9.8.6. மகளிர் விவசாயிகளை வலிமைப் படுத்தும் திட்டம் (MKSP)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு பகுதியாக **'மகளிர் விவசாயிகளை வலிமைப் படுத்தும் திட்டம்'** செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏழை மகளிர் விவசாயிகளின் நிலங்களில் மேம்படுத்தப்பட்ட, நீடித்த இயற்கை வேளாண்மை மேற்கொள்ளப்படும். வேளாண்மை நிலங்களில் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்துதல், சாகுபடிச் செலவைக் குறைத்தல், குடும்பத்திற்கான உணவு மற்றும் ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதிப்படுத்துதல் மற்றும் உற்பத்தி திறன் குறைவின்றி வேளாண்மை சார்ந்த வருமானத்தை அதிகப்படுத்துதல் ஆகிய அணுகுமுறைகள் மேற்கொள்ளப்படும். இச்செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கி, இந்திய உணவுக் கழகம், விவசாயிகள் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் போன்ற நிறுவனங்கள் மூலம் உரிய தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும்.



### 9.8.7. 2014–15ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகளுக்கு 2014–15ம் நிதியாண்டில் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.256.48 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.9. தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம்

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் ஒரு அங்கமாக செயல்படுகிறது. பயிற்சி நூல்கள் மற்றும் வழிகாட்டிப் புத்தகங்கள் தயாரித்தல், திட்டப் பணியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு பயிற்சி வழங்குதல் போன்ற பணிகளை இந்த மையம் மேற்கொள்கிறது. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு கழகம், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம் மற்றும் பிற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு எய்ட்ஸ் நோய் தடுப்பு முறைகள் மற்றும் தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வுப் பயிற்சிகளை சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு உதவுகிறது. இம்மையம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பயிற்சிக்கான மாநில வள மையமாக செயல்படுவதுடன், திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் பணியமர்த்துதல் அலகாகவும் செயல்பட்டு வருகிறது.

## 9.10. முற்றம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மாதாந்திர இதழாக “**முற்றம்**” வெளியிடப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை சந்தாதாரர்களாக கொண்டுள்ள முற்றம் இதழின் மூலம் கிராமப்புற மக்களுக்கு தேவையான செய்திகள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. சுகாதாரம், தன்சுத்தம், வறுமைக் குறைப்பு, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி நிர்வாகம், மகளிரை அதிகாரப்படுத்துதல் போன்ற செய்திகளுடன் சமுதாயப் பிரச்சனைகளான பெண் சிசுக்கொலை, வரதட்சணைக்கொடுமை உள்ளிட்ட கொடுஞ்செயல்களை எதிர்க்கும் செய்திகளையும் வெளியிட்டு வருகிறது. இது தவிர வெற்றிக்கதைகள், பொது அறிவு, வெற்றி பெற்ற பெண் சாதனையாளர்கள் மற்றும் தலைவர்கள் பற்றிய விவரங்களும் வெளியிடப்படுகின்றன. சமுதாய அளவில் பல்வேறு தகவல்களைக் கொண்டு சேர்ப்பதில் முற்றம் பத்திரிக்கை ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுகிறது. தற்போது 80,000 சுய உதவிக் குழுக்கள் இந்த இதழின் சந்தாதாரர்களாக உள்ளனர். மாதந்தோறும் 16 லட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் முற்றம் இதழ் வாயிலாகப் பயன் அடைந்து வருகிறார்கள்.

## 9.11 2013–14 ல் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள்

- ரூ. 6,035.56 கோடி வங்கி கடனாக சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



- ரூ. 22.45 கோடி பெருங்கடனாக 112 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- 32 மாவட்டங்களில் 152 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டு 3,232 சுய உதவிக் குழுக்கள் கலந்துகொண்டு ரூ. 218.47 இலட்சம் அளவில் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திட மதி பஜார் என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.
- 10 பிளாஸ்டிக் மறுசுழற்சி மையங்கள் தலா ரூ. 3.75 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு சுய உதவிக் குழுக்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.
- 3 மாநில அளவிலான விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு ரூ. 188 இலட்சம் மதிப்புள்ள சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- 3,176 வங்கி முகவர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- சுய உதவிக் குழுக்களுக்கு அதிகமாக கடன் இணைப்பு வழங்கியமைக்காக இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் பல்லவன்

வங்கிக்கு மாநில அளவிலான சிறந்த வங்கியாளர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

- 100 விழுக்காடு உறுப்பினர்களுக்கு எழுத்தறிவு பெற்றமைக்காக 12 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு முழு எழுத்தறிவு பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.
- சமூக அநீதிக்கு எதிராகப் போராடியமைக்காக இரண்டு சுய உதவிக் குழுக்களுக்கு மாநில அளவில் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- 34,712 சுய உதவிக் குழுக்களில் உள்ள 4,67,638 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**9.12. 2013–14ல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள்**

- 110 வட்டாரங்களில் உள்ள 3,491 கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2013-14ம் ஆண்டு விரிவுப்படுத்தப்பட்டது.
- இதுவரை இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள 31 மாவட்டங்களில் உள்ள 170 வட்டாரங்களில் உள்ள அரசு அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டார மற்றும் கிராம ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் சுய



உதவிக் குழு இயக்க தலைவர்களுக்கு திட்ட விளக்கப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- அடிப்படைத் தகவல் சேகரிப்பு மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகள் 170 வட்டாரங்களிலும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- 2013–14ம் ஆண்டு எடுக்கப்பட்ட 3,491 கிராம ஊராட்சிகளுக்கும் திட்ட துவக்க நிதியாக ரூ. 25,000 முதல் ரூ. 45,000 வரை மக்கள் தொகை அடிப்படையில் மொத்தம் ரூ.11 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.
- 4,152 ஊராட்சிகளில் மக்கள் நிலை ஆய்வுப் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- 3,760 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சமூக தணிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- முதற்கட்டமாக 2012–13ம் ஆண்டில் நிறுவப்பட்ட 2,390 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ரூ. 4 இலட்சம் முதல் தவணையாக சமுதாய முதலீட்டு நிதி ரூ. 95.60 கோடி விடுவிக்கப்பட்டது.
- வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி 19,175 இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சமுதாய வழிகாட்டி கையேடு 10 பாகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

- 824 சமுதாய வளப்பயிற்றுநர்களுக்கு சமுதாய வழிகாட்டி கையேடு குறித்த பயிற்றுநர் பயிற்சி ரூ. 9 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- 29,240 கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு சமுதாய வழிகாட்டி கையேடு முதல் மற்றும் இரண்டாம் கட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு ரூ. 90.50 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- 108 திறன் முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டதில் 46,306 இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

- 70 வேலைவாய்ப்பு முகாம்கள் ரூ.16 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு அதில் 5,623 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- 3,240 வட்டார அளவிலான பல்வேறு துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுக்கு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த அறிமுகப் பயிற்சி ரூ.13.47 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.



- 7,621 ஊராட்சி தலைவர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு பட்டறிவுப்பயணம் ரூ. 11.78 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டது.

# 10. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்



## 10. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களை மேற்பார்வையிட சென்னையில் சுனாமி திட்ட செயலாக்க அலகு 01.08.2005 முதல் ஏற்படுத்தப்பட்டது.

சுனாமி திட்ட செயலாக்க அலகு மூலம் 11 கடலோர மாவட்டங்களில் இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டம் மற்றும் அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தின் மூலமாக 32,646 வீடுகள் தேர்வு செய்யப்பட்டு, 32,645 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(I) இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டம் (Rajiv Gandhi Rehabilitation Package) ரூ. 716 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு மானியத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் அடிப்படை வசதி ஏற்படுத்தித் தரும் வகையில் செயல்படுத்தப்பட்டது.

(II) அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் (Emergency Tsunami Reconstruction Project) ரூ. 670 கோடி மதிப்பீட்டில் உலக வங்கிக் கடனுதவியுடன் கடலோர சமுதாயத்தின் பாதிப்புகளை குறைக்கும் நோக்கத்துடன் (Vulnerability Reduction of Coastal Communities) எளிதில் பாதிப்புக்குள்ளாகும்

வீடுகளை மீளக் கட்டுதல் மற்றும் வழிகாட்டுப் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைத்தல் ஆகும். இத்திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களுடன் கூடுதலாக திருவாரூர் மாவட்டத்தில் அவசரகாலத்தில் எளிதாக தப்பி செல்லத்தக்க வழிகாட்டுப் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைக்கும் பணி செயல்படுத்தப்பட்டது. அவசர கால சுனாமி திட்ட செயல்பாட்டுக் காலம் 31.12.2011ல் முடிவுற்றது. அரசு ஆணை (நிலை) எண்.179 வருவாய் டி.எம்.4 துறை, நாள்.29.5.2012ன்படி உலக வங்கி நிதி உதவியுடன் கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டம் (Coastal Disaster Risk Reduction Project) செயல்படுத்தப்படும் வரை அவசரகால சுனாமி திட்டத்தின் எஞ்சிய பணிகள் மாநில நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்டது. கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்ட ஒப்பந்தம் 11.11.2013ல் ஏற்படுத்தப்பட்டது.

### 10.1. இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் (RGRP)

இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ.716 கோடி மதிப்பீட்டில் 11 கடலோர



மாவட்டங்களில் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் தொலைவு வரை அமைந்துள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுவதாகும். இத்திட்டத்தின் கீழ் 18,299 வீடுகள் தேர்வு செய்யப்பட்டதில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 1,102 வீடுகள் நிறைவு பெறாமல் இருந்தது. தற்போதைய அரசு தேவையான வள ஆதாரங்களை ஏற்படுத்தி இவ்வீடுகளை முழுமையடைய செய்ய உறுதியான நடவடிக்கையை மேற்கொண்டு 1,102 வீடுகளையும் சேர்த்து மொத்தம் 18,299 வீடுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

### 10.2. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் (ETRP)

சுனாமியால் கடலோரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும், எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்டிடவும், தமிழ்நாடு அரசு, உலக வங்கி நிதி உதவியுடன் அவசரகால சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தை 2005ல் ஏற்படுத்தியது. இத்திட்டம் உலக வங்கி கடன் உதவியுடன் சுமார் ரூ. 670 கோடி முதலீட்டில் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1,000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் எனக் கண்டறியப்பட்ட வீடுகளை மீளக் கட்டித்தர உருவாக்கப்பட்டது,

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

i) வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்

ii) சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை குறுகிய காலத்திற்குள் மீட்டெடுத்தல்

iii) வருங்காலங்களில் கடலோர சமுதாயத்தினருக்கு ஏற்படும் இயற்கை பாதிப்புகளான சூறாவளி, புயல், வெள்ளம் மற்றும் சுனாமி போன்றவற்றிலிருந்து ஏற்படும் இடர்களைக் குறைத்தல்

**10.3. திட்டத்தின் உட்கூறுகள்**

**அ)** பாதிப்பிற்குள்ளாகக் கூடிய வீடுகளை மீளக் கட்டுதல்:

எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் வருவாய்த் துறையினரால் அடையாளம் காணப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களின் மூலம் சரி பார்க்கப்பட்டு **15,056** வீடுகள் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் எனக் கண்டறியப்பட்டது.

இந்த வீடுகள் **11** கடலோர மாவட்டங்களிடையே **157** தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. இத்திட்டத்தில் **14,347** வீடுகள் மறுகட்டமைப்புக்கு தகுதியுடையதாக தேர்வு செய்யப்பட்டு, இதில் முதல் கட்டமாக **61** தொகுப்புகளில் **5,413** வீடுகளும்



இரண்டாம் கட்டமாக **96** தொகுப்புகளில் **8,934** வீடுகளும் ரூ.**543.42** கோடி மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டது.

இத்திட்டத்தில் எடுக்கப்பட்ட **14,347** வீடுகளில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ள ஒரு வீடு தவிர்த்து **14,346** வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இடமாற்றுத் தொகையாக ஒரு முறை ரூ.**1,000**ம் மற்றும் வாடகைத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.**500** வீதம் **18** மாதங்களுக்கு வழங்கப்பட்டது.

ஆ) அவசரகாலத்தில் வெளியேறுவதற்கான சாலைகள் மற்றும் வழிகாட்டும் பலகைகள் அமைத்தல்:

கடலோரப்பகுதிகளில் அவசர காலத்தில் எளிதாக வெளியேறித் தப்பித்துச் செல்லத் தேவையான வெளியேறும் சாலைகளையும், இச்சாலைகளின் வழியாக பாதுகாப்பான பகுதியினை சென்றடைய ஏதுவாக வழிகாட்டுப் பலகைகளோடு அமைத்துத் தருதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் **143** பணிகள் **41** கி.மீ. நீளத்திற்கு ரூ.**21.77** கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

## 11. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்



### 11. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய
### சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

தமிழகத்தின் கிழக்கு கடற்கரையோர மக்களின் உயிர் மற்றும் உடைமைகளை கடந்த 2004–ம் ஆண்டு நிர்மூலமாக்கிய ஆழிப்பேரலையின் கோர தாண்டவம் நிகழ்ந்து பத்தாண்டுகளாகிவிட்டது. தனது முழுச் சக்தியையும் ஒருங்கிணைத்து, அனைத்து நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொண்ட தமிழ் நாடு அரசு அன்றைய தினம் சர்வதேச அளவில் பாராட்டைப் பெற்றது. ஆரம்ப கட்ட அதிர்ச்சியிலிருந்து மீண்ட மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க உறுதி மிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றிற்கு மேலாக, பாதிப்புக்குள்ளான கடலோர மக்களுக்கு நிலைத்த வாழ்வாதாரம் ஏற்படுத்தும் பொருட்டு பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் உருவாக்கப்பட்டது.

### 11.1. திட்டம் – ஒரு பார்வை

| | | |
|---|---|---|
| செயல்படும் மாவட்டங்கள் | : | திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி |
| திட்டப் பகுதி | : | 24 வட்டாரங்களிலுள்ள 109 ஊராட்சிகள் |
| பயனடைவோர் | : | 1.55 இலட்சம் குடும்பங்கள் சார்ந்த சுமார் 6 இலட்சம் பேர் |
| திட்ட மதிப்பீடு | | ரூ.283.69 கோடி |
| திட்டக் காலம் | : | 9 ஆண்டுகள் (2017 வரை) |

### 11.2. குறிக்கோள்

நிலைத்த தன்மையுடன் கூடிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்தி அவற்றை சீரிய முறையில் நிர்வகிக்க ஏதுவாக தற்சார்பான கடலோர சமுதாயத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். மக்கள் சமுதாயம் மற்றும் இதர நிறுவனங்கள் உதவியுடன் பெண்களால் சொந்தமாக நிர்வகிக்கப்படும் தொழில்கள் மற்றும் வள ஆதார அமைப்புகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் மூலம் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறும்.



### 11.3. இலக்கு மக்கள்

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கீழ்க்கண்ட கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்கள், அதாவது :–

- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்
- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்
- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் மீன் பதப்படுத்துவோர்
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள்
- பிற சிறு தொழில் செய்வோர்
  (உ.ம் :– சங்கு, சிப்பி சேகரிப்போர்)

### 11.4. வழிமுறைகள்

1) கடலோரப் பகுதி வள ஆதார மேலாண்மை ;

2) ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள் ;

3) வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி ;

4) சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை

ஆகிய பல்நோக்கு வழிமுறைகள் மூலம் கடலோர சமுதாய மக்களுக்கு நிலைத்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**1) கடலோரப் பகுதி வள ஆதார மேலாண்மை**

**அ. சமுதாய ஆதரவு :** அடிப்படை நிலையில், 5 முதல் 7 வரையிலான கடலோர ஊராட்சிகள் இணைக்கப்பட்டு, ஒரு தொகுதியாக அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களுடன் ஒரு கூட்டு வள மையம் (Cluster Resource Centre) ஏற்படுத்தப்பட்டுள்ளது. திட்ட நடவடிக்கைகளை சமுதாய மக்களின் உதவியுடன் செயல்படுத்துவதற்கு ஏதுவாக 28 கூட்டு வள மையங்கள் உள்ளன. கூட்டு வள மையங்களுக்கு தேவைப்படும் அலுவலக இடவசதி, கணினிகள், தொலைபேசி வசதி மற்றும் இணைய தள இணைப்பு போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

ஆ. **சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடல்** திட்டத் துவக்கத்தில் சமுதாய பங்கேற்புடன் கூடிய அடிப்படை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. முன்னுரிமை அடிப்படையில் அடிப்படை உட்கட்டமைப்புத் தேவைகள் கண்டறியப்பட்டன. சுற்றுச் சூழல், வாழ்வாதாரத் தேவைகள், பாலினப் பிரச்சினைகளை உள்ளடக்கிய நுண் திட்டங்கள் தயார் செய்யப்பட்டன. அனுமதிக்கப்பட்ட



நுண்திட்ட மதிப்பீட்டில் திட்டப் பங்களிப்பு 90 சதவீதமும் சமுதாய பங்களிப்பு 10 சதவீதமும் ஆகும்.

இ. **மீன் வள ஆதார மேலாண்மை**

மீன் வளம் தொடர்பான முக்கிய பிரச்சினைகளை கண்டறிந்திட மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. கண்டறியப்படும் பிரச்சினைகள் இத்துறையில் சிறந்த நிறுவனங்களின் உதவியுடன் தீர்வு செய்யப்படுகின்றன. மீன் வளத்தை மேம்படுத்தும் பொருட்டு கடலில் செயற்கை பவளப் பாறைகள் அமைத்தல் மற்றும் நண்டு கொழுப்பேற்றுதல், கடல்பாசி வளர்த்தல் ஆகியவையும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**2) ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள்**

**அ. சுய உதவிக் குழுக்களுக்கு நுண் கடனுதவி**

ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக்களின் உச்ச அமைப்பான ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் பல திட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, திட்ட நடவடிக்கைகளை சுமுகமாக செயல்படுத்த வலுவான, துடிப்பான சுய உதவிக் குழுக்கள் அவசியம் ஆகும். எனவே, வருவாய் ஈட்டும் தொழில்களில் ஈடுபட ஏதுவாக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

வங்கிக் கடனை குழுக்களுக்கு பெற்றுத் தருவதில் தொகுதி வள ஆதார மையம் உதவிபுரிகிறது. மாவட்ட செயலாக்க அலுவலகங்கள், தொகுதி வள ஆதார மையங்களுடன் இணைந்து, வங்கியாளர்களுக்கும் இதர நிதி நிறுவனங்களுக்கும் பயிற்சிப் பட்டறைகள் நடத்துகின்றன. உரிய நேரத்தில் குழுக்களுக்கு வங்கிக் கடன் அளிக்க வேண்டிய அவசியத்தைப் புரிந்து கொள்ள வங்கியாளர்களுக்கு பட்டறிவுப் பயணங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

ஆ. **இடர் மேலாண்மை மற்றும் காப்பீடு** எதிர்பாராத சூழ்நிலைகளிலும், இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் போதும் சமுதாய மக்களின் உடனடித் தேவைகளுக்காக துயர் குறைப்பு நிதி மென்கடனாக வழங்கப்படுகிறது. நிதியின் 4/5 பங்கு திட்ட பங்காகவும், 1/5 பங்கு பயனாளிகளின் பங்களிப்பாகவும் பெறப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் (PLFs) நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. காப்பீடு தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படுவதன் மூலம் தங்களுக்கு பொருத்தமான காப்பீடு திட்டத்தை மக்களே தேர்ந்தெடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள் மற்றும் மீன் விற்பனை சங்க உறுப்பினர்களுக்கும் காப்பீடு குறித்த பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.



மீன்பிடி உபகரணங்கள் தொடர்பான காப்பீடு திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இ. **நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி மற்றும் பொருள் மேம்பாட்டு நிதி அமைத்தல்** பொதுவாக புதிய மற்றும் பரிட்சார்த்த தொழில் முயற்சிகளுக்கு வங்கிகள் நிதியுதவி அளிக்க முன்வருவதில்லை. அதனால், சமுதாயம் பயன்பெறும் வகையில் அமையும் தொழில்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படும். நபார்டு நிதி நிறுவனத்துடன் (NABFINS) 19.06.2013 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு அந்நிறுவனத்திற்கு ரூ.300 இலட்சம் விடுவிக்கப் பட்டுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி இந்த ஏற்பாடு திருப்திகரமாக செயல்படும் பட்சத்தில், 2014–15–ல், மீதமுள்ள தொகை ரூ.200 இலட்சம் விடுவிக்கப்படும். திட்டப் பகுதிகளில் செயல்படும் குழுக்கள் மூலம் துவக்கப்படும் குறுந்தொழில்களுக்கு, திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 70 சதவீதம் தொகை நாபின்ஸ் நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து 15 சதவீத வட்டியுடனும், 25 சதவீதத் தொகை இத்திட்டத்தின் தொழில் முதலீட்டு நிதி மூலம் நாபின்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட தொகையிலிருந்து 4 சதவீத

வட்டியுடனும் வழங்கப்படும். மீதமுள்ள 5 சதவீதத் தொகை பயனாளிகளின் பங்களிப்பாகும்.

**3) வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி**

**அ. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவு**

சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்தும் பொருட்டு வலுவற்ற குழுக்களை கண்டறிந்து திறன் வளர் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதே போல, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் அனைத்து விவரங்களையும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சேகரித்து பராமரிக்கும் வகையில் மென்பொருள் (Software) உருவாக்கப்பட்டுள்ளது. அந்த மென்பொருளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள பயிற்சி பெற்ற புத்தக பராமரிப்பாளர்கள் மூலம் தமிழில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள் சரியான நேரத்தில் வங்கிக்கடன் பெறுவதற்கு உதவி செய்யப்படுகிறது. திட்டப் பகுதியில் உள்ள மூன்று ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்



நபார்டு நிதி நிறுவனத்தின் (NABFINS) வியாபார வளர்ச்சி முகவர்களாக செயல்பட்டு வருகின்றன.

**ஆ. மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்குதல்**

தென்னிந்திய மீனவ சங்கங்களின் கூட்டமைப்புடன் இணைந்து 50 மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சங்கங்களில் சிறு படகுகள், கட்டுமரம் மற்றும் வள்ளம் மூலம் மீன் பிடிப்போர் மட்டுமே உறுப்பினர்கள் ஆவார்கள். சங்கங்களின் உறுப்பினர்களை கடனிலிருந்து மீட்க, தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்புக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இக் கூட்டமைப்பு மூலமாக படகு கட்டும் தளம் மற்றும் படகு இயந்திரம் பழுது நீக்கும் நிலையம் உருவாக்குவது தொடர்பான முன் மொழிவுகள் பெறப்பட்டு ஆய்வு செய்து அனுமதி அளிக்கப்படுகிறது. மீன்களை பதப்படுத்த மீனவர்களுக்கு குளிர் பதனப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மீன் இறங்கு தளங்கள் மற்றும் மீன் விற்பனை சங்கங்களுக்கு அலுவலகக் கட்டிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இ. **வேலையில்லாத இளைஞர்களுக்கு தொழிற் திறன் பயிற்சி**

இத்திட்டப் பகுதிகளில் உள்ள 5000 வேலையில்லாத இளைஞர்களுக்கு பல்வேறு பிரிவுகளின் கீழ் வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சிக்கான காலம் மூன்று மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை ஆகும். பயிற்சி நடத்துவதற்கு தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் பயிற்சி நிறுவனங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. குறைந்த பட்சம் 70 சதவீத பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தினால் மட்டுமே, அந்நிறுவனங்களுக்கு 100 சதவீத பயிற்சிக் கட்டணம் வழங்கப்படும்.

ஈ. **நுண் தொழில் மேம்பாடு**

நுண் தொழில் மேம்பாட்டில் அனுபவம் உள்ள நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து குறிப்பிட்ட தொழில் உட்பிரிவில் தொழில் தொகுப்புகள் (Clusters) ஏற்படுத்த திட்ட மேலாண்மை அலகு முனைகிறது. கடலூர் மாவட்டத்தில் தானம் அறக்கட்டளை (DHAN Foundation) நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் பால் உற்பத்தியாளர்கள் குழுக்களை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



நாகப்பட்டினம் மாவட்டத்தில் மதுரையில் செயல்பட்டு வரும் கவனென்ட் சென்டர் ஃபார் டெவலப்மெண்ட் (CCD, Madurai) என்ற நிறுவனத்தின் உதவியுடன் மா விவசாயிகளுக்கான தொடக்க உற்பத்தி குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இவை தவிர, அனைத்து திட்ட மாவட்டங்களிலும் 189 நுண் தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

4) **சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை**

- சுற்றுச் சூழல் பிரச்சினைகள், பேரிடர் மேலாண்மை மற்றும் கடல் பாதுகாப்பு குறித்து இத்திட்டத்தின் மூலம் ஏற்படுத்த வேண்டிய விழிப்புணர்வின் அவசியத்தை இத்திட்டம் கவனத்தில் கொண்டுள்ளது. தமிழ் நாடு அரசின், மீன் வளத்துறையின் ஒத்துழைப்புடன் மீனவர்களுக்கு தகவல் உபகரணங்கள் வழங்குவது குறித்து கருத்துப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளது. மேலும், கடல்பாதுகாப்பு தொடர்பாக மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கடலோர பள்ளி மாணவர்களுக்கு பேரிடர் மேலாண்மை கல்வியின் அவசியம் குறித்து விளக்க வல்லுநர் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. சுற்றுச்சூழல் கல்விக்கான மூலப் பாடங்களை

மேம்படுத்துவதற்கு கருத்துப் பட்டறைகள் தொடக்கப் பள்ளிகளில் நடத்தப்படுவதுடன், பள்ளிக் குழந்தைகளுக்கு பட்டறிவுப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பள்ளிக் குழந்தைகளுக்கு கருத்துப் பட்டறைகள் நடத்துவதில் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப் பட்டதுடன் அவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

**2013–14 வரை குறிப்பிடத்தக்க சாதனைகள்**

- **28** கூட்டு வள மையங்களுக்கு (Cluster Resource Centre) மின் அஞ்சல் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- மக்களின் பங்களிப்புடன் **189** நுண் தொழில்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் மொத்த திட்ட தொகை ரூ.**562.58** இலட்சமாகும்.
- நுண் தொழில்களை மேன்மேலும் ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டம் நபார்டு நிதி நிறுவனத்துடன் (NABFINS) **19.06.2013** அன்று ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, முதல் கட்டமாக ரூ.**300** இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது **124** கருத்துருக்கள் நபார்டு நிதி நிறுவனத்தால் (NABFINS) அனுமதிக்கப்பட்டுள்ளது.
- **5,881** பயனாளிகள் சமுதாயப் பரிமாற்றப் பயணம் அழைத்து செல்லப்பட்டனர்.



- கடலோரப் பகுதி வள மேலாண்மை திட்டக்கூறின் கீழ் **633** சமுதாய உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.**2606.32** இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.
- மீன் வளத்தை பெருக்கும் பொருட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் கடலுக்கடியில் செயற்கை பவளப் பாறைகள் நிறுவப்பட்டுள்ளன. இதர இரு திட்ட மாவட்டங்களிலும் இவை விரைவில் நிறுவப்பட உள்ளன.
- **109** ஊராட்சிகளில் காப்பீடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த பயிற்றுநர்களுக்கும், சமுதாய மக்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பல்வேறு காப்பீடு திட்டங்களில் **1,89,298** உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்.
- **5,330** மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.**10297.00** இலட்சம் வங்கி கடன் இணைப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது.
- துயர் குறைப்பு நிதியாக **10,157** பயனாளிகளுக்கு ரூ.**447.98** இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.
- **109** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

- 859 மீனவ பெண்களுக்கு அறுவடைக்கு பிந்தைய செயல்முறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 55 மீனவப் பெண்கள் பட்டறிவுப் பயணம் மேற்கொண்டனர்.
- திட்டப் பகுதிகளில் உள்ள 14,903 பெண்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- 47 மீன் விற்பனை சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- 20 மீன் விற்பனை சங்க அலுவலகக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 1,474 மீனவர்கள் ரூ.235.22 இலட்சம் அளவிலான கடனிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.
- திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் இரண்டு மீனவர் சங்கக் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இரண்டு படகு இயந்திரம் பழுது நீக்கும் பணிமனைகள் செயல்பட்டு வருகின்றன மற்றும் இரண்டு படகு கட்டும் துறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.32.40 இலட்சம் செலவில் மீன்வலை விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது
- ரூ.195.19 இலட்சம் மதிப்பீட்டில் 5,422 குளிர் பதனப் பெட்டிகள் மீனவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.



## 12. வரவு செலவுத் திட்டம் 2014–15

## 12. வரவு செலவுத் திட்டம் 2014–15

2014–15ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.12,949.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், வருவாய் செலவினங்களுக்காக ரூ.9,783.68 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.3,165.97 கோடியும் மற்றும் அரசு ஊழியர்களுக்கான கடன் தொகைக்காக ரூ.0.25 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 13. முடிவுரை

## 13. முடிவுரை

சீரிய சிந்தனையும், ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கோடும் செயல்பட்டு வரும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் வழிகாட்டுதலின்படி மத்திய மாநில அரசுகளின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை திறம்படவும், சிறப்பாகவும் விரைவாகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயல்படுத்தி வருகிறது.

அனைத்து குக்கிராமங்களுக்கும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் குக்கிராமங்களை செயல் அலகாகக் கொண்டு தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் ("தாய்") திட்டம் என்ற மாபெரும் திட்டத்தினை செயல்படுத்தும் ஒரே மாநிலம் இந்திய அளவில் தமிழ்நாடு மட்டுமே ஆகும். அடுத்த இரண்டாண்டுகளுக்குள் அனைத்து குக்கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் மற்றும் இதர ஊரக வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாட்டில் புதிய முயற்சியான, நுண்ணறிவு கைபேசி (Smart phone) வாயிலாக இணையதள வழி கண்காணித்தல் மற்றும் நிதி விடுவிக்கும் முறையானது திட்டங்களை திறனுடன் கண்காணிப்பதற்கும்,



செயல்படுத்துவதற்கும் உதவுவதோடு, திட்ட முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதற்கும் உதவுகிறது.

ஊரகப் பகுதிகளில் பசுமையாக்குதல் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறு, குறு மற்றும் தாழ்த்தப்பட்ட / பழங்குடியின விவசாயிகளின் நிலங்கள், அரசு நிலங்கள், ஊராட்சி / ஊராட்சி ஒன்றியம் மற்றும் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த சாலைகளின் இருமருங்கிலும் மரக்கன்றுகள் நடும் பணி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பெருமளவில் செயல்படுத்தப்படும். ஊராட்சிகளின் கட்டமைப்புகளை வலிமைப்படுத்தும் பொருட்டு அங்கன்வாடி கட்டடங்கள், ஊராட்சி மற்றும் வட்டார அளவில் சேவை மையங்கள் கட்டப்படும்.

மனித குலத்தின் உடல்நலத்திற்கு பெருந்தீங்கு விளைவிக்கும், திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கம் ஒரு மிகப்பெரிய சவாலாக உள்ளது. இந்த பழக்கத்தை நிரந்தரமாக மாற்றுவதற்கு, சுகாதாரம் பற்றிய தகவல்களைப் பரப்புவது மிகவும் அவசியம் ஆகிறது. சுகாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் சிறந்த ஆரோக்கியம், சமூக பொருளாதார வளர்ச்சி, சுய கௌரவம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்த முடியும். பல்வேறு அரசுத்துறைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்புடனும் அத்துறைகளின் களப்பணியாளர்களின்

ஈடுபாட்டுடனும் திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கத்திற்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மகளிருக்கு அதிகாரமளிப்பதற்காக அனைத்து திட்டங்களும் மிகுந்த அக்கறையுடன் செயல்படுத்தப்படும். அதே போன்று, பிற மாநிலங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கும் வகையில் தமிழ்நாடு மகளிர் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து நடவடிக்கைகளும் செம்மையாக நிறைவேற்றப்படும். பல்வேறு நிலைகளில் வலிமையான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்குவதன் மூலம் வறுமை ஒழிப்பு பணிகளை மக்களே தலைமை தாங்கி முன்னெடுத்து செல்வதை அரசு உறுதி செய்யும்.

புதுவாழ்வு திட்ட தாக்கத்தின் வாயிலாக சுயஉதவி, சுய மேலாண்மை, தன்னம்பிக்கை, சுய கண்காணிப்பு ஆகியவைகளை உருவாக்கி அதன்மூலம் வசதிகள் மற்றும் பயன்களை எப்போதும் பெறமுடியும் என்ற நம்பிக்கை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் ஒரு பெரும் தாக்கத்தை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஏற்படுத்தியுள்ளது. திட்டப் பகுதிகளிலுள்ள குடும்பங்களின் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. மக்களின் விழிப்புணர்வு ஒரு புதிய உச்சத்தினை எட்டியுள்ளது. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் ஆய்வுக் குழுவினர், இத்திட்டம் திருப்திகரமாகச் செயல்படுவதாகவும், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில்



சிறப்பாகச் செயல்படும் திட்டங்களில் இது முதன்மையான திட்டமாக இருப்பதாகவும் பாராட்டியுள்ளனர்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையிலான இந்த அரசு இம்மாநிலத்தில் ஊரகப் பகுதிகளில் வாழும் அனைத்து தரப்பு மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் கிடைத்திடும் வகையிலும் பொருளாதார முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் வகையிலும் முழு ஈடுபாட்டுடன் தொடர்ந்து பாடுபடும்.**

**எஸ். பி. வேலுமணி**

**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,**
**நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**